
# கலாநிதி பதியுத்தீன்



DONATED IN MEMORY OF
26/6/98
48
20
IPR

# கலாநிதி பதியுத்தீன்

ஆசிரியர்:

அல்ஹாஜ் S. M. A. ஹஸன்

விரிவுரையாளர், ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை
பேராதனை.

★

வெளியீடு:

**இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம்**
கண்டி.

★

அச்சுப்பதிவு:

**மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்**
கொழும்பு-11.

முதலாம் பதிப்பு: 1974

கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன்
அவர்களது கல்வி, சமூக, அரசியல்
வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக
விளக்கும் நூல் இது.



வழக்கறிஞர்
எம். என். எம். சலாஹுத்தீன்
கலாநிதி பதியுத்தீனின் மூத்த சகோதரர்

# சமர்ப்பணம்

மாத்தறைப் பிறந்து கண்டியில் மணந்து
நேர்த்தியாய்க் கொழும்பில் நிறைபணி புரிந்தவர்
ஏத்திடும் பண்பார் எம்முயிர்த் தலைவரின்
மூத்த சகோதரர்; முதுபெரும் புகழினர்
வழக்கறி ஞர்எம் என் எம் ஸலாஹுத்தீன்!
இலங்கை அன்னையின் இன்தவப் புதில்வராய்
இணையில் முஸ்லிம் சமுகத் தலைவராய்
விளங்கும் அல்ஹாஜ் பதியுத் தீனை
புதுமுறைக் கல்வியின் புரட்சித் தந்தையை
நிதியெனக் காத்து நிறைபண் பளித்து
அறிவும், திருவும் அஞ்சா செஞ்சமும்
செறியும் சீலராய்ச் சீர்பெற வளர்த்து
தந்தநற் பணிக்காய்ச் சிந்தை கனிந்து
இந்த நன் னூலைச் சமர்ப்பணம்
செய்கிறேன்; அன்னார்க் கல்லாஹ் அருள்கவே!

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சமர்ப்பணம் ... ... ... | 5 |
| 2. | அணிந்துரை ... ... ... | 9 |
| 3. | மதிப்புரை ... ... ... | 13 |
| 4. | பதிப்புரை ... ... ... | 17 |
| 5. | அறிமுகம் ... ... ... | 19 |
| 6. | என்னுரை ... ... ... | 25 |
| 7. | துடிப்புள்ள இளைஞர் ... ... ... | 29 |
| 8. | எமது வரலாறு ... ... ... | 42 |
| 9. | புதுமைக்கு வித்திட்ட எழுத்தாளர் ... | 48 |
| 10. | ஆப்கானிஸ்தான் பயணம் ... ... | 57 |
| 11. | மலேசியாவில் சொற்போர் ... ... | 64 |
| 12. | அலிகார் வளர்ச்சியில் ... ... ... | 70 |
| 13. | அறிஞர் தொடர்பு ... ... ... | 76 |
| 14. | கல்வியும் தொண்டும் ... ... ... | 80 |

| | | |
|---|---|---|
| 15. | கிரிக்கட்டும் ஏகாதிபத்தியமும் ... ... | 88 |
| 16. | தாயகச் சிந்தனை ... ... ... | 94 |
| 17. | கலையகத் தந்தை ... ... ... | 101 |
| 18. | மலையைக் குடைந்த மாவீரர் ... ... | 109 |
| 19. | சாஹிரா மலர்ந்த கதை ... ... ... | 114 |
| 20. | அரசியல் பிரவேசம் ... ... ... | 121 |
| 21. | துணிவு மிக்க செயல் வீரர் ... ... ... | 125 |
| 22. | முஸ்லிம் அரசியல் மாநாடு ... ... | 133 |
| 23. | ஸ்ரீ நகரில் உரை ... ... ... | 146 |
| 24. | வழிகாட்டும் திட்டம் ... ... ... | 157 |
| 25. | குடி அரசு ஆதரவு மாநாடு ... ... | 166 |
| 26. | கவிஞர் கண்ட தலைவர் ... ... ... | 178 |
| 27. | குடும்ப வரலாறு ... ... ... | 189 |
| 28. | என் மதிப்பீடு ... ... ... | 194 |


முகப்புப் படம், கல்வியமைச்சைச் சேர்ந்த எம். எஸ். முஹம்மத் அவர்களால் சித்திரிக்கப்பட்டது.

# அணிந்துரை

அமிழ்தினுமினிய தமிழ் மொழி தன்னை தம் தாய் மொழியாகக் கொண்ட தமிழ்ப் பேசும் இனத்தவர் வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாயிருக்கும் வகையில் மதத்தால் வேறுபட்டவர்களாயிருப்பினும் இனத்தால் ஒன்றுபட்டவர்கள் என்பது மறக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையே. சைவம், வைணவம் இஸ்லாம், கிறிஸ்தவம் ஆதியன தமிழன்னையின் வளத்திலே பூத்துக் குலுங்கும் மலர்கள். தமிழ் அன்னை ஈன்றெடுத்த செல்வங்களிலே நாடும் நலனும் காத்த நல்லறிஞர் பலர் நம்மத்தியிலே தோன்றினர்—தோன்றிக் கொண்டிருக்கின்றனர். தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பரிய தொண்டுகள் புரிந்தவரும் தேசிய விடுதலைக்கு வித்திட்டவருமான நாவலர் பெருந்தகைக்கு அண்மையில் நாம் பெருவிழாக்கள் எடுத்தோம்—அன்னார் புகழ் பரப்பும் மலர்கள் பல அச்சிட்டோம். இந்த வரிசையிலே, நாட்டுக்கும் சமுகத்துக்கும் நற்பணி புரிந்து தேசிய விடுதலைக்காகத் தமது ஆயுளை அர்ப்பணித்த தலைவராக விளங்கும் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் மறந்துவிட முடியாது. எனவே, அன்னாரைப்பற்றியும் ஒரு நூல் வெளியிட விழைந்தேன்.

கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை பல காலமாக நன்கு அறிவேன். அவர் அறிஞர்; சிந்தனையாளர்; எதனையும் ஆராய்ந்து மதிநுட்பத்தோடு செய்து முடிப்பவர்; தமது சீரிய இலட்சியத்தை நிறைவேற்றுவதில் எத்தகைய எதிர்ப்புக்களையும் சமாளித்து வீரத்தோடு செயல் புரிபவர்; அஞ்சா

செஞ்சம் படைத்தவர்; ஆனால், அன்பின் இருப்பிடமாகவும் திகழ்பவர். இளமைப் பருவத்திலிருந்தே அன்னார் மேற்கொண்டு வந்துள்ள நடவடிக்கைகள் இவற்றிற்கு ஓர் உதாரணமாகும்.

கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் அவர்கள் தமது சொந்த சமுக மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு மாத்திரம் உழைக்கவில்லை. சொந்தச் சமுகத்தினருக்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்த அதே நேரத்தில் இந்த நாட்டில் வாழும் எல்லா இன மக்களுக்கும் வழிகாட்டியாக அமைந்த ஒரு தேசிய வீரராகவும் விளங்குகிறார்.

சிறந்த கல்விமானாக விளங்கியதால் காலத்துக்கேற்ற நவீன கல்வி முறைகளை உருவாக்கினார். கல்வித்துறையில் சகலருக்கும் சமமான சந்தர்ப்பமளிப்பதில் அவர் மேற்கொண்ட முன்னேற்றமான திட்டங்களை காலத்தால் மறந்துவிட முடியாது. 1961 ஆம் ஆண்டு இலங்கையின் கல்வியமைச்சர் என்ற முறையில் இந்த நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் அரசாங்கம் கையேற்பதற்காக அன்னார் மேற்கொண்ட தீரமிக்க - துணிவான செயல்முறையை இந்த நாட்டின் வரலாற்று ஏடுகள் என்றைக்குமே மறந்து விடுவதற்கில்லை. அறிவு, சிந்தனை, என்பவை ஒரு சிலரின் ஏகபோக உரிமையாக விளங்கியதை மாற்றியமைத்தார். அதனை மக்கள் உடைமையாக்கி எல்லோரும் தத்தமது ஆற்றலுக்கேற்ப அறிவை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தினார்.

கல்வியின் மூலமாகவே ஒரு நாட்டின் அரசியல் சமுக கலாசார வாழ்க்கை முறைகளைப் பக்குவப்படுத்த முடியும் என்ற குறிக்கோளை சாதாரண மக்களும் உணரச் செய்தார். இவரது இத்தகைய செயல் வீரத்தினால் இருமுறை கல்வியமைச்சராகக் கூடிய வாய்ப்பினைப் பெறலானார். பல்கலைக் கழகக் கல்விமுறையிலும், விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளிலும் இவர் பல முற்போக்கு நடவடிக்கைகளைக் கையாண்டார். யாழ்ப்பாணத்தில் ஒரு கலைக்கல்லூரியையும் பல்கலைக் கழக வளாகத்தையும் நிறுவினார். வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு இவர் விஜயஞ்



செய்யும்போது மக்கள் அளிக்கும் வரவேற்புக்களும் பாராட்டுக்களும் இவர் தமிழ் பேசும் மக்களிடையே பெற்றுவந்துள்ள மகத்தான இடத்தைக் குறிப்பிடுகின்றன.

இலங்கையில் மாத்திரமன்றி இந்தியா, பர்மா, மலேசியா, இந்தோனேசியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இவர் தமது வாலிபப் பருவத்தில் ஆற்றியுள்ள சொற்பொழிவுகளும் செய்துள்ள சேவைகளும் அந்தநாடுகளின் முன்னேற்றத்துக்கு எவ்வளவு உதவியுள்ளனவென்பதை அவர் கூறாது விட்டாலும் மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும். அந்தச் சேவைகளை நினைக்கும்போது கலாநிதி பதியுத்தீன் அவர்கள் 'தென்கிழக்காசியாவின் தலைசிறந்த தலைவர்' என்பதை உணர முடிகிறது. அந்த நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களில் அன்னார் காட்டிவந்துள்ள ஆர்வத்தை இந்நூலில் வாசகர்கள் புரிந்துகொள்ள முடியும். ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்த அறிஞர்களதும் தலைவர்களதும் நேரடித் தொடர்பு கொண்டவராக இருந்துவந்துள்ளார்.

இத்தனைக்கும் மத்தியில் சொந்த நாட்டு மக்களின் விடுதலைக்காக உழைக்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் இலங்கை திரும்பியதிலிருந்து அவர் சமுக அரசியல் பொருளாதாரத் துறைகளில் தமது முழுச் சக்தியையும் பயன்படுத்தினார்.

அலிகாரில் பெற்றுக்கொண்ட கல்வியும் கலைஞானமும் அவரை ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரங்களுக்குத் தூண்டியது. அது இந்த நாட்டினரையும் சுதந்திர விழிப்புணர்வு பெறச் செய்ததெனலாம். காலத்தையும்–தேவையையும் கருத்திற் கொண்டு அன்னார் மேற்கொண்ட முயற்சிகள் இன்று இந்த நாட்டுமக்கள் வெற்றிப் பாதையில் செல்ல வழிவகுத்துள்ளன. அத்தகைய ஒரு பெருந்தலைவரை மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் என்னுள்ளத்திலே பல காலமாக இருந்து வந்தது. அவரது வாழ்க்கை நூல் ஒன்றை வெளியிட வேண்டுமென்ற ஆசையும் என்னுள் எழுந்தது.

இந்த ஆவலை எனது நீண்டநாள் நண்பரும் பேராதனை ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளருமான அல்ஹாஜ் எஸ். எம். ஏ. ஹஸன் அவர்களிடம் தெரிவித்தேன். எனது வேண்டுகோளுக்கு இசைந்த அவர், அல்ஹாஜ் பதியுத் தீன் அவர்களைப் பற்றி திரட்டிவைத்திருந்த சம்பவங்களை ஒன்று சேர்த்து இந்த நூலை எழுதியுள்ளார். அவரது இயக்க மான இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத்தின் ஆதர வில் வெளியிடும் இந்த நூலை அச்சிட்டு வெளியிடுவதில் நான் பெருமகிழ்வெய்துகின்றேன்.

கொழும்பு.
3-10-74

நா. இரத்தினசபாபதி
'மெய்கண்டான்' அதிபர்



# மதிப்புரை

ஒரு நாட்டின் செல்வம் பெரும்பாலும் அந்நாட்டில் வாழும் மக்களினதும் தலைவர்களினதும் பண்பு நலன்களிற் தங்கியுள்ளது. இறைவனுக்கும் மனிதகுலத்துக்கும் தலைவர்கள் ஆற்றுகின்ற அரிய சேவைகளினாலும் நாடு நலம் பெறுகின் றது. இந்தவகையில் நமது ஈழமணித் திருநாடும் அதிஸ்டம் பெற்றுள்ள தென்றே கூறுவேண்டும்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய பல் வேறு இனத்தவரும் - சிறந்த சாதனைகளின் மூலமாக இணக் கத்துடனும், நல்லெண்ணத்துடனும், பரஸ்பர ஒற்றுமையுட னும் வாழுகின்றனர்.

நமது நாட்டின் பெருந்தலைவர்களுள் ஒருவராகக் கல்வி யமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் மதிக்கப்படுகின்றார்கள். அவர், ஒரு சிறந்த அரசியல்வாதியும் தேசாபிமானியும், தேர்ச்சி பெற்ற கடமை வீரருமான காலஞ்சென்ற ஸர். செய்யத் அஹ்மத்கான் அவர்களால் நிறு வப்பட்ட அகில உலகப் புகழ்ப்பெற்ற அலிகார் சர்வகலாசாலை யில் கல்வியும் பயிற்சியும் பெற்றுக்கொள்ளும் பெரும்பாக் கியத்தைப் பெற்றுக்கொண்டார்.

அலிகாரில் அவர் பெற்றுக்கொண்ட பயிற்சியும், பாரதத் தின் பெருந் தலைவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பு களுமே கலாநிதி பதியுத்தீனை இந்த நாட்டின் கல்வி, அரசியல்,

சமூக, நிர்வாகத்துறைகளில் சிறப்புடன் மிளிரச் செய்வதற்குப் பெருமளவில் ஆதாரமாக அமைந்துவிட்டன.

அவரது கருத்துக்களும் செயல்களும் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியவை என்றால் மிகைக்காது. மக்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பு. ஒருவரின் கருத்துக்களை மற்றவர்கள் பூரணமாக ஏற்றுக்கொள்வது மனித இயல்புக்கு அப்பாற்பட்டதாகும். அதிலும் குறிப்பாகத் தலைவர்களையும் அரசியல் வாதிகளையும் பொறுத்தவரையில் இது மேலும் கடினமானதாகும். பாரபட்சமற்ற நடுவு நிலைமையைக் கைக்கொண்டு, சகல பிரஜைகளையும் நேர்மையாகவும் நீதியான கண்ணோட்டத்துடனும் நடத்த முற்படும்போது இத்தகைய சோதனைகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்

இத்தகைய சோதனைகளின் மத்தியிலேதான் கலாநிதி பதியுத்தீன் இந்த நாட்டின் வரலாற்றிலே ஒரு முக்கியமான இடத்தையும் அந்தஸ்தையும் பெற்றுக் கொள்கின்றார். ஒரு சிறந்த கல்விமானாக—அரசியற் தலைவனாக—சமூக சேவையாளனாக—தேசாபிமானியாக இருந்து, என்றைக்கும் நிலைத்து நிற்கத்தக்கதான அரும்பணிகள் பலவற்றை ஆற்றியுள்ளார். இது போன்ற சாதனைகளைப் புரியக்கூடியவர்கள் மிகச் சிலரே என்று கூறுவேன்.

ஒருமுறை அமைச்சர் பதவியும் செனட்டர் பதவியும் அவரைத் தானாகவே தேடிவந்தபோதும் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அப்போது அவர் தமது சொந்த சமூகத்துக்குச் செய்ய வேண்டியிருந்த கடமைகளைக் கருத்திற் கொண்டே அவ்வாறு செய்தார். நமது நாட்டைப் பொறுத்த வரையில் இப்படியான ஒருவரைச் சந்திப்பது மிகமிக அருமையாகும். இந்தச் சம்பவத்தை நான் நேரடியாகவே அறிந்திருந்தேன்.

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய நண்பரும், அண்மையிற் காலஞ்சென்ற பெருந் தேசிய வாதியுமான ஜனாப். எம். ஏ. சீ.



எம். சாலிஹ், நீண்டகால நெருங்கிய நண்பர்களுள் ஒருவராகும். அன்னாருடன் நானும் கலாநிதி பதியுத்தீனின் வாழ்க்கை முறைகளை இளமையிலிருந்தே அவதானித்து வந்துள்ளேன்.

காலஞ்சென்ற எஸ். டப்ள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, திருமதி பண்டாரநாயக்கா ஆகிய இரண்டு பிரதமர்களும் கலாநிதி பதியுத்தீனின் தேசாபிமானத்திலும் — கொள்கைகளிலும் பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இலங்கை வாழ் முஸ்லிங்கள், இந்த நாட்டில் வாழும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஓர் இணைப்புப் பாலமாக விளங்குகின்றார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன். இந்த உண்மையை எல்லோரும் உணரக்கூடிய காலம் வெகு தூரத்தில் இல்லை. முஸ்லிம் சமுதாயத்தினரினதும் இந்த நாட்டினரதும் தலைவரான கல்வி மந்திரியவர்கள், தமது தூரதிருஷ்டியான நோக்கத்தினாலும் அநுபவத்தினாலும் இந்த வகையில் பெரியதொரு சேவையைச் செய்து கொண்டே இருக்கின்றார்.

கஷ்டங்களும், நெருக்கடிகளும் ஏற்பட்டபோதிலும் தமது சலிப்பற்ற மனத்தினாலும், அயராத ஆற்றலினாலும், ஸ்ரீலங்காவின் தேசிய ஒற்றுமைக்காக தமது மாணவப் பருவத்திருந்தே உழைத்து வந்துள்ளார். தமது அமைச்சில் தமிழ்ப் பகுதியொன்றை நிறுவினார். சில சிங்கள இலக்கியங்களைத் தமிழிலும் தமிழ் இலக்கியங்களைச் சிங்களத்திலும் பெயர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்தார். இதுபோன்ற இன்னும் பல முயற்சிகளால் இந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்காக மேற்கொண்ட முயற்சிகளையிட்டு நான் அவருக்கு நன்றி செலுத்துகின்றேன்.

கலாநிதி பதியுத்தீனின் சகோதரரும் வழக்கறிருமான காலஞ்சென்ற எம். என். எம். சலாஹூத்தீன் எனது அண்டை வீட்டுக்காரராகப் பல ஆண்டுகாலம் வாழ்ந்து வந்துள்ளார். அன்னாரது அரியகுணநலங்களையும், நல்ல பழக்கவழக்கங்களையும். திறமைகளையும் நான் எப்பொழுதுமே அன்புடனும் மரியாதையுடனும்

நினைவு கூர்ந்து வருகிறேன். ஒரு சிறந்த குடும்பத்துக்குரிய சீரிய பண்பை நான் அவர்களிடத்துக் கண்டேன்.

அத்தகைய குடும்ப நலன்களிற் பழகி ஸ்ரீலங்காவுக்கு சிறந்த சேவைகள் செய்துள்ள, கலாநிதி பதியுத்தீன் அவர்களை நான் ஒரு சிறந்த தலைவனாகவே ஏற்றுக்கொள்வதோடு தொடர்ந்து அன்னாரது சேவையை அநுபவிக்கக் கூடியதாக ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளும் நித்திய சுகமும் வழங்க வேண்டுமென பிரார்திக்கின்றேன்.

நமது நாட்டுக்கு அணிகலன்களான தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை எழுதுவதற்கு ஆர்வத்துடன் முன் வந்துள்ள, அல்ஹாஜ் எஸ். எம். ஏ. ஹஸன் அவர்களுக்கு இந்த நாட்டின் பிரஜை என்ற முறையில் எனது நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு நாட்டின் வரலாறு அந்த நாட்டின் தலைவர்களின் வரலாற்றிலேயே தங்கியுள்ளது. எனவே இதுபோன்ற இன்னும் பல வெளியீடுகளையும் அல்ஹாஜ் ஹஸன், சமுதாயத்துக்குத் தந்துதவுவாரென நம்புகிறேன்.

எஸ். சிவசுப்பிரமணியம்
வழக்கறிஞரும், பிரசித்த நொத்தாரிசும்

'ஹல்ஸ்டப்'
கொழும்பு.
1-2-74.



# பதிப்புரை

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை விளக்கிக் கூறும் நூல் எதுவும் இதுவரை வெளிவந்ததாக வில்லை. அவ்வாறு ஒரு நூலை எழுதும் முயற்சியும் எடுக்கப்படுவதாகத் தெரிய வில்லை. அதே போல் முஸ்லிம் சமூகத்தின் உயர்வுக்காக முழு மூச்சுடன் உழைத்த தலைவர்களின் வரலாறும் அண்மைக் காலம் வரை ஆரும் அறியாததாகவே இருந்து வந்தது. இந்தக் குறை இஸ்லாமிய சமூகத்தின் எழுச்சிக்குப் பெரும் பாதகமாகவே அமைந்துளது, என்பது இன்று ஓரளவுக்கு உணரப்பட்டு வருகிறது.

இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம் இந்தக் குறையால் விளையும் பாதிப்பை நன்குணர்ந்து, தன்னால் இயலு மான அளவு முயன்று, இந்நிலையை மாற்ற முயற்சிகள் மேற் கொண்டு வருகிறது.

இந்த வழியிலே, இலங்கை முஸ்லிம் பெரியார்களின் நினைவு தினங்களைக் கொண்டாடியும், வரலாற்று நூல்களை எழுதத் தூண்டியும், எழுதப்பட்ட நூல்களை வெளியிட்டும் பணிபுரிந்து வருகிறது நமது இயக்கம்.

சமூகத்தின் மலர்ச்சிக்கும், நாட்டு நலத்துக்கும் நற் பணி புரிந்து வாழும் தலைவர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே பாராட்டுவது பண்பான செயலாகும். அவ்வகையில் நமது நாட்டு வளத்துக்கும், சமூக நலத்துக்கும் தியாக உளத்துடன் திட்டமிட்டுப்பணிபுரியும் தீரர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன்

மஹ்மூத் அவர்களை மதித்துப்போற்றும் வகையில் அல்ஹாஜ் எஸ். எம். ஏ ஹஸன் அவர்கள் எழுதியுள்ள நூலை வெளியிடுவதில் எமது இயக்கம் பெருமிதமடைகிறது.

இன்று கல்வியமைச்சராகப் பணிபுரியும் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் மூச்சு ஒவ்வொன்றும் ஈழத்து முஸ்லிம்கள் எழுச்சிக்கு உரமூட்டுவது. ஏனைய முஸ்லிம்கள் வாழ்வுக்கு வளமூட்டுவது; இந்த நாட்டு ஏற்றத்துக்குத் துணை நிற்பது. பரந்த நோக்கும், பணியே அணியாகத் திகழும் அவர் தம் பண்பும் உறுதிபெற ஊக்கும் அவர் தம் உரைகளும் இந்த நூல் முழுவதும் விரவி உயர்பாதை நோக்கி நம்மை இட்டுச் செல்வதை நூலினுள் நுழைந்து நோக்கலாம்.

இந்த அரிய நூலை ஆக்கித் தந்த அல்ஹாஜ் எஸ். எம். ஏ. ஹஸன் அவர்களுக்கு நன்றி நவின்று இந்நூலை வெளியிட்டுத் தருவதிற் பெருமிதம் கொள்கிறது நமது இயக்கம்.

**இல. இஸ். எழு. இயக்கத்தினர்**

1-1-74.
இராஜ வீதி,
கண்டி.



# அறிமுகம்

**[அகில இலங்கை முஸ்லிம் லீக் பிரதித் தலைவர் ஜனாப் எம். ஏ. சீ. எம். சாலிஹ், கலாநிதி பதியுத்தீன் அவர்களுடன் நீண்டகாலமாகப் பொதுப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ள ஒருவராகும். ஜனாப் சாலிஹ், யுனெஸ்கோ தேசீயக் கமிஷன் அங்கத்தவராகவும், அகில இலங்கை வை. எம். எம். ஏ. போஷகராகவும், உள்ளூர் ஆட்சிக் கமிஷன் அங்கத்தவராகவும், இலங்கைத் துறைமுக வர்த்தக சங்க உதவித் தலைவராகவும், இலங்கைத் தொழிலாளர் சகாய நிதிச் சங்கச் செயலாளராகவும், கொழும்பு மாவட்ட வைத்தியசாலைகளின் ஆலோசகர் குழு உறுப்பினராகவும், வேறு பல இயக்கங்களின் பொறுப்புவாய்ந்த பதவிகளிலும் பணி புரிந்து வந்துள்ளார். கலாநிதி பதியுத்தீனைப்பற்றி அவர் தந்துள்ள அறிமுகம் ஈண்டு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.]**

'' கல்வியமைச்சர் அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் (M.A., LLD, D,Litt, M. P.) அவர்களது ஆயுட்காலத்திலேயே வெளிவருகின்ற அவரது வாழ்க்கை வரலாற்று நூலொன்றுக்கு அறிமுகவுரையொன்று வழங்கக் கிடைத்த, அரிய வாய்ப்பினை எண்ணி நான் பெருமகிழ்வெய்துகின்றேன். ஐம்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக நான் அன்னாருடன் நெருங்கிய தொடர்புடையவனாக வாழ்ந்து வந்துள்ளேன். எனது மதிப்புக்கும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவராகத் திகழ்ந்த அன்னாருடன் நானும் பலவகைப்பட்ட பொதுச் சேவைகளில் ஈடுபாடு கொண்டிருந்தேன். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் போற்றத்தக்க பலவகையான சமூக நலன்களில் கலாநிதி பதியுத்தீன்

கொண்டிருந்த ஈடுபாடுகளை விளக்கிக் கூறுவதற்கு இத்தகையதோர் அறிமுகம் போதுமானதல்ல.

காலத்தால் மறக்கவோ, மறைக்கவோ முடியாத அளவுக்கு அன்னார் ஆற்றியுள்ள அரும்பணிகளே அவரை ஒரு மாமேதை ஆக்கும் அளவுக்கு மாற்றிவிட்டது. இத்தனைக்கும் அவரிடத்துக் காணப்பட்ட தன்னலமற்ற சேவா மனப்பான்மை, துணிவு ஆழ்ந்த சிந்தனையுடன் எடுக்கப்படும் தீர்மானம், சேவையின் விருப்பு, என்பனவற்றை இலட்சியங்களாகக் கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களே காரணமெனக் கூறின் மிகையாகாது.

கலாநிதி பதியுத்தீன், தென்னிலங்கையின் மதிப்புக்குரிய மகோன்னதமான குடும்பமொன்றிற் பிறந்தார். எனது மூதாதையரும் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களென்ற வகையில் நானும் பெருமைப்படுகின்றேன். அறிவும் ஆற்றலும் படைத்த ஒரு சிரேஷ்ட மாணவராக அன்னார் விளங்கிய காலத்தில் என்னை அடிக்கடி சந்திப்பதுண்டு. அக்காலத்திலும் அவர் வெளிக்காட்டிய ஆலோசனைகளும் கருத்துக்களும் நடவடிக்கைகளும் அவரது திறமைகளைத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தன.

கலாநிதி பதியுத்தீனின் வாழ்க்கையை நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஆராயலாம். முதலாவதாக, அலிகாருக்குச் செல்லுவதற்கு முன்னர் மாணவப் பருவத்திலே மேற்கொண்டிருந்த துணிவான நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம். பின்னர் அலிகாரில் பட்டப் படிப்பை மேற்கொண்டிருந்தபோது, 'புவிஇயல் மாணவர்' என்ற வகையில் பல நாடுகளுக்கும் பிரயாணங்களை மேற்கொண்டு தமது சொல், செயல் எழுத்து வன்மைகளைப் புலப்படுத்தியுள்ளதை நோக்கலாம். அடுத்து அலிகாரிலிருந்து திரும்பியதும், கல்வி கலாசாரத் துறைகளில் ஆர்வங்கொண்டவராக இருந்து படிப்படியாக அரசியலில் அக்கறை காட்டமுற்பட்டுள்ளதைக் கூறலாம். அதன் பிறகு அவர் பொதுவாக இந்த நாட்டுக்கும், சிறப்பாகத் தமது சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்கும் கல்வி அரசியல் துறைகளில் அளப்பரிய சாதனைகளைச் செய்துள்ளதைக் கவனிக்கலாம்.



கலாநிதி பதியுத்தீன் தமது பட்டப் படிப்புக்காக அலிகாருக்குச் செல்லுவதற்கு முன்னர், முஸ்லிம் சமுதாயத்தின் முற்போக்குத் திட்டங்களுக்கும், அன்றையத் தேவைகளுக்கும் அமைவாகப் பல சமுதாயப் பணிகளில் முன்னின்று உழைத்து வந்துள்ளார். 'வாலிப முஸ்லிம் லீக்' என அன்று அழைக்கப்பட்ட இன்றைய முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தைக் கட்டியெழுப்புவதில் இவர் அதிக அக்கறை காட்டினார். எனது ஆலோசனையின்பேரிலும் வற்புறுத்தலின் பேரிலும், காலஞ்சென்ற எம். அப்துல் றஹ்மான் அவர்களுடன் சேர்ந்து, அந்த இயக்கத்தின் இணைச் செயலாளராகப் பொறுப்புக்களை மேற்கொண்டார். கலாநிதி பதியுத்தீன் தமது பெருமுயற்சியினாலும், பேருழைப்பினாலும், வியக்கத்தக்கதோர் உன்னத ஸ்தாபனமாக அந்த இயக்கத்தை மாற்றியமைப்பதில் ஆர்வம் காட்டினார். அதனால் முஸ்லிம் லீக் ஸ்தாபனம், முஸ்லிம் சமூகத்தினரால் பெரிதும் கவரப்படலாயிற்று. அந்த ஸ்தாபனத்தின் நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காகப் பல இடங்களுக்குச்சென்று நிதிசேகரித்து அதன்நிலையை மேலும் உறுதிப்படுத்தினார். அவர் முஸ்லிம் இளைஞர்களுடன் சேர்ந்து, இலங்கையின் பலபாகங்களிலும்வாழ்ந்துவந்தமுஸ்லிம்களின் முக்கியமான நிலையங்களுக்கெல்லாம் விஜயஞ் செய்து, ஒரே இலட்சியத்துக்காக அவர்களை ஒன்று சேரவலியுறுத்தியதன் காரணமாக, முஸ்லிம்களின் ஐக்கியம் பலப்படலாயிற்று.

சமுதாயத்தில் மேலும் ஒருபடி முன்னேற்றத்தை விரும்பிய கலாநிதி பதியுத்தீன், ஸக்காத் நிறுவனமொன்றையும் இன்னும் பல நிறுவனங்களையும் உருவாக்கினார். பிரசுரங்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை அடிக்கடி வெளியிட்டு அவற்றின் மூலமாக முஸ்லிம்கள் உண்மையான இஸ்லாமிய வாழ்க்கை முறைகளைப் பேணி நடக்கக்கூடிய வழிமுறைகளை விளக்கி வைத்தார். இது போன்ற இன்னும் பல கைங்கரியங்களையும் மேற்கொண்டிருந்து அலிகாருக்குச் செல்ல முற்பட்ட அவரது அக்காலச் சேவைகளை மேலும் விளக்க வாய்ப்பின்மையால் சுருங்கக் கூறி, அலிகாரில் பட்டதாரி மாணவராக இருந்தபோது மேற்கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓரிரு நிகழ்ச்சிகளையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

அலிகார் சர்வகலாசாலையின் சஞ்சிகை ஆசிரியராக இருந்து அதன் பொன்விழா மலரை மிகச் சிறப்புடன் வெளியிட்டுப் பெரும்புகழை நிலைநாட்டினார். அந்த மலரில் இடம்பெற்ற கட்டுரைகள், கவிதைகள் என்பனவற்றைச் சுவையுடனும் ரசனையுடனும் அநுபவிக்கும் பொருட்டு அவரது பேராசிரியர்களிடமிருந்தும், உலகின் புகழ்பூத்த பல பெரியார்களிடமிருந்தும், சஞ்சிகைக்கான ஆக்க இலக்கியப் படைப்புக்களைப் பெற்றுக் கொண்டார். அலிகார் சர்வகலாசாலை நிலைத்து நிற்கும் காலமெல்லாம் கலாநிதி பதியுத்தீனின் நாமமும் அழியாது நிலைபெற்று நிற்கத்தக்கதாக, எத்தனையோ அரும்பணிகளை அக்கலா நிலயத்துக்காக மேற்கொண்டார். அலிகார் சர்வகலாசாலையின், புவிஇயல் மாணவன் என்ற முறையில், உலகின் பல நாடுகளுக்கும் விஜயஞ் செய்து சர்வகலாசாலையின் பெயரையும், புகழையும் நிலைநாட்டினார்.

அலிகார் சர்வகலாசாலையிலிருந்து இலங்கை திரும்பியதும், அன்னாரது பேராற்றலைப் புரிந்துகொண்ட பல பெரியார்கள், இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியில், புவிஇயல் பேராசானாகப் பணியாற்றும்படி ஆலோசனை கூறினர். ஆனால், அத்தகைய பணிகள் அவரை அவ்வளவாகக் கவரவில்லை. காலம் நகர்ந்து கொண்டிருந்ததற்கேற்ப இந்த நாட்டின் பொதுப் பணிகளிலே தான் அவரது எண்ணங்கள் ஈர்க்கப்படலாயின. முஸ்லிம்கள் சிங்களம் கற்க வேண்டுமென்று அன்னார் ஒரு காலத்திலே கூறி வந்துள்ள தீர்க்கதரிசனமான ஆலோசனைகளின் மகத்துவத்தைப் பிற்காலத்திலே காலஞ்சென்ற பிரதமர் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களத்தை அரசகரும மொழியாக்கியதிலிருந்து உணர்ந்துகொள்ள முடிகிறது. காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா, கலாநிதி பதியுத்தீனிடம் அளவற்ற நம்பிக்கையும் நன்மதிப்புங் கொண்டவராகக் காணப்பட்டார். திரு. பண்டாரநாயக்காவின் முற்போக்குத் திட்டங்களுக்குக் கலாநிதி பதியுத்தீன் எப்பொழுதும் பிரதம ஆலோசகராக இருந்து வந்துள்ளமையால், 1959ஆம் ஆண்டு திரு. பண்டாரநாயக்கா காலஞ்சென்ற பின்னருங்கூட, அத்திட்டங்கள் வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை



நோக்கலாம். எனவேதான் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகக் கலாநிதி பதியுத்தீன்மீது நம்பிக்கை வைத்து, அன்னாரின் ஒத்துழைப்பையும் பெற முன்வந்தார்.

1956ஆம் ஆண்டு திரு. பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் அல்லது அப்போதைய செனற் சபையில் சேர்த்துக் கொள்ள முற்பட்டபோதும், கலாநிதி பதியுத்தீன் அத்தகைய பதவிகளை ஒரு பொருட்டாக மதிக்காது, அப்பதவிகளை ஏற்றுக் கொள்ளவும் மறுத்துவிட்டார். இத்தனைக்குங் காரணம், தாம் போற்றி வளர்த்து வந்த கல்விக் கழகமான, கம்பளை ஸாஹிராக் கல்லூரி, இந்த நாட்டின் எந்தக் கல்லூரிக்கும் இரண்டாந்தரமாக விளங்கக்கூடாது என்ற நோக்கமும் அதனைத் தமது தலைமையிலேயே முன்னணிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற மனப்பான்மையுமே! அவர் தமது எண்ணத்தைப் பூர்த்தியாக்கிக்கொண்டதன் பின்னர், தமது முழுக் கவனத்தையும் அரசியல், சமூக முன்னேற்றத் துறைகளில் செலவிட முற்பட்டார்.

1960ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, விசுவாசம் நிறைந்த கலாநிதி பதியுத்தீனைக் கல்வி அமைச்சராகத் தமது அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார்; அக்காலத்திலே, இலங்கையிலுள்ள பாடசாலைகளை அரசாங்க மயமாக்குவதற்கு அன்னார் மேற்கொண்ட வீரம்மிக்க துணிச்சலான செயலை எவரும் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. 'உலகிலே மிகச் சிலர்தான் அத்தகைய துணிவுடையவர்கள்' என்பது எனது கருத்தும், நம்பிக்கையுமாகும். இத்தகைய பெருமாற்றத்தைத் தொடர்ந்து சுகாதார அமைச்சராகப் பதவியேற்றபோதும், அரசாங்க வைத்தியர்கள் பிரத்தியேகமாகத் தொழில் பார்ப்பதைத் தடுத்து 'Channal Practice' முறையை அமுலுக்குக் கொண்டு வந்தார். மீண்டும் இரண்டாம் முறையாக 1970ஆம் ஆண்டு கல்வி அமைச்சராகப் பதவியேற்ற போது, புதிய கல்வித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்து வைத்துக் கல்வி முறையில் மகத்தான மாறுதலொன்றை ஏற்படுத்தினார். அதனால் இலங்கைக் கல்விமான்களும், வெளிநாட்டு அறிஞர்களும் பாராட்டுமளவுக்குப் புகழ்பெறலாயினர். அமெ

ரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள்கூட இவரது கல்விக் கோட்பாட்டு முறைகளைப் பாராட்டியுள்ளன.

இந்த நாட்டின் பொருளாதார சமூக முன்னேற்றத்துக்கமைவாக மாணவர்களை வழிநடத்தி, நாட்டின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும், படித்த வாலிபர்கள் தொழிலின்றி விரக்தியடையாமல், சுயநம்பிக்கையுடன் வாழ வழி செய்யவும்,இந்தப் புதிய கல்வித் திட்டம் வழி வகுக்கவுள்ளது.

கலாநிதி பதியுத்தீன் தனது சுயமுயற்சியால் தன்னைத் தானே ஆளாக்கிக்கொண்டவர். அவர் தமக்கே அமையப்பெற்ற விருப்புக்களால், இந்த நாட்டு இளைஞர்களையும் மனித் சமுதாயத்தையும் நல்வழிப்படுத்த வேண்டுமென்ற அவரது உயரிய நோக்கங்களும் பண்புகளும் எல்லாராலும் பாராட்டப்படும் என்பதில் ஐயமில்லை. இன்றுவரை அவரது வாழ்க்கையில் மேற்கொள்ளப்பட்ட உயரிய சேவைகளையும், கடமை உணர்வுகளையும் நோக்கும்போது, ஒக்ஸ்போர்ட் புகழ்ப் பாணியிலமைந்த— ''எங்கும், எப்பொழுதும், எவ்வாறாக இருப்பினும், உயரிய இலட்சியங்களால் உருவான எண்ணங்களைக் கடைப்பிடித்துக் கருமங்களை மேற்கொள்ளும்போது, வெற்றிகளின் உதாரணங்களும், தோல்விகளை தாங்கும் திடமும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு அசைந்து கொடுக்காத மனப்பக்குவமும் பெற்றுக்கொண்டுள்ள ஒருவரது வாழ்க்கை, பூரணத்துவமும் நிறைவுடையதாகவும் அமைவுறும்'' என்ற புகழுரைகளே மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது.

கலாநிதி பதியுத்தீன் தன்னைத்தான் தலைவராகக் கருதாவிடினும், நிச்சயமாக அவர் இந்நாட்டு முஸ்லிம்களின் பெருந்தலைவர் என்பதிற் சந்தேகமே இல்லை.

எனது நீண்டகால நண்பரான கலாநிதி பதியுத்தீன் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருள் பெற்று நிலையான புகழ் பரப்பி வாழப் பிரார்த்திக்கின்றேன்.

எம். ஏ. சி. எம். சாலிஹ்

*25-12-1973,*
*55, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு.*



# என்னுரை

ஒரு சமுதாயத்தின் தலைவர்கள் அந்தச் சமுதாயத்தின் பாதுகாப்பு அரண்களாகும். அவர்களைக் காலத்தால் மறந்துவிட்டால் அல்லது மறைத்துவிட்டால், அதனால் சமுதாயமே பாதுகாப்பற்ற நிலையில் பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக, முஸ்லிம் சமுதாயத்தில் தோன்றிய எத்தனையோ பெரியார்களது வாழ்க்கை விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமையினால் நமது சமுதாயத்தின் வரலாறே மங்கிக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டு முஸ்லிம்கள் தமக்கெனத் தனியானதொரு வரலாற்றைக் காண வேண்டுமாயின், முதலில் அந்தச் சமுதாயத்துக்காகப் பேரும் புகழும் பெற்றுத் தந்த பெரியார்களின் அரும்பெரும் பணிகளைப்பற்றித் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். சமூக, பொருளாதார, அரசியல் துறைகளிலும், கலாசாரத் துறைகளிலும் நமது பெரியார்கள் ஆற்றியுள்ள சேவைகளை வெளிக்கொணர்வதன் மூலம்தான் நமது தேசிய வீரர்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் நாம் அறிமுகஞ் செய்துவைக்க முடியும். இந்த நாட்டின் தேசிய நலன்களில் முஸ்லிம்கள் பெற்றுவந்துள்ள பங்கையும் எடுத்துக்காட்ட முடியும்.

'முஸ்லிம் பெரியார்களைப்பற்றி முஸ்லிம் பெருமக்களே அறிந்து வைக்கவில்லை' என்ற கருத்து ஓரளவுக்கு உண்மையென்றே கூற வேண்டும். நமது சமூகம், கல்வியிற் பின்தள்ளப்பட்ட வியாபார சமூகமாக வாழ்ந்து வந்ததும், இதற்கொரு காரணமெனக் கருதலாம். எனினும், சமீபகாலமாக ஏற்பட்டு

வருகின்ற கல்வியின் மறுமலர்ச்சியும் நமது சமூகத்தின் கல்விமான்களும் எழுத்தாளர்களும், மேற்கொண்டுள்ள பெருமுயற்சிகளும் இத்துறையில் ஓரளவு புத்தூக்கம் ஏற்படச் செய்துள்ளது. அதனால், வாழ்ந்துகொண்டிருக்கும் பொழுது மாத்திரம் பெருமைப்படுத்திக் காரியஞ் சாதிக்கும், சுயநலமிகளாகவன்றிச் சமூகத்துக்காக வாழ்ந்து வந்த பெரியார்களை, என்றைக்குமே சமுதாயத்தின் நினைவில் வைத்துப் போற்றக்கூடியதாகவும் இருக்கும். இத்தகைய நன்னோக்கத்தைக் கருத்திற்கொண்டே அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களது வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகளை எழுத்துருவில் தர முனைந்துள்ளேன். இதுபோன்றே இன்னும் பல பெரியார்களது வாழ்க்கை விவரங்கள் வெளிவர வேண்டுமென்பது எனது வேணவாவாகும். எனது இந்த முயற்சி தொடர்வதற்கு இறைவனின் நல்லருளும் வாசக நண்பர்களின் ஒத்துழைப்பும் கிடைக்குமென எண்ணுகிறேன்.

கலாநிதி, பதியுத்தீன் இந்த நாட்டுக்கும், முஸ்லிம் சமுதாயத்துக்கும் ஆற்றியுள்ள அளப்பரிய சேவைகளினால், இந்த நூற்றாண்டிலே தோன்றிய தேசியப் பெருந் தலைவர்களில் ஒருவராக விளங்குவார் என்பதிற் சந்தேகமில்லை. அண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அன்னார் மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது மக்கள் அளித்த மகத்தான வரவேற்புகளும், வாழ்த்துக்களுமே அதற்குப் போதிய சான்றாகும். அவரது ஆழ்ந்த சிந்தனைகள், தூரதிருஷ்டிவாய்ந்த நோக்கங்கள், துணிச்சல்மிக்க சேவைகள் என்பன இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு புதுப் பாதையை அமைத்துள்ளன. முஸ்லிம்களின் அரசியல், கலாசாரத் துறைகளில் புதிய உத்வேகத்தையும் உணர்வையும் உருவாக்கியுள்ளன.

கலாநிதி பதியுத்தீனின் பணிகளைச் சுருக்கமாக விளக்கிக் கூறும் நூலொன்று 1969ஆம் ஆண்டு, இஸ்லாமிய சோசலிச முன்னணியினரால் வெளியிடப்பட்டுள்ளது. அதனையும் ஆதாரமாகக்கொண்டு மேலும் சில பணிகளை இந்நூலில் ஆராய்ந்துள்ளேன். கலாநிதி பதியுத்தீனால் எழுதப்பட்ட கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பனவும் அவரைப்பற்றி இந்த நாட்டிலும், வெளி



நாடுகளிலும் வெளிவந்துள்ள பத்திரிகைக் குறிப்புக்களையும், இந்நூலை எழுதுவதற்கு ஆதாரமாகக் கொண்டுள்ளேன். நூலை எழுதி முடிக்குந் தறுவாயில் மேலும் பல தகவல்கள் கிடைத்துள்ளன. இன்ஷா அல்லாஹ் அவற்றை இனிவரும் பதிப்புக்களிற் சேர்த்துக்கொள்ள எண்ணியுள்ளேன். எனவே, இவ்வளவு தான் கலாநிதி பதியுத்தீனின் சேவையெனக் கூறுவதற்கில்லை.

கலாநிதி பதியுத்தீனின் இலக்கிய ஆக்கங்களிற் பல ஆங்கில மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. அவற்றுட் சிலவற்றை நமது வாசகர்கள் அறிந்துகொள்ளுமுகமாகத் தமிழ் மொழியிற் பெயர்த்துள்ளேன். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அன்னாரைப்பற்றி வெளியான ஒருசில தமிழ் கட்டுரைகளை அப்படியே அன்றையத் தமிழ் நடையில் தந்துள்ளேன். மலேசியத் தமிழ்த் தினசரி ஒன்றில் வெளிவந்த அக்காலத்துத் தமிழ் நடையிலான கட்டுரையொன்றும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த நூலை எழுதுவதற்குத் தூண்டுகோளாக விளங்கிய எனது மாணவனும், அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் போதனாசிரியருமான ஜனாப் எம். ஏ. மொஹிதீன் இதனை எழுதுவதில் எனக்குத் துணையாக நின்ற இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத் தலைவர் கவிஞர் எம். ஸி. எம். ஸுபைர், எனது பாரியார் ''பேராதனை ஷர்புன்னிஸா'' ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நூலுக்குத் தேவையான புகைப் படங்கள் சிலவற்றைப் பெற்றுத் தந்த கல்வியமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் ஜனாப் ஏ. எச். எம். பாறூக் அவர்களுக்கும், நூலுக்கு முகவுரை வழங்கிய மூதறிஞர் ஜனாப் எம். ஏ. ஸி. எம். சாலிஹ், வழக்கறிஞர் எஸ். சிவசுப்பிரமணியம், மொழிபெயர்ப்பில் ஒத்துழைத்த திருமதி நெய்மா டெய்ன் அச்சிடும்போது தேவையான ஆலோசனைகளை வழங்கிய, எச். எம். பி. மொஹிதீன், எம். எஸ். முஹம்மது ஆகியோருக்கும் எனதுநன்றிக் கடனைச் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய மெய்கண்டான் அச்சக உரிமையாளர் திரு. நா. இரத்தினசபாபதி அவர்களுக்கும், அவ

# குடிப்புள்ள இளைஞர்

## பர்மியத் தினசரியின் பாராட்டு

"பூரணத்துவம் பிரதிபலிக்கும் முகபாவனையுடன், வண்ணக்கதராடை அணிந்த ஓர் உருவம், இளமையின் பொலிவோடும் புன்னகை பூத்த முகத்தோடும் "ரங்கூன் டெய்லி நியுஸ்" பத்திரிகைக் காரியாலயத்தினுள் நுழைந்தது. ஒரு முஸ்லிம் பத்திராதிபரினால் நடத்தப்படும் ரங்கூன் டெய்லி நியுஸ் பற்றிக் கேள்விப்பட்டு, அதன் வளர்ச்சியையும் அப்போதைய நிலையையும் நேரிற்கண்டறியும் நோக்கத்துடனே தான் அந்த உருவம் பத்திரிகைக் காரியாலயத்தினுள் நுழைந்தது. அவ்விள உருவத்தினர்தான் ஈழத்து முஸ்லிம் லீக்கின் முன்னைநாள் பொதுக்காரியதரிசி.

அந்தப் பத்திரிகையின் ஆசிரியருக்கு, அவர் அளித்த விசேட செவ்வியிலிருந்து, அவர் ஆப்கானிஸ்தான், இந்தியா, பர்மா ஆகிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும் நோக்கத்துடனேயே இலங்கையை விட்டுப் புறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. முதலிரு நாடுகளிலும் பிரயாணத்தை முடித்துக் கொண்ட இளைஞர் இப்பொழுது பர்மாவில் தங்கியுள்ளார்; மேலும் பல முஸ்லிம் நாடுகளைத் தரிசிக்கவும் இவர் எண்ணியுள்ளார். அந்த நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்களின் கல்வி, கலாசார, சமூக வாழ்க்கை முறைகளை நேரடியாகக் கண்டறிவதில் இவர் பெரிதும் ஆர்வங்கொண்டுள்ளார்; இதுவே இவரது பயணத்தின் முக்கிய குறிக்கோளாக அமைந்

துள்ளது. இவர், ஓர் அரசியல் வாதியல்ல. "பல்வேறு நாடுகளையும் தரிசித்து அந்த நாடுகளில் வாழுகின்ற மக்களின் பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, மனோ நிலை ஆதியனவற்றை ஒன்றுதிரட்ட வேண்டும்" என்ற, உயரிய நோக்கத்துடன் வந்துள்ள ஒரு கல்வி நெறியாளரே இவர். இவ்வாறு, தான் பெற்றுக்கொள்ளும் அநுபவத்தின் மூலம் ஈழத்து முஸ்லிம்களின் கல்வி முறையில் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆசையும் துடிப்பும் உள்ளவராக இவர் காணப்படுகின்றார்.

தமது பதினைந்தாவது வயதில் பொதுச்சேவையில் ஈடுபாடுகொண்ட இவர் இருபதாவது வயதில் இலங்கையின் பலம் வாய்ந்த ஓர் இயக்கமான முஸ்லிம்லீக்கின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். மூன்று ஆண்டுகாலச் சேவையினால் அதனை ஒரு பலம்வாய்ந்த இயக்கமாக மாற்றியமைத்தார். இவர் ஒரு தனிப்பட்ட ஆசிரியராகவும் இருந்து வந்துள்ளார்.

இளமையின் துடிப்பும் தாய் நாட்டு முஸ்லிம்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் நிறையப்பெற்றவராக விளங்கும் இவர் தமது சுற்றுப்பயண அநுபவங்களைக் கொண்டு, சொந்த நாட்டு முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்காக வாழ்நாளையே அர்ப்பணிக்க முனைந்துள்ளார்.

''இலங்கை முஸ்லிம்களின் முன்னேற்றம் அவர்களது பொருளாதார அபிவிருத்தியிலும், உழைப்பிலும் தான் தங்கியுள்ளது'' என்று இவர் கருதுகின்றார். வகுப்புத்துவேசம் காட்டப்படாத ஈழ நாட்டில் வியாபார சமூகமாக வாழும் முஸ்லிம்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் எந்த விதக் கஷ்டமோ தடையோ இருக்கமாட்டாதென்றும் இவர் நம்புகின்றார்.''

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பர்மாவின் ஆங்கிலத் தினசரியொன்றின் பிரதம ஆசிரியர் ஒருவர் இவ்வாறு



குறிப்பிட்டுப் பெருமைப்படுத்திய ஈழத்து இஸ்லாமிய இளைஞன் யாராக இருக்கலாம்! இத்தகைய துடிப்பும், திடமும், புகழும் பூரணத்துவமும் கொண்ட அந்த இளைஞன்தான், சமுதாயப் பற்று, சமூகநலன், சேவை மனப்பான்மை, தேசிய ஒற்றுமை என்பனவற்றால் தம்மையே சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக அர்ப்பணித்து விட்ட மாமேதை கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள்! அவர்களது வாலிபப்பருவத்தை நினைவு படுத்துவதாகவே, பர்மிய டெய்லி நியுஸ் பத்திரிகை ஆசிரியரின் இந்தக் கருத்துரை அமைந்துள்ளது.

அலிகார் சர்வகலாசாலையின் பட்டதாரி மாணவராக இருந்தபோது அல்ஹாஜ் பதியுத்தீன் தென்கிழக்காசிய நாடுகளுக்கு அடிக்கடி விஜயஞ் செய்து வந்தார். தமது விடுமுறை காலத்திலுங்கூட இஸ்லாமியர் வசிக்கும் நாடுகளுக்குச் சென்று அவர்களது கல்விமுறையிலும் கலாசார வாழ்விலும் அரசியற் துறையிலும் மறுமலர்ச்சி காண்பதில் அவர் முக்கிய ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். அவர் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகளும் எழுதியுள்ள எழுத்தோவியங்களும் அந்த நாடுகளில் வாழ்ந்த மக்களைப் பெரிதும் கவருவனவாயின.

தமது இருபத்தைந்தாவது வயதில், இளமையின் பொலிவோடும் இதயப்பூரிப்போடும் பர்மிய டெய்லி நியுஸ் பத்திரிகையின் ஆசிரியருக்கு அவர் அளித்திருக்கும் செவ்வியிலிருந்தே அவரது நாட்டுப்பற்றையும் சமுதாயப் பற்றையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். முஸ்லிம் சமுதாயத்தை, விசேடமாக ஈழத்து முஸ்லிம் மக்களை முக்கிய குறிக்கோளாகக் கொண்ட உள்ளத்துணர்வுகளை அவரது பேட்டி விவரங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

1933 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10-ஆந் திகதி வெளியான ரங்கூன் டெய்லி நியுஸ் பத்திரிகையில் அதன் ஆசிரியருக்கும் ஜனாப் பதியுத்தீனுக்கும் இடையிலான பேட்டி விவரங்களை அப்பத்திரிகை பின்வருமாறு பிரசுரித்துள்ளது.

**ஆசிரியர்:-** *ஈழத்து முஸ்லிம்களைப்பற்றியும் உங்களது அழகிய அற்புதமான தீவைப்பற்றியும் நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

**ஜுறுப் பதியுத்தீன்:-** சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வந்த அராபியர்களின் வழித்தோன்றல்களே இலங்கை முஸ்லிம்களாவர். வியாபாரிகளாகவே அவர்கள் இங்கு வந்தார்கள். இப்பொழுதும் வியாபாரிகளாகவே வாழ்க்கை நடத்துகின்றனர். சனத்தொகையைப் பொறுத்த வரையில் ஆறு சத விகிதத்தினராக இருந்த போதிலும், இலங்கையரை ஒரு வர்த்தக சமூகத்தினராக மாற்றுவதில் அவர்கள் பெரும்பங்கு கொண்டுள்ளனர். ஏனைய முஸ்லிம் நாடுகளிற் போன்று நாங்களும் கல்வித்துறையில் பின்னணியிற்தான் இருக்கின்றோம். எனினும் கல்வித்துறையில் இப்பொழுது ஒருவித புத்தூக்கம் ஏற்பட்டுள்ளது, ஏனைய சமூகத்தினரோடு சரிநிகர் சமானமாக வாழ்ந்து தாய் நாட்டுக்குச் சேவை செய்யக்கூடிய ஒருசூழ்நிலை இப்பொழுது உருவாகிக்கொண்டு வருகிறது. இலங்கை முஸ்லிம்களினதும் அரசாங்கத்தினதும் நன்மதிப்பைப் பெற்ற ஓர் இயக்கம் இயங்குகின்றது. அதுதான் 1924ஆம் ஆண்டு மூன்று முஸ்லிம்களால் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம்லீக்காகும். இன்று பல மாகாணக் கிளைகளையும் உள்ளடக்கியதாய், இரண்டாயிரம் அங்கத்தவர்களையும் பெற்றுத் திகழ்கின்றது. இந்த அமைப்பின் நோக்கம் நமது சமூகத்தின் பொருளாதார முன்னேற்றம் மட்டுமல்ல, இலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்க, கல்வி, கலாசார முன்னேற்றத்தோடு அரசியல் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டுவதாகும். அதனால் இவை இந்திய முஸ்லிம்லீக்கின் கொள்கைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டுள்ளன, என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

''வியாபார வாழ்க்கையைத் தொடர்ந்தும் உத்வேகத்துடன் கடைப்பிடிக்காவிட்டால் நமது முன்னோர்கள் பெற்றிருந்த அரும் பெருஞ்சிறப்புக்களைத் தாமும் பெற்றுக்கொள்ள முடியாமற் போகும்'' என்று இலங்கை முஸ்லிம்கள் கருதுகின்றனர். அந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டே இப்பொழுது



கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் வர்த்தகக் கல்வியைப் போதிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் இலங்கையின் ஏனைய சமூகத்தினரோடு அன்பாகவும், அன்னியோன்னியமாகவும், சமாதானமாகவும் வாழ்கின்றனர். இந்த நிலையைத் தொடர்ந்தும் நீடிக்கச் செய்வதே எமது ஆவலாகும். எந்த விதமான சாதித்துவேசமோ, மதத்துவேசமோ அங்கு கிடையாது. இந்த வகையில் நாங்கள் இந்தியாவை விடவும் ஒருபடி முன்னேறியுள்ளோம், சமூக ஒற்றுமைக்காக இத்தகைய கொள்கைகளை மேற்கொண்டுள்ள பர்மிய நாட்டை நான் பாராட்டுகின்றேன்.

## இலங்கையர் சாதித்துவேசம் உடையவர்களல்ல

இலங்கையில் பெரும்பான்மையினராக வாழ்கின்ற சிங்களவர்கள் சாதித்துவேசமனப் பான்மையுடைவர்களல்ல; இயற்கையாகவே அவர்கள் சினேக மனப்பான்மை பூண்டவர்கள், இலங்கைக்கு வந்த எல்லாப் பிற நாட்டினரையும் அவர்கள் அன்புக்கரம் நீட்டி வரவேற்றுள்ளார்கள்; முஸ்லிம்களின் மூதாதையர் முதன் முதல் ஈழ நாட்டுக்கு வருகை தந்த போதும் அவ்வாறே வரவேற்றார்கள்; உபசரித்துமுள்ளார்கள், அதனால் முஸ்லிம்களும் சிங்கள மக்களுக்குக் கடமைப்பட்டுள்ளார்கள். அதே வேளையில் அங்கேயே பிறந்து-வளர்ந்து-வாழ்ந்து வரும் முஸ்லிம்களும் தமது தாய் நாடான இலங்கையை மறந்து விடப் போவதுமில்லை!

எங்கள் மூதாதையர் அக்காலத்தைய சிங்கள அரசர்களது நிதி ஆலோசகர்களாகவும், அரச வைத்தியர்களாகவும், யுத்தத் தளபதிகளாகவும் இருந்து வந்துள்ளார்கள். நாட்டின் ஏனைய முன்னேற்றத் துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்கள், இன்று ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்காகவும் சுயாட்சியைக் கோருவதற்காகவும் முஸ்லிம்களும் ஏனைய சமூகத்தினரோடு தோளோடு தோள் நின்று போராடுகின்றார்கள். இத்தகைய ஒருமைப்பாட்டினால் இந்தியர்களை விட

இலங்கையரே விரைவில் தங்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வார்களெனத் தெரியவருகிறது.

மேலை நாட்டினரைப் பின்பற்றுவதில் இலங்கை முஸ்லிம் கள் முன்னிற்கின்றனர். இதனைக் கண்மூடித்தனமான பின்பற் றல் எனச்சிலர் கருதுகின்றனர். இந்த விடயத்தில் எனது கருத் தையும் கூறிவைக்க விரும்புகிறேன். "மேலை நாட்டினரை அவர்களுக்கே உரியதான விளையாட்டுக்களின் மூலந்தான் தோல்வி காணச் செய்யலாம். அப்பொழுதுதான் அவர்களது பார்வையில் நாங்களும் உயர்ந்தவர்களாக - முன்னேற்ற மடைந்தவர்களாகத் தென்படுவோம்."

**ஆசிரியர் :-** இந்தியாவின் அரசியல் நிலையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் ?

**ஜனாப் பதியுத்தீன் :-** நான் இலங்கையில் இருக்கும் பொழு தே இந்திய அரசியலைப் பற்றியும் அரசியல் வாதிகளைப் பற்றி யும் கேள்வியுற்றும், வாசித்தும் அறிந்து கொண்டுள்ளேன், இந்திய அரசியல் வாதிகளிற் சிலரை இலங்கையில் வைத்து நேரடியாகவே கண்டு கதைத்துமுள்ளேன். எனினும், இலங்கையில் இருந்த பொழுது இந்தியாவின் அரசியலைப்பற் றியோ அந்த நாட்டு அரசியல் வாதிகளைப்பற்றியோ சரியான பூரணமான அபிப்பிராயத்தை என்னால் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. நான் முதலாவதாக இந்தியாவை வந்தடைந்த போது, பம்பாய் வட்டமேஜை மகா நாடொன்றிற் கலந்து கொண்ட இந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களிற் பலரைச் சந்தித்து அளவளாவினேன். 1931 ஆம் ஆண்டில் பம்பாயில் நடைபெற்ற பிரக்கியாதி பெற்ற ஜின்னா ஹால் கூட்டத்தின் அவதானிகளில் ஒருவராகவும் கலந்து கொண்டேன்.

இந்திய அரசியலைப்பற்றியும் அரசியல் வாதிகளைப்பற்றியும் நான் ஆரம்பத்தில் ஏற்படுத்திக் கொண்டிருந்த கருத்துக்களை - அவர்களை நேரிற்கண்டபோது பெறமுடியாமற் போய்விட்டது. அவர்கள் இந்திய நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இன்னும் தீவிரமாக முயற்சி எடுக்கின்றார்



களில்லை. அரசியல் போராட்டத்தைவிட வாழ்க்கைப் போராட்டத்துக்கே கூடுதலான கவனத்தைச் செலுத்துகின் றனர். அரசாங்க உத்தியோகங்களைப் பெற்றுக்கொள்வதிலும் ஆட்சி மன்றங்களிற் பிரதிநிதித்துவம் பெறுவதிலும், ஒருவரை யொருவர் முந்திக்கொள்ளும் அளவிலேதான் இந்துக்களும், முஸ்லிம்களும் கவனஞ் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். தங்களை எதிர்நோக்கியுள்ள உண்மையானதும், மிக முக்கிய மானதுமான அரசியற் பிரச்சினைகளைப்பற்றி உதாசீனமாக இருப்பதைத்தான் நான் காண்கின்றேன்.

ஏதோ ஒரு காரணத்தைக் கற்பனை செய்து கொண்டு இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு நோக்குகின்றனர். இப்படியான நிலையில் இருந்து கொண்டு தமது பொதுவான அரசியற் பிரச்சினைகளை அவர்க ளால் வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்ள முடியாது. இந்தி யத் தலைவர்களுள் பண்டித ஜவஹர்லால் நேரு, டாக்டர் அன்சாரி ஆகியோரிடம் நான் பெருமதிப்பு வைத்துள்ளேன். மகாத்மா காந்தியை ஓர் அரசியல் தலைவர் என்பதைவிட ஆத் மீகத் தலைவராகக் கருதுவதே மேலானதாகும்.

**ஆசிரியர் :-** இந்திய முஸ்லிம்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள் ?

**ஜனாப் பதியுத்தீன் :-** இந்திய முஸ்லிம்கள் தம்முள் பிளவு பட்டு ஒற்றுமையின்றி இருப்பதை மனவருத்தத்துடன் அவ தானிக்கிறேன். "அகில இந்திய முஸ்லிம் தலைவர்" என்று கூறக்கூடிய எவராவது அங்கு இல்லை. ஒரு ஸ்தாபனத்தைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் காரணத்தினாலோ, அல்லது ஒரு சிறிய கூட்டத்தினருக்குச் சொற்பொழிவாற்றி விட்ட எண் ணத்தினாலோ ஒரு சமூகத்தையே பிரதி நிதித்துவம் வகிக்கும் தலைவராக ஒருசிலர் தம்மைக் கருதிக் கொள்ளுகின்றனர். அன்றியும், அங்கத்தவர்களிடையே ஒற்றுமை இன்மையால் எந்தவொரு முஸ்லிம் ஸ்தாபனமும் ஸ்திரமான நிலைக்கு முன் னேற முடியாமல் இருக்கிறது. இந்திய முஸ்லிம் தலைவர்கள்

எல்லோரையும் கண்டு அளவளாவும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்திய முஸ்லிம்களுக்கு இன்று தேவையாக இருப்பது ஒரு ஜனநாயகத் தலைவரல்ல. மனிதாபிமானமும் ஏதேச்சாதிகாரமும் கொண்ட ஒரு தலைவரே! அவரால்தான் சிதறுண்டு கிடக்கும் மாபெரும் இந்திய முஸ்லிம் சமுதாயத்தை ஒன்றிணைத்து, அவர்களிடையே இணக்கத்தையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்த முடியும்.

பாரிசில், உல்லாசமாக அநுபவிக்கும் இராஜபோக வாழ்வை ஒதுக்கி விட்டு, மேன்மை தங்கிய ஆகாகான் போன்றவர்கள், சிதறுண்டு கிடக்கும் இந்தச் சமுதாயத்தின் தலைமைப்பீடத்தைக் கையேற்க முன்வரவேண்டும். கீழைத்தேயத்திலும் மேலைத்தேயத்திலும் ஆகாகானுக்குள்ள செல்வாக்கையும் செல்வத்தையும் இந்திய முஸ்லிம்களை ஒன்று படுத்துவதற்காகப் பயன் படுத்த முடியும்.

நான் ஒரு வகுப்புவாதியல்ல; வகுப்புவாதியாக இருக்கப் போவதும் இல்லை. எனது நாடு அப்படியான தொன்றை அங்கீகரிக்கவும் மாட்டாது. எனது நாட்டின் எதிர்கால நன்மையைக் கருத்திற்கொண்டு, ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம் என்ற உயரிய நோக்கங்களைத் தைரியமாக மேற்கொண்ட ஓர் இளைஞனாகவே என்னை நான் மாற்றிக்கொள்ள முயற்சிக்கிறேன். இலங்கை அரசியல் சாசனத்திலும் சாதி அடிப்படையில் அல்லாமல் சனத்தொகை அடிப்படையிலேயே பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று இலங்கை முஸ்லிம் லீக் குரலெழுப்பிக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம்கள் எப்பொழுதுமே சாதித்துவேச மற்றவர்கள். பிளவுகளை ஏற்படுத்த விரும்புகிறவர்களுமல்ல; வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டபோது முஸ்லிம்கள் அதனை வரவேற்றனர். எனினும் வியாபார சமூகத்தினரான முஸ்லிம்களுக்குச் சில தனிப்பட்ட விசேடமான அபிலாஷைகள் இருப்பதால் நியாயமான அளவுக்கு எமக்கும் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டு மென்பதே முஸ்லிம் லீக்கின் தற்போதைய முக்கியமான கோரிக்கையாக இருந்து வருகின்றது.



**ஆசிரியர் :-** ஆப்கானிஸ்தானைப் பற்றியும் அங்குள்ள மக்களைப் பற்றியும் என்ன கருதுகின்றீர்கள் ?

**ஜனாப் பதியுத்தீன்:-** வெளி உலகுக்கு ஆப்கானிஸ்தான் ஒரு பெரும்புதிராகவே இருந்து வருகின்றது. மத்தியகிழக்கிலுள்ள முக்கிமான சுதந்திர நாடுகளுள் ஆப்கானிஸ்தானும் ஒன்றாகும். மூன்றாவது ஆப்கான் யுத்தத்தின் பின்னரே உலக நாடுகள் ஆப்கானிஸ்தானின் சிறப்பை அறியத் தொடங்கியுள்ளன. "நாகரிகமற்ற பயங்கரமான மக்கள் வாழும் நாடு" என்றுதான் நானும் அதைக் கருதியிருந்தேன். எனது கருத்து தப்பானதென்று இப்பொழுதான் உணர்ந்துள்ளேன்.

## உன்னதமான கலாசாரம்

இஸ்லாமியக் கலாசாரத்தோடொட்டிய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி முற்போக்குப் பாதையில் ஏறு நடைபோட்டுக்கொண்டிருக்கும் ஏனைய உலக நாடுகளின் அணியிலே, உன்னதமானதோர் இடத்தைப் பெற முயலும் ஓர் அற்புதமான முஸ்லிம் நாடாகவே ஆப்கானிஸ்தான் எனக்குத் தென்படுகின்றது. நேர்மையான மக்கள் கூட்டத்தினர் அங்கு வாழ்கின்றனர். அவர்கள் உள்ளதை உள்ளவாறே ஒழிவு மறைவின்றி எடுத்துக் கூறுகின்றவர்கள், உபசரிப்பும் வாஞ்சையும் மிக்கவர்கள். அதே நேரத்தில் நாங்கள் எதிர்பார்த்ததுபோல் அந்த நாடு ஏனையப்பலதுறைகளில் இன்னும் போதியளவு முன்னேறவில்லை. நாட்டின் நலத்தைக் கருத்திற்கொண்டு பல தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்த முன்னைநாள் மன்னர் அமானுல்லா முயன்று வந்துள்ளார். எனினும் முல்லாக்களின் கடும் எதிர்ப்பினால் அவரது ஆசைக்கனவுகளெல்லாம் அப்படியே தவிடுபொடியாகியுள்ளன. ஈற்றில் மன்னர் அமானுல்லா அன்னிய நாடொன்றில் தஞ்சம்புகுமளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

மாமன்னர் அமானுல்லாவால் நிர்மாணிக்கப்பட்ட "தாருலமான்" என்ற தலைநகரை நான் தரிசித்தேன். மாமன்னர் அமானுல்லாவின் ஆசைகள் எப்படிச் சிதறுண்டு கிடக்

கின்றன, என்பதைக்காண மனம் வருந்தினேன். பூர்த்தி செய்யப்படாத அழகிய பாதைகளும், வியக்கத்தக்க பாரிய கட்டிடங்களும் அங்கே காட்சிதந்தன ''தாருலமான்'' இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ள காபுல் சர்வகலாசாலைக்குக் கையளிக்கப் பட்டுள்ளது. அதன் முற்றுப்பெறுத அரண்மனையில், மக்கள் சபையும், சர்வகலாசாலையின் செனற் சபையும், அரசாங்கக் காரியாலயங்களும் அமைக்கப்பட இருக்கின்றன. தமது சொந்த நாட்டு மக்களது நன்மதிப்பைப் பெற்ற ஒரு தலைவரை இப்பொழுது ஆப்கானிஸ்தான் பெற்றுக்கொண்டுள்ளது. இது அந்த நாட்டு மக்களின் அதிர்ஷ்டமென்றே கூறவேண்டும்.

மாமன்னர் அமானுல்லாவின் இலட்சியங்களையும் கோட்பாடுகளையும் செயல் திட்டங்களையும் இப்போதைய மன்னர் நாதிர்ஷா மறந்துவிடவில்லை. என்றாலும், சிறுசிறு மாற்றங்களுடன் மாமன்னர் அமானுல்லாவின் கொள்கைகள் செயல்பட்டு வருவதை நான் வரவேற்கின்றேன். திட்டவட்டமான அமைதியான முன்னேற்றத்தையே நாதிர்ஷாவும் விரும்புகின்றார். தமது தேசத்தின் தேவைகளை உணர்ந்து கொண்டு செயலாற்றும் செயல் வீரராகவே நான் அவரைக் கருதுகின்றேன். தகுதிவாய்ந்த அனுபவமும் செயல் திறமும் மிக்க அமைச்சர்களை அவர் தேர்ந்தெடுத்துள்ளார். அவர்களுள் கல்வியமைச்சரும் யுத்த அமைச்சரும் எனது கவனத்தை வெகுவாகக் கவர்ந்துள்ளனர்.

அங்கு. திணைக்களங்கள் யாவும் ஒழுங்காகச் செயற்படுகின்றன. இராணுவப் பொருளாதார விடயங்களில் மன்னரே தமது தீவிர கவனத்தைச் செலுத்தி வருகின்றார். காபுல் நகரம் பல புதிய தொழிற்சாலைகளால் நிறைவு பெற்றுக்காணப் படுகின்றது. அவற்றுள் தீப்பெட்டித் தொழிற்சாலைகளை விசேடமாகக் குறிப்பிடலாம். நாட்டின் நிலவளங்களான நிலக்கரி, இரும்பு, உலோகம் போன்றனவற்றைச் சொந்த நாட்டின் பொருளாதார வளத்துக்காகவே பயன் படுத்த முன்வந்துள்ளனர். வெளியார் சுரண்டலைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.



## கல்வி அபிவிருத்தி

கல்வித்துறையிலும் ஆப்கானிஸ்தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஜேர்மனியர், பிரான்சியர், ஆப்கானிஸ்தானியர் ஆகியோர் முறையே மூன்று பெருமுக்கியமான கல்லூரிகளை அங்கு நடாத்துகின்றனர், பாரசீக மொழி சுதேசமொழியாக அமைந்துள்ளது. மாணவர்களுக்கான செலவினங்களை அரசாங்கமே பொறுப்பேற்றுள்ளது. கட்டடங்கள் மாத்திரமன்றி மாணவருக்கான புத்தகங்கள், கைப்பணம் என்பனவற்றையும் அரசாங்கம் வழங்குகின்றது. டெனிஸ், உதைப்பந்தாட்டம் போன்றவற்றில் விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது. மாணவர்களும் விளையாட்டுத்துறைகளில் அதிகம் ஆர்வங்காட்டுகின்றனர். பல இடங்களில் அவர்களுக்கான விசேடவிளையாட்டு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன, கல்வியமைச்சரே பல விளையாட்டுக்களிற் பங்கு கொள்வதைக் காபூலில் வைத்து நேரடியாகவே கண்டபோது, பெரும் மகிழ்ச்சியடைந்தேன். மாமன்னர் அமானுல்லாவின் காலத்தில் 8000 வீரர்களே இராணுவத்தில் இருந்தனர். ஆனால் இன்று பிரான்சிய பாணியில் திடகாத்திரமான 55000 வீரர்கள் இராணுவத்தில் இருக்கின்றனர். பலம் பொருந்திய இராணுவமொன்று இன்று ஆப்கானிஸ்தானில் இருக்கின்றது.

கம்பீரமான தோற்றத்தையுடைய போலீஸ் வீரர்கள் நகரெங்கிலும் வாகன ஒழுங்குகளைச் சிறப்பான முறையில் மேற்கொள்ளுவதைக் காணமுடிந்தது. முல்லாக்களின் அதிகாரம் இப்பொழுது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த புரட்சிக்குத் தூண்டுதலாக இருந்த இருவரில் ஒருவர், இப்பொழுது எகிப்தியத் தூதுவராக நியமனம் பெற்றுள்ளார். மற்றவர் காபூலின் பிரதம நீதியரசராகக் கடமைபார்க்கின்றார். இந்தச் செயலிலிருந்தே நாதிர்ஷா மன்னரின் மதியூகம் நன்கு புலனாகின்றது. மாமன்னர் அமானுல்லாவுக்குச் சார்பாக இப்பொழுதுஞ் சில குழப்பங்கள் நடைபெறுவதாகப் பத்திரிகைச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இருந்தா

லும் இன்றைய ஆட்சிக்கு எந்தவித இடைஞ்சலும் ஏற்படாதென்றே நம்புகின்றேன்.

“பர்மாவைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?'' என்ற ஆசிரியரின் கேள்விக்கும் ஜனாப் பதியுத்தீன் பின்வருமாறு பதில் கூறினார்;

''பர்மிய நாட்டை முழுமையாகச் சுற்றிப்பார்க்கும் சந்தர்ப்பம் இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இரங்கூனை அவதானித்ததிலிருந்து இந்திய நகரங்களை விட இது புனிதமானதாகக் காட்சி தருகின்றது. இந்த நகரத்திலே அசுத்தங்களை அகற்றும் முறை போற்றத்தக்கது. இரங்கூன் ஓர் அழகான-ரம்மியமான நகரமாகவே எனக்குக் காட்சி தருகின்றது. இந்த நகரின் தூய்மையும் அழகும் இலங்கையின் தலைநகரான கொழும்பு மாநகருடன், ஓரளவு ஒத்ததாகவே காணப்படுகின்றது. இரங்கூன் நகரமக்களின் அன்பும் பரிவும் உபசரணைகளும் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டன. சில மதிப்புக்குரிய தலைவர்களையும் நான் இங்கு காண்கிறேன். அவர்களது அரசியற் கருத்துக்களையும் வரவேற்கின்றேன்.

''இரங்கூன் டெய்லி நியுஸ்'' பத்திரிகை, ஒரு முஸ்லிம் பத்திரிகையானாலும் எந்த விதமான வகுப்புவாதக் கோஷமும் அதிற் காணப்படவில்லை. பத்திரிகா தர்மத்துக்கு அமைவாக நடத்தப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். முஸ்லிம்களைப்பற்றியும் முஸ்லிம் நாடுகளைப்பற்றியும் ஒருதலைப்பட்சமான கருத்துக்களைத் தெரிவிக்க முற்பட்டதனால்தான் இந்தியாவில் பல பத்திரிகைகள் மதிப்பிழந்து விட்டன. பத்திரிகை ஒரு நாட்டில் வசிக்கும் எல்லா இனமக்களுக்கும் பொதுவானதொன்றாகும். எல்லாருமே பயனடையக்கூடிய செய்திகளைப் பிரசுரித்து மக்களது அறிவு வளர்ச்சிக்கு உதவுவதே ஒரு தேசியத் தினசரியின் முதன்மையான கடமையாய் இருத்தல் வேண்டும்.''

இவ்வாறு பர்மாவிலே பல கருத்துரைகளை வழங்கியவராக ஜனாப் பதியுத்தீன், அந்த நாட்டின் பல முக்கிய நகரங்களுக்



கெல்லாம் விஜயஞ் செய்தார். அன்னியரின் ஆதிக்கப்பிடியிலே அல்லலுற்ற அன்றைய பர்மிய மக்களுக்கு அரசியற் சுயாட்சி பற்றியும் விளக்கிக் கூறினார். இவரது விளக்க உரைகள், ஆங்கில ஆட்சியாளரின் கவனத்தையும் ஈர்த்து விட்டன. ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் தூபமிடும் பேச்சுக்களினால், ஆட்சியாளரே தலையிடலாயினர். அதனால் 24 மணித்தியாலத்துக்குள் அந்த நாட்டிலிருந்து வெளியேறுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எனினும் தனது இலட்சியத்தோடமைந்த பேச்சு வன்மையை நிலைநாட்டுவதிற் பின்னிற்கவில்லை ஜனாப் பதியுத்தீன் அவர்கள்.

# எமது வரலாறு

## கல்கத்தாவில் பேச்சு

**1933**-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜனாப். பதியுத்தீன் கல்கத்தா சென்றடைந்தார். கல்கத்தாவிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பல இயக்கங்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களிற் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். கீழைத்தேயங்களிலே படர்ந்திருந்த ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு எதிராக அந்த இயக்கங்கள் பலவகையான பிரச்சாரங்களைச் செய்துகொண்டிருந்தன. இத்தகைய இயக்கங்களுக்கு ஜனாப் பதியுத்தீன் போன்றவர்களது முற்போக்கான கருத்துக்கள் எருவூட்டுவனவாய்அமைந்திருந்தன. அதனால்பல இடங்களில் பிரசார வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்ட ஜனாப். பதியுத்தீன், அந்த நாட்டின் முற்போக்கு வாதிகளாற் பெரிதும் கவரப்பட்டார். இவரது பிரயாணத்தையும் சொற்பொழிவுகளையும் அங்குள்ள பத்திரிகைகள் பிரமாதமாகப் பிரசுரித்தன. அத்தனை முற்போக்குப் பிரசாரங்களின் மத்தியிலும், ஈழத்து முஸ்லிம்களைப் பற்றிய கவலை அன்னாரது சிந்தனையிலே அடிக்கடி நிழலாடின. ஈழத்து முஸ்லிம்களின் வரலாற்றையே ஜனாப் பதியுத்தீன் பல இடங்களில் எடுத்துக் காட்டியிருப்பதும் பத்திரிகைகள் அவற்றிற்கு முக்கியத்துவம் அளித்திருப்பதும் முக்கியமான சான்றாக அமைந்துள்ளது.

*13-7-1933* இல் வெளியான, "ஸ்டார் ஒப் இண்டியா" (*Star of India*) என்ற பத்திரிகை, ஜனாப் பதியுத்தீன் நிகழ்த்திய ஈழத்து முஸ்லிம்களின் வரலாற்றைப் பற்றிய ஒரு சொற்பொழிவின் சுருக்கத்தைக் கட்டுரையாகவே பிரசுரித்துள்ளது. இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றைச் சுருக்கமாக அறிந்து கொள்ள இச் சொற்பொழிவு வாய்ப்பளிக்கின்றது.



'அராபியரின் வழித்தோன்றல்களாகிய முஸ்லிம்கள் மூன்றரை லட்சம் பேர் இலங்கையில் வாழ்கின்றனர். சரித்திர ஆராய்ச்சியாளரான திரு. டீ. சில்வாவின் கருத்துப்படி சிங்களவர்களின் வருகைக்கு முன்பிருந்தே அராபியர்கள் இந்த நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தார்களென்பதை அறிய முடிகிறது. இலங்கையின் பெரும்பான்மை மக்களான சிங்களவர்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வருகிறார்கள். அரசியலைப் பற்றிய தீர்க்க தரிசனம் அவர்களிடம் இப்பொழுது குறைவாகவே காணப்படுகிறது. எனினும் வந்தாரை வரவேற்று உபசரித்து வாழவைக்கும் பண்புடையவர்கள். ஏனைய மக்களைப் பின்பற்றி முன்னேற முயற்சிக்கின்றனர். அனேகமானோர் விவசாயிகள். நிலச் சொந்தக்காரரும் அரசாங்க ஊழியரும் அவர்களிடையே காணப்படுகின்றனர். சிங்கள மக்களை அயலாளராகக் கொண்டு வாழ்வது மனத்துக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

'இலங்கைச் சோனகர்' என்றழைக்கப்படும் முஸ்லிம்கள் மாத்திரமே இலங்கைக்கு வியாபார நோக்கங் கொண்டு வந்தனர். போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் உட்பட ஆதிக்குடிகளான சிங்கள, தமிழ் மக்களுங்கூட இலங்கையின் ஆதிக்கத்தைக் கைப்பற்றும் நோக்கமாகவே அந்தநாட்டுக்கு வந்துள்ளனர்.

முஸ்லிம்களும், சிங்களவரும் ஆரம்பகாலந் தொட்டே நெருங்கிய தொடர்புடையவர்களாகவும் ஐக்கிய மனப்பான்மையுடனும் வாழ்ந்து வந்துள்ளனர். இதனால் முஸ்லீம்கள் அந்த நாட்டின் நிதி, வைத்திய, இராணுவ ஆலோசகர்களாகவும் இருந்து வந்துள்ளனர்.

''போத்துக்கேயர் மாத்திரம் இலங்கைக்கு வராமலிருந்தால் இன்று அந்த நாடு ஒரு சுதந்திர முஸ்லிம் இராச்சியமாகவே மாறியிருக்கும்'' என்று, சர். எமர்சன் இலங்கையைப் பற்றிய தமது வரலாற்று நூலில் எழுதியுள்ளார். அவரது கூற்றை முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாவிடினும், சிங்களமன்னர்களது காலத்தில் முஸ்லிம்கள் எத்தகைய சிறப்புடன் வாழ்ந்து வந்துள்ளனரென்பதை நன்கு அறிய முடிகிறது. சிங்கள மக்களுக்காக முஸ்லிம்கள் பாடுபட்டுள்ளார்கள். அதனால் சிங்களவர்களும் முஸ்லிம்களுக்குரிய அந்தஸ்தை வழங்கினர்கள். சிங்கள அரச குடும்பங்களும், முஸ்லிம்களுக்குரிய அந்தஸ்தை வழங்கின. சிங்கள அரச குடும்பங்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே விவாகத் தொடர்புகளும் இருந்து வந்துள்ளன. வதியகுமாரன் என்ற அரசனின் வரலாறு இதற்கோர் உதாரணமாகும். உலகச் சந்தையில் இலங்கை பிரபல்யம் அடைவதற்கு அடிப்படைக்காரணமாக இருந்தவர்களும் அராபிய முஸ்லிம்களேயாவர்.

## அரசியல் புத்தூக்கம்

முதலாவது உலகமகாயுத்தத்தின் பின்னர் இலங்கை அரசியலில் அமைதி காணப்பட்டது. அதன் பின்னர் அண்டை நாடுகளில் ஏற்பட்டது போன்ற சுயாட்சி உணர்வு இலங்கையிலும் ஏற்படலாயிற்று, இலங்கைத் தேசிய காங்கிரஸ் 1919-ஆம் ஆண்டு ஆரம்பமாயிற்று. ஆனல் ஓரிருவரைத் தவிர ஏனைய முஸ்லிம்கள் 1921-ஆம் ஆண்டு வரை அதில் கலந்து கொள்ளவில்லை. 1921-ஆம் ஆண்டு சர். ஜேம்ஸ் பீரிஸ் தலைமையில் கூடிய ஒரு காங்கிரஸ் மகாநாட்டில், சிறுபான்மையினரின் அரசியற் பிரதிநிதித்துவம் — அடிப்படை உரிமைகள், என்பன புதிய அரசியல் யாப்பில் வரையப்பட வேண்டுமென்ற தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழர்களுடன் முஸ்லிம்களும் அந்தக் காங்கிரஸ் இயக்கத்திற் சேர்ந்து கொண்டனர். 1923 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றத்துக்காக முஸ்லிம்களும் முழு மூச்சுடன் பாடுபட்டனர்.



புதிய சீர்திருத்தத்தின்படி மூன்று முஸ்லிம்களைச் சட்டசபைக்கு அனுப்பும் வாய்ப்பு முஸ்லிம் சமுகத்தினருக்குக் கிடைத்தது. சாதி அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டாலும், தாய் நாட்டின் அரசியல் சுதந்திரத்துக்காகப் போராடுவதில் முஸ்லிம்கள்எப்பொழுதுமே பின்னின்றதில்லை. இலங்கை மக்களின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக, பெரும்பான்மை இனத்தவரோடு முன்னணியிற் சேர்ந்து உழைத்துள்ளார்கள். இலங்கை தேசியத் காங்கிரசினதும் ஏனைய அரசியற்குழுக்களினதும் கோரிக்கைகளுக்குச் செவி மடுத்து, எமது நாட்டினருக்குக் கூடுதலான பிரதி நிதித்துவம் அளிக்கும் முகமாக ஒரு சிபார்சுக் குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, டொனமூர் ஆணைக்குழு 1927-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இக்குழு இலங்கையின் எல்லா நகரங்களுக்குஞ் சென்று விசாரணைகளை நடத்தியது. ''பொது மக்கள் எல்லோருமே வாக்களிக்கும் உரிமையை விரிவு படுத்த வேண்டும்''—என்ற கோரிக்கையும் ஆராயப்பட்டுள்ளது. 1921-ஆம் ஆண்டின் தீர்மானத்தைப் பொருட்படுத்தாத இலங்கைத் தேசிய காங்கிரஸ், ''இணைப்புத் தொகுதி'' வேண்டுமென்ற கோரிக்கையையும் வலியுறுத்தியது. இதன் விளைவாகச் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள முஸ்லிம் அங்கத்தவர்களின் தொகை குறைந்து விட்டது. ஐம்பது பேரைக் கொண்ட சட்ட சபைக்கு ஒரே ஒரு முஸ்லிம் அங்கத்தவர்தான் போட்டியின் போது பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஜனப். டீ. பி. ஜாயா போன்ற திறமைசாலியும் கொழும்புத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்துள்ளார். இலங்கையின் வேறெந்தத் தொகுதியிலும் முஸ்லிம்களால் ஈடு கொடுக்க முடியவில்லை. இதனுல் சிறுபான்மையினரான இந்து, முஸ்லிம், பறங்கியர் ஒன்று கூடி ''அகில இலங்கை லிபரல் லீக்'' என்ற பெயரில் புதியதோர் இயக்கத்தை ஆரம்பித்தனர். அதன் மூலமாகப் புதிய சட்டசபை அமைப்பிற் காணப்பட்ட சிறுபான்மை மக்களின் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டன. ஆட்சேபனைகளும் எதிர்ப்புக்களும் எழுப்பப்

பட்டன. அதன் பின்னரே, சாதி அடிப்படையிலான அங்கத்த வர் தெரிவு நீக்கப்படுதல் — வாக்குரிமை விஸ்தரிக்கப்படுதல்— சிறுபான்மையினருக்கு அமைச்சர் பதவிகள் வழங்குதல், ஆகிய புதிய சீர்திருத்தங்களைத் தேசிய காங்கிரஸும் ஏற்றுக் கொண்டது. அதனுல் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு முஸ்லிம் அங்கத்தவரும் அமைச்சராக நியமனம் பெற்றுர். சர். முஹம்மது மாக்கான் மாக்கார் அவர்களே அந்த அமைச்சராகும். இந்த அமைச்சர் தெரிவுகூடச் சட்ட சபையில் உள்ள ஐரோப்பியரின் ஒத்துழைப்புடனே தான் நடைபெற்றது. எனினும் இப்பொழுதுள்ள அரசியல் யாப்பு நடைமுறைக்கு உகந்ததல்ல. தேசிய காங்கிரசும் இந்த உண்மையை உணராமலில்லை. எல்லா மசோதாக்களையும் கவர்னரின் அங்கீகாரத்துக்கு விடுவது ஓர் அர்த்தமற்ற காரியமென்றே கூறுவேன். இந்த அரசியல் யாப்பானது சீனியால் மூடப்பட்ட ஒரு கசப்பு மாத்திரை (Sugar Coated pill) யாகும். வெளிப் பார்வைக்கு அழகாகத் தான் தோன்றுகிறது. யாப்பைக் கூர்ந்து கவனித்தால் நாங்கள் இருந்த சுதந்திரத்தையும் இழந்துள்ளோம் என்பது புலனுகின்றது.

## நமது எதிர்காலம்

இலங்கை முஸ்லிம் லீக் 1924-ஆம் ஆண்டு ஆரம்பமானுலும், பல கஷ்டங்களுக்கு மத்தியிலேதான் அது இயங்கிக் கொண்டிருந்தது. 1928-ஆம் ஆண்டுதான் அரசாங்கத்தினதும் முஸ்லிம் சமூகத்தினதும் அறிமுகத்தைப் பெற்றது. கல்வித்துறையில் பின்தங்கியிருப்பதால் முஸ்லிம் சமூகம் தகுந்த தலைவர்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. சாஹிராக் கல்லூரியிலும் கிறிஸ்தவக் கல்லூரிகளிலும் உருவாகும்,ஒரு சில முஸ்லிம் இளைஞரை நம்பித்தான் நமது சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் வயதில் இளைஞர்களானுலும் முஸ்லிம் சமூகத்தின் கல்வி, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்துக்காக உழைத்த வண்ணம் இருக்கின்றுர்கள்.

1928-ஆம் ஆண்டு முஸ்லிம் லீக் புனரமைப்புச் செய்யப்பட்டது. மாகாணக் கிளைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையிலுள்ள இந்திய முஸ்லிம்களையும் உள்ளடக்கிய ஒரு சக்தி வாய்ந்த இயக்கமாக இயங்கிக் கொண்டு வருகிறது. இப்படி இருந்தும் இலங்கை அரசாங்கத்தின் பொதுவான முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் எந்தவிதமான செயலையும் தாராள மனம் படைத்த முஸ்லிம் இளைஞர்கள் செய்வதற்கு முற்படவில்லை. சாதி அடிப்படையிலேதான் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றுஅவர்கள் கோரவில்லை.அரசியல் யாப்பில் தமது சமூகத்துக்கு விசேட பாதுகாப்பளிக்க வேண்டுமென்பதே அவர்களது கோரிக்கையாகும். குடியேற்ற நாடுகளின் செயலாளர் அண்மையில் நமது தீவுக்கு விஜயஞ் செய்தார். அவரது விஜயம் எங்களது நம்பிக்கைகளுக்கு மேலும் வலுவூட்டுவதாய் அமைந்துள்ளது. அத்துடன் இலங்கை அரசாங்கமும் முஸ்லிம்களின் தற்போதைய நிலையை நன்கு உணர்ந்து செயல்படுமென்றே நம்புகிறேன்.

இலங்கை முஸ்லிம்களைப்பற்றி மேலும் சில வார்த்தைகள் சொல்லியாக வேண்டும். கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் முஸ்லிம்கள் தங்களது குறைபாடுகளை உணர ஆரம்பித்து விட்டார்கள். ஒரு மகளிர் கல்லூரியைத் திறப்பதற்கான எண்ணமும் உருவாகியுள்ளது. மருதானை மகுதிச்சபையும் முஸ்லிம் லீக்கும் ஒன்றிணைந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்று நம்புகிறேன். பர்தாவுக்குள் எமது மங்கையர் இன்னும் அல்லலுற்ற வண்ணமாகவே இருக்கின்றனர். எனினும் இந்தியாவிலுள்ள பர்தாக் கட்டுப்பாட்டுடன் ஒப்பிடுகையில் இலங்கை முஸ்லிம் மாதர் ஓரளவு சுதந்திரமாகவே வாழ்கின்றனர்.

# புதுமைக்கு வித்திட்ட எழுத்தாளர்

ஐனுப் பதியுத்தீன் தமது வாலிபப் பருவத்திலே வெளிநாடுகளிற் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போதிலும், இலங்கையைப் பற்றிய சிந்தனையும், இலங்கை முஸ்லிம்களின் முன்னேற்றம் பற்றிய கவலையும் அவரிடம் இருந்து வந்துள்ளதை, அவரது பிரசாரங்கள் நிரூபிக்கின்றன. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில முஸ்லிம்கள் அன்று கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினாலும், இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களின் அந்தஸ்தை வரலாற்று அடிப்படையிலும் அரசியல், பொருளாதார, சமூக—சேவைகளின் அடிப்படையிலும், விளக்கமாகப் பேசவும் எழுதவும் துணிவு கொண்டு முன்வந்தவர்கள் எத்தனைபேர் என்பதை நினைக்கும் போதுதான், ஐனுப் பதியுத்தீன் அன்று மேற்கொண்ட துணிச்சலான பிரசாரங்களின் வலிமையை உணரமுடிகின்றது.

அவர் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளின் அடக்குமுறைகளுக்கு எவ்விதத்திலும் அஞ்சாதவராகக் கட்டுரைகள், சொற்பொழிவுகள் மூலமாக இந்த நாட்டு முஸ்லிம்களின் அரசியல் பொருளாதார உரிமைகளை விளக்கிக் காட்டியுள்ளார். அன்று உருவாக்கப் பட்டிருந்த இந்த நாட்டு வரலாற்று ஏடுகளில், முஸ்லிம்களைப்பற்றிய சரியான தகவல்கள் தரப்படவில்லை. பல சந்தர்ப்பங்களில், தவறான கருத்துக்கள் புகுத்தப்பட்டிருந்தன. அத்தகைய கருத்துக்களுக்குக் கண்டனந் தெரிவித்துப் பல கட்டுரைகளை ஐனுப் பதியுத்தீன் எழுதியுள்ளார். அக்கட்டுரைகளிலிருந்தே அவரது ஆய்வுத் திறன், சமூகப் பற்று தேசிய உணர்வு என்பன வற்றையும் நோக்கலாம்.



போத்துக்கேயர் இந்த நாட்டுக்கு வராமல் இருந்தால் இலங்கை, முஸ்லிம்களின் ஆதிக்கத்துக்குட்பட்டுச் சிங்கள சமுதாயமே அழிந்து போயிருக்கக் கூடுமென்றும்—முஸ்லிம்கள் ஆதிக்க வெறி பிடித்தவர்களென்றும்'', படித்த சிங்கள மக்களின் மத்தியிலே ஈழத்து முஸ்லிம்களைப் பற்றிய தவறான கருத்தைப் புகுத்த எண்ணிய ஒருவரால் எழுதப்பட்ட ஒரு கட்டுரைத் தொடர் 'இலங்கை டெய்லிநியுஸ்' பத்திரிகையில் பிரசுரமானது. அதற்குப் பதில் கொடுக்கு முகமாக ஐனுப் பதியுத்தீன் ''இலங்கைச் சோனகர்கள்'' '*Ceylon Moors*' என்ற தலைப்பில் 19-6-30 ல் '*Would Sinhalese become Moor men,*' என்ற கேள்வியுடன்பலத்த கண்டனக் கட்டுரை ஒன்றை எழுதினார். தனது ஒரே கட்டுரையின் மூலமாக அந்தப் பிரச்சினைக்கே முற்றுப் புள்ளி வைத்து விட்டார். இஸ்லாத்துடனும், முஸ்லிம்களது வரலாற்றுடனும் இலங்கை தொடர்பு பட்டிருந்த போதிலும் அதனைக்கைப்பற்றி ஆளவேண்டுமென்ற ஆசை இந்த நாட்டுக்குப் பல நூற்றாண்டுகளாக விஜயஞ் செய்தும்இந்தநாட்டில் வாழ்ந்தும் வந்துள்ள அராபிய முஸ்லிம்களுக்கு என்றுமே இருந்ததில்லை. இந்தியாவில் முஸ்லிம்கள் ஏக சக்கர வர்த்திகளாக இருந்தனர். சுமாத்திரா, ஜவா போன்ற நாடுகள் வரை முஸ்லிம்களின் செல்வாக்குப் படர்ந்திருந்தது. ஆப்கானிஸ்தான், பாரசீகம் என்பனவற்றோடும் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுடனும் ஒப்பிடுகையில், இலங்கையைப் போன்ற ஒரு சிறிய நாட்டைக் கைப்பற்ற வேண்டு மென்ற ஆசை இருந்திருந்தால்—அது அன்றைய முஸ்லிம்களுக்கு ஒரு சிரமமான காரியமாக இருந்திருக்க மாட்டாது. ஆதம் மலை, சரந்தீப், செய்லான் போன்ற முக்கிய குறிப்புக்களையும் பூமிசாஸ்திர சரித்திர சான்றுகளையும் அரபு நாடுகளிற் காணப்படும் வரலாறுகளையும் தொடர்பு படுத்தி—இந்த நாட்டை முஸ்லிம்கள் தமது ஏகாதிபத்தியத்துக்குட்படுத்தாத காரணத்தையும் விளக்கிக் காட்டியுள்ளார்.

சிங்களவர் தமிழர் உட்படப் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆகிய அனைவருமே இந்த நாட்டின் ஆதிக்கத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன்தான் வந்தனரென்றும் முஸ்லிம்க

ளிடம் அத்தகைய நோக்கம் இருந்ததற்கான எத்தகைய சரித்திர ஆதாரமும் இதுவரை காட்டப்பட முடியாதென்றும் அவர் தமது வாதத்தின்போது, குறிப்பிட்டுள்ளார். ஜனாப் பதியுத்தீன், 1933-ஆம் ஆண்டு அந்நிய நாட்டிலே தமது உயர் கல்வியைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், ஈழநாட்டு முஸ்லிம்களது சமூக-கலாசார வாழ்விலும் கல்வித்துறையிலும் மேற்கொள்ள வேண்டிய முற்போக்கான கருத்துக்களை அடிக்கடி ஈழத்துப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதி வந்துள்ளார்.

1933-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியான ''சிலோன் முஸ்லிம் ஸ்டான்டர்ட்'' (Ceylon Muslim Standerd) என்ற சஞ்சிகையில் முஸ்லிம்களுக்கான ஒரு தனிப்பத்திரிகையின் அவசியத்தை வலியுறுத்தி எழுதியுள்ள கடித உருவிலான கட்டுரையின் சுருக்கம் இதுவாகும். பிரஸ்தாப பத்திரிகையின் ஆசிரியர் ஜனாப் அப்துல்கப்பார் கான், ஜனாப் பதியுத்தீனின் புரட்சிகரமான கருத்துக்களை வெகுவாகப் பாராட்டி அக்கட்டுரையை வெளியிட்டுள்ளார்.

பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு ........

தங்களது பத்திரிகையின் ஆறு பிரதிகளை எனது நண்பர் ஒருவர் அனுப்பியிருந்தார். அதற்காக நான் அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈழநாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழுகின்ற ஆங்கிலங்கற்றமுஸ்லிம்இளைஞர்களின் மத்தியிலே இஸ்லாத்தைப்பற்றிய சரியான தகவல்களையும் அறிவையும் ஊட்டக்கூடிய அரியதொரு சாதனமாக உங்களது பத்திரிகை அமைந்துள்ளது. அதனால் உங்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

கடந்த ஆறு மாத காலமாக எந்தத் தடையுமின்றி வெளிவருகின்ற இந்தப் பத்திரிகை எதிர்காலத்திலும் தங்கு தடையின்றித் தொடர வேண்டுமென்பதே எனது பேரவாவாகும். எனது தாய்நாட்டைப் பொறுத்த வரையில், எத்தனையோ இயக்கங்களாலும் தனிப்பட்டவர்களாலும் இதுவரை வெளி



யிடப்பட்ட முஸ்லிம் சஞ்சிகைகளுக்கும், பத்திரிகைகளுக்கும் ஏற்பட்ட கதியை நான் சொல்லத்தேவையில்லை.

என்னோடு பல இடங்களில் ஒத்துழைத்த ஒரு நண்பரினால் ஆங்கிலத்தில் இத்தகைய உயர்ந்த ரகமான பத்திரிகையொன்று, எனது சொந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைக் கண்டு நான் பெருமைப் படாமல் இருக்க முடியாது. அதனால் இரட்டிப்பு மடங்கான நல்வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் எந்தச் செயலையும் ஆதரிப்பவன் நான். எனது சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் எந்தச் சமூக—கலாசார முன்னேற்றத்துக்காகவும் இதய சுத்தியுடன் சேவையாற்றும் ஒருவர்,எந்தத் துறையைச் சார்ந்தவராய் இருப்பினும் நான் அவரை நன்கு மதிக்கிறேன். எனது வாழ் நாளில் சில முக்கியமான வருடங்களைப் பொதுப்பணிக்காகவும், எனது சமூக மக்களின் சன்மார்க்க வளர்ச்சிக்காகவும் அர்ப்பணித்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அத்தோடு நான் திருப்தி அடையமாட்டேன் ''எனது தாய் நாட்டுக்கும் அங்கு வாழும் மக்களின் முன்னேற்றத்துக்கும் மென் மேலும் சேவையாற்றச் சந்தர்ப்பம் இடைக்க வேண்டுமென்பதே எனது முழுமையான ஆர்வமும் அவாவுமாகும்''. காருண்ய மனப்பான்மையுடன் ஏனையோரது கருத்துக்களைப் பக்க சார்பின்றி நோக்குந் தன்மை கொண்ட மனத்தினனாக நான் என்னைப் பக்குவப் படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றேன். அப்பொழுதுதான் நானும், எனது சமூகமும், எனது நாடும் நலம் பெற்று வாழ முடியும்.

ஒருவரை ஒருவர் பொறாமைக் கண்கொண்டுநோக்குவதே, இன்றைய நமது முஸ்லிம் சமூகத்திடம் காணப்படும் பெருங்குறைகளுள் ஒன்றாகும். ஒரு முஸ்லிமின் முன்னேற்றத்தை இன்னொரு முஸ்லிம் விரும்புகின்றானில்லை. முன்னேறும் ஒருவனைச் சொல்லாலும் செயலாலும் அவமதித்துத் தடைகளை உண்டு பண்ணி, அவனை வீழ்த்த வேண்டுமென்பதே பலரது நோக்கமாகும். இப்படியான இழிந்ததோர் அத்திவாரத்திலிருந்து பலம் பொருந்தியதொரு முஸ்லிம் சமுதாயத்தை நாம் எப்படிக் கட்டியெழுப்ப முடியும்?

தேவையற்ற மனப்போக்குகளை முஸ்லிம்களிடமிருந்து நீக்குவதே உங்களது பத்திரிகையின் முக்கியமான-முதன்மையான குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

உங்களது சஞ்சிகையில் மாறுபட்ட கருத்துக்களையும் அபிப்பிராயங்களையுங் கொண்ட கட்டுரைகளை வெளியிடுகின்றீர்கள். அது உங்களின் பாரபட்சமற்ற-பக்கஞ்சாராக் கொள்கையைத் தெளிவாகக் காட்டுகின்றது. ஓர் உண்மை முஸ்லிம், மாற்றுனின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பவனுகவே இருப்பான். இஸ்லாத்தைப் பற்றி எழுந்துள்ள பல்வேறு வகைப்பட்ட கொள்கைகளைப் பற்றியும் கருத்து வேறுபாடான குழுக்களைப் பற்றியும் நீங்கள் கவலைப்படாதீர்கள். பெரியதோர் இஸ்லாமிய எழுச்சி எமது எதிர்காலத்தை நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறது. அதற்காக ஒவ்வொரு முஸ்லிமும் தனது பங்கை, அது எத்தகைய சிறிய பங்காயினுஞ்சரியே, அதனைச் செய்தே ஆக வேண்டும். சிறு சிறு துளிகளான அத்தகைய பணிகள் தான் பெருஞ் சமுத்திரமாக மாற்றமடையும். முஸ்லிம் உலகையும், முஸ்லிம் அல்லாதார் உலகையும் இணைக்கக் கூடிய இப்படியான பிரமாண்டமானதொரு எழுச்சி எதிர்காலத்தில் ஏற்படத்தான்போகிறது. அதற்கான அறிகுறியே உங்களது சஞ்சிகை என்று கூடக் கூறலாம்.

பர்தாப் பிரச்சினையைத் தள்ளிவிட்டு, முஸ்லிம் பெண்களுக்கான கல்வியின் அவசியம் பற்றிய அறைகூவலை ஆரம்பியுங்கள். முஸ்லிம் அல்லாதார் எமது கருத்துக்களை ஏற்கச் செய்வதற்கு முன்னர், முஸ்லிம்களை உண்மையான முஸ்லிம்களாக வாழ வழிசெய்வதே மேலானதாகும். முஸ்லிம்களின் மத்தியிலே பிளவுகளை ஏற்படுத்திக் கொண்டு பெயரளவில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது இயக்கங்களை நீக்கிவிட்டுச் சக்தி வாய்ந்த தனியானதொரு முஸ்லிம் இயக்கத்தைக் கட்டி எழுப்புதல் வேண்டும். அரசியலில் எனக்கு நம்பிக்கையில்லை. நாம் கல்வியறிவு பெற்றவர்களாக—ஒற்றுமை உடையவர்களாக—பொருளாதாரத் துறையிற் பலம் பொருந்தியவர்களாக வாழ முற்படும் போது, அரசியல் பூரணத்துவம் எங்களைத் தானுகவே தேடிக்கொண்டு வந்துவிடும்.



தங்களுக்குள்ளே சச்சரவிட்டுக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகள் நமது சமூகத்துக்குத் தேவையில்லை. அதிகமான கல்விமான்கள் தான் இன்று தேவைப்படுகின்றனர். அத்துடன் சமூக சீர்திருத்த வாதிகளும் தேவை. சரியான முறையில் கல்வி அளிக்கப்படாமையால் நல்ல தலைவர்களை உற்பத்தியாக்குவதில் நின்றும் நாம் தவறிவிட்டோம். ஆதலினுல் கல்விதான் எமது மூச்சாகும். அதற்கான வசதியும் வாய்ப்பும் வேண்டுமென்பதே எமது முழுமையான கோரிக்கையாக இருத்தல் வேண்டும்.

ஒரு சில மாணவர்களையாவது அலிகாருக்கு அனுப்புங்கள். அவர்களுக்கு இந்தியாவையும் ஏனைய நாடுகளையும் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அப்பொழுதுதான் அவர்களிடத்திலே கடமையுணர்ச்சி — தேசியப்பற்று — சேவை மனப்பான்மை— தாய்நாட்டுப் பற்று என்பன ஏற்படவும் அவற்றை அறிந்து பயன் பெறக்கூடிய நல்லுணர்வைப் பெறவும் முடியும். வகுப்புத்துவேசம்எமக்குத் தேவையில்லை. மற்றவர்களிடத்தில்காணப்படும் நல்ல விடயங்களை நாம் ஏற்றுக்கொள்வோம். நாமும் நல்லவர்களாக வாழ முற்படுவோம். ஈழமணித் திருநாட்டின் அன்புப் புதல்வர்கள் என்ற பெருமையைப் பெறுவோம்.

உங்கள் பத்திரிகையில் எனக்குள்ள கடமையுணர்ச்சியினுலும், பற்றுதல் காரணத்தினுலும் மேலும் பல சந்தாதாரர்களை அலிகார் சர்வகலாசாலையிலிருந்து சேர்த்தனுப்ப முயற்சி எடுப்பேன். அத்துடன் சில கட்டுரைகளையும் அனுப்ப எண்ணியுள்ளேன். நான் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றபோது, அந்த நாடு மாமன்னர் நாதிர்ஷாவின் தலைமையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை நேரடியாகவே கண்டும், அவதானித்தும் உள்ளேன். அது சம்பந்தமாகக் கல்கத்தாவில் இருந்து வெளியாகும் 'ஸ்டார் ஒப் இண்டியா' (Star of India) என்ற பத்திரிகைக்கும் சில தகவல்களைக் கொடுத்துள்ளேன். நீங்கள் விரும்பினுல் நான் அனுப்பும் ஒரு சில புகைப்படங்களோடு கட்டுரைகளையும் உங்கள் பத்திரிகையில் பிரசுரியுங்கள்.

ஆப்கானிஸ்தான் அரசாங்கதின் விருந்தினர்களாக நாம் ஒரு மாத காலம் அங்கு தங்கியிருந்தோம். ஒரு முஸ்லிம் நாடு என்ற வகையில் அந்த நாடு அடைந்து வரும் முன்னேற்றத்தை முஸ்லிம்கள் அறிந்து கொள்வது அவசியம்.

முஸ்லிம்களுக்குரிய ஆங்கில சர்வகலாசாலையான அலிகார் சர்வகலாசாலையைப் பற்றியும் உங்களது பத்திரிகையில் முக்கியத்துவம் அளித்துப் பிரசுரியுங்கள். ஏனெனில் அலிகாரில் கல்வி பயில வரும் இலங்கை முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகும். சுருங்கக் கூறினுல் இலங்கையிலிருந்து இங்கு கல்வி பயில வந்திருக்கும் ஓரேயொரு முஸ்லிம் நான் மட்டுந்தான். அதனுல் அலிகார் சர்வகலாசாலையைப் பற்றியும் சிலகட்டுரைகளை அனுப்பிவைக்க உத்தேசித்துள்ளேன்.

அலிகார் சர்வகலாசாலை
அலிகார்.

இஸ்லாமிய அன்பன்
எம். என். எம். பதியுத்தீன்

ஒரு சமுதாயத்தைச் சரியான வழியில் இயங்கச் செய்வதற்குப் பத்திரிகைகளின் பங்கு மகத்தானதாகும். அதனை வலியுறுத்துமாப் போன்று அமைந்துள்ளன. ஜனுப் பதியுத்தீனின் கருத்துரைகள். அவரது கருத்துரைகளின் அன்றைய முஸ்லிம் சமுதாயத்தில் மலிந்து காணப்பட்ட ஊழல்களை விளக்கிக் காட்டியுள்ளதோடு அவற்றை நிவர்த்திப்பதற்குச் செய்யப்படவேண்டிய ஆக்கப்பணிகளும் விளக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் மத்தியிலே எத்தனையோ பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தோன்றத்தான் செய்தன. அவை அத்தனையும் முஸ்லிம்களது ஒத்துழைப் பின்றியே மறைந்து போயின. இன்று கூட ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் நம்மத்தியிலே இருந்தும் நமது சமுதாயத்துக்கெனத் தனியானதொரு பத்திரிகையைத் தொடர்ந்து நடத்திச் செல்வதற்குச் சக்தியில்லையென்றால் அன்னரது கருத்துக்களை இன்றையச் சமுதாயமும் சிந்தித்துப் பார்க்கவேண்டியுள்ளது. நம்மத்தியிலே கல்வி மான்கள் பெருகி வருவது உண்மையே. ஆனுல் அவர்களுள் எத்தனைபேர்தான்



வாசகர்களாக இருக்கின்றனர். நவீன காலப் போக்குக்கு அமைவான சிந்தனைகளையும் புதுப்புதுக் கருத்துக்களையும் இஸ்லாமிய தத்துவத்தின் அடிப்படையிலே ஆராய்ந்து நமது சமுதாயம் பயனடைய வேண்டுமாயின் நம்மத்தியிலே வாசகர்களின் தொகை பெருகி வளரவேண்டும். பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் போதியளவு பிரசுரிக்கப்படவேண்டுமென்ற கருத்தை இன்றுங்கூட அன்னுர் அடிக்கடி முஸ்லிம் சமுதாயத்தினரிடையே வற்புறுத்தி வருவதைக் காணலாம்.

''இஸ்லாமிய சன்மார்க்கத்தை முஸ்லிம்கள் சரியான முறையில் புரிந்துகொண்டு, அதன் வழியிற் செயற்பட உலமாப் பெருமக்களும் ஆசிரியர்களும், நூல்களையும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் நிறையக்கற்றுத் தங்களைப் பூரண அறிவுடையவர்களாகப் பக்குவப்படுத்திக்கொண்டு, அதனுல் சமுதாயம் பயனடையக்கூடிய கருத்துச் செறிவுடைய புதுப்புது உருவாக்கங்களையும் படைக்கவேண்டும்'' என்று ஜனுப் பதியுத்தீன் தாம் கலந்துகொண்ட முஸ்லிம் ஆசிரிய மாநாடுகளிலும் மௌலவிகளின் இயக்கங்களிலும் அடிக்கடி கூறிவந்துள்ளதையும் நாம் மறப்பதற்கில்லை.


''நமது பழம் பெருமைகளைப் பற்றிப் புகழ்ந்து பாராட்டிக் கொள்வதாலோ, அன்றேல், இன்றைய இழி நிலையைப்பற்றி உள்ள முருகி வருந்துவதாலோ எந்த விதப் பயனும் இல்லை. நாம் சிந்திப்பவர்களாகவும், செயற்படுபவர்களாகவும், திறமைமிக்கவர்களாகவும் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் மரணிப்பது ஒரே ஒரு தடவைதான். அவ்வாறு மரணிக்கும்போது "எலி பூனைகளைப் போலக் கோழைகளாக மரணிக்காமல் சிங்கத்தைப் போன்ற வீர புருஷர்களாக மரணிக்க வேண்டும்.'' என்றெல்லாம், தமது சொந்த சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் வகையிலான உணர்ச்சி மிக்க உரைகளை வழங்கி வந்துள்ளதையும் நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம். இவ்வாறு, தாம் சொல்லியவண்ணம் செயலில் காட்டிய உதாரண குணங்கள் பலவற்றை அவரது வாழ்க்கையிலேயே கண்டு கொள்ள முடியும்.

ஜனுப் பதியுத்தீன், புவிஇயல், வரலாறு என்பன வற்றுடன் இஸ்லாமிய வரலாற்றையுங் கற்றுத்தேறியவர். பல்கலைக்கழகப் பரீட்சைக்கு நெட்டுருப் பண்ணுவதாக அவரது பாடங்கள் அமையவில்லை. அனுபவ ரீதியாக — சாதனமுறைகளைக் கையாண்டு கற்க அவர் முற்பட்டார். கல்வி பயிலுங்காலத்திலே முஸ்லிம் நாடுகளுக்கு அவர் மேற்கொண்டிருந்த சுற்றுப் பிரயாணங்கள், அனுபவ வாயிலான அறிவை வளர்க்க உதவின. தாம் பெற்றுக்கொண்ட அநுபவக் கல்வியினுலான பிரயாண அநுபவங்களை, அன்றையப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பயணக் கட்டுரைகளாக வரைந்துள்ளார். அவர் தாம் பெற்றுக் கொண்டிருந்த புவிஇயல் வரலாற்று அனுபவங்களைக் கையாண்டு அன்றைய முஸ்லிம் நாடுகளுக்கிடையே காணப்பட்ட குறைபாடுகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் அக்கட்டுரைகளின் வாயிலாக அறிய வைத்துள்ளார். முஸ்லிம் நாடுகளுக்கிடையிலான குறைபாடுகளை நீக்குவதற்கான ஆலோசனைகளையும் அவற்றின் மூலமாக வழங்கியுள்ளார்.

அவர் எழுதியுள்ள பிரயாணக் கட்டுரைகள் சுவை மிக்கனவாகவும், இஸ்லாமிய உணர்வைத் தூண்டுவனவாகவும், இலக்கிய நயமுடையவனுகவும் காணப்படுகின்றன. அன்றையத் தினசரிகளும் சஞ்சிகைகளும் அவரது கட்டுரைகளை விரும்பிப் பிரசுரித்துள்ளன. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அவரது சுவைமிக்க கருத்தோவியங்கள் உருது, தமிழ், இந்தி, மலாய் ஆகிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுப் பிரசுரமாகியுள்ளன.

அவரது கட்டுரையொன்றின் தமிழாக்கத்தினை 1933 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையிலிருந்து வெளியான ''சரந்திப்'' என்ற சஞ்சிகையிற் காணலாம். பத்திரிகை ஆசிரியரின் குறிப்புடனேயே அக்கட்டுரையையும் நோக்குவோம்.





(1) Mr. M. N. M. Badiu-Din (2) Mr. M. Sharif Abdul Rahyman

The two Hony General Secretaries of the Young Muslim League (now Ceylon Muslim League) for the period August 12th 1928 to January 26th 1930. Their Self-Sacrifice and untiring efforts made this period the most eventful in the Annals of the League.

1927-ல் உருவான வாலிப முஸ்லிம் லீக் இயக்கத்தின் இணைக் காரியதரிசிகள் : ஜனுப். எம். எம். பதியுத்தீன் ஜனுப். எம். சரிப் அப்துல் ரஹ்மான்




1932-ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்தியபல்கலைக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றிவாகைசூடி பெற்ற தங்கப் பதக்கத்துடன் ஜனாப் எம். என். எம். பதியுத்தீன்

# ஆப்கானிஸ்தான் பயணம்

ஆசிரியரின் குறிப்பு:- இலங்கை முஸ்லிம் லீக்கின் முன்னைநாட் செயலாளர் ஜனாப். எம். என். எம். பதியுத்தீன், தற்போது அலிகார் சர்வகலாசாலையிற் கல்வி பயின்று வருகின்றார். இவர் அலிகார் சர்வகலாசாலைத் தூது கோஷ்டியினருடன், ஆப்கானிஸ்தான் சென்றபோது பெற்ற தமது பிரயாண அநுபவத்தையும் எழுதியுள்ளார். அவரது சுவைமிக்க அநுபவங்களின் முக்கியமான சில பகுதிகளை ஈண்டு தருகிறேன்.

இந்தியாவின் மேற்கு எல்லைப்புறத்தின் கடைசிதான் ஆப்கானிஸ்தானிய நாட்டின் ஆரம்பமாகும். ''இந்த இடத்தைக் கடந்து செல்லுகின்றவர்கள் 'பாஸ்போர்ட்' நிபந்தனைகளைச் சரிவரப் பூர்த்தி செய்யாமல் செல்லக்கூடாது''—இதுதான் அந்த எல்லைப்புறத்திலே போடப்பட்டிருக்கும் அறிக்கை.

இந்தியாவிலிருந்து சென்ற நாம் இந்த எல்லைப் புறத்தை அடைந்ததும், புதியதொரு நாட்டுக்குள்ளே பிரவேசித்திருப்பதாக எண்ணிக்கொண்டோம். அறிக்கை போடப்பட்டிருந்த இடத்துக்குப் பக்கத்தில் ஒரு காரியாலயம் இருந்தது. அங்கே ஓர் ஆப்கானிஸ்தான் அதிகாரியும் இருந்தார். அவரின் பார்வைக்கு எங்களது 'பாஸ்போர்ட்டு'க்களைச் சமர்ப்பித்தோம். அவற்றைப் பார்வையிட்ட அதிகாரி, தமது கையெழுத்தை வைத்துவிட்டு, அவற்றை மீண்டும் எம்மிடமே தந்தார்.

அங்கிருந்து 'டாக்கா' என்ற இடத்தைச் சென்றடைந்தோம். அங்கேதான் நாம் எடுத்துச் சென்ற பொருட்களைச் சோதனை செய்தார்கள். அந்தச் சோதனைகள் முடிந்தபோது மாலைப் பொழுதாகிவிட்டது. பின்னர் 'சிம்ளா' என்ற இடத்தைச் சென்றடைந்தோம். அங்கு, எங்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'முசாபர் பங்களாவில்' இராப் பொழுதைக் கழித்தோம்.

அதிகாலையிலே எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தோம். அந்த இடத்தின் இயற்கைக் காட்சிகள் எம்மை வெகுவாகக் கவர்ந்து விட்டன. அழகிய ரம்மியமான அந்தக் காட்சிகளை எங்களால் மறக்கவே முடியவில்லை. எம்மைச் சுற்றிலும் பழத்தோட்டங்கள் நிறைந்து காணப்பட்டன. மொகலாயச் சக்கரவர்த்தி ஷாஜஹானின் காலத்திற்றான் இத்தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. இந்த அழகிய இயற்கை வனப்புக்களை அநுபவித்துக் கொண்டே அன்று காலை 'கலீலி' என்ற இடத்தை நோக்கிப் புறப்பட்டோம். அங்கு சென்று அடைந்ததும் எங்களது காலைச் சாப்பாடுகளை முடித்துக் கொண்டோம். அங்கே மன்னரின் நிர்வாக அதிகாரி ஒருவர் எங்களை வரவேற்றார். அந்த இடம் விவசாயத்துக்குப் பேர்பெற்ற இடமாக இருந்தது. மன்னர் அமானுல்லாவின் விவசாய டைரக்டராக இருந்த ஒருவரை நாம் அங்கு சந்தித்தோம். அவர் மூலமாக ஆப்கானிஸ்தானின் விவசாய முறைகள் பலவற்றைத் தெரிந்து கொண்டோம்.

பிற்பகல் ஒரு மணி வரையும் நாம் அங்குள்ள விவசாய நிலையங்களையும் விவசாயஞ் செய்யும் முறைகளையும் பார்வை இட்டோம். அங்கிருந்து நாம் மீண்டும் 'காபுல்' என்ற ஆப்கானிஸ்தான் தலைப்பட்டிணத்தை நோக்கி விரைந்தோம். இரவு எட்டு மணிக்கு அந்தக் காபுல் நகரைச் சென்றடைந்தோம்.

எங்களது 'பாஸ்போர்ட்டுக்'களும், சாமான்களும் அங்குள்ள சுங்க அதிகாரிகளினால் மீண்டும் பரிசோதிக்கப்பட்டன. நாங்கள் காபுல் நகரை வந்தடைந்ததை அறிந்துகொண்ட ஆப்கானிஸ்தான் கல்வியமைச்சரின் அதிகாரி ஜனப். ஜமாலுத்



தீன் எங்களை வந்து சந்தித்து-வரவேற்று அவரது மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார். அரசாங்கத்தால் எமக்காகப் பிரத்தியேகமான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஜாகைக்கு எங்களை அழைத்துச் சென்றார். அங்கு எமக்குத் தேவையான சகல வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

எங்களது ஜாகையிலிருந்து ஆறு மைல் தூரத்தில் 'தாருல் அமான்' என்னும் நகரம் அமையப்பெற்றிருந்தது. 'அமானுல்லாஹ் கான்' என்ற மன்னரால் ஸ்தாபிக்கப்பட்டதனால் அதற்கு 'தாருல்அமான்' என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. இந்த நகரின் வேலைகள் இன்னும் சரியான முறையில் பூர்த்தியாகவில்லை. எனினும் காபுல் பகுதியின் மிகவும் அழகானதும், ரம்மியமானதுமான ஓர் இடத்தில் நவீன முறையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது.

காபுல் நகரிலிருந்து தாருல் அமானுக்குச் செல்லும் சாலையானது மிகவும் அழகானதாகவும் - விசாலமானதாகவும் தூய்மையானதாகவும் அமைந்துள்ளது. ஐந்து மைல் தூரத்துக்கு ஒரு நேர் கோட்டைப்போல அந்தச்சாலை அமைந்துள்ளது. சாலையின் இரு புறங்களிலும் பச்சைப் பசேலெனச் செழித்து வளர்ந்துள்ள மரங்களும், சோலைகளும் கண்ணைக்கவரும் காட்சியாய் அமைந்துள்ளன.

விசாலமான இச்சாலை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பகுதியிலே மோட்டார் வண்டிகளும், குதிரை வண்டிகளும் செல்லுகின்றன. பொதிகளை ஏற்றிச் செல்லும் பார வண்டிகளும் லொறிகளும் இன்னொர் புறத்தாற் செல்லுகின்றன. கால் நடையாகப் பயணஞ் செய்கிறவர்களுக்குத் தனிப்பிரிவொன்று உள்ளது. நான்காம் பிரிவிலே தான் 'டிராம்' வண்டிகள் செல்லுகின்றன. தாருல் அமானில் கட்டப்பட்டுள்ள அரசாங்க 'செக்ரடேரியட்' காரியாலயம்- 'பார்லிமென்ட்' கட்டடம்-பூர்த்தியாகாத அரண்மனைகள் - பொருட்காட்சிச்சாலைகள் என்பன இத்தாலிய நாட்டினதும் பிரான்ஸ் நாட்டினதும் அமைப்பு முறையில் கட்டப்பட்டுள்ளன.

அரச மாளிகையையும் 'பார்லிமென்ட்' கட்டடத்தையும் சுற்றி வளைத்தாற்போன்று இத்தாலிய முறையிலான அழகிய நந்தவனங்களும் – அந்த நாட்டுக்கே இயல்பான பூஞ்சோலைகளும் வெகு நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை அவதானித்த போது – "ஆப்கானிஸ்தானியர்கள் பூஞ்சோலைகளால் ஆன நந்தவனங்களுக்கிடையிலேதான் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்" - என்று நினைக்கத் தோன்றியது.

அமானுல்லாஹ்வின் சிம்மாசனத்தில் இப்பொழுது அமீர் 'நாதிர்ஷா' அமர்ந்துள்ளார். இவர் குடிமக்களின்பால் அதிகம் அன்பும் பாசமும் கொண்டவர். நல்ல ராஜதந்திரி. அரசியல் நிர்வாகத்தில் கைதேர்ந்தவர். அதனால் மக்கள் எல்லோரும் மன்னர் நாதிர்சாவின்மீது அளவிலாத அன்பும் பாசமும் கொண்டுள்ளார்கள்.

நாதிர்சா மன்னரைப் புகழாத மக்கள் ஆப்கானிஸ்தான் நாட்டிலே இருக்கமாட்டார்களென்பதே எனது திடமான நம்பிக்கையாகும். அமீர் நாதிர்சாவும், அவரது சகோதரர்களுமே நாட்டின் நிர்வாகம் முழுவதையும் கவனித்து வருகின்றனர். "ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் ஒரு நாட்டின் நிர்வாகம் முழுவதையும் நடத்துவது உலக சரித்திரத்தில் இதுவே முதற்தடவையாகும்" என்பதே எனது திடமான நம்பிக்கையுமாகும்.

மூத்த சகோதரர்:- நாட்டை ஆளும் அரசரும் நாட்டின் தலைவருமாகும்
இரண்டாவது சகோதரர்:- நாட்டின் முதன் மந்திரி
மூன்றாவது சகோதரர்:- யுத்த இலாகா மந்திரி
நான்காவது சகோதரர்:- லண்டனில் ஆப்கானிஸ்தான் தூதுவர்
ஐந்தாவது சகோதரர்:- மாஸ்கோவில் (ரஸ்யாவில்) ஆப்கானிஸ்தான் தூதுவர்

இத்தகைய ஆட்சி முறையினால் ஆப்கானிஸ்தான், இங்கிலாந்திலும், ரஷ்யாவிலும், ஏனைய வடக்கு, கிழக்கு நாடுகளிலும் பெருஞ் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றது.



சகோதரர் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் – பூரண நம்பிக்கை வைத்தவர்களாக – நாட்டின் நன்மைக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டு உழைத்து வருவது பெரிதும் போற்றத்தக்க விஷயமாக அமைந்துள்ளது பாராட்டத்தக்கதே!

ஆப்கானிஸ்தானின் கல்வியமைச்சராக மேன்மை தங்கிய அலிமுஹம்மது ஜான் கடமையாற்றுகின்றார். கல்வித்துறையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர். ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற் சுற்றுப்பிரயாணமுஞ் செய்துள்ளார். இஸ்லாமியப் பற்றும் சமூக உணர்ச்சியும் கொண்டவர். இவரது செயல்களிலிருந்து, உண்மையான முஸ்லிம் ஒருவருக்கு இருக்கவேண்டிய உணர்ச்சிகளைக் காணமுடிந்தது.

1933ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பத்தாந் திகதி, பிரதம மந்திரி மாட்சிமைதங்கிய எச். ஆர். எச். சர்தார் முஹம்மது ஹாசிம் கான் அவர்களது தேநீர் விருந்தொன்றிற் கலந்து கொண்டோம். அங்கு நடந்த ஒரு சம்பவம், இஸ்லாமிய சன்மார்க்கத்திற் காணப்படும் சமத்துவத்தையும்—சகோதரத்துவத்தையும் எந்த அளவுக்கு நிலைநாட்டியதென்பதை உணர்ந்து கொண்டோம். ஒரு புதுமையான உணர்ச்சியைத்தான் அன்று நாங்கள் பெற்றுக்கொண்டோம்.

தேநீர் விருந்துக்குப் பின்னர் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது மஃரிபுத் தொழுகைக்காக முஅத்தின் பாங்கு சொல்லும் இனிய நாதத்தைக் கேட்டோம். உடனே பிரதமந்திரியுடன் நாங்களும் தொழுகைக்காக மஸ்ஜிதுக்குச் சென்றோம். அங்கே மாமன்னர் நாதிர்ஷாவும் நாட்டின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கூடியிருந்தனர். அந்த மாமேதைகள் அங்கு வந்திருப்பதைக் கண்டதும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. அதிலும், விசேடமாக அரண்மனைச் சேவகர்கள், மோட்டார் வண்டி ஓட்டுபவர்கள், பிரதமர் வீட்டு வேலைக்காரர்கள், சமையலறை ஊழியர்கள் உட்பட, இதர சிப்பந்திகள், ஆகிய பல்வேறு தரத்தைச் சார்ந்தவர்களும் தொழுகைக்காக ஒன்று கூடி நின்றனர். "அல்லாஹ்வின் முன்னிலையிலே எல்லாரும் சமந்

மாகவே கருதப்படுவார்கள்'' என்ற உள்ளச்சத்துடனும், உண்மையான உணர்வோடும் எல்லாருமாகச் சேர்ந்து அந்த மாலை நேரத்துக் கூட்டுத் தொழுகையிற் கலந்து கொண்டோம்.

கல்வி இலாகாவின் அமைச்சர்தான் அங்கு கூடியிருந்தோரில், வயதில் முதிர்ந்தவராகக் காணப்பட்டார். அதனால் அவரே இமாமாக நின்று தொழுகையை நடத்தி வைத்தார்.

கல்வி இலாகா மந்திரி காரியாலயத்துக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கிருந்த அதிகாரிகள், எங்களைச் சந்தோஷமாகவும் அன்பாகவும் வரவேற்றார்கள். அவர்கள் எல்லோரும் கனமான கம்பளி ஆடைகளையே அணிந்திருந்தார்கள்.

ஆப்கானிஸ்தான் மக்கள் சுதந்திரத்தாகமுடையவர்கள். மன்னர் அமீர் நாதிர்ஷாவும் மக்களின் சுயேச்சையான போக்குகளைப் போற்றுகின்றார். இந்தியர்கள் அடிமை வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதை நாதிர்ஷா வன்மையாகக் கண்டிக்கிறார். ஆப்கானிஸ்தானத்தில் வெள்ளையரின் ஆதிக்கம் அல்லது செல்வாக்கு என்ற பேச்சுக்கே இடமில்லை. நாதிர்ஷா இராணுவ அமைப்பில் அதிக ஊக்கமும் அக்கறையும் சிரத்தையும் கொண்டவர். ஆப்கானிஸ்தானத்திலே தற்போது ஒவ்வொருவரும் கட்டாய இராணுவப் பயிற்சி பெறவேண்டுமென்ற நிபந்தனை இருந்து வருகின்றது.

அங்கு மூன்று கலாநிலையங்கள் இருக்கின்றன. ஒன்று பிரான்சிய கலாசாலை. அங்கே பிரஞ்சுப் பாஷையிலேதான் கல்வி போதிக்கப்படுகின்றது. மற்றொன்று ஜேர்மன் கலாசாலை. அங்கு ஜேர்மன் பாஷையில் கல்வி போதிக்கப்படுகின்றது. இன்னொன்று பாரசீகக் கலாசாலை. அங்கு பார்சி, இங்கிலிஸ் ஆகிய மொழிகள் போதிக்கப்படுகின்றன. கிரிஸ்தவ மிசனரிமாரின் கலாசாலைகள் அங்கு கிடையாது. நாட்டின் பொதுவான மொழி பார்சி மொழியாகும். அரசாங்க பாசையும் அதுதான். மாணவர்கள் அந்நிய நாடுகளுக்கு - விசேடமாக பிரான்ஸ் ஜேர்மனி போன்ற நாடுகளுக்குத் தொழிற் கல்வியும், உயர்தரக் கல்வியும் பெறுவதற்



காக அனுப்பிவைக்கப்படுகின்றனர். பிரதி வருஷமும் அந்நிய நாடுகளுக்கு மாணவர்கள் நூற்றுக் கணக்காக அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

ஆப்கானிஸ்தான் மக்கள் பொதுவாகப் புத்திசாலிகள். பிறருக்கு உபகாரஞ் செய்வதில் அதிகம் பிரீதி கொண்டவர்கள் அவர்களிடத்தில் நேசம், இரக்கம், நன்றி என்பன நிறைய உண்டு.
..........................................''

இவ்வாறாக ஜனாப் பதியுத்தீன் 1933-ஆம் ஆண்டு எழுதிய தமது பிரயாணக் கட்டுரையை, அன்றையச் சுற்றாடலையும் சமூக வாழ்க்கையையும் இலக்கிய வளத்தையும்மையமாகக் கொண்டு எடைபோட்டுப் பார்க்கும்போது, எமது இன்றைய இலக்கிய வளத்துக்கு இதுவும் அடிகோலுகின்றது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அத்துடன் தாம்பெற்ற அநுபவத்தை மற்றவர்களும் பகிர்ந்து அநுபவிக்கச் செய்யும் வகையில் அன்னாரின் பிரயாண அநுபவம் அமைந்திருத்தலையும் காணலாம். இத்தகைய கட்டுரைகள் அவரது தன்னலமற்ற மனோ நிலையினையும் தன்னுணர்வையும் வெளிப்படுத்துகின்றன.


ஆங்கிலத்தில் வரையப்பட்ட பிரயாண அநுபவமொன்று அன்றையப் பத்திரிகை ஆசிரியர்களினால் பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டதென்றால், அன்றைய வாசகர் உலகுக்கு அது பயன்தரும் ஓர் இலக்கியப் பணியாகவே அமைந்தது என்று கருதுதல் வேண்டும்.

ஜனாப் பதியுத்தீன், தமது வாலிபப் பருவத்தில் உயர் கல்வியைப் பெற்றுக்கொண்டிருந்த வேளையிலும், வெளி நாடுகளுக்கு விஜயஞ் செய்து, தமது அநுபவத்தை மேலும் பலமுடையதாக அமைத்துக்கொண்டார் என்பதையும் இங்கு நோக்கலாம்.

# மலேசியாவில் சொற்போர்

**1935-ஆம்** ஆண்டு ஜூன் மாதம் ஜனாப். பதியுத்தீன் மலேசியா சென்றார். இவரது வருகையைப் பற்றி அங்குள்ள பத்திரிகைகள் விசேட தலையங்கங்கள் தீட்டிச் செய்திகளை வெளியிட்டன. முஸ்லிம் சமூக இயக்கங்கள், கல்வி ஸ்தாபனங்கள் பலவற்றில் உரை நிகழ்த்துவதற்காகவே அவர் அங்கு சென்றிருந்தார். ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைகளாக வாழ்ந்து வந்த மக்களுக்கு இவரது முற்போக்கான அரசியற் கருத்துக்களும், ஏகாதிபத்திய எதிர்ப்பு மனப்பான்மையும் வெகுவாகக் கவர்ந்துவிட்டன. அதனால், சென்றவிடமெல்லாம் மக்கள் கூட்டங்கூட்டமாகக் குழுமிநின்று ஜனாப் பதியுத்தீனை வரவேற்கலாயினர். இவரது அரசியற் கருத்துக்கள் அன்றைய ஆட்சியாளருக்கு எதிராக அமைந்திருந்தன. எனினும் எதற்கும் அஞ்சாதவராகத் தமது கருத்துக்களை வெளியிட்ட வண்ணமாகவே இருந்தார் அவர். அதனால் இவரது நடமாட்டத்தை அன்றைய ஆட்சியின் உயர்பீடத்தில் இருந்தவர்கள் மிகக் கூர்மையாக அவதானிக்கத் தவறியதில்லை.

பர்மாவில், ஒருமுறை ஜனாப் பதியுத்தீன் ஆற்றிய முற்போக்கான அரசியற் பிரச்சாரத்தைத் தொடர்ந்து 24 மணித்தியாலங்களில் அவரை அந்த நாட்டிலிருந்து வெளியேறுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதேபோன்று மலேசியாவிலும் 48 மணித்தியாலங்களில் வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதென்றால் – வாலிபப் பருவத்திலே அவர் பெற்றிருந்த அரசியல் தீர்க்க தரிசனத்தையும் – ஏகாதிபத்திய எதிர்ப்பு



LECTURE

A public lecture will be delivered in English by **M.N.M. Badiuddin Esqr.** of the Aligarh University, United Provinces, India, on "The Aligarh University" on Sunday 30th June 1935 at 2.30 p.m. at The Town Hall, Kuala Lumpur.

The meeting will be presided over by **Che' Kontik Kamariah binti Ahmad.**

R.P, K.L.

வெள்ளவத்தைத் தொழிலாளர் பொதுக்கூட்டம்

கோலாலம்பூரில் பகிரங்கச் சொற்பொழிவு

தொழிலாளர் மத்தியில் ஜனாப் எம். என். எம். பதியுத்தீன்

**All-Ceylon Meelad Sharif Committee.**

(ORGANISED IN [illegible])

HOLY PROPHET'S

**BIRTHDAY CELEBRATION**

UNDER THE AUSPICES OF THE ABOVE COMMITTEE

**Eleventh Year Mass Meeting**

WILL BE HELD AT

**The Peer Sahibo Avuliya Dargha Ground**

**on Wednesday, 3rd May, 1939, at 4 p. m**

Janab M. N. M. BADIUDIN, Esq. M.A. (Hons.)

WILL PRESIDE.

MANY ULAMAS WILL SPEAK

Colombo 1-5-39 ALL MUSLIMS ARE CORDIALLY INVITED.

# திருநபி ஜயந்தி.

அகில இலங்கை மீலாத்ஷரீப் கமிட்டி, கொழும்பு.

**Mr. M. N. M. BADIUDDIN**

a member of the Historical Excursion Party (1933) to Afghanistan under the leadership of Professor Habeeb of Aligarh Muslim University will deliver a talk on

**Afghanistan Under Nadir Khan**

On Thursday the 14th. September 1933 at 6-45 p. m. at the MUSLIM STUDENTS' SOCIETY 178, Barr Street;

**Mr. S. C. Bhattacharjee**, Editor, Rangoon Mail has kindly consented to preside.

All are cordially invited to attend

S. E. Baggia,
*Hony. Literary Secretary.*

1939 ஆம் ஆண்டு மீலாத் மேடையில் ஜனப். எம். என். எம். பதியுத்தீன்
''நாதிர் கான்'' ஆட்சியில் ஆப்கானிஸ்தான் என்பது பற்றி உரை

மனப்பான்மையினையும் ஊகித்துக் கொள்ளமுடியும். அவ்வாறு வெளியேற்றப்பட்ட சந்தர்ப்பங்களிலுங்கூட தமது இலட்சியத்திலிருந்தும் அவர் விலகிக்கொள்ளவில்லை.

ஜனப். பதியுத்தீன் பினங் சென்றடைந்தபோது, அங்குள்ள முக்கிய இயக்கங்கள் பலவற்றில் விசேட சொற்பொழிவுகள் நிகழ்த்தவிருப்பதாக விளம்பரங்களும் சுவரொட்டிகளும் நகரெங்கிலும் காணப்பட்டன. அவரது அரசியற்சொற்பொழிவுகளை அன்றையப் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்தாலும், சன்மார்க்க கலாசாரச் சொற்பொழிவுகளைப் பிரமாதமாகப் பிரசுரிக்கத் தவறியதில்லை. ஒருமுறை பினங்கிலே நடைபெற்ற 'மீலாதுன்னபி' விழாவொன்றிலும் ஜனப் பதியுத்தீன் கலந்துகொண்டு சொற்பெருக்காற்றினார். பினங்கின் தமிழ்த் தினசரியான 'தேசநேசன்' பத்திரிகையின் 1935-ஆம் ஆண்டின், ஜூன் மாதம் 7-ஆந் திகதி வெளியான இதழ், அவரது சொற்பொழிவைப் பின் வருமாறு பிரசுரித்துள்ளது.

''தமிழர் சீர்திருத்தச் சங்கத்தினால் நடத்தப்பட்ட மாபெரும் நபி ஜெயந்தி விழாவில் இலங்கையைச் சேர்ந்த ஜனப் புதியுத்தீனின் சொற்பொழிவு –'' என்ற தலையங்கத்தோடு அவரது பேச்சு பிரசுரமாகியது.

''தமிழர் சீர்திருத்தச் சங்கத்தினர் வெளியிட்ட விளம்பரத்தின் பிரகாரம் 'பினங் டவுன் ஹால்' மண்டபத்தில் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே ஜனங்கள் வந்து குழுமிவிட்டனர். டவுன்ஹால் மண்டப மேடையில் பிரசங்கம் செய்பவர்களுக்கும், பொது மண்டபத்தில் அழைப்புக்கள் அனுப்பப்பட்டிருந்தவர்களுக்கும் ஆசனங்கள் 'ரிசர்வ்' செய்யப்பட்டிருந்தன.

''தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் முப்பது தொண்டர்கள் தமது உடையில் பூச்சின்னங்களை அணிந்தவர்களாக விஜயஞ் செய்தவர்களை வரவேற்று, ஆசனங்கொள்ளச் செய்து உபசரித்தனர். கூட்டத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ''ஸ்டேட் எக்கோ'' பத்திராதிபர் திரு. எம். சரவணமுத்து (முன்னை நாள் இலங்கைத் தேயிலைக் கட்டுப்பாட்டாளர் எம்.

சரவணமுத்துவின் சகோதரர்) வந்ததும் பிரசங்கிகள் புடைசூழ பெருங்கரகோசத்தின் மத்தியிலே ஜனப் பதியுத்தீன் மேடை சென்று ஆசனம் எடுத்துக்கொண்டார்.

''தலைவர் தமது முன்னுரையில், பிஞங்குடியேற்றப் பகுதி மக்களுக்கு, இன்று ஓர் ஒப்பற்ற திருநாளாகுமென்றும் தமிழ் பேசும் அந்த நகர வாசிகளின், ஆர்வத்தையும் விளக்கினர். பின்னர் அலிகார் சர்வகலாசாலையின் பட்டதாரி மாணவரான ஜனப் எம். என். எம். பதியுத்தீனை அறிமுகஞ் செய்து வைத்துப் பிரதம பேச்சாளரான அவரைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

''சொற்பொழிவாளரான ஜனப் பதியுத்தீன், தமது பிரசங்கத்தில் பின்வருமாறு கூறினர்:

''சுமார் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் துயிலுற்றுக் கிடந்த ஆசியாவையும் ஐரோப்பாவையும் தூய நபிகளாரின் ஜனனம் விழிப்புறச் செய்துவிட்டன. அத்தகைய பெரியாரின் ஜனன தினத்தைக் கொண்டாடத் தமிழ் பேசும் முஸ்லிம்களும் - தமிழ் பேசும் முஸ்லிமல்லாதவர்களும் ஒன்ருகக் கலந்திருப்பதைக்காண உண்மையாகவே பெருமகிழ்வும் பெருமையும் அடைகின்றேன்.

'''பொதுஜனசேவை' என்ற ஒரு மாசற்ற கைங்கரியத்தில், உலகில் பல்வேறு மதங்களையும் வழிபடுகின்ற யாவரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளவும் - ஒன்றுபட்ட வாழ்க்கை முறைகளை மேற்கொள்ளவும் ஏற்ற மனப்பான்மைகளை இத்தகைய கொள்கைகளால் நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். மதத்தால் வேறுபட்டாலும் எல்லோரும் ஒரே சமுதாயமாக வாழ வேண்டிய காலமும், மனப்பான்மையும் நம்மிடையே பெருகி வருகின்றது. அதிகமான இந்தியர்களின் மதமாகிய இந்து மதம் - இஸ்லாம் மதம் - கிறிஸ்தவ மதம் என்ற முப்பெரும் பிரிவுகளிலுமுள்ள உண்மைத் தத்துவங்களையும், விளக்கங்களையும், புரிந்து கொண்டு மானிட ஒற்றுமையை நிலைநாட்டுவதே ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



''ஒவ்வொரு மதத்தலைவரினதும் போதனு முறைகளை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஆழ்ந்து வாசிக்க முற்படுகின்றேமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் நெருங்கிய ஒற்றுமை உடையவர்களாகவும் - ஒருவர் மற்றவரின் விரோதியாக மாருமல் சகோதர வாஞ்சையினுல் முன்னேற்றப் பாதையிலே அணியணியாகச் செல்லவும் முற்படுவோம்.

''நான் கல்வி பயிலுகின்ற அலிகார் சர்வகலாசாலையில் ஒவ்வொருநாளும் இஸ்லாத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ள, பிறர்மீது குற்றங்காணுத தன்மையைக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. சுமார் பத்து மைல் விஸ்தீரணத்திலுள்ள இச்சர்வகலாசாலையில் ஒரு மசூதியும், கிறிஸ்தவ தேவாலயமும் இந்துக் கோயிலும் இருக்கின்றன. இவைகளை அலிகார் சர்வகலாசாலையினர், தமது கலா நிலையத்தில் பயிலும் பலவகுப்பு மாணவர்களும் - அவரவர் மதமார்க்க வழிபாடுகளில் பிறழாது நிற்கவே உண்டாக்கியுள்ளனர்

''அச்சர்வகலாசாலையின் மாணவர்களாகிய நாங்கள் முஸ்லிம்களென்றே, கிறிஸ்தவர்களென்றே இந்துக்களென்றே நம்மை எண்ணுது ஒரு பெரும் இந்திய மாணவர் சமுதாயத்தினராகவே கருதிக்கொண்டு வாழுகின்றேம். இன்று நான் மக்களிடையே தோஷமின்மையாகிய - குற்றங்காணுத தன்மையை விளக்க முற்பட்டுள்ளேன். நாம் ஒரு சமுகமாகவும் பெருஞ் சமுதாயமாகவும் வாழ்க்கை நடத்த வேண்டுமானுல், ஒருவரையொருவர் குறைகாணுத தன்மையை நம்மில் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்போதனையை ஒவ்வொரு நாட்டுக்கும் எடுத்தேகினுர்கள். ஆனுல் துரதிஷ்ட வசமாக நமது இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் வீழ்ச்சியுற்று இன்று நாமும் துரதிஷ்டத்திற் சிக்குண்டவர்களாக இருக்கின்றேம். நம்மில் குற்றமும் குறையும் காணமுற்பட்டவர்கள், அத்தகைய குற்றங்களையும் குறைகளையும் எழுதினுர்கள். அப்படி எழுதியவர்கள் தம்மீதே தோஷங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இப்படியான தப்பான அபிப்பிராயங்களெல்லாம் உலகத்திலே ஞானம் வளர முற்படும் காலத்தில் திருத்தப்பட்டுவிடும்.

''பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஜீவித்தவரும் நபிகள் நாயகமாகத் தோன்றியவருமான பெரியாரின் சரிதைகளில், முஸ்லிம்களால் எழுதப்பட்டுள்ளவைகளையே பாராயணஞ் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

''நமது நபிகள்நாயகம் அவர்கள் மூடத்தனத்திலும்,விபரீதமான பக்திகளிலும் ஆழ்ந்து கொண்டிருந்த உலக மக்களுக்கு ஞான ஒளி விளக்கங்களைத் தந்துள்ளார்கள். எனினும் உலகின் பல நாடுகளிலும் உள்ள முஸ்லிம்கள் கல்வியிலே பெரும்பாலும், பிற்போற்கான இழிவான நிலையை அடைந்துள்ளார்களென்ற ஒரு கசப்பான உண்மையைச் சொல்லாமல் இருக்கவும் முடியாது. இந்தப் பிற்போக்கான - இழிவான நிலையை நமது பரிசுத்த நபிகள் நாயகம் அவர்கள் விரும்பவில்லை. நமது திருக்குர் ஆனும் கல்விக்கு முரண்பாடான எந்தப் போதனைகளையும் குறிப்பிடவில்லை. நாம் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை மறந்துவிட்டதே இந்தப் பிற்போக்கிற்குக் காரணமாகும்.

''நமது திவ்விய நபி (ஸல்) அவர்கள், எல்லாச்சந்தர்ப்பங்களிலும், பெருவாரியாகக் கல்விக்கே பெருமையளித்துப் போதித்துள்ளார்கள். அதில் ஒன்றை எடுத்துக் கவனியுங்கள். ''சீனத்துக்குச் சென்றேனும் கல்வியைப் பயிலுங்கள்'' என்று மிக ஆணித்தரமாகத் தமது போதனைகளில் திருவாக்கிட்டுள்ளார்கள். இத்திருவாக்கின் பரிணாமமே அரேபிய நாடு இருபத்தைந்து வருடங்களுக்குள் மூடத்தனத்தையும், சிசுவதை போன்ற துர்க்குணங்களையும், விட்டொழித்துக் கல்விக்கும், விஞ்ஞானத்துக்கும், கலைக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்தது. முஸ்லிம்கள் ஸ்பெயின் தேசத்திலிருந்து சீனத்தின் மதில் வரைக்கும், தமது அறிவொளியைப் பரப்பினார்கள். ஜேர்மனிய சீர்திருத்தத்துக்கும், பிரான்சிய சீர்திருத்தத்துக்கும் இது வழி காட்டியது. ஐரோப்பாவில் பல சர்வகலாசாலைகள் கட்டக்



காரணமாகவும் அமைந்தது. இஸ்லாத்தின் விளக்கங் காரணமாகக் கிரேக்கர் அளித்துவந்த ஞான விளக்கங்கள் எல்லாம் மறையத் தொடங்கின. முஸ்லிம்களின் அன்றைய அறிவு விளக்கங்களும் ஆராய்ச்சிகளும் மொழிபெயர்ப்புக்களுமே இத்தகைய முன்னேற்றத்துக்குக் காரணமாகும். இந்து மதச் சாயல்கள் ஐரோப்பாவில் பரவியதென்றால், அதற்குக்காரணமும் ஆராய்ச்சிகளேயாகும். சுருக்கமாகக் கூறினால் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் பெற்றுக்கொண்டிருந்த சிறப்புக்களுக்கெல்லாம் அத்திவாரமாகவும் முதன்மையாகவும் விளங்கியது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளாகும். இன்று இந்தியாவில் அமைந்துள்ள அலிகார் சர்வகலாசாலையும் அன்னாரின் போதனைகளின் அடிப்படையிலே தோன்றிய தொன்றாகும்.

''ஆகவே நான் இன்று உங்களுக்கு முக்கியமான வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன். அதுயாதெனில் தயவு செய்து கல்வியை மறந்துவிடாதீர்கள்! சீரிய கல்விமான்களாகுங்கள்! நல்லவர்களாகவும் கியாதி வாய்ந்த அறிவாளிகளாகவும் மாறிவிடுங்கள்! நாளைக்கு இவ்வுலகில் நாம் ஒரு மனித சமுதாயமாக வாழவேண்டுமானால், நாம் யாவரும் கல்வி கற்றவர்களாக மாறவேண்டும். நாம் கல்வி கற்கப் பின்னிற்போமானால், நாமே எங்களது சகோதரர்களான முஸ்லிமல்லாதவர்களை அறிந்து உணரக்கூடியவர்களாக இருக்கமாட்டோம். கல்வியறிவில்லாத ஒருவனால், கற்றறிந்த ஒருவனை எப்படி அறியமுடியும்? இந்த நிலை இன்று இருந்து வருவதனால்தான் இந்து முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குச் சாத்தியமில்லாமல் இருக்கிறது. எனவே சமுகங்களுக்கிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தி - ஆசியாவில் ஒற்றுமையை நிலைநாட்டப் பாடுபடுவதற்கு, நான் கல்வியின் அவசியத்தையே வலியுறுத்த விரும்புகின்றேன்.

''நமது நபியவர்கள், எத்தகைய கஷ்டநஷ்டங்களின் மத்தியிலும் 'கல்வியைக் கற்றுக்கொள்ளுங்கள்' என்பதை வற்புறுத்தியுள்ளார்கள். அதனையே உங்கள் மத்தியில் கூறிக்கொண்டு விடை பெறுகிறேன். ..........'' ஆர்வத்துடன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் கூட்டம், அதிகநேரம் கரகோஷம் செய்து அவர்தம் கருத்தை வரவேற்றது!

# அலிகார் வளர்ச்சியில்

இந்திய வரலாற்றிலே 'அலிகார்' சர்வகலாசாலையின் தோற்றமும், வளர்ச்சியும் முக்கியமானதோர் இடத்தை வகிப்பதைக் காணலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி மிகப்பலம் வாய்ந்த தொன்றாக அமையப் பெற்றிருந்தது. எனினும், மேலைநாட்டு நாகரிகம் இந்திய சுதேசிகளின் கலாசாரத்தைப் பாதிக்குமோவென்ற ஐயப்பாடு தேசியப் பற்றுடையவர்களின் மத்தியிலே தோன்றலாயிற்று. இந்தக்காலத்திலே மேலைநாட்டுக் கல்விமுறை இந்தியாவின் முன்னேற்றத்துக்கு அவசியமாயிற்று. வசதிபடைத்த பலர் மேலைநாடுகளிலுள்ள சர்வகலாசாலைகளுக்குச் சென்று உயர்கல்வியும் பட்டப்பயிற்சிகளும் பெறலாயினர். அவ்வாறு பயின்று வந்தவர்கள் மேலைநாட்டுப் பாணியிலே தமது கருத்துக்களையும், கொள்கைகளையும் விளக்கலாயினர். சமூக அந்தஸ்து அரசியல் அபிப்பிராயம். கலாசாரச் சார்புகள் என்பனவும் மேலைநாட்டின் போக்குகளைத் தழுவியனவாகவே அமைந்தன. இதனைக் கருத்திற் கொண்டுதான் மகாகவி அல்லாமா இக்பாலும் மேலைநாட்டின் விஞ்ஞானத்தையும் கீழைத்தேயத்தின் கலாசாரத்தையும் ஒன்றிணைப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்தியாவிலே ஒருசில சர்வகலாசாலைகள் தோன்றியிருந்த போதிலும் இஸ்லாமியர்களது இலட்சியங்களையும், பண்பாடுகளையும் பிரதிபலிக்கக் கூடியதாக அவை அமைந்திருக்கவில்லை. அன்றையச் சூழலில் இஸ்லாமியப் பின்னணியிலே முஸ்லிம்களைக் கல்வித்துறையில் ஊக்குவிக்க வேண்டியதாக இருந்தது. இஸ்லாமிய கலாசாரத்தை மையமாகக் கொண்டு பலவேறு



வகையான கலாபீடங்களுடன் கீழைத்தேய மக்களின் தேவைக்கேற்ப, சகல வசதிகளையும் உள்ளடக்கியதான பல்கலைக்கழகமொன்று அவசியம் என்பதையும் பலர் உணர்ந்திருந்தனர்.

அதிலும் விசேடமாக, ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாக இஸ்லாமியரது மரபுவழிவந்த பல முற்போக்குத்திட்டங்கள் இந்தியாவில் நிலையாக அமைந்துவிட்டன. சுல்தானிய மன்னர்களதும், மொகலாய மன்னர்களதும் ஆட்சியின்போது இந்தியா கலையுலகில் மேலும் பொலிவும் புகழும் அடையலாயிற்று. அழகிய நந்தவனங்கள், மாளிகைகள், கோட்டை—கொத்தலங்கள், மசூதிகள், நூல்நிலையங்கள் ஆகிய அனைத்துமே அந்தநாட்டுக்கு அழகுதரும் அணிகலன்களாக அமைந்துவிட்டதை நோக்கலாம்.

மாமன்னர் அக்பர் பலகோட்டைகளையும் கோபுரங்களையும் இஸ்லாமியக்கலைகளோடொட்டிய இந்துப் பாணியிலே கட்டுவித்தார். குஜராத்தில் அவரால் கட்டப்பட்ட 'ஜாமிமசூதி' பாரசீக இந்தியக் கலைகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது. அக்பரது மகன் ஜஹாங்கீர் இலக்கிய, சன்மார்க்கத் துறையில் அதிகம் ஈடுபாடு கொண்டிருந்தார். அக்பர் ஞாபகார்த்தக் கட்டடமொன்றையும் அவர் கட்டுவித்தார். சாஜஹானின் ஆட்சிக்காலம் 'இந்தியாவில் இஸ்லாமியக் கலைகளின் பொற்காலம்' என வர்ணிக்கப்படுகின்றது. இஸ்லாமிய இலக்கியம், சித்திரம் சிற்பம் என்பன இவரது காலத்திற்றான் சிறப்புற்று விளங்கின. ஆக்ராவின் முத்து மசூதி, ஜாமி மஸ்ஜித் என்பன இவரது நினைவை அழகுபடுத்துகின்றன. தமது அன்பு மனைவி மும்தாஜின் காதற்சின்னமாக எழுப்பப்பட்டுள்ள தாஜ்மஹால் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. மொகலாயரது நினைவுச்சின்னங்களை உலக மக்களின் நெஞ்சங்களிலே என்றைக்குமே அழகு வடிவமாக நிலைத்து நிற்கச் செய்வதில் சாஜஹான் முதன்மைபெற்று விளங்குகின்றார். பதினேழாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலே மாமன்னர் அவுரங்கசீபின் தலைமையில் அகில பாரதமே மொகலாய ஆட்சியின் செல்வாக்கைப்பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து இஸ்லாமியரது எழுச்சி வீழ்ச்சியுற்றபோதிலும் அவர்களது ஆட்சியின் பலன் முற்றாக நீங்கி விடவில்லை. ஆங்கிலேயரது ஆட்சியின்போதும்

மைசூர், ஹைதராபாத், காஷ்மீர் போன்ற மாநிலங்கள் முஸ்லிம் மன்னர்களது ஆதிக்கத்திலேயே இருந்துவந்துள்ளன.

ஆங்கிலேயரது ஆட்சியின்போது புதிய உத்வேகத்துடன் தோற்றுவிக்கப்பட்ட கல்விமுறைகளில் முஸ்லிம்கள் பின்தள்ளப்பட்டுவருவதைப் பலர் அவதானிக்காமல் இருக்கவில்லை. முஸ்லிம்களது முன்னோர்கள் விட்டுச்சென்ற அரும்பெருங்கலைப் பொக்கிஷங்களைப் பேணிக் காக்கவும் வேண்டியதாயிற்று. இந்தப் பெருநோக்கோடு உலக அரங்கிலே ஏற்பட்டுவந்த நவீன மாற்றங்களுக்கு அமைவாகவும், கல்வி கேள்விகளில் முன்னேற்றங்காண்பதற்காகவும் இஸ்லாமியப் பாணியிலான பல்கலைக்கழகமொன்றை அமைக்க முன்வந்தவர்தான் மாமேதை சர். செய்யத் அஹ்மத்கான் அவர்களாகும். சர். செய்யத் அஹ்மத்கானின் சேவையில் பெரிதும் ஈர்க்கப்பட்ட ஜனாப் பதியுத்தீன், அன்னார் மீது அபாரப்பற்றும் வைத்திருந்தார். சர். செய்யதைத் தனக்கு முன்மாதிரி காட்டும் தலைவராகவும்-கல்விமானாகவும் கருதத் தொடங்கினார். அன்றியும் சர் செய்யதின் சிந்தனையிலே உருவெடுத்து, முயற்சியிலே தோற்றுவிக்கப்பட்ட அலிகார் சர்வகலாசாலையின் வளர்ச்சியிலும் தனது வாலிபப்பருவத்தின் சில வருடங்களை ஜனாப் பதியுத்தீன் அர்ப்பணித்துள்ளார். ஆறு ஆண்டுகள் அலிகாரிலே மாணவராக மாத்திரம் இயங்கவில்லை. அலிகாரின் தொடர்ச்சியான இயக்கத்துக்கும் உழைத்து வந்துள்ளார். அதனாலேதான் இன்றும் அந்தச்சர்வகலாசாலை ஜனாப் பதியுத்தீனை ''அலிகாரின் வளர்ச்சிக்காக உழைத்த மகான்களின் பட்டியலில் சேர்த்துப் பெருமைப் படுத்திக் கொண்டிருக்கிறது. ஜனாப் பதியுத்தீனும் இதுபற்றிக் குறிப்பிடுகையில்,

> ''கீழைத்தேயத்தில் இஸ்லாமிய கலாசாரத்தின் சின்னமாகவே அலிகார் சர்வகலாசாலை அமைந்துள்ளது. அத்தகைய கலா நிலையம் மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்ற பெருநோக்கினாலேதான் என்னாலான சிறிய பணியை அதற்குச் செய்துள்ளேன். அலிகா



> ரைக் காணும்போது அங்கே சர். செய்யத் அஹ்மத்கானையே காணுகின்றேன்''

என்று பல் சந்தர்ப்பங்களிற் கூறியுள்ளதையும் நோக்கலாம்.

1875-ஆம் ஆண்டு Mohamedian Anglo Oriantal College-Aligarah என்ற பெயரால், உயர் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு, மிகவிரைவிலே உலகப்புகழ்பெற்ற ஒரு சர்வகலாசாலையாக மாறிய அக்கலாநிலையம் தென்கிழக்காசியாவிலே எண்ணற்ற அறிஞர்களைத் தோற்றுவித்ததில் வியப்பில்லை. அதனை உருவாக்குவதில் சர். செய்யத் அஹ்மத்கான் மேற்கொண்ட அழியா முயற்சிகளையும் சமுதாயம் மறப்பதற்கில்லை. எனினும் அப்பெரியார் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து முற்றுப்பெறச்செய்ததனால்தான் இன்றும் அலிகார் இஸ்லாமிய நாகரிகத்தின் முழுமையான சின்னமாக விளங்குகின்றது.

ஜனாப் பதியுத்தீன் 1931-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டு வரை தமது பட்டப்படிப்பை அலிகாரிலே மேற்கொள்ள முற்பட்டார். இஸ்லாமிய சமூகப்பற்றும், கீழைத்தேயக் கலையார்வமுமே அன்னாரை அலிகாருக்கு இழுத்துச் சென்றுள்ளன. இலங்கையிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்று பட்டப்படிப்பை மேற்கொள்ளுவதற்கான சகல வாய்ப்புக்களும் அன்னாருக்கிருந்தது. இங்கிலாந்து சென்று கல்வி பயில்வதையே அன்றைய பண வசதி படைத்த தனவந்தர்கள் பெரும் கௌரவமாகவும் கருதினர். மேலைநாட்டுக் கல்வியினால் கூடிய உழைப்பும் உயர்ந்த பதவியும் பெற்றுக்கொண்டு, கௌரவமாகவும் சொகுசாகவும் வாழ எண்ணியவர்களே அக்காலத்தில் அதிகமாகக் காணப்பட்டனர். ஜனாப் பதியுத்தீனையும் மேலைநாட்டுப் பல்கலைக்கழகத்தில் சேர்த்துப் படிப்பித்து ஓர் உயர்தர வக்கீலாக விளங்கவைக்க வேண்டுமென்பதே அன்னாரது குடும்பத்தாரின் விடாப்பிடியான நோக்கமாகவும் இருந்துவந்தது. ஆனால் பதியுத்தீனின் எண்ணமெல்லாம் வேறுவகையாகவே அமைந்திருந்தது.

தாய்நாட்டின் எதிர்காலம், சுதேசிகளின் சுபீட்சம், சொந்த சமுதாய மக்களின் கல்வி, கலாசார சமூகப்பொருளாதார

வாழ்க்கையின் முன்னேற்றம் என்பவைகளே அன்னாரது சிந்தனையிலே சுழன்று கொண்டிருந்த பெரும் பிரச்சினைகளாகும். தமது எண்ணங்களைப் பக்குவப்படுத்துவதற்காக அலிகார் சர்வகலாசாலையே பொருத்தமானதென அவர் எண்ணினார். இந்தியத் தேசிய விடுதலைக்காக உழைத்துத் தங்களது உயிரையே அர்ப்பணித்த மௌலானா முஹம்மதலி, மௌலானா சௌக்கத்தலி ஆகிய இருவர் மீதும் ஜனாப் பதியுத்தீனின் தந்தையார் ஆழ்ந்த பக்தியுடையவராகக் காணப்பட்டார். அடிக்கடி அவர்களது வீர வரலாற்றைப் புகழ்ந்து பாராட்டுவதுமுண்டு. அலிகாருக்குச் செல்ல விரும்பிய ஜனாப் பதியுத்தீன் தமது தந்தையை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

''தந்தையே! நீங்கள் அடிக்கடி புகழ்ந்து பாராட்டுகின்ற மௌலானா முஹம்மதலியும், சௌக்கத்தலியும் அலிகார் சர்வகலாசாலையினால் உருவாக்கப்பட்டவர்கள்தானே; அப்படியான ஒரு கலாநிலையத்துக்கு உங்களது ஆறு ஆண்மக்களில் கடைசி மகனை என்னையும் தியாகம் செய்யுங்கள்'' என்று தமது ஆவலை வெளிக்காட்டியபோது, பதியுத்தீனின் தந்தையாரின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்துவிட்டது. அடுத்த நிமிடமே தனது மகனின் விருப்பத்துக்கு இணங்கலானார்.

ஜனாப் பதியுத்தீன், பல தேசிய வீரர்களையும், தலைவர்களையும் உருவாக்கிய அந்தச் சர்வகலாசாலையைக் கீழைத்தேய முஸ்லிம்களின் சொந்தச் சொத்தாகவும் தேசிய கலா நிலையமாகவும் கலாசாரப் புகலிடமாகவும் கருதத் தொடங்கினார். அன்றியும் அக்கலா நிலையத்திலே போதிக்கப்படும் மேலைநாட்டு அறிவியற் துறையின் முற்போக்கான கொள்கைகளும், இஸ்லாமிய கலாசாரப் பின்னணியில் போற்றப்படுவதனால் அதன் பயனையும் பண்பையும் ஒருங்கே உணரலானார். இவையனைத்தையும் சீர்தூக்கிச் சிந்தித்துச் செயலாற்றும் தன்மையை இளமைப் பருவத்திலேயே பழக்கிக் கொண்டதனால்தான் தமது பட்டப் படிப்பையும் தாமே தீர்மானிக்கலாயினார்.



அறிவையும் ஆற்றலையும் ஒருங்கே நிலைநாட்டும் துடிப்புள்ள ஓர் இளைஞனாகப் பல்கலைக் கழகத்தைச் சென்றடைந்தாலும், இஸ்லாமிய சமுதாயத்தின் முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட பலபெரியார்களுடன் தொடர்பு கொள்வதிலும் ஆவலுடையவராக இருந்தார் பதியுத்தீன்.

DONATED IN MEMORY OF
Late M/s. V. A. SIVAGNANAM,
V. A. SADADCHARAM and
V. A. MANORANJITHAN
On 26.6.93

# அறிஞர் தொடர்பு

ஜனாப் பதியுத்தீன் தமது உயர் கல்விக்காக அலிகாருக்குச் சென்றபோதும், இந்தியாவின் முஸ்லிம் பேரறிஞர்களோடும், தலைவர்களோடும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டார். இங்கிலாந்தின் 'வாக்கிங் மிசன்' (Working Mission) ஸ்தாபகரும், இஸ்லாமிய ஆராய்ச்சித் துறையில் பலநூல்களை எழுதியவரும், சிறந்த பேச்சாளருமான குவாஜா கமாலுத்தீன் அவர்களது நெருங்கிய நட்புக்குரியவராகப் பலகாலம் அவருடனேயே வாழ்ந்தும் வந்துள்ளார். குவாஜா கமாலுத்தீன் அவர்களது அந்திய காலத்தில் அவரால் மொழியப்பட்ட ''திருக்குர்ஆன் கருத்துரைகள்'' என்ற பாரிய கிரந்தத்தை ஜனாப் பதியுத்தீன் ஆங்கிலத்தில் எழுதிமுடித்தார். அக்கிரந்தம் பிரசுரிக்கப்படாவிட்டாலும், இங்கிலாந்திலிருந்து வெளிவரும் 'இஸ்லாமிக் ரிவியு' (Islamic Review) என்ற சஞ்சிகை அதனைப் பகுதி பகுதியாக வெளியிட்டுள்ளது.


குவாஜா கமாலுத்தீன் அவர்கள், தளர்வுற்ற நிலையில் தமது படுக்கையில் சாய்ந்து கொண்டவாறே அக்கருத்துரைகளைக் கூறிக்கொண்டிருப்பார்கள். அவ்வாறு கூறும்போது, ஜனாப் பதியுத்தீன் நாளொன்றுக்கு இருபத்தைந்து பக்கங்களுக்குக் குறையாமல் எழுதுவார். அந்தியும் சந்தியும் அவரது ஆப்த நண்பராக விளங்கியதனுற்றான்.

''..........I have taken the massage to the west, you must take it to the east upto Japan..........''





மலேசியாவிலிருந்து உயர்தரக் கல்வி கற்பதற்காக, அலிகார் பிரசாரக் குழுத் தலைவர் எம். என். எம். பதியுத்தின் தலைமையில் அலிகாருக்கு வந்த மாணவர் குழு



அலிகார் சஞ்சிகை ஆசிரியர் குழு 1934/35
முதல் வரிசையில் முதலாவதாக அமர்ந்திருப்பவர் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஜனாப். எம். என். எம். பதியுத்தீன் பின்வரிசையில் (மூன்றாவதாக வலதுபக்கம்) நிற்பவர் சஞ்சிகையின் உதவியாசிரியர் மௌலானா ஹாபிஸ் பஸ்லுல் ரஹ்மான் அன்சாரி அவர்கள்

''..........நான் மேற்கத்தைய நாடுகளுக்கு இஸ்லாத்தின் போதனைகளைத் தாங்கிச் சென்றேன். நீங்கள் கிழக்கே ஜப்பான் வரையும் அதனை எடுத்துச் செல்லுங்கள்.....'' என்று குவாஜா கமாலுத்தீன் ஜனாப் பதியுத்தீனை நோக்கிக் கூறியுள்ளார்.

ஜனாப் பதியுத்தீனின் சகோதரரும், வழக்கறிஞரும் மார்க்கப் பற்றுடையவருமான ஜனாப் எம். என். எம். சலாஹுத்தீன் 1932-ஆம் ஆண்டு எழுதிய கடிதமொன்றில் தமது சகோதரருக்கும் குவாஜா கமாலுத்தீன் அவர்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''..........உலகப் பேரறிஞர்களில் ஒருவராக இருந்து மேற்கத்திய உலகுக்கு இஸ்லாத்தைப் புரியவைத்தவரான குவாஜா கமாலுத்தீன் அவர்களோடு சேர்ந்து வாழ்வது ஒரு பெரும்பாக்கியமாகும். அடைய முடியாத ஒரு பெரும் பேற்றைப் பெற்றுள்ளீர்கள். அன்னாரின் அடிச்சுவட்டிலிருந்து சேவையாற்றக் கிடைத்திருப்பது அல்லாஹ் அருளியிருக்கும் பேரருள் என்றே கருத்திற் கொள்ளுதல் வேண்டும். என்போன்றவர்களுக்கு அத்தகைய வாய்ப்புக்கிடைக்குமாயிருந்தால் நிச்சயமாக நானும் ஓர் அதிர்ஷ்டசாலியாகவே என்னைக் கருதிக் கொள்வேன். என்றைக்காவது அந்தப் பாக்கியம் கிடைக்குமென்றுதான் நம்புகிறேன். அன்னாரின் பாதங்களைத் தொட்டு சாஷ்டாங்கஞ் செய்வதும் பெருமைதரக் கூடியதாக இருக்கும். ஏனென்றால், இன்றைய உலகிலே இஸ்லாமிய கலீபா ஒருவர் இருப்பாராஞல் அது குவாஜா கமாலுத்தினுகத்தான் இருக்க வேண்டும். இதுவே எனது நம்பிக்கையுமாகும். எனது அன்பான சலாத்தையும் அன்னாருக்கு எத்திவையுங்கள்..........''

அன்புள்ள,
எம். என். என். சலாஹுத்தீன்

இஸ்லாமியப் பிரசாரத்தில் மிக மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த மாமேதை அப்துல் அலீம் சித்தீக் அவர்களுடனும் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார். ஜனாப் பதியுத்தீன் அடிக்கடி அன்னாரைச் சந்தித்து உலக இஸ்லாமிய பிர

சாரம் சம்பந்தமாகப் பலமுறை கலந்துரையாடினர். அப்துல் அலீம் சித்தீக் அவர்களின் மருகராகிய மௌலானா பஸ்லுல் ரஹ்மான் அன்சாரி அவர்களும் ஜனாப் பதியுத்தீனின் இத்தகைய முயற்சிகளுக்குக் கைகொடுத்து உதவினர். இன்றைய உலகிலே இஸ்லாமியப் பிரச்சாரத்தில் மிகமும்முரமாக ஈடுபட்டுள்ள மௌலானா பஸ்லுல் ரஹ்மான் அன்சாரியும் ஜனாப் பதியுத்தீனும், ஒரே காலத்தில் அலிகாரில் பயின்றவர்கள். ஒரே அறையில் வாழ்ந்தவர்கள். ஜனாப் பதியுத்தீன் அலிகார் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றியபோது மௌலானா கலாநிதி பஸ்லுல் ரஹ்மான் அன்சாரி அவர்கள் அதன் துணை ஆசிரியராகக் கடமையாற்றியவர். இந்த உண்மையை மௌலானா பஸ்லுல் ரஹ்மான் அன்சாரி அவர்களே தமது இலங்கை விஜயத்தின் போது பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்கள்.

இவ்வாறே ஜனாப் பதியுத்தீன் உலகமகாகவி அல்லாமா இக்பால்தேசிய விடுதலை வீரர்களான அலி சகோதரர்கள், அரசியற் தலைவர்களான டாக்டர் அன்சாரி, காயிதே அஃலம் முஹம்மதலி ஜின்னா, மௌலானா அபுல்கலாம் ஆசாத் போன்றவர்களுடனும் நேரடித் தொடர்புகள் கொண்டிருந்தார். ஜனாப் ஜின்னா அவர்கள், ஜனாப் பதியுத்தீனின் உயரிய நோக்கங்களை நன்கு அறிந்தவராக இருந்தார். அலிகார் சர்வகலாசாலை இயக்கங்களிலும், ஏனையப் பிரசார இயக்கங்களிலும் ஜனாப் பதிதித்தீன் காட்டி வந்த அபாரத்திறமைகளே அத்தனைக்குங் காரணமாகும். இந்தியப் பத்திரிகை ஆசிரியர்களும் ஜனாப் பதியுத்தீனின் முற்போக்குக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்தனர். ஜனாப் பதியுத்தீன் இலங்கை திரும்பிய பின்னருங் கூடப் பல பெரியார்களின் தொடர்புகள் தொடர்வதாயிற்று. 1944-ஆம் ஆண்டு ஜனாப் ஜின்னா அவர்களது கைப்பட எழுதிய ஒரு கடிதத்தையும் நோக்குவோம்.

*1-3-1944*

எனது அன்புள்ள ஜனாப் பதியுத்தீன் அவர்களுக்கு,

ஜனாப் எம். சியா உல் இஸ்லாம் சித்தீக் அவர்கள் உங்களால் எழுதப்பட்ட இரண்டு சஞ்சிகைகளை என்னிடம் தந்தார்



கள். நீங்கள் மேற்கொண்டுள்ள புதிய முயற்சிகளைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இலங்கைக்கு வருமாறு நீங்கள் விடுத்திருந்த அழைப்பையும் என்னிடம் ஒப்படைத்தார்கள்.

நான் இலங்கைக்கு வரவிரும்பியபோதும் இப்பொழுதுள்ள சூழ்நிலையில் அவ்வாறு செய்யமுடியாதவனாக இருக்கின்றேன்.

உங்களால் முடிந்த எல்லா வகையாலும், இலங்கையில் முஸ்லிம்களுக்காகவும்—இஸ்லாமிய கலாசார வளர்ச்சிக்காகவும் உங்களது காலத்தை அர்ப்பணிக்க முன்வந்துள்ளதை, கேட்டறிந்தபோது, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உங்களது அழைப்புக்கிணங்க நான் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யும் வாய்ப்பை எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறேன்.

உங்கள் அன்புள்ள,
(ஒப்.) எம். ஏ. ஜின்னா

இவ்வாறே பண்டித ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி ஆகியோருடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஜனாப் பதியுத்தீன் அத்தகைய தொடர்புகளால் தன்னையொரு சமுதாயத் தொண்டனாக மாற்றிக் கொள்ளவும் முற்பட்டார்.

# கல்வியும் தொண்டும்

ஜனுப் பதியுத்தீன், அலிகார் சர்வகலாசாலைக்குச் சென்றடைந்த முதலாவது ஆண்டிலேயே தமது திறமைகளை வெளிக் காட்டி இன்டர் ஆர்ட்ஸ் பரீட்சையில் முதலாவது பிரிவிலே சித்தியடைந்தார். பேராசிரியர்களும், சகமாணவர்களும் இவரது செயற்றிறனையும் பேச்சு வன்மையையும் கண்டுகொண்டனர். அதனால் அலிகாரின் பிரசார இயக்கத்தின் தலைவராகவும் இவர் நியமனம் பெறலானார். பல நாடுகட்குச் சென்றார். அங்கெல்லாம் அலிகாரின் புகழைப்பரப்பினார். இத்தனைக்கும் மத்தியில் பீ. ஏ. பரீட்சையில் முதலாவதாகவும் சிறப்புச் சித்தியும் (ஒனஸ்) எய்தினார். இவர் தொடர்ந்தும் எம். ஏ. பரீட்சைக்காகத் தம்மைத் தயார் செய்துகொண்டிருந்தார்.

அலிகார் சர்வகலாசாலையில் ஏழை மாணவர்களும் கல்வி பயில வாய்ப்பிருந்தது. சர்வகலாசாலையின் கடமை கண்காணிப்புச் சங்கம் (Duty Society) அத்தகைய மாணவர்களுக்கான நிதி உதவியை வழங்கியது. அந்தச் சங்கத்தின் பிரசாரக் குழுத் தலைவராகவும் ஜனுப் பதியுத்தீன் நியமனம் பெற்றார். இந்த நிதிக்காக ஆண்டு தோறும் ஐம்பதினாயிரம் ரூபாய் தேவைப்பட்டது. ஜனுப் பதியுத்தீன் தாம் மேற்கொண்ட பிரசாரத்தின் மூலமாக அவ்வளவு பணத்தையும் சேகரித்து உதவினார். பர்மா, சிங்கப்பூர், ஜாவா, சுமாத்ரா, ஆப்கானிஸ்தான், சயாம் போன்ற நாடுகளுக்கெல்லாஞ் சென்று அலிகாரின் சேவைகளையும் அதன் நவீன திட்டங்களையும் விளக்கிக் கூறினார். இவரது பிரசாரத்தின் நோக்கம் நிதி சேகரிப்ப



தோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. அண்மை நாடுகளில் உள்ள மக்கள் விசேடமாக முஸ்லிம்கள் அலிகாரின் பயன்களை அநுபவித்து—அந்தந்த நாடுகளின் சமூக, அரசியல், கலாசாரத் துறைகளிலே மறுமலர்ச்சியும் மேம்பாடும் காணவேண்டுமென்பதுமாகும்.

ஒவ்வொரு நாட்டினரும் இவரது பிரசாரத்தால் பெரிதும் கவரப்பட்டனர். இவரை ஒரு சிறந்த கல்விமானாகவும் சமூகப் பணியாளனாகவும் ஏற்றுக் கொண்டனர். அதனால் இவர் சென்றடைந்த இடங்களிலெல்லாம் கூட்டங்கள், வரவேற்புக்கள், விருந்துகள் என்பன நடத்திப் பாராட்டினர்.

ஜனுப் பதியுத்தீன் 1935-ஆம் ஆண்டு மலேசியாவில் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டிருந்த போது, அந்த நாட்டிலே கல்வித் துறையில் பட்டம் பெற்ற சுதேச முஸ்லிம்களில் ஒருவராயினும் இருக்கவில்லை. இதனையறிந்த ஜனுப் பதியுத்தீன் கவலை கொண்டார். அதனை நிவர்த்திப்பதற்கும் ஆவன செய்யத் துணிந்தார். அன்னியர் ஆட்சியிலே அடிமை வாழ்வு கொண்டிருந்த மலாய் முஸ்லிம்களின் சிந்தனையைக் கிளறத்தக்க வகையில், உணர்ச்சிகரமான உபந்நியாசங்களை நிகழ்த்தத் தொடங்கினார்.

சுதந்திர ஆட்சி மனப்பான்மையை வளர்ப்பதற்கு அவர்களது சிந்தனையைத் திருப்பவேண்டுமாயின் கல்வியின் மூலமாகவே அதனைச் செய்யமுடியுமென்பதையும் உணரப்பண்ணினார். அவரது பிரசாரத்தால் ஈர்க்கப்பட்ட அந்த நாட்டு மக்கள் உயர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கொண்டதோடு அங்குள்ள மாணவர்கள் பலரை அலிகாருக்கு அனுப்பவும் இணங்கினர். அந்த மாணவர் கோஷ்டியின் முதற் குழுவினரை ஜனுப் பதியுத்தீன் தன்னுடனேயே அழைத்து வந்து அலிகாரிற் சேர்ந்தார்.

"பட்டப்படிப்புக்குச் செல்லும் முதல் முஸ்லிம் மாணவர் கோஷ்டி" என்று தலையங்கம் தீட்டி ஜனுப் பதியுத்தீனையும் அவருடன் பட்டப்படிப்புக்காக வருகின்ற மாணவர்களையும்

புகைப்படங்களோடு, செய்திகளையும் அன்றைய மலேசியப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. ஜனாப் பதியுத்தீனின் இந்தச் சேவையை இன்றைய சுதந்திர மலேசியா மறந்துவிடுவதற்கில்லை.

அலிகார் சர்வகலாசாலையைப் பற்றியும் ஜனாப் பதியுத்தீனைப் பற்றியும் 1935-ஆம் ஆண்டு, மே மாதம், 8ஆந் திகதி வெளியான ''பினாங் கெஸட் அன்ட் ஸ்டேட் க்ரோனிக்கல்'' என்ற ஆங்கிலப் பத்திரிகை எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கத்தை ஈண்டு கவனிப்போம்:—

''அலிகார் சர்வகலாசாலையின் பிரசாரக் குழுத்தலைவர் ஜனாப் பதியுத்தீன் 'பினாங்' வந்துள்ளார். அச் சர்வகலாசாலையின் நிதி உதவிச் சங்கம், ஏழை மாணவர்களுக்கு ஆண்டுதோறும் ஐம்பதினாயிரம் ரூபாய்வரை நிதி உதவி வழங்குகின்றது. அந்த நிதிக்கான பணத்தைச் சேர்ப்பதற்கும், அலிகார் சர்வகலாசாலையின் உண்மையான தரத்தை விளக்குவதற்கும் ஜனாப் பதியுத்தீன் பல நாடுகளுக்கும் சுற்றுப்பயணஞ் செய்து வருகின்றார். அலிகார் சர்வகலாசாலையைப் பற்றி ஜனாப் பதியுத்தீன் தெரிவித்த கருத்துக்களையும் ஈண்டு குறிப்பிடுகின்றோம்.

''அலிகார் சர்வகலாசாலை உலகப் புகழ்பெற்றதொன்றாக முன்னேறிக்கொண்டு வருகின்றது. இது காலஞ்சென்ற ஸர். செய்யத் அஹ்மத்கான் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதாகும். இந்திய மக்கள்,விசேடமாக முஸ்லிம்கள் தங்களது அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொண்டு, சுயமரியாதையுடன் வாழவேண்டுமாயின் நவீன கல்வி முறைகளைக் கையாளவேண்டுமென்ற தீர்க்கதரிசனத்தோடு—செயல்முறையில் நிறைவேற்றிக் காட்டியவர்தான் ஸர் செய்யத் அஹ்மத்கான் அவர்களாகும். அவர் சமூகநலனைக் கருத்திற் கொண்டவர். தமது ஆயுளிற் பெரும் பகுதியைச் சமுதாயப் பணிக்காகவே அர்ப்பணித்தவர். பலநூல்களையும் பத்திரிகைகளையும் வெளியிட்டவர். நூற்றுக்கணக்கான மேடைகளிற் தோன்றிச் சமுதாய முற்போக்குக் கருத்துக்களை வழங்கியவர். ஆட்சிமன்றத்தில் சுதேசிகளுக்குத் தகுந்த



அந்தஸ்தும் இடமும் அளிக்கப்படவேண்டுமென்று வாதாடியவர். சுதேசிகளின் கலை, கலாசாரம், வாழ்க்கைமுறை என்பனவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டுமென்பதையும் விளக்கியவர். அவரது ஆலோசனைகளை ஆட்சியாளர் ஏற்றுக்கொண்டதனாற்றான் 1857-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவிலே அனாவசியமான கலவரங்கள் ஏற்படவில்லை.

ஸர். செய்யத் அஹ்மத்கான், தன்னை ஓர் அரசியல்வாதியாக மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. ஒரு சிறந்த கல்விமானாகவே விளங்கியுள்ளார். எனினும், அவரது அரசியற் கருத்துக்களுக்கு ஆட்சியாளர் பெருமதிப்பளித்தனர். அவர் தேசிய கலாசார அமைப்பைக் கருத்திற்கொண்டு, தமது சொந்த சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் முக்கிய கவலைகொண்டவராக இருந்தார். அதற்காகக் கல்வித்துறையில் — விசேடமாக உயர் கல்வியில் முக்கிய கவனஞ் செலுத்தினார்.

சென்னை, அலஹபாத், பெங்களூர், பஞ்சாப், பம்பாய் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டிருந்த சர்வகலாசாலைகளினால் அவரது இலட்சியத்தை நிறைவேற்ற முடியாதெனக்கண்டார். அதனால் மேலை நாடுகளுக்குத் தமது சொந்தச் செலவிலே சென்று, அங்குள்ள உயர்தரமான சர்வகலாசாலைகளின் நவீன அமைப்பு முறைகளையும், பாட போதனா முறைகளையும் அவதானித்தார். பின்னர் தாயகம் திரும்பித் தமது சமுதாயத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டவராக, 1875-ஆம் ஆண்டு ''Mohamedian Anglo Oriantal College''என்றபெயரில் இப்போதைய அலிகார் சர்வகலாசாலையை ஆரம்பித்தார்.

அங்கே ஆண் பெண் இருபாலாரும் கல்வி பயில்கின்றனர். இஸ்லாத்தின் போதனைகளுக்கமைவாக அவர்களது கல்வியும் வாழ்க்கை முறையும் அமைந்துள்ளன. முஸ்லிம் அல்லாதவர்களும் அங்கு பயில்கின்றனர். அவர்களது மத உரிமைகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன. நாலாயிரம் மாணவர்கள் இப்பொழுது பயில்கின்றனர். அவர்களுள் பத்துச் சதவிகிதத்தினர் இந்துக்கள். கிறிஸ்தவர்களும் அங்கு பயில்கின்றனர்.

அலிகார் சர்வகலாசாலை பத்துச் சதுரமைல் பரப்பில் அமைந்துள்ளது. நான்கு சதுர மைல் பரப்பில் கட்டிடங்கள் நிரம்பியுள்ளன. நவீன வசதிகள் பொருத்தப்பட்ட சயன மண்டபங்கள், பயிற்சிக் கூடங்கள், போதனைபீடங்களுட்பட ஆரம்பப் பாடசாலைகளும் அமையப் பெற்றுள்ளன. மேலும் பல மண்டபங்கள் இப்பொழுது கட்டப்பட்டுவருகின்றன. கேம்பிரிஜ், ஒக்ஸ்போட், சர்வகலாசாலைகளைப்போன்றே அலிகாரும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அலிகார் அதன் தனித்துவத்தைப் பேணிக்காக்கும் இஸ்லாமியக் கலைச்சின்னமாக நிலைத்து நிற்கின்றது. தனித்துவத்தைப் போன்றே அதன் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அதற்கெனத் தனியாகவே போலிஸ் நிலையம், தபாற் கந்தோர், ஆஸ்பத்திரி என்பனவும் இயங்குகின்றன. இவையெல்லாவற்றையும் நோக்கும் போது, அதனை ஒரு 'சர்வகலாசாலை நகரம்' என்றே சொல்லத் தோன்றுகின்றது.

நாட்டை ஆளும் மன்னர் அதன் ஆயுள் அங்கத்தவராக உள்ளார். பாரதநாட்டிலுள்ள அரசகுமாரர்கள், ஆட்சியாளர்கள், சமூக சேவையாளர்கள், மருத்துவ, தொழில்நுட்ப விற்பன்னர்கள் ஆகியோரிற் பலர் அதன் அபிமானம் மிக்க பழைய மாணவர்களாக இருக்கின்றனர். ஏன் இன்றைய விடுதலை வீரர்கள் பலரையும் உருவாக்கியுள்ளது அலிகார்.

சர்வகலாசாலை நடவடிக்கைகளிலும் வாழ்க்கை முறைகளிலும், எந்தவிதமான உயர்வு தாழ்வும் கற்பிக்கப்படுவதில்லை. அங்கு பயில்கின்ற அரசகுமாரர்களும், சாதாரண பிரஜைகளின் மக்களும் ஒரே விதமான அந்தஸ்திலேயே மதிக்கப்படுகின்றனர். கலாசாலை உடையும் அவ்வாறே. இந்து சமய மாணவர்களுக்குச் சில விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களது சமய கலாசார வாழ்வைப் பேணிக்காப்பதற்காகத் தனிப்பட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பிரத்தியேகமான மண்டபங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன

அலிகார் சர்வகலாசாலையின் மாணவ இயக்கம் (The University Union) பூரண சுதந்திரமுடையதாக இயங்குகின்றது.



மாணவர்கள் தங்களது சொந்த விவகாரங்களைக் கலந்துரையாடித் தீர்த்துக்கொள்ள எல்லா வாய்ப்புக்களும் தரப்பட்டுள்ளன. இயக்குனர்களை மாணவர்கள் தாமாகவே தெரிவு செய்து கொள்கின்றனர். தனிப்பட்டவர்கள் செல்வாக்கையோ, வெளியார் தலையீட்டையோ இயக்கம் கௌரவிப்பதில்லை. அங்கத்தவர்களது உரிமைகள் பாதிக்கப்படாதவாறு இயக்கம் முழுமூச்சுடன் இயங்குகின்றது. சமூக வாழ்க்கை, கட்டுப்பாடு, ஒழுங்கு என்பனவற்றைப் பாதுகாக்கிறது. எமது கட்டுப்பாட்டுத் திட்டங்களில் ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமானதென நினைக்கிறேன். எம்மை நாடிவரும் ஒருவர் புதிய மாணவராக அல்லது பழைய மாணவராகவோ இருக்கலாம். வந்தவர் அமர்வதற்கு ஆசனம் வழங்கி, அவர் அமர்ந்து கொண்டதன் பின்னர்தான் நாம் அமர்ந்து கொள்ளுவோம். இது ஒரு மிகச் சிறிய உதாரணம். இது போன்ற ஒழுக்க முறைகள் தான் அங்கு கையாளப்படுகின்றன"

இவ்வாறாக ஜனாப் பதியுத்தீன் தமது நாவன்மையினாலும் எழுத்து வன்மையினாலும், ஆசியாவிலும் தூரகிழக்கு நாடுகளிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்து அலிகாரின் புகழை நிலைநாட்டுவதில் முதன்மைபெற்று விளங்கினார். அலிகார் பல்கலைக் கழகத்தின் சிறந்த பேச்சாளராகத் தெரிவுசெய்யப்பட்ட இவர், இந்தியப் பல்கலைக் கழகங்களிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியிலும் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுக் கொண்டார். அகில இந்தியப் பேச்சுப் போட்டியில் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுத் தங்கப் பதக்கமொன்றையும் சுவீகரித்துக் கொண்டார்.

அலிகார் சர்வகலாசாலைச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இரண்டாண்டுகள் பணிபுரிந்தார். இன்று உலக இஸ்லாமியப் பிரசாரத்தில் ஈடுபாடு கொண்டுள்ள மௌலானா கலாநிதி பஸ்லுல் ரஹ்மான் அன்சாரி அவர்கள் சஞ்சிகையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். அலிகார் சர்வகலாசாலை தோற்றுவித்த சஞ்சிகைகளுள் மிகச் சிறந்த சஞ்சிகையாக இவர்களது காலத்துச் சஞ்சிகைகள் கருதப்படுகின்றன.

1935-ஆம் ஆண்டில் இந்தியாவின் ஐக்கிய மாகாண சர்வ கலாசாலை மாணவர் இயக்கத்தின் (United Province University Student Fedaration) தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டார் பதியுத்தீன். இந்தத் தலைமைப் பதவியைப் பயன் படுத்தி, ''அகில இந்திய மாணவர் சம்மேளனம்'' ஒன்றை உருவாக்கினார். சம்மேளனத்தின் மாநாட்டைஆரம்பித்துவைத் தவர் அன்று பாரதத்தின் பெருந்தலைவராக விளங்கிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களாகும். தலைமை வகித்தவர் காயிதே ஆஸம் முஹம்மதலி ஜின்னா அவர்களாகும். இரண்டு மாபெருந் தலைவர்களுக்கும் மத்தியிலே மாநாட்டு மேடையில் நின்றவண்ணம் ஜனாப் பதியுத்தீன் தமது ஆரம்ப உரையை நிகழ்த்தினார். இந்தச் சம்பவம் இந்திய மாணவர்களது வர லாற்றிலே மகத்தான-மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். இந்தி யாவின் விடுதலைக்காக ஏகாதிபத்திய வாதத்தின் செல்வாக்கை நசுக்குவதில் அகில இந்திய பல்கலைக்கழக மாணவ சமுதாயத் தினது ஏகோபித்த ஒத்துழைப்பை நல்குவதற்காக அன்றைய தலைவர்களுடன் சேர்ந்த ஜனாப் பதியுத்தீன் இந்திய விடுதலைப் போராட்ட அணியில் ஒன்றிணைந்து நின்றதையும்படித்த வாலி பர்களுக்குத் தலைமை தாங்கி அதனை இயக்குவித்துள்ளதையும், இச் சம்பவங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. அதற்காகஅகில இந்திய மாணவர்களின் ஏகோபித்த நல்லெண்ணத்தைப் பெறு வதிலும் ஜனாப் பதியுத்தீன் வெற்றிபெற்றுவிட்டார். இவ்வா றாகத் தன்னாலான ஒத்துழைப்பைப் பல எதிர்ப்பியக்கங்களுக் காக வழங்கியுள்ளதை இன்றையப் பாரதப் பெருந்தலைவர்கள் மறந்து விடுவதற்கில்லை.

இக்காலத்திலே ஜனாப் பதியுத்தீன் இந்தியாவிலும் இலங் கையிலும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக் கெதிராகத் தோன் றிய பல சுதந்திரப் போராட்ட இயக்கங்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார். ஆங்கிலேயரது திட்டமிடப்பட்ட சதிச் செயல்களால் இவ்வியக்கங்களுக்குப் பல தடைகள் தோன்ற லாயின. அதனால் பொதுமக்கள் அவ்வியக்கங்களிற் பங்கு கொள்ளப் பயந்தனர். அத்தகைய மக்கள் மத்தியிலே சுதந் திர எழுச்சியையும், ஒற்றுமை மனப்பான்மையையும் ஏற்படுத் துவதில் சர்வகலாசாலை மாணவர் சம்மேளனம் பூரண ஒத்து ழைப்பு வழங்க முன்வந்ததை எவரும் மறுப்பதற்கில்லை.



ஓர் இலங்கையராக இருந்த போதிலுங்கூட இந்தியாவின் விடுதலையின் மூலமாகவே இலங்கையும் ஒரு சுதந்திர நாடாக மாறமுடியுமென்பதைத் தமது தீர்க்காலோசனைகளின் வன்மை களினால் உணர்ந்து கொண்டுதான் ஜனாப் பதியுத்தீன் அவ்வா றான செயல்களில் ஈடுபாடு கொண்டார். 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்துக்கு இவர் தமது சொந்த ஒத்து ழைப்பையும், மாணவ சம்மேளத்தின் ஒத்துழைப்பையும் நல் கியுள்ளார். அதற்காகத் தமது சொல்வன்மையையும், எழுத்து வன்மையையும் பயன்படுத்திப் பல சொற்பொழிவு களை நிகழ்த்தியும், கட்டுரைகளை எழுதியும் வந்துள்ளார். இந்தி யாவின் செய்தித் தாள்கள் இவரது கருத்துக்களை விதந்து பாராட்டின. ஆங்கிலேயரது நடத்தையிற் காணப்பட்ட ஒவ் வொரு நிகழ்ச்சியையும் மிகமிகக் கவனமாகவும் நுணுக்கமாக வும் அவதானித்து, அதனால் சுதேசிகள் எவ்வாறு பாதிக்கப்படு கின்றனர் என்பதை எவ்வித அச்சமுமின்றி மக்களுக்கு எடுத்து ரைக்கலாயினார். சில சந்தர்ப்பங்களில் ஆட்சியாளரின் சட் டங்களைக் கூடப் பொருட்படுத்தாமல், ஒழிவு மறைவின்றித் தமது கருத்துக்களை நேரடியாகவே விளக்கியும், விமர்சனம் செய்தும், வந்துள்ளதால் இந்தியத் தலைவர்கள் இவரைத் தங்களது மதிப்புக்குரியவராகக் கௌரவித்தனர்.

ஜனாப் பதியுத்தீன் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட 'கிரிக்கட்' விளையாட்டை விரும்பி ரசிப்பவராக இருந்த போதி லும், அந்த விளையாட்டிலுள்ள திட்டமிடப்பட்ட ஏகாதிபத்தி யத் தந்திரோபாயங்களைக் கவனமாக அவதானித்து அது பற் றிய விமர்சனமொன்றை எழுதியபோது இந்தியாவின் சகல பத் திரிகைகளும் அதற்கு முக்கியத்துவமளித்துப் பிரசுரித்தன. 'கிரிக்கட்' விளையாட்டையே காரணமாகக் காட்டி ஆங்கிலேய ரது அடக்குமுறை ஆட்சியின் தந்திரங்களை வன்மையாகக் கண் டித்தார். அவர் எழுதிய கட்டுரையின் சுருக்கமே அதற்கு ஆதாரமாகும்.

# கிரிக்கட்டும் ஏகாதிபத்தியமும்

அலிகார் சர்வகலாசாலை இந்த நாட்டின் தலைசிறந்த கிரிக்கட் வீரர்களை உருவாக்குவதில் புகழ்பெற்று விளங்குகின்றது. அதனால் கிரிக்கட் ரசிகர்களும் அரசாங்க ஊழியர்களும் உயர் அந்தஸ்தில் உள்ள கல்விமான்களும் அலிகார் சர்வகலாசாலையை வெகுவாகப் புகழ்கின்றனர். ஆங்கில வைஸ்ராய்கள் அலிகாருக்கு விஜயஞ் செய்யும்போது, அலிகாரின் ஆங்கிலப் பாணியிலமைந்த நடவடிக்கைகளைப் பெரிதும் பாராட்டிப் புகழ்கின்றனர். ஆனால் இப்பொழுது கல்வி பயில்கின்ற வாலிபர்கள் ஆங்கிலேயரது நடவடிக்கைகள் இந்த நாடுகளின் முன்னேற்றத்துக்குப் பாதகமானதென்பதை நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர். இதுகாறும் பின்பற்றி வந்துள்ள ஆங்கில மோகத்தின் தன்மைகளை இப்பொழுது விட்டொழிக்கவும் முன் வந்துள்ளனர். இதனால் அலிகார் மாணவர்கள் ஆங்கிலேயரின் செல்வாக்கிலிருந்து விடுபட்டுத் தங்களது உண்மையான நிலையையும் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

'கிரிக்கட்' ஒரு சிறந்த விளையாட்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அஃது ஆங்கிலேயரது சூழலுக்கு உகந்ததாக உருவாக்கப்பட்டதொன்றாகும். ஆங்கில ஆட்சி முறையானது அவர்களது சொந்த அரசியற் கோட்பாடுகளை உள்ளடக்கிய தானதொரு கலைநுட்பமாகும். அந்த நுணுக்கமான கலைகள் காலனி ஆட்சிமுறையிலும் விளையாட்டுத் துறைகளிலும் தந்திரமான முறையில் புகுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அவ்வாறு திட்டமிடப்பட்ட தந்திரமான நடவடிக்கைகளில் ஒன்றாகவே 'கிரிக்கட்' விளையாட்டும் அமைந்துள்ளது.





கொழும்பு ஸாஹிராக் கல்லூரி டெனிஸ் கோஷ்டியில், 1925-ம் ஆண்டு அங்கத்தவராக இருந்தபோது கலாநிதி பதியுத்தீன் அவர்களின் தோற்றம்



கலாநிதி பதியுத்தின் அவர்களின் சகோதரர் வழக்கறிஞர்
எம். எஸ். எம். சலாஹுத்தீன்

இங்கிலாந்து 'கிரிக்கட்'டின் நாயகமாக விளங்குகின்றது. எனினும் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளிலும் அதன் புகழ்பரவிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் தங்களது சுதந்திரத்தைப்பற்றி அக்கறை கொண்டுள்ள ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா ஆகிய முன்னேற்றமடைந்த நாடுகளிலும் இந்த விளையாட்டு பிரபல்யமடைந்துள்ளது. அந்த வட்டாரங்கள் கிரிக்கட்டை ஒரு முக்கியமான விளையாட்டாகக் கருதினாலும் அத்துறையில் அவ்வளவு ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. எனினும் ஆங்கிலேயர் அதற்கு முக்கியத்துவம் அளித்து, எல்லா நாட்டினரும் அதனைப் புகழக்கூடிய வகையில் உற்சாக முறைகளைக் கையாண்டு வருகின்றனர்.

கடந்த ஒருநூற்றாண்டாக பிரிட்டிஷார் விளையாட்டுத்துறையில் காட்டிவருகின்ற ஆர்வத்தை நாம் அறிவோம். விளையாட்டுக்களின் முக்கியமான நோக்கம், மக்களைத் தேகாரோக்கியம் உடையவர்களாக வாழச் செய்வதாகும். எனினும் தேகாரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக 'கிரிக்கட்'டைத்தான் விளையாட வேண்டுமென்பதல்ல, அது நமது தேவைக்கு அதிகமானதொரு விளையாட்டாகும். ஏனைய விளையாட்டுக்களான ஹாக்கி, உதைபந்தாட்டம், டெனிஸ் என்பனவற்றைவிட இதற்கு அதிகமான காலநேரமும், பணமும் உடற்பலமும் தேவைப்படுகின்றன. இந்தியர்களாகிய எமக்கு இத்தகைய விளையாட்டுக்களில் அதிக நேரத்தைச் செலவிட முடியாது. பணம், சக்தி என்பனவற்றையும் அதிகமாக விரயஞ்செய்ய முடியாது. அதனால் கவலையற்று வாழ்பவர்களுக்குத் தான் இத்தகைய விளையாட்டு பொருத்தமானதாகும். அவர்களுக்குத் தான் பொருளையும் சக்தியையும் காலத்தையும் அதிகமாகச் செலவிடக் கூடியதாக இருக்கும்.

எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் எங்களதுசொந்த நாட்டில் சுதந்திரமாக வாழ வழியில்லை. சுதந்திரமாகப் பேசவோ, திரியவோ வழியில்லை. கட்டுப்பட்டவர்களாகவே வாழ்கிறோம். எங்களது சிந்தனைகளைப் பயன்படுத்திச் சொந்த

விருப்பத்தின்படி வாழும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இவ்வாறான விளையாட்டுக்கள் எங்களது உள்ளத்தை எவ்வாறு ஒருமைப்படுத்த முடியும்? நாங்கள் ஏழ்மையில், பொருளாதார உரிமைகளின்றி, ஏன்! நமது சொந்த நாடென்றுகூட உரிமைபாராட்ட முடியாதவர்களாக ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எமது மக்களின் வருவாய் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகின்றது. அவசரத் தேவைகளைக்கூட நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. மிகக் குறைவான சக்தியே எம்மிடம் எஞ்சியுள்ளது. அந்தச் சக்தியைத்தான் எமது சுதந்திரப் போராட்டத்துக்குப் பயன்படுத்த வேண்டியுள்ளது. எஞ்சியுள்ள கொஞ்ச நஞ்ச கால நேரத்தையும், பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எம்மைத் தயார் செய்து கொள்வதற்காகவே ஒதுக்க வேண்டி உள்ளது. அவ்வாறிருக்க, எமது காலத்தையும் பணத்தையும் பலத்தையும் 'கிரிக்கட்' விளையாட்டுக்களிலும் ஏனைய தமாஷாக்களிலும் செலவு செய்வது எப்படி? அப்படியானால் எங்களது சுதந்திரத்தைப்பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவது எப்படி?

'கிரிக்கட்' என்றால் இரண்டு கோஷ்டிகளுக்கிடையிலே மூன்று முழு நாட்களுக்கு நடத்தப்படும் போட்டியோடு நின்று விடுவதில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த நலன்களைத் துறந்துவிட்டு முழு விளையாட்டையும் அவதானிப்பதிற் காலத்தைச் செலவிடுகின்றனர். இதைவிட முக்கியமான நிகழ்ச்சிகள் இருப்பினும் அனைத்தையும் மறந்துவிடுகின்றனர். இதனால் எத்தனையோபேர் தமதுபொன்னான நேரத்தை அவமே கழித்துவிட்டனர். 'கிரிக்கட்' விளையாட்டு இன்பமான ரசனையை வருவிப்பதாகவே வைத்துக்கொள்வோம். அதற்காக இந்தியர்களாகிய நாங்கள், அதுவும் இன்றைய இக்கட்டானசூழ்நிலையில் எமது காலத்தையும் பொருளையும் உடற்பலத்தையும் இந்த அளவுக்கு விரயஞ் செய்வது அவசியந்தானா?

இன்பத்தையும் ரசனையையும் அடைவதுதான் விளையாட்டுக்களின் இலட்சியமாக இருந்தாலும், அவற்றைக் 'கிரிக்கட்'



விளையாட்டின் மூலந்தான் பெறவேண்டுமென்பது எந்த அளவுக்குப் பொருந்தும்? 'கிரிக்கட்' விளையாட்டானது மக்களைப் பித்தர்களாக மாற்றிவிடுகின்றது. அதனால் ஏனைய முக்கிய பிரச்சனைகளை மறக்கடிக்கச் செய்து விடுகின்றது. மக்களின் சொல், செயல், சக்தி என்பன 'கிரிக்கட்' பற்றிய பேச்சு, விவாதம் என்பனவற்றால் போதையூட்டப்பட்டுப் போட்டி மனப்பான்மையினை உருவாக்கி ஓரே மயக்க சிந்தனையில் ஆழ்த்தி விடுகின்றன. பத்திரிகைகளும் பக்கம் பக்கமாக அதற்கு முக்கியத்துவம் அளித்துப் பிரசாரம் செய்கின்றன. விசேடமாக ஆங்கிலப் பத்திரிகைகள் இத்துறையில் மக்கள் மனதை வென்றுவிட்டன. ஆனால் இது ஏகாதிபத்திய வாதிகளின் திட்டமிடப்பட்ட தந்திரோபாய நடவடிக்கைகளில் ஒன்று என்பதை விளக்க மறுத்து விட்டன.

ஆங்கிலேயர், நாட்டைப் பற்றியும் நாட்டு மக்களைப் பற்றியும் சிந்திக்கவிடாமல் இத்தகைய இலகுவான விளையாட்டு ரசனைகளால், மக்களது மனதை ஈர்க்கச் செய்துவிடுகின்றனர். அதனால் எமக்குள்ளிருக்கும் உண்மையான தூரதிருஷ்டி வாய்ந்த முக்கியமான பிரச்சனைகளை மக்கள் மறந்து விடுகின்றனர்.

இன்று நமது வாலிபர்களிற் பெரும்பாலோர் பத்திரிகைகளின் விளையாட்டுப் பக்கங்களிற்றான் தமது முழுக்கவனத்தையுஞ் செலுத்தி வாசிக்கின்றனர். இதனால் தேசாபிமான எண்ணங்கள் குறைந்துவிட்டன. விளையாட்டு வீரர் 'பிராட்மனை' (Bradman)ப் பற்றி நிறைய அறிந்திருப்பார்கள். ஆனால் ஜவஹர்லால் நேரு யார்? அவர் எங்கே இருக்கின்றார்? எப்படிப்பட்டவர்? என்னசெய்கிறார்? என்றுகேட்டால் மறுமொழிகூறத் தயங்குகிறார்கள். இதுதான் ஏகாதிபத்திய வாதிகளின் விளையாட்டுத் தத்துவமும் தந்திரமுமாகும்.

பிரிட்டிஷார் இத்தகைய விளையாட்டுப் பொழுதுபோக்குகளின் மூலமாகத்தான் இன்று தோன்றியுள்ள பிரித்தானிய-இந்திய நெருக்கடிகளையும், இந்திய மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளையும் இலகுவாகத் தட்டிக்கழித்த வண்ணமாகவும் அசட்டை

செய்தவண்ணமாகவும் இருக்கின்றனர். மக்களின் சிந்தனைகளைத் தம்பாற் திருப்புவதற்கு இதனை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதையும் நோக்கலாம்.

இவ்வாறு 'கிரிக்கட்'டைப்பற்றி எதிர்வாதம் புரியும்போது என்னை மற்றவர்கள் நகைப்புக்காளாக்கிக் கொள்வார்கள் என்பதையும் நான் அறிவேன். அவ்வளவு தூரத்துக்கு 'கிரிக்கட்' ரசனையானது அவர்களது உள்ளங்களிலே ஊடுறுவிப் படர்ந்து கொண்டிருக்கிறது. கற்பனையும், சிந்தனையும் 'கிரிக்கட்'டில் ஒருவித பற்றுதலை ஏற்படுத்தியுள்ளன. எனினும், நான் எனது முடிவைக் கூறிவைக்கத்தான் செய்வேன். என்றால் காட்டப்பட்டுள்ள உண்மையான ஆதாரங்களைப் பன்முறை சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

இங்கிலாந்தின் 'கிரிக்கட்' போட்டிகள் – அந்த நாட்டில் தேகாரோக்கியமுள்ளவர்களையும், பண்பாளர்களையும், சிந்தனையாளர்களையும் தோற்றுவித்திருந்தால் இன்று இந்திய விடுதலைக்காகப் போராடுகின்றவர்களுக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கத் தவறியதேன்? அதே விளையாட்டு இந்தியாவில் வளர்ந்து வந்துள்ள சாதி, சமய, குல வேறுபாடுகளை—ஏன் கிரிகட் வீரர்களின் மத்தியிலாவது, நீக்கமுடியாமற் போய்விட்டது.

இந்தியாவில் ஏனைய விளையாட்டுக்களைப் பார்க்கிலும் 'கிரிக்கட்' விளையாட்டுக்காக ஏராளமான பணம் செலவிடப்படுகின்றது. எனது சொந்த சர்வகலாசாலையான அலிகார் சர்வகலாசாலையிலும் ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் வரை இதற்காகச் செலவிடப்படுகின்றது. ஏனைய சர்வகலாசாலைகளும் இவ்வாறே ஏராளமான பணத்தைச் செலவிடுகின்றன. இது எந்த அளவுக்கு நமது தேசிய செல்வத்தைப் பாதிக்கின்றது என்பதையும் ஒவ்வொருவரும் சிந்தனை செய்து பார்த்தல் வேண்டும். இவ்வளவு பணத்தையும் நாட்டின் அபிவிருத்திக்கான நல்ல முயற்சிகளில் நாம் பயன்படுத்த முடியும்.



தேசியப் பத்திரிகைகளும் இத்தகைய அனுவசியப் பொழுதுபோக்கு முயற்சிகளுக்கு பிரசாரம் புரிவதைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதே நேரத்தில் இந்திய தேசிய விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் அளித்துப் பிரசாரஞ் செய்ய முன்வருதல் வேண்டும்.

இந்திய விளையாட்டான 'ஹாக்கி' இன்று உலக அரங்கில் நல்ல செல்வாக்கைப் பெற்று வருகின்றது. அதற்கு மிகக் குறைவான சக்தியும் பொருளும், காலநேரமுந்தான் தேவை. எங்களது தேவைக்கு இத்தகைய விளையாட்டுகளே போதுமானவை. இவற்றின் வளர்ச்சி, பெரிய விளையாட்டுக்களால், தடைப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்நாட்டின் அரசியல பொருளாதார சுதந்திரப பிரச்சனைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் தேசிய சுதந்திரத்துக்கான எமது இலட்சியங்களை நடைமுறையில் நிறைவேற்றுவதற்கும் நமது சிரத்தை, சிந்தனை என்பனவற்றைப் பயன்படுத்த முற்படுவோமாக.

எம். என். எம். பதியுத்தீன்
16-2-1937

அலிகார் சர்வகலாசாலை
அலிகார்.

# தாயகச் சிந்தனை

'என்கடன் பணிசெய்துகிடப்பதே' என்ற உயர்ந்த பண்பினை உறுதியாக உள்ளத்தே பதித்துக்கொண்டவராக, தன்னாலான பணிகளைத் தன்னை ஆளாக்கிய அலிகாருக்கு ஆற்றிய பெருமதிப்பைப் பெற்றுக்கொண்டார் ஜனாப் பதியுத்தீன். அலிகாரின் நல்லெண்ணத் தூதுவராக உலகின் பல நாடுகளுக்குஞ் சென்று அதன் புகழைப் பரப்பினார். காலத்தால் அழியாத அவரது சேவையால் அலிகார் மேலும் சிறப்புடன் விளங்குவதாயிற்று. இத்தனை சேவைகளுக்கும் மத்தியிலே ஜனாப் பதியுத்தீன் 1937 ஆம் ஆண்டு எம். ஏ. பரீட்சையிலும் திறமையான சித்தியை எய்தினார்.

தேசாபிமானம் மிக்கவரான ஜனாப் பதியுத்தீன் இந்திய தேசிய விடுதலைக்காகத் தமது நாவன்மையினாலும், எழுத்து வன்மையினாலும் மக்களின் தேசிய உணர்வுகளுக்கு உரம் ஊட்டுபவராக விளங்கினார். மக்களது சிந்தனைகளும் ஜனாப் பதியுத்தீன் பக்கம் திரும்பலாயின. அதனால் இந்திய நாட்டிலே தொழில் செய்து தேசாபிமானம் மிக்க தலைவராக வாழக்கூடிய நல்ல வாய்ப்பினையும் பெற்றுக்கொண்டார். இந்திய மக்களும் அறிஞர்களும் தலைவர்களும் ஜனாப் பதியுத்தீன் அந்த நாட்டிலே தமது சேவையைத் தொடர்வதை விரும்பினார்கள். ஆனால் ஜனாப் பதியுத்தீனின் சிந்தனையெல்லாம், ''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே'' என்ற நோக்கிலேயே திசை திரும்புவதாயிற்று.



ஈழத்து மக்கள் சுய உரிமையோடு—சுதந்திரமாக வாழ்வதைக்காண அவர் விரும்பினார். விசேடமாக, தமது சொந்த சமுதாயத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஏனைய சமுகத்தினரோடு சரிநிகர் சமமான அந்தஸ்தைப் பெறவேண்டுமென்பதே அவரது பேரவா. இந்த நோக்கத்தைத் தமது பிறந்த நாட்டு மண்ணிலே நிறைவேற்றிவைக்க வேண்டுமென்பதைத் தீர்மானமாகக் கொண்டார்.

''நான் எனது பிறந்தகத்துக்குச் செல்கிறேன், எனக்கு விடை தாருங்கள்'' என்று ஜனாப் பதியுத்தீன் கூறியபோது, எவருமே எதிர்பாராத இந்த வார்த்தைகளை ஜனாப் பதியுத்தீனின் பேராசிரியர்களும், நண்பர்களும், அபிமானிகளும், மாணவர்களும் நம்ப மறுத்துவிட்டனர். ஓர் உன்னதமான நண்பரை—தயாள குணம் படைத்தவரை—பண்பாளரை—பிற்காலத்திலே சிறப்புமிகு தலைவராக்கக்கூடிய ஒருவரை—அதுவும் சுதந்திர பாரதத்துக்காகத் தன்னலமில்லாது உழைக்கக்கூடியவரை விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாகவே பிரிவுபசாரமளிக்க முன்வந்தனர்.

அலிகார் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் ஜனாப் முஹம்மது இஸ்மாயில்கான் அளித்துள்ள புகழுரைகளே இவரது சிறப்பாற்றல்களுக்குச் சிறந்த உதாரணமாகும்.

> ''ஜனாப் எம். என். எம். பதியுத்தீனின் நற்குணங்களையும் நன்னடத்தைகளையும் அறிந்து கொள்வதற்கு எனக்கு எண்ணற்ற வாய்ப்புக்கள் கிடைத்தன. இவரைப் போன்ற நேர்மையும் நற்குணமும் வாய்ந்த இளைஞர்களைக் காண்பதே அரிதாகும். என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். இவர் புத்திக் கூர்மையும், அழகுணர்ச்சியும், அன்பொழுகப் பழகும் தன்மையும் பெற்றவர். இவர் தமது ஆசிரியர்களினதும் சகமாணவர்களினதும் மதிப்புக்கும் அன்புக்கும் உரியவராகத் திகழ்ந்தார். அன்னிய நாடொன்றிலிருந்து வந்தபோதிலும் இந்நாட்டு மக்களது புகழுக்குரியவராகவும் வாழ்ந்தார். இப்படியாக ஒருவர் வாழ்வதைக் காண்பதே கடினமாகும்.''

இவரது வரலாற்றுப் பேராசிரியரும் அரசியற் பேராசிரியரு மான முஹம்மது ஹபீப் சாஹிப் அவர்கள் வழங்கியுள்ள புக ழுரையாவது:—

''ஜனப் எம். என். எம். பதியுத்தீன், எனது பெருமதிப்பு வாய்ந்த மாணவராக மாத்திரம் விளங்கவில்லை. நண்பரா கவும் நல்லபிமானியாகவும்; சகோதர பாசமுள்ளவராக வும் விளங்கினர். இவர் கல்வித்துறையில் அபாரத்திறமை பெற்றவர். இரண்டு ஆண்டுகளாக என்னிடம் ஆட்சி இயல், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்றுக்கொண் டார். இவரைப் போன்ற ஆற்றல் படைத்தவர்களைக் காண்பதே அரிதென்பேன். இவருக்கு விளக்க உரைகள் கூறுவதில் தனியான இன்பத்தை அநுபவித்தேன். நேர்மை யும் நற்பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற இவரைப் போன்றவர்களால்தான் அலிகார் மேலும் சிறப்படைய முடியும். அனைவரது உள்ளங்களையும் கவர்ந்து கொள்ளத் தக்க அறிவும் ஆற்றலும் படைத்தவர்.''

அலிகார் மாணவர் மன்றமும் மகத்தானதொரு பிரிவுபசா ரத்தை வழங்கியது. அறிஞர்கள் ஆதரவாளர்கள் உட்பட ஏனைய பல அரசியல், சமுக பொதுநல ஸ்தாபனங்களும் பல பிரியாவிடை வைபவங்களை நடத்தின. இதிலிருந்து அன்னிய நாடொன்றிற் கூட அவரது அரும்பணிகள் போற்றிப் பாராட் டப்பட்டுளதை நோக்கலாம். அதே பணியை அந்த நாட்டில் தொடர்தும் அன்றையத் தேவைகளுக்கு ஏற்பவும் முற்போக் குத் திட்டங்களுக்கு அமைவாகவும் நிறைவேற்றி யிருந்தால் இன்றையப் பாரதத்தின் பெருந் தலைவர்களுள் ஒருவராகவே விளங்கியிருப்பார். எனினும் அதனைத் தாயகத்திலே நிறை வேற்றி வைக்க எண்ணிவிட்டார்.

## இலங்கை திரும்பினர்

பாரத மக்கள் மத்தியிலே பெரும் புகழ் படைத்தவராக விளங்கிய ஜனப் பதியுத்தீன் 1937-ம் ஆண்டு ஈழத்திரு நாட்டுக்கு மீண்டும் திரும்பினர். அவ்வாறு தமது தாய



கத்துக்கு வருகை தரும்போது ஈழத்து முஸ்லிம் பெரியார்கள் பலர் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். முன்னுள் அமைச் சர் சர். முஹம்மது மாக்கான் மாக்கார், ஜனப் டீ. பி. ஜாயா, ஜனப் என். எச். எம். அப்துல் காதர், போன்ற பல பெரியார்கள் அன்னருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத் திலே கலந்துகொண்டனர்.

பாரதத்திலே தமது புகழைப் பரப்பியவராக இந்த நாட்டுக்குத் திரும்பிய ஜனப் பதியுத்தீன், இங்குள்ள மக் களின் நல்வாழ்வுக்காக உழைப்பதில் தனது முழுக் கவனத் தையும் திருப்பலானர். ஆரம்பத்தில் கல்வி-சமுக-கலாசாரத் துறைகளிலேதான் அத்தகைய கவனத்தைச் செலுத்தினர். விசேடமாக முஸ்லிம்கள் கல்வித்துறையில் அடைந்திருந்த பிற் போக்கான நிலைமையை அறிந்து உள்ளம் வருந்தினர். இத் தனைக்கும் அன்றைய சமுதாய அமைப்பே காரணம் என்பதை யும் உணர்ந்தார். சமுதாயத்திற் படர்ந்திருந்த அறிவீனத்தைப் படிப்படியாகவே நிவர்த்திக்க விரும்பினர். முஸ்லிம்கள் சகல துறைகளிலும் முன்னேற வேண்டுமாயின், அவர்களிடையே ஒரு மத்தியதர வகுப்பினரைத் தோற்றுவிக்க வேண்டு மென்பதை மனத்திற் கொண்டார். கல்வியை பரவலாக்கி முஸ்லிம் மாணவ மாணவிகளைக் கற்கத் தூண்டுவதாலும், உயர் கல்வியில், அதற்கான வசதியும் வாய்ப்பும் ஏற்படுத்து வதனுலும் அந்த இலட்சியத்தை அடையலாம், என்பதையும் கருத்திற் கொண்டார், அதனுல் தமது வாழ்நாளிற் பெரும் பகுதியைக் கல்விக்காகவே செலவிட்டுழைக்க முற்பட்டார்.

ஒரே முஸ்லிம் எம். ஏ. பட்டதாரியான அவருக்கு அரசாங் கத்திலும் பிரத்தியேக நிறுவனங்களிலும் அன்று, எத்தனையோ உயர்பதவிகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. எனினும் அவரது இலட்சியமே வேறு வகையாக மாறிவிட்டது. சமுதாயத்தின் நலனுக்காகத் தன்னை ஓர் ஆசி ரியராக அமைத்துக் கொள்வதே சிறந்ததென எண்ணினர். அதனுல், தமது மதிப்புக்குரிய நல்லாசான் ஜனப். டீ. பி. ஜாயா அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி, ஆசிரியப் பணியை அமைதியாக ஏற்றுக் கொண்டார்.

கொழும்பு சாஹிராக் கல்லூரி மட்டுமே அன்றைய முஸ்லிம்களுக்காக இயங்கிவந்த ஒரேயொரு முஸ்லிம் உயர்தரக் கல்லூரியாகும். 1892-ஆம் ஆண்டு அறிஞர் சித்தி லெப்பை அவர்களது முயற்சியால் ஏற்படுத்தப் பட்ட அல்மதுரசதுஸ் ஸாஹிரா, வாப்பிச்சி மரைக்கார், அரபி பாச்சா ஆகியோரின் உழைப்பினால் இலங்கை முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேணிக்காக்கும் ஓர் உன்னதமான உயர்கல்லூரியாகப் பிற்காலத்தில் மாறலாயிற்று. ஜனாப். டீ. பி. ஜாயா அதன் அதிபராக இருந்த போது பல முற்போக்குத் திட்டங்களைக் கருத்திற் கொண்டவராக-ஏராளமான மாணவர்களைப் பலதுறைகளிலும் உருவாக்கியுள்ளதை எவரும் மறுக்க முடியாது.

ஜனாப். பதியுத்தீனும் மாத்தறை சென்ற், தோமஸ் கல்லூரி, கொழும்பு உவெஸ்லி கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பக் கல்வி பயின்றபோதும் கொழும்பு சாஹிராக் கல்லூயில் தான் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையைப் பூர்த்தி செய்து தமது திறமைகளனைத்தையும் மலரச் செய்து கொண்டார். இக்கல்லூரியின் சிரேஷ்ட மாணவர் தலைவராகவும், இலக்கிய மன்றச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். சாஹிராக் கல்லூரியைப் பற்றி நிறைந்த அபிமான முடையவராக ஜனாப். பதியுத்தீன் விளங்கியிருப்பதை, இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் அவர் ஆற்றியுள்ள சொற் பொழிவுகளிலிருந்தும், எழுதியுள்ள கட்டுரைகளிலிருந்தும் அறிந்து கொள்ளமுடியும்.

இந்த நாட்டின் அரசியல் பொருளாதார வாழ்க்கைத் துறையில் ஓரளவுக்காவது சிந்திக்கக் கூடிய ஒரு கூட்டத்தினரை, இக்காலக்கட்டத்திலே சாஹிராக் கல்லூரி உருவாக்கிக் கொண்டிருந்தது. ஆகவே, இந்த நாட்டு முஸ்லிம்கள் தங்களது சொந்த வாழ்க்கை நிலையைப்பற்றி விழிப்புணர்ச்சி பெறுவதற்கு அக்கல்லூரியின் சாதனைகள் அமைந்த தென்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஆங்கிலேயரது ஆட்சியில், அன்றையக் கல்வி அமைப்பின்படி வசதிபடைத்த-குறிப்பிட்ட ஒரு சில முஸ்லிம்களே அங்கு




கல்வி பயிலும் பாக்கியத்தைப் பெற்றனர். அதனால் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்த அத்தகைய முஸ்லிம் மாணவர்களால் வசதிபடைத்த மக்கள் மத்தியிலே தேக்கமுற்றுக் காணப்பட்ட கல்வியார்வத்தை ஓரளவுக்குப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால் சாதாரண முஸ்லிம் பொதுமக்கள் மத்தியிலே தோன்றி வளர்ந்த கல்வி ஆர்வத்தை வளர்ப்பதற்குப் போதிய வாய்ப்புகள் இருக்கவில்லை. முஸ்லிம்கள் வாழும் கிராமங்கள் தோறும் பாடசாலைகள் அமையப் பெற்றிருந்தாலும், அவை ஆரம்பப் பாடசாலைகளாகவே அமைந்திருந்தன. உயர்கல்வியைப் பெறவேண்டுமென்ற ஆர்வம் கிராமப்புறத்து மாணவர்களிடத்திலும் பெற்றோர்களிடத்துங் காணப்படவில்லை. முஸ்லிம்களின் முழுக் கவனமும் வியாபாரத்திலும், விவசாயத்திலுமே ஈர்க்கப் படலாயிற்று. இதனால் முஸ்லிம் சமுகத்தில் இரண்டு வர்க்கங்கள் உருவாகியிருந்தன. ஒன்று உயர்வகுப்பினர், இதில் முதலாளிமாரும், நிலச் சொந்தக்காரர்களும் உயர் உத்தியோகத்தர்களும் அடங்கியிருந்தனர். அடுத்த வர்க்கத்தில் சாதாரண தொழில்களில் ஈடுபட்டவர்களே அடங்கியிருந்தனர். உயர்வகும்பினருக்கு, சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கவோ, நினைக்கவோ சந்தர்ப்பம் ஏற்படவில்லை. சாதாரண உழைப்பாளிகள், தங்களது உழைப்பிலே முழுமூச்சாக ஈடுபடவேண்டியிருந்ததால், சமுகத்தின் பொதுவான நல உரிமைகளைப்பற்றி, நினைக்கவே அவகாசமிருக்கவில்லை. பெரும்பாலும் சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு, உயர்வகுப்பினரின் தீர்மானங்களில் தான் தங்கியிருந்தது. இத்தனைக்குங்காரணம் முஸ்லிம்கள் கல்வித்துறையிற் பின்தங்கியிருந்தமையேயாகும்.

சமுதாய அமைப்பில் அன்று நிலவிவந்த இத்தகைய மாற்றங்களைக் கருத்திற் கொண்ட, ஒரு சில தலைவர்கள், கல்வியின் அவசியத்தை உணரலாயினர். இஸ்லாமிய கலாசாரத்தின் அடிப்படையிலமைந்த கல்வியே தமது சமுகத்துக்கு உகந்த தென்பதையும் அறிந்து கொண்டனர்.

இந்தத்துறையில் சர். ராசிக் பரீத், ஜனப். டி. பி. ஜாயா, அல்ஹாஜ். எ. எம். எ. அசீஸ், போன்றவர்கள் அன்றைய ஆட்சியாளரின் ஒத்துழைப்புடன் சில தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளலாயினர், அக்காலத்தின் கல்வியமைச்சராக இருந்த திரு. சி. டப்ளியு. டப்ளியு கன்னங்கரா முஸ்லிம் சமுகத்தின் கல்விக் குறைபாடுகளை அறிந்ததனுல், முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் பல ஆரம்பப் பாடசாலைகளைத் தொடக்கி வைப்பதில் உதவினுர். அழுத்கமையிலும், அட்டாளச்சேனையிலும் இரண்டு முஸ்லிம் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகள் 1940-ஆம் ஆண்டு, ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில், கொழும்பிலும் அதற்கு அண்மையிலும் வாழ்ந்த முஸ்லிம் குடும்பங்கள் பல உள்நாட்டுப் பகுதிகளில் பரவலாகக் குடி பெயர்ந்து வாழமுற்பட்டன. கொழும்பு சாஹிராவின் கட்டடங்களும் அரசாங்கத்தின் அவசரகாலத் தேவைகளுக்காக உபயோகிக்கப்பட்டன மாணவர்கள் கல்லூரியை விட்டுச் சென்றதனுலும், ஆசிரியர்களின் வேதனங்களைத் தொடர்ந்தும் வழங்கவேண்டியேற்பட்டதனுலும், முஸ்லிம்கள் நெருக்கமாக வாழும் ஒருசில பட்டிணங்களில். சாஹிராவின் பேரால் கல்லூரிகள் ஆரம்பமாயின. அதனுல் கொழும்பில் உயர் கல்வி பயின்று கொண்டிருந்த முஸ்லிம் மாணவர்களுக்குத் தொடர்ந்து படிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அத்துடன் அழுத்கமை, மாத்தளை, கம்பளை, ஆகிய நகரங்களைச் சூழவுள்ள முஸ்லிம் கிராமங்களின் மாணவர்களும் உயர்கல்வி பெறத்தூண்டப் படலாயினர். இவ்வாறு ஜனப். டி. பி. ஜாயா அவர்களால் விஸ்தரிக்கப்பட்ட கல்லூரிகளில் ஒன்ருகவே கம்பளை சாஹிராக் கல்லூரியும் 1942-ஆம் ஆண்டு ஆரம்பமாகியது.




[illegible] March 194[illegible].

Dear Mr. [illegible],

I received two of your works which were left at my place by Mr. [illegible] and also your message inviting me to go to Ceylon. I wish I could do so, but at present I see no chance of my being able to get away. I was very pleased indeed to hear that you were devoted to the Muslim cause and serving them in every way you can in Ceylon. I shall read your works with very great interest and perhaps some day in future I may visit Ceylon.

Yours sincerely,

[illegible], Esq.,
[illegible] Street,
[illegible],
Colombo,
Ceylon.

காயிதே ஆஸம் முஹம்மதலி ஜின்ஞ அவர்கள் ஜனப் பதியுத்தின் மஹ்மூத் அவர்களுக்கு அனுப்பிய பாராட்டுக் கடிதம்




1938-ஆம் ஆண்டு ''சிகாமணி'' இதழில், ஈழத்து முஸ்லிம் தலைவர்கள்: ஜனாப் டீ. பி. ஜாயா, டாக்டர். எம். சீ. எம். கலீல், ஜனாப். எம். என். எம். பதியுத்தீன், ஜனாப். ஏ. ஆர். ஏ. ராசிக் ஆகிய நால்வரின் படங்களும பிரசுரிக்கப்பட்டிருந்தன.

# கலையகத் தந்தை

"முஸ்லிம் சமுதாயத்தின் முன்னேற்றம் பெண்ணினத்திற்தான் தங்கியுள்ளது. ஆண்கள் கல்வி பயில்வது போன்று பெண்களும் சம உரிமையுடன் கல்விபயில்வது அவசியமாகும். ஆண்பெண் இருபாலாரும் கல்வி பயில வேண்டியதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இஸ்லாத்தின் கலாசாரப் பண்புகளுக்கு அமைவாக இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்குக் கல்வி போதிப்பதற்கான சகல வசதிகளையும் ஏற்படுவத்துவதே எனது முக்கிய நோக்கமாகும். எனவே உங்களது ஆண்பிள்ளைகளையும், பெண்பிள்ளைகளையும் கல்வி கற்க வசதி செய்யுங்கள். கல்வி கற்காததனால் முஸ்லிம்கள் இந்த நாட்டிலே பெறக்கூடிய உயர் பதவிகளை இழந்துவருகின்றனர். அறியாமையும், பிற்போக்கு மனப்பான்மையும், மூடப் பழக்க வழக்கங்களும் குடி கொண்டுள்ளதால், 'சீனா சென்றாயினுங் கல்வியைத் தேடிக் கொள்ளுங்கள்!' என்ற பெருமானாரின் உயரிய போதனைகளையே முஸ்லிம்கள் புறக்கணித்து விட்டனர்'' என்றுசுட்டிக்காட்டிய நிலையில் முஸ்லிம் மக்கள்வாழுகின்ற கிராமங்கள்தோறுஞ் சென்று பிரசாரஞ் செய்ய வேண்டியதொரு சூழ்நிலையில் அன்றைய இஸ்லாமிய சமுதாயம் இருந்து வந்தது.

1944-ஆம் ஆண்டு, கம்பளை சாஹிராக் கல்லூரியின் அதிபராக ஜனாப் பதியுதீன் கடமையேற்றதைத் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஜும் ஆப் பிரார்த்தனைக்கு மலையகத்திலுள்ள ஒவ்வொரு முஸ்லிம் கிராமப்புறப் பள்ளிவாசல்களுக்குஞ் சென்று தொழுகை முடிந்தவுடன் முஸ்லிம்களின்

கல்வி நிலையைப் பற்றி மேற்கண்டவாறு உபந்நியாசம் செய்வது வழக்கம். அவரது முற்போக்கான கருத்துக்களையும் விளக்கங்களையும் சிலர் ஏற்றுக் கொண்டனர். பழைமையில் ஊறித் திளைத்த பலர் அவற்றை ஏற்க மறுத்துவிட்டனர். எனினும், தமது முற்போக்கான கொள்கைகளையும் இலட்சியங்களையும், மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு ஜனாப் பதியுத்தீன் எப்பொழுதும் பின்னிற்கவில்லை. நேரடியாகவும் மறைமுகமாகவும் அவரது கொள்கைகளுக்கு எதிர்ப்புக்களும் கஷ்டங்களும் விளைவிக்கப்பட்டபோதும், அவற்றைச் சகிப்புத்தன்மையுடனும், தளராத உள்ளத்துறுதியுடனும் ஏற்றுக் கொண்டார். இத்தனை கஷ்டங்களுக்கும் மத்தியிலேதான், முஸ்லிம் சமுதாயத்தின் உயிர்நாடியாக விளங்கக் கூடிய ஓர் உன்னதமான கலாநிலையத்தை உருவாக்குவதில் ஜனாப். பதியுத்தீன் தீவிரமாக முயன்றுள்ளார். அன்னார் ஏற்படுத்திக் கொண்டிட சங்கற்பத்தின் வெற்றியே இன்றைய கம்பளை சாஹிராக் கல்லூரியாகும்.

கம்பளை நகருக்கு அருகாமையில் இயற்கையின் எழில் மிகு தோற்றத்துடன், அழகிய மலையடிவாரத்திலே, இஸ்லாமியக் கட்டிடக் கலைக்கு அணிசெய்யுமாப் போன்று, கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் ஸாஹிறாக் கட்டடங்களில், இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவ மாணவிகள்-தமக்கென ஏற்படுத்திக் கொண்டுள்ள இன்பமான சூழலில் பல்வேறு துறைகளிலும் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்தியாவிலே அலிகார் சர்வகலாசாலையை உருவாக்குவதில் ஸர். செய்யத் அஹ்மத்கான், கண்டுவந்த இன்பக் கனவுகள் எவ்வாறு நனவாகினவோ, அவ்வாறே 'கம்பளை சாஹிறா'வெனுங்கலையகத்தைத் தமதுஇதயத்துக்குள்ளே கற்பனைவடிவில் எவ்வாறு அமைத்துக் கொண்டிருந்தாரோ அவ்வாறே நனவாக்கி வைத்துள்ளார் பதியுத்தீன் அவர்கள். அத்தகைய கலையகத் தந்தையின் இன்ப நினைவுகளை உள்ளத்தே கொண்டு கவிதையாக வடித்துக் காட்டியுள்ளார், மலையகக் கவிஞர், கல்ஹின்னை எம். எச். எம். ஹலீம்தீன் அவர்கள்-—



மலையகத் தாயின் மடிமிசைத் தவழும்
நிலையுற அமைந்து பொலிவுற் இலங்கும்
மாவலி தவழும் மாண்பெலாம் மலரும்
மாமலை அரண்கள் மதிப்புற விளங்கும்
கம்பளை என்னும் கவின்பெறு நகரில்
நிம்மதி நல்கும் நிறைநலச் சூழலில்,
கலங்கரை விளக்கமாய்க் காட்சிதந் துயரும்
கலையகம் ஸாஹிறா கருத்தினைக் கவரும்
அறிவக மாகி அழகுடன் மிளிரும்
நெறியினில் வளரும் நிலைக்கருந் தந்தையாம்
கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத்
பலாபலன் கருதாப் பழுதறு பணியினைக்
கண்டே நாமும் களிக்கலாம் நாளெலாம்!
கரும வீரர்! கலையகத் தந்தை
கொள்கை யாலுயர் குணமிகு தலைவர்!
உள்ளத் தெழுந்த உயரிய நோக்கால்
ஆற்றிய பணிதமை அளத்தலுங் கூடுமோ!
மலையகம் போன்று மனத்திடை உறுதியும்
நிலையகம் கலங்கா நேர்மையுந் துணிவும்
ஒழுங்குற அமைந்து உயர்வுறச் சமூகம்
பெரும்பணி ஆற்றிடும் பெருந்தகை யவரின்
இன்பக் கனவாய் இலங்கும் ஸாஹிறா
பண்பினைக் காக்கும் பாசறை யாகும்!
பல்கலைக் கழகமாய்ப் பரிமளித் தெங்கள்
தனித்துவங் காத்துத் தரத்தினை உயர்த்தும்
சிறப்பினை அடைந் தொளிர் திருநாள்
விரைவில் வருக! நம் பெருமை விளக்கவே!

இத்தகைய எழில்மிகு தோற்றத்தின் காட்சிகளைக் கற்பனை செய்து கொண்டுதான், அன்று மூன்று வகுப்பறைகளைக் கொண்ட ஓர் ஓலைக்குடிசையில் அறுபத்தியேழு மாணவர்களுடனும், ஐந்து ஆசிரியர்களுடனும், கலையகத்தின் தலைவராகக் கடமையேற்றார் ஜனாப் பதியுத்தீன்.

1944 ஆம் ஆண்டு ஆரம்பமான கம்பளை ஸாஹிருக்கல்லூரி 1961 ஆம் ஆண்டு வரை அரசாங்க உதவிபெறும் கல்லூரியாகவே இயங்கிவந்தது. இந்தக்குறுகிய காலத்தில் அரசாங்க உதவியின்றியே ஏராளமான கட்டிடங்களையும், வசதிகளையும், இக்கல்லூரிக்காகப் பெற்றுக்கொண்டார். இவர் தமது சொந்த முயற்சியினாலும், ஒரு சில ஆதரவாளர்களின் ஒத்துழைப்பினாலுமே அவ்வாறு பெற்றுக் கொள்ள முடிந்தது. அந்தப் பதினேழு ஆண்டுகால வரலாற்றிலே கல்லூரி முழுமையான நிறைவைப் பெற்றுவிட்டதெனலாம். அக்காலப் பகுதியில் கல்லூரிக்காகச் செலவிடப்பட்ட ஒவ்வொரு சதத்தின் பயனையும் இன்று சமுதாயம் அநுபவித்துக் கொண்டுதான் இருக்கிறது.

அக்காலத்தில் ஜனாப். பதியுத்தீன் தமது கல்லூரியைப் பற்றிப் பேசும் போதெல்லாம், ஸர். செய்யத் அஹ்மத்கானையும், அலிகார் சர்வகலாசாலையினையும் உதாரணமாகக் குறிப்பிடத் தவறியதில்லை. அன்னார், குறிப்பிட்ட ஒரு சம்பவம் ஈழத்து முஸ்லிம்கள் ஸர். செய்யத் அஹ்மத்கானைப் பற்றிப் பெருமதிப்புக் கொள்ளக் கூடியதாக அமைந்து விட்டது

''ஸர்.செய்யத்அஹ்மத்கான்அவர்கள் அலிகார் சர்வகலாசாலையைக் கட்டியெழுப்புவதற்காக ஒரு முறை பொதுமக்களிடம் இருந்து நிதிதிரட்டியவண்ணம் இருந்தார். அவரது முயற்சிக்குப் பலர் ஆதரவு வழங்கி வந்தபோதிலும், ஒருசிலர் அவரது முயற்சி தோல்வியில் முடியுமென்றே எதிர்பார்த்தனர். அதனாற் பொறாமை கொண்ட சிலர் இடையூறுகள் விளைவிக்கத் தவறியதும் இல்லை. ஒரு முறை ஸர். செய்யத் அஹ்மத் கான் அவர்களுக்குத் தபாலில் ஒரு பார்சல் வந்தது. அதற்குள்ளே ஒரு பழஞ் செருப்பு இருந்தது. செருப்போடு ஒரு குறிப்புங் காணப்பட்டது. 'இதுதான் உங்களது நிதிக்கு நான்தரும் அன்பளிப்பு' என்று அந்தக் குறிப்பில் எழுப்பட்டிருந்தது. இதனை. ஸர். செய்யந் அஹ்மத்கான் அவர்கள், ஓர் அவமானமாகச் கருதட்டுமென்றே அவ்வாறு செய்யப்பட்டது. ஆனால் ஸர், செய்யத் அஹ்மத்கான் என்ன செய்தார் தெரியுமா? அதனை ஒரு தோல் கடைக்காரனுக்கு ஒரு சிலபைசாக்களுக்கு விற்று



விட்டு அதனால் கிடைத்த அந்த மிகச்சிறிய தொகையினையும் தமது நிதியில் சேர்த்துக்கொண்டார். அவ்வாறு அனுப்பியவருக்கு நன்றி தெரிவித்து, ஏனையோரிடமும் இது பற்றிக் கூறித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். இதனால் யார் அவமானம் அடைந்தார் என்பதைக் கூறவும் வேண்டுமா?

இவ்வாறெல்லாம் ஒரு கலையகத்தை உருவாக்குவதில் பல பெரியார்கள் மேற்கொண்ட முயற்சிகளை உதாரணமாகக் காட்டியதிலிருந்து ஜனாப். பதியுத்தீனும் எத்தகைய பெரியார்களின் முன்மாதிரிகளைக் கடைப்பிடித்துள்ளார் என்பதை ஊகித்துக் கொள்ள முடிகிறது.

அவர். தமது முயற்சிகளின் வெற்றி, தமது கலையகத்திலே தங்கியுள்ளதென்பதை உறுதியாக நம்பினார். இதனால் கலையகத்தை வளர்க்கும் பணியில் அல்லும் பகலும் உழைக்கலானார். கலையக வருமானத்தையும் பொதுமக்களது ஒத்துழைப்பையும் பெற்று பல கட்டிடங்களைக் கட்டியதோடு, கலையகத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டார். 1961 ஆம் ஆண்டு, அரசாங்கம் கலையகத்தைக் கையேற்கும் போது, இரண்டாயிரம் மாணவர்களையும் நூறு ஆசிரியர்களையும் உள்ளடக்கியதாக—பல வசதிகளையும் கொண்ட கலாநிலையமாக—அகில இலங்கை அந்தஸ்தைப் பெற்ற உயர்கல்லூரியாக—விளங்கிய தென்றால், இத்தனைக்கும் ஜனாப். பதியுத்தீனின் முயற்சியால் விளைந்த முழுவெற்றியே காரணம் என்பதை எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஓர் உதவி நன்கொடை பெறும் பாடசாலை, பதினாறு ஆண்டுகால வரலாற்றில் முழு நிறைவு பெற்று உயர்வடைவதென்றால்-அதனை அந்த நிலைக்கு உயர்த்தி விட்ட தலைவரை, 'கலையகத்தந்தை' என்று மக்கள் போற்றிப் புகழ்வதிலும் வியப்பில்லையல்லவா !

இக்கால எல்லைக்குள் இதிற்பயின்ற நூற்றுக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலும் உத்தியோகம் வகிக்கின்றனர். கலை, விஞ்ஞானம், தொழில் நுட்பத்துறைகளிலும் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பிரத்தியேக நிறுவனங்களிலும் சொந்தத் தொழில்

முறைகளிலும் இதன் பழைய மாணவர்கள் தாம் பெற்றுக் கொண்ட அறிவையும் ஆற்றல்களையும் நல்ல முறையிற் பயன் படுத்துகின்றனர். இத்தனைபேருக்கும் ஜீவனளிக்கின்ற அன்னை யாகத் திகழ்கின்றது இக்கலையகம். இதன் வெற்றியிலே இன்பங்கொள்ளும் இதயங்கள்தான் எத்தனை?

இதே கலையகத்தின் தந்தையாக—அதிபராக இருந்தவர், கல்வி அமைச்சராக உயர்வு பெற்றார். அதுவும், கல்வியமைச் சராகத் தொடர்ந்து இருமுறை இருந்துவந்ததால், இந்த நாட்டு மக்கள் அனைவருமே பயன் பெறலாயினர். அவர் அவ்வாறு அமைச்சர் பதவியில் ஏற்றம் பெற்ற போதும் தான் போற்றி வளர்த்த கலையகத்தின் வளர்ச்சியிலே கண்ணுங் கருத்து மாகவே இருந்து வந்துள்ளார். இது. ஆசிரிய சமுதாயத்துக் கும், கல்வி உலகுக்குங் காட்டப்பட்ட சிறந்ததொரு முன் மாதிரி யென்றே கூறவேண்டும். பதவியின் உச்சநிலையை அடைந்த ஒருவர், தமது ஆரம்ப முயற்சிகளின் பால் அக்கறை யின்றிக் காணப்படுவதைப் பலரது வாழ்க்கையிலும் கண்டுவந் துள்ளோம். ஆனால், அத்தகைய உயர் பதவியில் வீற்றிருந்த போதும், தன்னால் ஆரம்பிக்கப் பட்ட கலாநிலையத்தை மேலும் சிறப்புடன் திகழவைத்துள்ள ஜனாப் பதியுத்தீனின் பண்பை அவர் வாழ்க்கையிற் காணமுடியும்.

தமது அரசியல் சமுதாயப் பிரச்சனைகளுடன், அமைச்சின் கடமைகளைச் சரிவர நிறைவேற்றவேண்டும், இத்தனைக்கும் மத்தியில் கலாநிலையத்தின் வளர்ச்சியிலும் கண்ணுங்கருத்து மாக இருப்பதென்றால் அது அவரது அபிமானம் மிக்க சமுதாய சேவையை நினைவு கூறுகின்றது. மிகக் குறுகிய காலத்தில் பல லட்ச ரூபா செலவில் உருவாகியுள்ள இக்கலாநிலையம் அவரது தூரதிருஷ்டி நோக்கினாலே தான் உருவாகியுள்ளது.

## கலாசார நிலையம்

பள்ளிவாசலையும் நூல் நிலையத்தையும் உள்ளடக்கியதோர் கலாசார நிலையம் இப்பொழுது இக்கலாநிலையத்தில் இயங்கிக் கொண்டு வருகின்றது. இங்கு பயில்கின்ற முஸ்லிம் மாணவர்



கள், சன்மார்க்க அடிப்படையிலான இஸ்லாமிய கலாசாரப் பயிற்சி முறைகளையும் பெற்றுக் கொள்ள இக்கலாசார நிலை யம் பெரிதும் பயன் படுகின்றது, மாணவர்கள் மாத்திரமன்றிப் பொதுமக்களும் இதனைப் பயன்படுத்த வகை செய்யப்பட்டுள் ளது. கம்பளை சாஹிராவின் உருவாக்கத்தின் இலட்சியத்தைத் தொடர்ந்தும் நிலைநாட்டவேண்டுமென்ற உயரிய நோக்கத் தின் முக்கியமான ஓர் அங்கமாகவே இக்கலாசார நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய சமுதாயம் இதன் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

## நுண்கலைப் பயிற்சி


முஸ்லிம்கள், தங்களுக்குரிய தனித்துவத்தைப் பேணிக் காக்கும் வகையில் இஸ்லாமிய நுண்கலைப் பயிற்சி முறைகளும், இக்கலாநிலையத்தில் அளிக்கப்படுகின்றன. இஸ்லாமிய மாண வரிடையே, இயல்பாகக் காணப்படும் நுண்கலைச் சுவைகளை விருத்திசெய்து, ஏனைய கலாசாரச் செல்வாக்கினால் முஸ்லிம் கள் பாதிக்கப்படாமல் தமக்கெனத் தனியான கலாசார அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த வசதிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இசை, சித்திரம், எழுத்தணி என்பன வற்றுடன் இஸ்லாமியக் கருத்துக்கள் பொதிந்த பாவ கைகளும், சங்கீதங்களும் அறிமுகஞ் செய்யப்பட்டு வருகின் றன. இந்த நாட்டின் கலாசார விழாக்களின் போது இத் தகைய நிகழ்ச்சிகள் பலமுறை அரங்கேற்றபட்டுள்ளதையும், இலங்கையின் முதலாவது குடியரசின் நினைவாக வெளியிடப் பட்ட அரசாங்க விசேட சஞ்சிகையில், முஸ்லிம் கலாசார நிகழ்ச்சிகளாக அவை அறிமுகஞ் செய்யப் பட்டுள்ளதும். சாஹிறாவின் பெருமையை உலக அரங்கிலே நிலை நாட்டச் செய்துவிட்டது. இலங்கை எங்கிலும் பரந்துவாழும் முஸ்லிம் களின் பொதுவான கலாநிலையமாகத், தனது புகழை உலக அரங்கிலே நிலை நாட்டிவிட்ட ஸாஹிறாவின் புகழால் கம்பளை நகரமும் குன்றாப்புகழுடன் சிறப்படைந்து கொண்டிருக் கின்றது.

ஜனுப். பதியுத்தீன் மஹ்மூத் அதிபராக இருந்தகாலத்தில் அவரது விசேட அழைப்பின் பேரில் வந்த-உலகப் பேரறிஞர் களில் ஒருவரான அலிகார் சர்வகலாசாலையின் உபவேந்தர் கலாநிதி, ஸர், சியாவுத்தீன் அஹ்மத் அவர்களால் அஸ்தி வாரமிடப்பட்ட இடத்தில், இன்று சாஹிறாக் கல்லூரி எழில் மிகு தோற்றத்துடன் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டி ருக்கிறது.


## முஸ்லிம் மாணவிகளின் பஞ்சாபிய உடை

இன்று இலங்கையெங்கிலும் கல்விபயிலும் முஸ்லிம்மாண விகள் பஞ்சாபிய உடையைப் பழக்கத்திற் கொண்டுள்ளனர். தமது கலையகத்தில் முதன் முதலாக ஜனுப். பதியுத்தீன் இந்த உடையை அறிமுகஞ் செய்து வைத்தார். தமது அன்புப் புதல் வியும் இதே உடைதான் அணிய வேண்டுமென்று முன்மாதரி காட்டினர். ஆரம்பத்தில் இந்த உடை அணிவதைப் பல பெற் ரேர் விரும்பவில்லை. எதிர்ப்புக்களும் தெரிவித்தனர். எனினும் இஸ்லாமிய மாணவிகளுக்கு அந்த உடை மிகப் பொருத்த முடைய தென்பதை விளக்கிக்காட்டினர். அவரது அந்த ஆவல் இன்று பூர்த்தியானது. அந்த உடையானது இலங்கையெங் கிலும் வாழ்கின்ற முஸ்லிம் மாணவிகளது உடையாக மாறி விட்டது.





கம்பளை ஸாஹிராக் கல்லூரிக் கட்டிடத்துக்கு அஸ்திவாரமிட்ட வைபவம். இடமிருந்து: திரு. ஆர். எஸ். எஸ், குணவர்தன, ஜனுப்கள்: அலி டீ. பி. ஜாயா, எம். எஸ். என். ஒமர் பாச்சா, எம். ஏ. இமாம் சாஹப், ஸர். ஸியாவுத்தீன் அஹ்மத் (அலிகார் பல்கலைக் கழக உபவேந்தர்) செய்யத் ரஸூப் பாச்சா, ஜனுப் பதியுத்தீன் மஹ்மூத்.




938-ஆம் ஆண்டு, ஆங்கிலேயருக்கு எதிராகப் பாலஸ்தீன் விடுதலை ஆதரவுக் கூட்டத்தில் ஜனாப் எம். என். எம். பதியுத்தீனின் தலைமை உரை.

(தாருல் இஸ்லாம் ஜுன் 1954-ஆம் ஆண்டு இதழில்
அதன் ஆசிரியர்
**மறைந்த அறிஞர் பா. தாவூத்ஷா**
அவர்களின் பார்வையில்)

# மலையைக் குடைந்த மாவீரர்

மூந்நூற்றோர் அடிகளில், பெரும்பாலும் வஞ்சியடிகளால் புனையப்பட்ட ஒரு சங்ககால இலக்கியத்துக்குப் ''பட்டினப் பாலை'' என்று பெயர். அந்தப் பாடலை இயற்றிய கடியலூர் உருத்திரக் கண்ணனார் என்பவர், அக்காலத்து ஆட்சி செலுத்திய கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழமன்னனை வெகுவாகப் புகழ்ந்து துதித்துப் பாடியிருக்கிறார். அவருடைய இனிமையான கவிநயம் நோக்கி அந்த மன்னன் 16 லட்சம் பொன்னும் கொடுத்தான், என்று ''கலிங்கத்துப் பரணி'' என்னும் நூலிலிருந்து தெரிகிறது.

கேவலம், 301 வரிப்பாட்டுக்கு 16,00,000 பொன் பரிசு கொடுப்பதென்றால் அதற்கு அர்த்தந்தான் என்ன? சங்கமருவிய இலக்கியத் தொகுதிகளான 'பத்துப்பாட்டு' என்னும் தொகுதியில் இந்தப் பட்டினப்பாலையும் இடம் பெறுவதேன்? என்பவற்றை ஆராய நாம் இங்கு முற்படவில்லை. ஆனால் பரிசு பெற்றதும்' கண்ணிய மிக்கதும், அழகு செறிந்ததுமான அந்தப் பாடலிலே கரிகால்வளவனைப் புகழும் கவிஞர், 'அடேயப்பா'! இந்த சோழமன்னன், எல்லா நாடுகளையும்–சகல வேற்றரசர்களையும் வென்றதுடன் திருப்தியடையாமல், மலைகளையும் குடைந்து விடுவான் போன்றும், கடலையும் தூர்த்துவிடுவான்

போன்றும், வானங்களையும் இடித்துவிடுவான் போன்றும் காணப்படுகிறானே! என்று வியந்து பாராட்டுகிறார்; அஃதாவது,

''மலையகழ்க் குவனே கட(ல்) தூர்க்குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவவ னென...''

என்பன அந்தப் பட்டினப் பாலையின் 271, 272 ஆவது வரிகளில் காணப்படும் சொற்களாகும்.

மலையைக் குடைந்து நாட்டை விஸ்தரிப்பது ஒரு பெரிய வீரமிக்க செயலென்பது இதிலிருந்து தெளியக்கிடக்கிறது. மன்னர்களும், மன்னாதி மன்னர்களும், ராணுவ வீரர்களும் இப்படி மலையைக் குடைவதில் அதிசயப்பட தேவையில்லைதான். ஆனால் தற்காலத்திலே ஒரு மலைச்சாரலிலே, ஒரு சிறு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்த ஒரு சாதாரண ஆசிரியர், அந்தப் பள்ளிக்கூடம் விரிவடைய விரிவடைய இடம் பற்றாமல் அந்த மலையையே துண்டு துண்டாகப் பேர்த்தெறிந்து - சாதாரணப் பள்ளியைக் கலாசாலையை நிகர்த்த அளவுக்குப் பெருக்கிவிடுகிறாரென்றால், அந்த ஆசிரியரை நவீனகாலச் சோழன் கரிகாலன் என்பீர்களா? அல்லது, மலையைக் கல்லும் மகாவீரன் என்பீர்களா?

இலங்கைத் தீவிலே மத்திய மாகாணத்தில் (மலைப்பிராந்தியத்தில்) கம்பளை என்னும் ஓர் ஊர் (ஜில்லா நகர்) இருந்து வருகிறது. அங்கே ஜாஹிராக் காலேஜ் என்று ஒரு கல்வி ஸ்தாபனம் செயலாற்றி வருகிறது. இலங்கைத் தீவிலுள்ள மற்றக் கல்வி ஸ்தாபனங்களையெல்லாம்விட இந்தப் பள்ளிக்கூடம், மக்களிடையே கீர்த்தியையும் புகழையும் 8 ஆண்டுகளுக்குள் பெற்றுக் கொண்டு விட்டதென்று கூறலாம். இவ்வளவு குறுகிய காலத்தில் கல்வியையும் அதன் ஸ்தாபனத்தையும் வளர்த்துவிட்ட பேராசிரியரே அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் ஆவார். கல்விக்காக உயிர் கொடுத்தோர், உலகிலேயே மிகச் சிறந்த தியாகியாவார், என்பது சகலரும் ஒப்பிய உண்மையாகும். இந்தப் பேராசிரியர், அத்தகைய தியாகிகளின் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவராகவே மிளிர்ந்து வருகிறார்.



இலங்கையிலே முஸ்லிம்களிடையே கல்விஞானம் மிகவாகப் பெருகித்தான் இருக்கிறதென்றாலும் அங்குள்ள மக்கள் உயர்தரப்படிப்புக்கும், கலாசாலைப் பட்டங்களைப் பெறுவதற்கும் இந்தியாவுக்கோ அன்றி மேல் நாட்டுக்கோ செல்ல வேண்டியவர்களாகவே விளங்கிவருகின்றனர். வெள்ளையர் ஆட்சி நிலவியவரை இலங்கையில் ஒரு பல்கலைக் கழகமும் ஸ்தாபிக்கப்படவில்லை. (இப்போதுதான் கண்டியை அடுத்த பேராதனையில் ஒரு பல்கலைக் கழகம் ஸ்தாபித்து முடிக்கப்பட்டிருக்கிறது) பல்கலைக் கழகக் கல்லூரிப் படிப்புக்கு வாய்ப்புக் கிடைக்கப் பெறாத இலங்கை வாசிகள், உயர்தரக் கல்வியைத் தொடர்ந்து பயில்வதற்கு நிரம்பப் பொருள் வசதி படைக்கப் பெற்றிருந்தால் மட்டுமே வெளிநாடு செல்லமுடிந்தது. நடுத்தர மக்களின் பிள்ளைகள் பெருங்கஷ்டப்பட்டு வந்தனர்.

ஆனால் சுதந்திரத்துக்கு இப்பால், திரு. கன்னங்கரா, என்னும் கல்வி மந்திரியின் தீட்சன்ய புத்தியாலும் சிறந்த உழைப்பாலும் இலங்கைக் கல்வி முன்னேறியிருக்கிறது. அதில் சிறப்பாக மத்திய மாகாண முஸ்லிம் ஆண், பெண், சிறார்களின் கல்விப் போதனைக்காக நம் ஹாஜி ஷாஹிப், பேராசிரியர் எடுத்த முயற்சிகள் போற்றற்குரியன.

இன்று சரியாக ஐம்பது வயது நிரம்பப் பெறவிருக்கும் அவர், இலங்கையின் தென்மாகாண, முக்கிய நகரமாகிய மாத்தறையிலே ஜனாப். மஹ்மூத் நயினார் மரைக்காயர் என்னும் பெரியாருக்குப் பன்னிரண்டாவது புத்திரராக 23-6-1904ல் ஜனனமாயினார். சிறுவயதிலே சன்மார்க்கக் கல்வி பயின்று, பின்னர் ஆங்கிலத்தில் உயர்கல்வி கற்றுத் தேறினார். இலங்கையில் கலாசாலைகள் அப்போது இல்லாமையாலும், சர்வகலாசாலைப் படிப்பை நாடி அலிகார் பல்கலைக் கழகத்துக்குச் சென்று திறமையுடன் பயின்று எம். ஏ. பட்டம் பெற்றார்.

அவர் பட்டப் படிப்பை மேற்கொண்ட காலத்தில் இந்திய நாட்டில் சுதந்திரப் போராட்டம் காங்கிரஸ் ஸ்தாபனத்தாலும் அலி சகோதரர்களாலும் நடத்தப்பட்டு வந்தது. வாலிப முறுக்குடனும் கம்பீரமான தோற்றத்துடனும் அரசிய

லில் அளவற்ற பிரீதியுடனும் திகழ்ந்த அவர் இந்திய மக்களின் சுதந்திரத் தாக உணர்ச்சியில் பெரிதும் அபிமானங் கொண்டுவிட்டார். கலாசாலைப் படிப்பும் நல்ல அரசியல் ஞானமும் அவரை ஊக்கிவிட்டதுடன் இந்திய மக்கட் சமூகம் சுபீட்சமாய் வாழ அவர்களுக்குச் சுதந்திரம் இன்றியமையாதது. என்னும் உணர்ச்சியும் அவருக்கு மேலோங்கிவிட்டது. எனவே காந்திஜி, ஜின்னா சாஹிப் போன்ற அரசியல் வாதிகளின் பாதையை அவரும் ஏற்றார். மலேயா முதலிய நாடுகளில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தபோதும் இக் கொள்கைக்காகப் பிரசாரம் புரிந்தார். உலகைச் சுற்றிவரத் திட்டமிட்டுப்புறப்பட்ட அவர் மலேயாவுடன் தம் பிரயாணத்தை முடித்துக் கொண்டு தாய்நாடாகிய இலங்கை திரும்பவேண்டியவரானார்.

இலங்கை முஸ்லிம் லீக்கைத் தட்டியெழுப்பி உயிர் கொடுத்து மீண்டும் உருவாக்க முன்வந்தார். அவருடைய முயற்சியின் காரணமாகவே இலங்கையின் முஸ்லிம் லீக் புத்துருக் கொண்டு தொண்டாற்றத் தொடங்கிற்று. அதனால் மகத்தான வெற்றியும் பெற்றது. ஆரம்பத்தில் அந்த ஸ்தாபனத்தின் வாலிப கௌரவக் காரியதரிசியாக அவர் பணியாற்றி வந்தமையால் சகலரின் புகழுக்கும் போற்றுதலுக்கும் இலக்கானார். பொது மக்கட்காகத் தொண்டூழியம் புரிவதையே கடனென அவர் உணர்ந்திருந்தார்.

அரசியற்றுறையிற் பாடுபடுவதால் சமூகத்துக்கு, விளைக்கும் மேன்மையைவிட கல்வித்துறையில் பாடுபடுவதால் மட்டுமே அதிகமான நற்பலனை உண்டுபண்ண முடியும் என்பதை அவர் சீக்கிரம் கண்டு கொண்டார். எனவே 1944 ஆம் ஆண்டில் டீ. பீ. ஜாயா அவர்களால் கம்பளையில் திறந்துவைத்த ஜாஹிராவில் நம் அல்ஹாஜ் ஓர் ஆசிரியராகப் பதவியேற்றார். சிலமாதங்களுக்குள் இவரே அதன் பிரதம ஆசிரியராக உயர்ந்துவிட்டார். அந்தக் காலத்தில் 67 மாணவர்களே இருந்தார்கள். கம்பளை வாழ் முஸ்லிம் மக்களின் பிரேத அடக்க ஸ்தலமான கஹடபிடியா மலைச்சாரலிலே உள்ள மலைச்சரிவின் கீழே சிறு இடத்திலே அந்த சிறு பள்ளி செயலாற்றி வந்தது.



பாருங்கள்! சென்ற எட்டாண்டுகட்குள் அந்த மலைச் சரிவு குடையப்பட்டது; விஸ்தாரமான இடம் உண்டுபண்ணப்பட்டது. 67 மாணவர் படித்த சிறு பள்ளிக்கூடம் இன்று 1200 மாணவர்கள் பயிலும் பெரும் கல்வி ஸ்தாபனமாகவும், அத்தனை மாணாக்கர்களுக்கும் பல துறைகளிலும் கல்வி போதிக்கத்தக்க வெற்றிவாய்ந்த 50க்கு மேற்பட்ட ஆங்கில, தமிழ், சிங்கள, அரபி ஆசிரியர்கள் நிரம்பிய சாரதாபீடமாகவும் உயர்ந்துவிட்டது. அந்த பேராசிரியரின் முயற்சிகளின் காரணமாகவே மலைகள் உருண்டன, அவ்விடங்களில் கட்டிடங்கள் உயர்ந்தன, இன்னமும் அதனை மேலும் விஸ்தீரணமாக்கவே, அவர் முயன்று வருகிறார்.

பாலர் வகுப்பிலிருந்து சர்வகலாசாலைப் பரீட்சைக்குப் பயிலும் மாணவர் வகுப்பு வரையும் இந்தப்பள்ளியில் உண்டு. கம்பளைக்கு வெகுதூரத்திலிருந்து வந்து பயிலும் மாணவ மாணவிகளின் சௌகரியத்துக்காகத் தனித்தனி விடுதிச்சாலைகளும் (Hostels) நிர்மானிக்கப்பட்டிருக்கின்றன. ஆண்களுக்கும் பெண்களுக்குமான தனித்தனிப் பிரத்தியேக விடுதிச்சாலைகளில் மிகத்திறமையான கண்காணிப்பும் நிர்வாகமும் நிலவி வருகின்றமையால், பெற்றோர்கள் மத்திய மாகாணத்தில் மட்டுமின்றி வேறு மாகாணங்களிலிருந்தும் தங்கள் குழந்தைகளை இக்கல்லூரிக்கு அனுப்பிவருகின்றனர்.

கல்வியோடு சங்கீதமும் கற்பிக்கவேண்டுமென்று ஆர்வங் கொண்ட அவர் தம் சொந்தச் செலவிலேயே இசைக்கருவிகளைத் தருவித்து தக்க சங்கீத ஆசிரியர்கள் மூலம் இசை ஞானத்தை விருத்தி செய்கிறார்.

தனக்கென வழாப் பிறர்க்குரியாளரான இவர் இன்னும் நீடூழிகாலம் உயிர்வாழ்ந்து வருங்கால வாலிப வீரர்களுக்கோர் ஒளிவிளக்காய்த் திகழ்வாராக! ஆமீன்.

6-6-73-ல் வெளியான "சாஹிரா மலர்ந்த கதை" என்ற சிறு நூலின் ஆசிரியரும், கொழும்பு அரசினர் சுதேச வைத்திய கல்லூரியின் யூனானி மருத்துவபீடத் தலைவர்

**டாக்டர் எம். ஏ. எம். ஜலால்தீன்**

அவர்கள் பார்வையில்


## சாஹிரா மலர்ந்த கதை

அல்ஹாஜ் பதியுத்தீன் அவர்களின் குணசீலங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே கம்பளை சாஹிராக் கல்லூரியும் அமைந்துள்ளது. முகலாய சக்கரவர்த்தி சாஜஹான் தனது அன்பு மனைவியின்பால் வைத்த மாறாக் காதலுக்காக எழுப்பப்பட்ட காதற் சின்னமே 'தாஜ்மஹால்'. அல்ஹாஜ் மஹ்மூத் தன் சமூகத்தின் பால் வைத்த காதலால் எழுந்த தியாகச் சின்னமே கம்பளை சாஹிரா என்பது எமது துணிபு. இதற்காகவே, களுத்துறைக் கல்லூரியொன்றில் உயர்ந்த வேதனத்துடன் கடமையாற்றிய இளைஞர் மஹ்மூத், தமது வருமானத்தையும் நகர வாழ்வையும் பொருட்படுத்தாது—சமுதாயத்தின் கல்வி நலனில் அக்கறை கொண்டவராக, கம்பளை சாஹிராக் கல்லூரியைக் கட்டியெழுப்பப் புறப்பட்டார்.


இரண்டாவது உலக மகாயுத்தத்தால் அகிலமே அல்லலுற்ற காலம் அது. 1942 ஆம் ஆண்டில் ஜப்பானியரின் குண்டு மாரிக்கு இலங்கையும் இலக்காகியது. கொழும்பு நகரும் ஏனைய சில பகுதிகளும் தாக்கப்பட்டதை நம்மில் பலர் அறிவோம், குண்டு வீச்சால் கொழும்பு நகரும் கட்டடங்களும் சிதறுண்டது



DONATED IN MEMORY OF
Late M/s. V. A. SIVAGNANAM,
V. A. SADADCHARAM and
V. A. MANORANJITHAN
On ......... 26/6/84



கம்பளை ஸாஹிராக் கல்லூரி வெள்ளி விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்களைக் கல்லூரி ஸ்தாபகர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் வரவேற்றுப் பேசுகின்றார்.



இலங்கைக்கு விஜயஞ் செய்த பாலஸ்தீன விடுதலை இயக்கத் தூதுவர்களுடன்
அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்

போல், அங்கு வாழ்ந்த மக்களும் சிதறுண்டவர்களாக மலைநாடுகளிற் சென்று தஞ்சம் புகுந்தனர். கம்பளை, கண்டி, மாத்தளை போன்ற பகுதிகளுக்கே அதிகமானோர் செல்லலாயினர். இதனால் முஸ்லிம்களின் ஏகக்கலைக்கூடமாக விளங்கிய மருதானை சாஹிரா உட்பட மற்றும் கல்லூரிகள் பலவும் மூடப்பட்டு விட்டன. கொழும்பிலிருந்த கல்லூரிகளிற் பல முப்படை வீரர்களின் இருக்கைகளாகவும் பயன்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் மருதானை சாஹிராக் கல்லூரியின் அதிபர் அல்ஹாஜ் T. B. ஜாயா அவர்கள், சிதறுண்ட மாணவர்களின் நலன் கருதி கம்பளை, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களிற் சாஹிராவின் கிளைகளை ஸ்தாபிக்க முன்வந்தார். அதனால் கம்பளைப் பள்ளிக்குச் சொந்தமான சொற்ப நிலத்தில் நான்கு அறைகள் கொண்ட கொட்டிலில் நான்கு ஆசிரியர்களுடன் சாஹிராக் கல்லூரிக் கிளையும் உருவாக்கப்பட்டது. இக் கிளைக் கல்லூரிக்குத் தலைவராக ஒரு ஆசிரியர்—எது வித உத்தியோக அந்தஸ்துமின்றி பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டிருந்தார்.

யுத்தத்தின் தத்தளிப்பான நிலையில் உருவான இப்பாடசாலை போதிய இடவசதியும் தளபாடங்களும் சீரான நிர்வாகமும் இன்றி எப்படியோ இயங்கிக் கொண்டிருந்தது. கம்பளைப் பட்டணத்தின் ஓரமாக - உயர்ந்த மேட்டு நிலத்தில் ஜும்மாப் பள்ளிவாசலுக்கு அருகாமையில் இப்பாசாலை அமையப் பெற்றிருந்தது. இதன் தெற்கிலும் கிழக்கிலும் மலையும் அடர்ந்த காடும் நிலைபெற்றுக்கொண்டிருந்தன. சுமார் நூற்றி எண்பத்தைந்து மாணவர்கள் கல்வி பயின்றுகொண்டிருந்தனர். கம்பளைச் சிறுர்களும் இத்தொகையில் அடங்கினர். ஒழுங்கற்ற நிர்வாகம், ஆசிரியர்களின் அசிரத்தை, உல்லாச மனப்பான்மை என்பன நாளுக்குநாள் மாணவர்களின் தொகையைக் குறையச் செய்து விட்டன. யுத்தம் முடிந்து சமாதான நிலை ஆரம்பித்ததும் கொழும்பு மக்கள் தலைநகரை நோக்கி நகர்ந்துவிட்டனர். அதனால் மாணவர் தொகையும் 67 ஆகக் குறைந்து விட்டது. தொடர்ந்தும் இப்பாடசாலையை நடத்த வேண்டுமா? என்ற கேள்விக் குறியும் தோன்றலாயிற்று; "பாடசாலைக்கு மூடுவிழா ஏற்படலாம்", என்ற நிலையும் உருவாயிற்று.

ஆனால் கொழும்பு சாஹிராக் கல்லூரி அதிபர் ஜனாப். டீ. பீ. ஜாயா அவர்களின் தூரதிருஷ்டி வாய்ந்த சமுதாய நன்னோக்கும் தியாக மனப்பான்மையும் இப்பாடசாலையை மூடி விட இடங்கொடுக்கவில்லை. அதனை ஓர் ஆக்க பூர்வயான கலையகமாக மாற்றக்கூடிய ஒரு தியாகச் செம்மலைத் தேடிக்கொண்டிருந்தார். தமது பழைய மாணவரான பதியுத்தீன் மஹ்மூத், தான் இப் பாரிய பொறுப்பை மேற்கொள்ளத் தகுதிவாய்ந்தவர் என்பதையும் உணரத் தொடங்கினார். ஜனாப். ஏ. எஸ். அப்துல்காதர், ஜனாப். றவுப்பாஷா ஆகியோர் மூலமாகத் தமது கருத்தை ஜனாப் பதியுத்தீன் மஹ்மூதுக்கு எத்தி வைத்தார். அவ்விருவரும் ஜனாப். பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை நேரே சந்தித்து கம்பளை சாஹிராவின் நிலையை விளக்கமாகக் கூறினர். கல்லூரியாக உருவாகுவதற்கு ஆற்ற வேண்டியுள்ள பெரும் பணிகளையும் எடுத்துக் காட்டினர். தம்மை எதிர்நோக்கி வந்துள்ள மலையாய பொறுப்புக்களையும் கடல் போன்ற பிரச்சனைகளையும் ஜனாப். பதியுத்தீன் நினைத்துப் பார்த்தார். அதே நேரத்தில் முஸ்லிம் சமூகம் கல்வித்துறையில் பின்தங்கி நிற்பதையும் கருத்திற் கொண்டார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதற்கமைவாக, சமூக நலனைக் கருத்திற் கொண்டு, பொறுப்புக்களையும் பிரச்சனைகளையும் எதிர்த்துப் போராட முற்பட்டவர் போல - கம்பளை சாஹிராவைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கான தமது சம்மதத்தையும் தெரிவிக்கலானார். இதனை அறிந்த ஜனாப் ஜாயா அகமகிழ்ந்தார். இதற்கிடையில் ஜனாப். பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் பாடசாலையைப் பார்ப்பதற்காகத் தன்னந்தனியாய் கம்பளைக்குச் சென்றுவிட்டார்.

சுமார் ஐந்து மணியளவில் 'கம்பளை சாஹிரா' அமைந்திருக்கும் பகுதியைச் சென்று பார்வையிட்டார். சனசஞ்சாரமற்ற பாழடைந்த வளவில் சின்னஞ் சிறியதொரு கொட்டிலில் அப்பாடசாலை அமையப் பெற்றிருந்தது. அப்பாடசாலை அமையப் பெற்றிருந்த மலையடிவாரத்தைச் சுற்றிலும் அடர்ந்த காடுகளும் அடக்கஸ்தலங்களும் காணப்பட்டன. இவற்றைக் கண்ட ஜனாப். மஹ்மூத் அவர்களின் உள்ளம் இயற்கையிலேயே பின்ன



டைந்த போதும் அன்னாரிடத்துக் காணப்பட்ட பகுத்தறிவும் அயராத் துணிவும் ஒருவித புத்துணர்வை ஊட்டியது. சகல அம்சங்களிலும் நிறைவு பெற்ற ஓர் ஸ்தாபனத்தை நடத்துவது இலகுவான காரியமாகும். எனினும் அதனை ஒரு சாதனையாகக் கூறமுடியாது. அதனால்தான் சீரழிந்து தேங்கி நிற்கும் அந்த நிலையத்தைக் கட்டியெழுப்பி வளர்க்க முற்பட்டார், ஜனாப் பதியுத்தீன். இதனை ஒரு மாபெரும் கல்லூரியாக்குவதே முஸ்லிம் சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய முதன்மையான பணி என்பதையும் சிந்தனையிற் கொண்டார்.

'ஈழத்தின் மத்திய பிரதேசத்தில் அமைந்திருக்கும் கம்பளை நகரிலிருந்தே இலங்கையெங்கிலும் கல்வியென்னும் ஒளியைப் பரப்பவேண்டும். அகில இலங்கையிலும் வாழும் இஸ்லாமியருக்காக கம்பளை சாகிராவை ஓர் உன்னதமான கலைக்கூடமாகவும் கலைக் களஞ்சியமாகவும் நிலைபெறச் செய்ய வேண்டும். கல்வியும், கலாசாரமும் சன்மார்க்கமும் அலசி ஆராயப் படும் நிலையமாக்கப்பட வேண்டும். கல்விமான்களையும், கலைஞர்களையும், மார்க்க அறிஞர்களையும் உருவாக்கும் ஓர் ஸ்தாபனமாக மாற்றியமைக்க வேண்டும்' என்ற உயரிய ஆசைகளையும் அபிலாசைகளையும் உள்ளத்திலே ஏற்படுத்திக் கொண்டவராக, ஜனாப் பதியுத்தீன், அவர்கள். ஜனாப். ஐயா அவர்களை நேரிலே கண்டு பதவியை ஏற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்துக் கொண்டார். அதே நேரத்தில் அதன் ஆக்கத்துக்கான அதிகாரங்களையும் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். அதனால் அக்கல்லூரியின் துணை அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டு மீண்டும் கம்பளைக்குச் சென்று விட்டார்.

கம்பளைக்குச் சென்று பாடசாலைக்கு பொறுப்பாசிரியராக இருந்த கம்பளை வாசியானவரைக் கண்டு அன்புடன் அளவளாவி தமது நியமனத்தையும் அவரிடம் ஒப்படைத்தார். ஜனாப். பதியுத்தீன் இயற்கையாகவே நேர்த்தியாக உடை அணிந்து கம்பீரமாக காட்சி அளிப்பவர். ஒழுங்கும் கட்டுப்பாடும் ரசஞானமும் ஒருங்கே பெற்றவர். இவற்றுடன் எம். ஏ. பட்டதாரியான ஜனாப். பதியுத்தீனைக் கண்டுகொண்ட

பொறுப்பாசிரியருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் ஒருவித அலட்சிய மனப்பான்மை ஏற்பட்டதில் வியப்பில்லை. அத்துடன் பதவி பறிபோன விரக்தி மனப்பான்மையும் ஏற்பட்டிருக்கலாம்.

ஜனாப். பதியுத்தீன் மஹ்மூத் பதவியேற்ற முதல்நாளன்றே தமக்கென ஓர் அலுவலகத்தை அமைத்துக் கொண்டார். புதிய அதிபர் என்ற முறையில் ஆசிரியரையும் மாணவரையும் ஒன்றிணைத்த ஒரு கூட்டத்தை ஒழுங்கு படுத்தினார். மாணவர் மேற்கொள்ளவேண்டிய ஒழுங்கு முறைகளையும், கல்லூரி வளர்ச்சிக்காக ஆற்ற வேண்டிய கடமைகளையும் விளக்கிக் கூறினார். தமது முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நயமாக வேண்டிக் கொண்டார். மாணவருக்குப் பயன் தரக்கூடிய புதிய பாட அட்டவணை ஒன்றை அறிமுகஞ் செய்தார். இவற்றையெல்லாங் கண்ட மாணவர்கள் தங்களது தலைவரின் புதிய - முற்போக்கான திட்டங்களை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டனர். தமது தலைவரின் பின்னால் அணிவகுக்கவும் அன்னாருக்கு ஒத்துழைப்பு நல்கவும் முற்பட்டனர். ஆனால் அதே நேரத்தில் ஆசிரியர்களின் ஒத்துழையாமையும் வேலை நிறுத்தமும், இன்னோர் பக்கத்திலிருந்து உருவாகின.

''அதிபரின் நேர அட்டவணையில் மாற்றம் வேண்டும், கல்லூரி வேலைநிறுத்தம்.'' இவ்வாறான தந்தியொன்றும், ஒத்துழையாமைப் படலத்தின் இறுதிக்கட்டமாக, ஜனாப். டீ. பி. ஜாயா அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. எனினும் உண்மைநிலை வேறு விதமாகவே அமைந்திருந்தது. இரண்டு பேரைத் தவிர ஏனைய மாணவர்கள் வகுப்புகளுக்கு சமூகமளித்த வண்ணம் இருந்தனர். ஆசிரியர்கள் வகுப்புகளைப் பகிஸ்கரித்ததைத் தொடர்ந்து ஜனாப். பதியுத்தீன் தனிமையாகவே—தன்னால் இயற்றப்பட்ட கலாசாலைக் கீதத்தை மாணவர்களுக்குப் பாடிக்காட்டி பயிற்சியளித்துக் கொண்டிருந்தார். (இன்று இதே கீதம் அக்கலாசாலையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.)



இதற்கிடையில் அவசரத் தந்திமூலம் கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த நான்கு பேரை வரவழைத்தார். அவர்களைக் கொண்டு பாடங்களைக் கிரமமாக நடத்தத் தொடங்கினார். இந்த நான்கு சட்ட மாணவர்களில் ஒருவர் தான் இன்றைய உயர் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராகிய ஜனாப். எம். எம். அப்துல்காதர் அவர்கள்.

ஜனாப். ஜாயா அவர்கள் அதே வார இறுதியில் டாக்டர். எம். ஸீ. எம். கலீல் அவர்களுடன் கம்பளைக்குச் சென்று நேரடியாகவே நிலைமைகளை அவதானிக்கலானார். ஜனாப். பதியுத்தீனின் ஏற்றமுறும் பணிகளைக் கண்ட ஜனாப். ஜாயா அவர்கள் பகிஸ்கரிப்பில் ஈடுபட்ட ஆசிரியர்களை எச்சரித்து விட்டு புதிய அதிபரின் சேவைகளைப் பாராட்டினார். ஜனாப். பதியுத்தீனால் அறிமுகஞ் செய்யப்பட்ட பாட அட்டவணையை அங்கீகரித்து அதே நேர அட்வணையை, ஏனைய சாஹிராக் கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்தினார், ஜனாப். ஜாயா அவர்கள்.

இதனைத் தொடர்ந்து ஜனாப். பதியுத்தீன், கல்லூரிக்கு மேலும் மாணவர்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபடலானார். கம்பளை ஜம்ஆப் பள்ளிவாசலின் நிர்வாகியும் சமூக சேவையாளருமான மர்ஹூம், உமர் பாச்சா அவர்களைப் பக்கபலமாகக் கொண்டு கம்பளை நகரிலும் சூழவுள்ள கிராமங்களிலும் சென்று கூட்டங்கள் நடத்தி, மாணவர்களைச் சேர்ப்பதில் முழுமூச்சுடன் ஈடுபட்டதனால் மாணவரின் வரவு வளர்ந்து பலநூறாகப் பெருகலாயிற்று.

அடுத்த வேலையாக கல்லூரிக்குத் தேவையான கட்டடங்களை அமைப்பதில் முயற்சித்தார். எனினும் முன்பு பகிஸ்கரிப்பு நடத்திய ஆசிரியர்கள் பலவகையான பொய்ப் பிரசாரங்களையும் முட்டுக்கட்டைகளையும் ஏற்படுத்திய வண்ணம் இருந்தனர். அவர்களை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. எனவே அவர்களை அக்கலாசாலையிலிருந்தே அப்புறப்படுத்தி விட்டார்.

கம்பளை சாஹிராவின் கட்டட வேலைகளை விஸ்தரிக்கும் நோக்கமாக 'மத்திய இலங்கை முஸ்லிம் கல்விச்சபை' என்ற

பெயரில் ஒரு ஸ்தாபனத்தை அமைத்தார். அதில் ஜனாப். டி.பி. ஜாயா அவர்களையும், டாக்டர், எம். ஸி. எம். கலீல் அவர்களையும், கொழும்பு, கம்பளை, கண்டி போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம் பெரியார்களையும் உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டு சாஹிராவின் வளர்ச்சிக்கான புதிய திட்டங்களையும் உருவாக்கினார். இதனைத் தொடர்ந்து கம்பளை சாஹிரா மருதானை சாஹிராவிலிருந்து பிரிந்து தனியாக இயங்க ஆரம்பித்தது.

முஸ்லிம் தனவந்தர்களைக் கொண்டும் தமது கல்லூரியில் நடத்திய இசை. நாடக நிகழ்ச்சிகளைக் கொண்டும் பல ஆயிரம் ரூபாக்களைச் சேர்த்து கல்லூரிக் கட்டடங்களை விஸ்தரித்தார்.

ஒரு சமயம் கம்பளையைச் சேர்ந்த பெரியார் உமர் பாச்சா அவர்களது இரத்தினக்கல்லொன்றை, விற்கும் தரகராகவும் ஜனாப். பதியுத்தீன் மாறினார். மூவாயிரம் ரூபாவுக்கு விற்கும் படி கூறிய அக்கல்லை முப்பத்தையாயிரம் ரூபாவுக்கு விற்றுச் சம்பாதித்த இலாபம் முப்பத்திரண்டாயிரத்தையும் கல்லூரி கட்டடங்களுக்காக செலவு செய்தாரென்றால் அன்னாரின் பெரு முயற்சியை யார்தான் பாரட்டாமல் இருக்க முடியும்.

கட்டடங்கள் ஆரம்பமாகு முன்னரே ஜனாப். ஜாயா அவர்களின் புத்திமதிகளுக்கு ஏற்ப ஜனாப் உமர் பாச்சா அவர்களின் துணை கொண்டு கல்லூரிக்குச் சொந்தமாக நான்கு ஏக்கர் நிலத்தை கம்பளை ஜும்ஆப் பள்ளி வாசல் நிலத்திலிருந்து சொந்தமாக எழுதிக்கொண்டார். சமூக விரோத சக்திகள் காரணமாக இதனை ஆரம்பத்தில் இரகசியமாகவே செய்து கொண்டார். எனினும் பிற்காலத்தில் இந்த உண்மையைக் கூறாமல் இருக்கவில்லை. இவ்வாறாகத் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தம்மால் உருவாக்கப்பட்ட கலாநிலையத்துக்கே அர்ப்பணித்துள்ளார்... ... ...''




# அரசியல் பிரவேசம்

ஆற்றலும் துடிப்பும் மிக்க இளைஞனாக மாத்தறை சென்ற், தோமஸ் கல்லூரியிலே ஆரம்பக்கல்வி பயின்று வந்தார், இளைஞர் பதியுத்தீன். பதினோராவது வயதில் ஐந்தாம் பருவத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, ஒரு நாள், கல்லூரி சாரண ஆசிரியருக்கும் பதியுத்தீனுக்கும் இடையிலே ஒரு வாக்குவாதம் நடைபெற்றது. சாரணப் பயிற்சிக்குச் சேர்த்துக்கொண்ட பதியுத்தீனுக்கு விசுவாசப் பிரமாணம் செய்யச் சொன்னமுறை பிடிக்கவில்லை. ''யூனியன்ஜெக்'' எனப்படும் ஆங்கிலக் கொடிக்கும், சாரணக்கொடிக்கும் விசுவாசப் பிரமாணம் செய்ய வேண்டுமென ஆசிரியர் கட்டளையிட்டார். சாரணக் கொடிக்கு விசுவாசப்பிரமாணம் எடுப்பதாகவும், ஆங்கிலக் கொடிக்கு விசுவாசப்பிரமாணம் எடுக்க முடியாதெனவும் பதியுத்தீன் கூறினார். ஆசிரியருக்கு ஆத்திரமும் கோபமும் ஒருங்கே பொத்துக் கொண்டு வந்தது. உடனே பதியுத்தீனை, அதிபரிடம் அழைத்துச் சென்று முறைப்பாடு செய்தார். அதிபர், பதியுத்தீனின் அடங்காத்தன்மைக்காக ஆறு பிரம்படிகள் கொடுத்தார். வெள்ளையனின் கொடிக்குத் தலை வணங்குவதை விடத் தனது குருவின் ஆறு பிரம்படிகள் இளைஞன் பதியுத்தீனுக்குக் கேவலமாகத் தோன்றவில்லை. தமது இளமைப்பருவத்திலேயே விட்டுக்கொடுக்காத மனப்பான்மையும், ஆங்கில ஏகாதிபத்தியத்துக்குத் தலைவணங்காத் தன்மையும் உள்ளத்திலே வைரமாகப் பதிந்திருந்தமையினை இச்சம்பவம் நன்கு புலப்படுத்துகின்றது.


இதே உள்ளத்துறுதி அவரது பிற்கால வாழ்விலும் வளர்ந்து உரம் பெற்றிருந்ததைக் காணலாம். வாலிபப் பருவத்திலே தமது கல்வியை முடித்துக் கொண்டு தாய்நாடு திரும்பிய பதியுத்தீன், ஈழத்து முஸ்லிம்களின் சமுகவாழ்வில் ஏற்பட்டிருந்த குறைபாடுகளைக் களைவதில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கத் தொடங்கினர். முஸ்லிம்களின் அரசியலில் ஏற்பட்டிருந்த குறைபாடுகளையும் மிக உன்னிப்பாகவே கவனித்து வந்தார். சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இந்த நாட்டின் பொதுவான அரசியல் விவகாரங்களில் இவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வந்துள்ளார். இலங்கை முஸ்லிம் லீக், சமுக கலாசாரத்துறைகளில் மாத்திரமின்றி, அரசியல் ரீதியாகவும் இயங்கக் கூடிய ஓர் ஸ்தாபனமாக இருந்ததனுல் தான் அதன் ஆரம்பகால இயக்குனர்களில் ஒருவராக இருந்து சொந்த சமுதாயத்தின் குறைபாடுகளை எடுத்துக்காட்ட முன்வந்தார். இந்தியாவிலே கல்விபயிலும் காலத்திலும் தமது அரசியற் கருத்துக்களை மக்கள் மத்தியிலே பரப்பிவந்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாத எதிர்ப்பைத்தூண்டும் பிரச்சாரங்களை பர்மாவிலும் மலேசியாவிலும் நிகழ்த்தியதனுல் 1933 ஆம் ஆண்டு இவரை அந்த நாடுகளில் இருந்து முறையே இருபத்திநான்கு மணித்தியாலங்களிலும், நாற்பத்தெட்டு மணித்தியாலங்களிலும் வெளியேறுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்ட தென்றுல், தமது வாலிபப் பருவத்தில் எத்தகைய அரசியற் புரட்சி மனப்பான்மையுடன் செயல் பட்டு வந்துள்ளார் என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்வர். அவ்வாறே அவர் இந்தியாவில் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகளும், எழுதியுள்ள எழுத்தோவியங்களும் அவரது அடி மனதிலே துடிதுடித்துக் கொண்டிருந்த அரசியல் உணர்ச்சிகளை நினைக்கச் செய்கின்றன. அதனுற்றுன் இலங்கை திரும்பிய பின்னரும் முஸ்லிம்களின் கல்வித்துறையிற் போன்றே அரசியல் துறையிலும் ஒரு புரட்சிவாதியாக மாறலானுர்.

இலங்கை திரும்பிய பின்னர் மீலாத் கூட்டங்களிலும் சமுகக் கூட்டங்களிலும் பேசும்போது தமது புரட்சிகரமான கருத்துக்களை வெளியிடலானுர். தமது கொள்கைகளை மக்கள் ஏற்றுக்





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு. எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க, கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களின் கம்பளை இல்லத்தில் கலந்துரையாடிக்கொண்டிருக்கும் போது எடுத்த படம்.



1951-ம் ஆண்டில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பிக்கு முகமாகக் கூட்டப்பட்ட முதலாவது கூட்டத்தில் ஸ்ரீ எச். நிஸ்ஸங்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பிப்பதற்காகப் பிரேரித்த பிரேரணையை, கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் ஆமோதித்து உரையாற்றுவதையும், கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களையும் படத்தில் காணலாம். இந்த ஆரம்பக் கூட்டத்தில் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் கட்சியின் இணைக் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கொள்ளா விடினும் காலப்போக்கில் உண்மையை உணர்ந்து கொள்ளுவார்கள் என்ற உணர்வினல் எத்தகைய எதிர்ப்புச் சக்திகளுக்கும் தயங்காதவராய்த் தமது ஒரே இலட்சியத்தை இறுதிவரை நிறைவேற்றி வைப்பதிலேயே கவலை கொண்டவராக இருந்தார். அவரது தீர்க்கதரிசனமான கருத்துக்களை அன்றைய சமுதாயம் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும்—ஏளனம் செய்தாலும்-ஒரு சில முற்போக்கு வாதிகள் அக்கருத்துக்களைச் சிந்திக்காமலும் இருக்கவில்லை.

1938 ஆம் ஆண்டு பாலஸ்தீனத்திலுள்ள அரேபியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டிக்கும் முகமாக கொழும்பு கால்பேஸ் மைதானத்தில் ஒரு மாபெரும் கூட்டம் நடத்தப்பட்டது. அன்றைய பிரபல பேச்சாளரும், பத்திரிகை ஆசிரியருமான ஜனப். ஓ. கே. மொகிதீன் போன்ற முற்போக்கு வாதிகள் அக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். எனினும் அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதற்கு அன்று தலைவர்களெனக் கருதப்பட்ட எவருமே முன்வரவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் பேசவோ. எழுதவோ அறிக்கை விடவோ துணிவற்றவர்களாகவே அவர்கள் காணப்பட்டனர். ''சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியம்'' என, வர்ணிக்கப்பட்ட அன்றைய ஆட்சியாளரின் அடிவருடியாக இருப்பதை பதியுத்தீன் எப்பொழுதோ கண்டிக்க முனைந்து விட்ட காரணத்தினலும், பாலஸ்தீனத்தில் உருவாகப் போகின்ற ஆபத்தான பிரச்சினையை வித்திலே கிள்ளி எறிய வேண்டுமென்ற எண்ணத்தினலும் தாமே தலைமைவகித்துக் கூட்டத்தை நடத்த முன்வந்தார். அன்று கூடிய மாபெரும் கூட்டத்தில் தமது தலைமையுரையில் அரபு மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை விளக்கமாகவும், உருக்கமாகவும் எடுத்துக்காட்டினர். பிரிட்டிஷ் அரசாங்கம் பாலஸ்தீன் மக்களுக்களித்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற தீர்மான மொன்றை ஜனப் பதியுத்தீனே அக்கூட்டத்தில் பிரேரித்து அங்கீகரித்துக் கொண்டார்.

''Young Muslim League'' என்ற பெயரில் இயங்கிவந்த வாலிப முஸ்லிம் லீக்கின் செயலாளராக 1927ஆம் ஆண்டு




26860

தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அதனை ஒரு பலம் பொருந்திய இயக்கமாக மாற்றியமைத்து—அகில இலங்கை லீக் ஆகவும் புனருத்தாரணம் செய்தார். அதுவரை அங்கத்த வரிடையே இருந்துவந்த பிளவுகளைச் சுமுகமான நிலைக்குமாற்றி ஒற்றுமையை நிலைநாட்டினார். அதனால் டி. பி. ஜாயா, ஓணரபல் டபிள்யூ. எம். அப்துல் றகுமான், ஜனாப். என். டி. எச். அப்துல் கபூர், ஸர். முகம்மது மாக்கான் மாக்கார், ஜனாப். என். எச். எம். அப்துல் காதர், மகுமூது ஹாஜியார் போன்ற முஸ்லிம் பெரியார்கள் ஒன்றிணைந்து லீக்கில் செயல்படத் தொடங்கினர். அகில இலங்கையிலும் முஸ்லிம் லீக்கின் அங்கத்துவத்தைப் பரவலாக்குவதற்காகப் பல மாகாணக் கிளைகளை ஏற்படுத்தினார். இராப்பாடசாலைகளை அமைத்து எழுத்தறிவில்லாத முஸ்லிம் களுக்குக் கல்வி வசதியை ஏற்படுத்தினார். பைத்துல்மால் நிதி ஒன்றையும் உருவாக்கினார். முஸ்லிம் சமுதாயத்தின் சமூக கலாசார அரசியல் வாழ்வில் பல வேறுதுறைகளிலும் முயற்சி களை மேற்கொண்டார். எனினும் பிற்காலத்தில் இந்த இயக் கம் ஆங்கிலம் படித்த ஒரு குறிப்பிட்டவர்களின் செல்வாக் கிற்கு உட்பட்டமையினால் ஜனாப். பதியுத்தீன் லீக்கின் உத்தி யோகப் பதவியிலிருந்து வெளியேறினார்.

''படித்த காற்சட்டைக்காரர்கள் மாத்திரமின்றிச் சாரம் உடுத்திய சாதாரண மக்களுக்கும் லீக்கின் உயர்பதவிகள் வழங்கப்படல் வேண்டும்.'' என்று ஜனாப். பதியுத்தீன் ஒரு முறை தனது கண்டனக் குரலை எழுப்பியுள்ளார். எனினும் அவர் லீக்கை விட்டும் முற்றாக விலகிக் கொள்ளவில்லை.

26860






1956 முதல் 1959 வரை ஐ. நா. சபையின் இலங்கைப் பிரதிநிதியாக கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் நியமனம் பெற்றிருந்தார் 1959-ம் ஆண்டு மனிதவியல் சமூகக் கல்விக் குழுவின் உபதலைவராகக் கடமை யாற்றிய போது எடுக்கப்பட்ட படம்.



ரஷ்யப் பனிக்காட்டில் கலாநிதி பதியுத்தீன்.

## துணிவுமிக்க செயல்வீரர்

1956ஆம் ஆண்டில் அமைச்சரவையில் சேர விரும்பாத ஜனப் பதியுத்தீன், திரு. பண்டாரநாயக்காவின் வேண்டுகோளுக்கிணங்கத் தேசிய திட்டக் கவுன்ஸிலில் ஓர் அங்கத்தவராக நியமனம் பெற்ருர். பின்னர் ஐ. நா. சபையின் இலங்கைப் பிரதிநிதியாகவும், தூதுக்குழு அங்கத்தவராகவும் கடமையேற்ருர். ஐ. நா. சபையின் இலங்கையின் அங்கத்தவராக நியமனம் பெற்ற முதல் முஸ்லிம் ஜனப் பதியுத்தீன் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். 1959-ஆம் ஆண்டின் ஐ. நா. சபையின் மூன்ருவது காரியக் குழுவுக்கு ஜனப் பதியுத்தீன் உபசபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் ஐ. நா. சபையின் அங்கத்தவராக இருந்தபோதுதான் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டார். அதனுல் இலங்கை அரசியலில்' ஏற்பட்டிருந்த பரபரப்பான சூழ்நிலையை மனதிற்கொண்டு ஜனப் பதியுத்தீன் இலங்கை திரும்பினுர். 1960ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற முடியாமற்போனதால், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களைக் கட்சியின் தலைவராகக்கொண்டு சுதந்திரக் கட்சியை மேலும் பலமுடையதாகச் செய்ய ஜனப் பதியுத்தீன் தமது முழுச் சக்தியையும் உபயோகித்தார். அதிலும் முக்கியமாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைத் தலைமைப் பதவியை ஏற்கச் செய்வதில் பூரண வெற்றி கண்டார். அதனுல் அதே ஆண்டில் மீண்டும் நடைபெற்ற

தேர்தலில் சுதந்திரக் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப்பெற்றுப் பதவிக்கு வரலாயிற்று. தொடர்ந்தும் ஜனுப் பதியுத்தீன் போன்றவர்களுடைய ஆலோசனைகள் ஆட்சியமைப்புக்குத் தேவைப்பட்டதனுல்தான் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வற்புறுத்தலின் பேரில் ஜனுப் பதியுத்தீன் 1960ஆம் ஆண்டு அமைச்சரவையில் கல்வி அமைச்சராகவும், ஒலிபரப்பு அமைச்சராகவும் பதவியேற்ருர்,

## கல்வி அமைச்சர்

இந்த நாட்டின் கல்விச் சீர்திருத்தத்தின் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திக் கல்வி வரலாற்றிலே மங்காப் புகழ் பெற்ற பெருமையை ஜனுப் பதியுத்தீன் கல்வியமைச்சராகச் செய்துள்ள சேவையின்மூலமாகப் பெற்றுக்கொண்டார். கல்வியில் ஒருசிலர் பெற்றிருந்த ஏகபோக உரிமைகளைச் சமமான முறையிற் சகலரும் பெற்றுக்கொள்வதற்கேற்ற புதிய திட்டங்களை உருவாக்கியதோடு நின்றுவிடாமல் அவற்றைத் தமது தீரம்மிக்க செயல்களினுலும், நிருபித்தும் நிலைநாட்டியும் வைத்தார். வேறு எவராலும் சாதிக்க முடியாத சுமையை அன்னுர் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றுச் சாதித்துக் காட்டியுள்ளார்.

1945ஆம் ஆண்டு திரு ஸி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா கல்வி அமைச்சராயிருந்தபோது இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் பணம் கொடுத்துப் படித்து வந்த வசதிபடைத்தவர்கள்தான் பணம் கொடுக்காமல் இலவசமாகப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றனர். அதனுல் இலவசக் கல்வித் திட்டத்தின் பூரண பயனை சாதாரண மக்கள் பெற முடியாதவர்களாயிருந்தனர். 1961ஆம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கும் புதிய சட்டத்தை ஜனுப் பதியுத்தீன் நிறைவேற்றினுர். அச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு முன்னரே ஒருசில விரோத மனம்படைத்தவர்கள் அன்னுரை அவமதிக்கவும் உயிருக்கே உலைவைக்கவும் முற்பட்டனர். கூட்டங்களுக்கு வந்தால்





உலகத்தின் முதலாவது விண்வெளி வீரர், சோவியத் நாட்டைச் சேர்ந்த யூரி ககாரின் 1961-ஆம் ஆண்டு, கல்வியமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் விருந்தினராக இலங்கைக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம்.



1963-ல், சோவியத் ரஷ்யாவுக்கு, கலாநிதி பதியுதீன் தலைமையில் சென்ற கலாசாரத் தூதுக்குழு

கொலை செய்வதாகவும், அநாமதேய கடிதங்களாலும், தொலை பேசிகள்மூலமாகவும் அச்சுறுத்தினர். அத்தகைய சந்தர்ப்பங் களிலெல்லாம் ''நான் மரணத்துக்கு அஞ்சுபவனல்ல. நிதி நியாயத் துக்காக எடுக்கப்போகும் எந்த ஒரு செயலையும் எவரும் தடுக்க முடி யாது'' எனக் கூறியவராக அத்தனைக் கூட்டங்களுக்கும் சமு கமளித்துத் தமது புதிய திட்டத்தை விளக்கி வைத்தார்.

பாடசாலைகளைக் கையேற்கும் திட்டத்தின்கீழ் தன்னால் ஆரம்பிக்கப்பட்ட கம்பளை ஸாஹிராக் கல்லூரியை முதன்முத லாக அரசாங்கத்துக்குக் கையளித்து, கையேற்பு வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். இவரது இந்தத் துணிச்சலான செய லைக் காலத்தால் மறந்துவிட முடியாது.

இவர் கிராமபுறப் பாடசாலைகளில் விஞ்ஞான, தொழிற் கல்விக்கான வசதிகளை அதிகரித்தார். நாட்டின் கல்வி முறையை மேலும் வளமுறச் செய்வதற்காகத் தேசியக் கல்விக் கமிஷன் ஆகியவற்றை உருவாக்கினர். கல்விப் பகுதி நிருவா கத்திலும் பெரும் சீர்திருத்தங்களை ஏற்படுத்தினர். நிர்வாக முறைகளை மாகாண ரீதியில் பரவலாக்கினர். இதனால் கிராமப் புற மக்கள் பல நன்மைகளைப் பெறலாயினர். கல்வியதிகாரி களின் தொகையையும் அதிகப்படுத்தினர். கல்விப் பகுதியின் நிதி விநியோகத்தில் சிங்கள மக்களுக்கு 80%மும் தமிழ் மக் களுக்கு 12%மும் முஸ்லிம்களுக்கு 8%மும் சமுக ரீதியில் மக்கள் சனத் தொகைக்கு அமைவாகப் பகிர்ந்தளித்ததன்மூலம் சகல ருக்கும் நியாயபூர்வமான கல்வி உரிமைகளை வழங்க முன் வந்தார்.

## முஸ்லிம் கல்வி

தமது பதவிகாலத்தில் முஸ்லிம்களது கல்வித்துறையிலும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தினர். அதுவரை கால மும் இருந்துவந்த முஸ்லிம்களது கல்விக் குறைபாடுகளைத் தாமே முன்னின்று நிவர்த்தி செய்தார். பாடசாலைகள் இல்லா மலிருந்த முஸ்லிம் கிராமங்களுக்குப் பாடசாலை வசதிகளை உண்டாக்கினர். தேவையான அளவு முஸ்லிம் ஆசிரியர்களை

யும், தலைமை ஆசிரியர்களையும், மௌலவிகளையும் நியமனஞ் செய்ததோடு, விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வித்துறைகளில் விசேட பயிற்சி பெற்ற முஸ்லிம்களையும் நியமனஞ் செய்தார். முஸ்லிம் பட்டதாரிகளின் தொகையை அதிகரித்தார். முஸ்லிம் வித்தியாதரிசிகள், கல்வி நிர்வாகிகள் ஆகியோரும் நியமனம் பெற்றனர். இதனால் பிற்காலத்தில் முஸ்லிம்களின் கல்வித்துறையில் தங்குதடையற்ற முன்னேற்றத்தைத் தீர்க்காலோசனையுடன் ஏற்படுத்தினார். இவர்தமது காலத்தில் மத்ரஸாக் கல்வி முறையிலும் மாற்றங்கள் செய்து 'அல் ஆலிம்' பரீட்சையையும் ஆரம்பித்தார். இஸ்லாமிய கலாசார அடிப்படையிலான பாடப் புத்தகங்களை உருவாக்குவதற்குப் பாடப் புத்தகக் குழுவொன்றை நியமனஞ் செய்தார். உயர் வகுப்பு முஸ்லிம் மாணவர்கள் இஸ்லாமிய இலக்கியங்களைப் பயில்வதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தினார்.

இலங்கை வானொலியில் முஸ்லிம்களுக்கென விசேட பிரிவொன்றை உண்டாக்கி வைத்தார். அதனால் வாரத்துக்குப் பத்தொன்பதரை மணி நேரம் முஸ்லிம் நிகழ்ச்சிக்கென ஒதுக்கப்படலாயிற்று. இவ்வாறாகக் கல்வித்துறையிலும், ஏனைய முஸ்லிம் கலாசாரத் துறைகளிலும் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்தார்.

## கௌரவ கலாநிதியானார்

இந்த நாட்டுக் கல்வித்துறையிலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, சகல இன மக்களும் சமமான கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கியதனாலும் சிறந்த கல்விமானாக விளங்கியதனாலும் புதுடில்லி, டோக்கியோபோன்ற நகரங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் கலந்துகொண்டு இலங்கைக்குப் புகழ் தேடித் தந்ததனாலும், ஜனாப் பதியுத்தீனுக்கு இலங்கைப் பல்கலைக் கழகங்கள் கௌரவ கலாநிதிப் பட்டமளித்து கௌரவித்தன. வித்தியாலங்காரப் பல்கலைக் கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் (LL.D.) பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. வித்தியோதய பல்கலைக் கழகமும் அவருக்கு (D.Litt)



பட்டமளித்துப் பாராட்டியது. 1970ஆம் ஆண்டு கொழும்பு வளாகப் பல்கலைக்கழகம் (D. Lit) பட்டமளித்துள்ளது.

## சுகாதார வீடமைப்பு மந்திரி

இதையடுத்து ஜனாப் பதியுத்தீன் சுகாதார வீடமைப்பு மந்திரியாகப் பதவி வகித்தும் புரட்சிகரமான மாற்றங்கள் பலவற்றைச் செய்தார். அரசாங்க வைத்தியர்களின் பிரத்தியேகமான சிகிச்சை முறையை ஒழிக்கும் சட்டத்தைப் பல எதிர்ப்புக்களுக்கிடையே ஜனாப் பதியுத்தீன் அமுலுக்குக் கொண்டு வந்தார். எல்லா வைத்தியர்களும் அரசாங்கத்தின் மூலமாகவே பிரத்தியேக வைத்தியம் செய்வதற்கான ஒரு திட்டத்தையும் (Chanelled System) அவர் ஏற்படுத்தி வைத்தார்.

நகர சபைப் பிரதேசங்களிலும், கிராமப்புறங்களிலும் சுகாதார சேவையை அபிவிருத்தி செய்வதில் அவர் விசேட கவனஞ் செலுத்தி வந்தார். இந்நாட்டு வைத்திய முறைகளான ஆயுள்வேத, சித்த, யூனானி வைத்தியங்களுக்குக் கௌரவமான இடமளித்து அவற்றின் வளர்ச்சிக்கான முயற்சிகளையும் மேற்கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் என்ற முறையில் ஜனாப் பதியுத்தீன் தற்சமயம் இக்கட்சியின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வருகின்றார். இந்நாட்டு முஸ்லிம் சமூகத்திலுள்ள முற்போக்குச் சக்திகளனைத்திற்கும் ஜனாப் பதியுத்தீன் இணையற்ற தலைவராகத் திகழ்ந்து வருகிறார். முற்போக்குக் கொள்கைகளையுடைய முஸ்லிம்கள் அனைவரும் அவரது தலைமையின்கீழ் இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியில் திரண்டிருக்கிறார்கள். இந்நாட்டில் ஒருசிறந்த சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதற்கான ஜனாப் பதியுத்தீனுடைய முயற்சிகளுக்கு அவர் தமது அபிமானிகளிடையே பெற்றுள்ள செல்வாக்குப் பெரிதும் உதவி வருகின்றது.

இந்நாட்டின் முன்னேற்றச் சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி 1964ஆம் ஆண்டில் சோஷலிஸ சமுதாயமொன்றை


உருவாக்க உறுதிகொண்ட ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டவர்களுள் ஜனுப் பதியுத்தீனும் ஒருவராவர்.

1965ஆம் ஆண்டு தேர்தலில் சுதந்திரக் கட்சி ஆட்சிப் பலத்தைப் பெற முடியாமற் போனதைத் தொடர்ந்து ஜனுப் பதியுத்தீன் கட்சிப் பலத்தை மேலும் வலுவடையச் செய்வதில் முழுமூச்சுடன் பாடுபடலானுர். எனினும் முன்னிலும் பார்க்கக் கூடுதலான அளவு முஸ்லிம்கள் அந்தத் தேர்தலில் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களாக இருக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கினுர். மூதூர்த் தொகுதியிலிருந்து ஜனுப் ஏ. எல். ஏ. மஜீத் சுதந்திரக் கட்சி உறுப்பினராக எதிர்க் கட்சியில் இடம்பெற்றிருந்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கல்முனை இடைத் தேர்தலில் ஜனுப் ஏ. சி. அஹ்மத் சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டினுர். முஸ்லிம்களுக்கெனத் தனியாக இயங்கி வந்த அரசியற் கட்சியான இஸ்லாமிய சோஷலிச முன்னணியை இலங்கையில் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களிற் பரவலாக்கிப் பல கிளைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இதன் காரணமாக 1970ஆம் ஆண்டுத் தேர்தலின்போது ஜனநாயக சோஷலிச அடிப்படையிலான கொள்கைகளிற் பெரும் பகுதியினர் தமது கவனத்தைத் திருப்பலாயினர். அதனுல் 1970ஆம் ஆண்டுத் தேர்தலின்போது முஸ்லிமல்லாத சுதந்திரக் கட்சி வேட்பாளர்கள் பலர் முஸ்லிம்களின் வாக்குப் பலத்தால் வெற்றியீட்டினர். மூதூர், கல்முனை, புத்தளம், பேருவளை ஆகிய தொகுதிகளிலிருந்து முறையே ஜனுப்கள் ஏ. எல். ஏ. மஜீத், எம். சி. அஹ்மத், அசன்குத்தூஸ், ஐ. ஏ. காதர் ஆகியோரும் வெற்றிபெறலாயினர். இந்தத் தேர்தலில் ஐக்கிய முன்னணி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஜனுப் பதியுத்தீனின் தலைமையில் முஸ்லிம்கள் அளித்த ஒத்துழைப்பை ஐக்கிய முன்னணி அரசாங்கம் மதிக்கத் தவறியதில்லை. சுதந்திரக் கட்சியின் உபதலைவராகவும் அக்கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் விளங்கிய ஜனுப் பதியுத்தீன் மீண்டும் நியமன அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு கல்வி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.





டில்லியில் நடைபெற்ற சாம்ராஜ்யக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டின் போது, இலங்கைக் கல்வியமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை இந்திய ஜனுதிபதி கலாநிதி சர். எஸ். ராதா கிருஷ்ணன் ராஜ்யபவனில் வரவேற்கிருர்.



1961/62, சாம்ராஜ்யக் கல்வி மகாநாடு, புதுடில்லியில் நடந்தேறியபோது, இலங்கையின் சார்பில் கல்வியமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் கலந்து கொண்டதைக் காட்டும் படம். நடுவில் அமர்ந்திருப்பவர் இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் நேரு. முன்வரிசையில் இடமிருந்து ஐந்தாவதாக அமர்ந்திருப்பவர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் அவர்கள்

## கல்விச் சீர்திருத்தம்


ஜனாப் பதியுத்தீன் இந்த நாட்டின் கல்வி முறையைத் தேசிய மயமாக்கிச் சகலருக்கும் கல்வித்துறையில் சமசந்தர்ப்பம் வழங்கிய பெருமையை 1962ஆம் ஆண்டு கல்வியமைச்சராக இருந்தபோது பெற்றுக்கொண்டார். எனினும் அவர் பதவி வகித்த அந்தக் குறுகிய காலத்தில் கல்விச் சீர்திருத்தங்களை நிறைவேற்றப் போதிய அவகாசமில்லாதவராக இருந்தார். தாம் மீண்டும் கல்வியமைச்சரானதும் அந்தச் சீர்திருத்தங்களில் முக்கிய கவனஞ் செலுத்தினர். ஆங்கில ஆட்சி முறையினல் ஏற்பட்டு வந்த பயனில்லாக் கல்வி முறையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்க முன்வந்தார். படித்த வாலிபர்கள் மத்தியிலே அமைதி குன்றி கட்டுப்பாட்டை மீறுந் தன்மையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கும், நாட்டின் சமூக அமைப்பு, பொருளாதாரம், கலாசாரம், உள்நாட்டு மூலதனங்களைப் பயன்படுத்தும் சுயதேவைப் பூர்த்தி, விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி என்பனவற்றை மையமாகக் கொண்ட புதிய கல்வித் திட்டமொன்றை உருவாக்கலானுர். வளர்ந்து வரும் புதிய சமுதாயத்தின் சிந்தனைகளையும் உணர்வுகளையும் செயற்பாடுகளையும் நாட்டுக்கும் சமூகத்துக்கும் உருப்படியான முறையில் பயன்படுத்துவதே புதிய கல்வித் திட்டத்தின் முக்கியமான குறிக்கோளாக அமைந்துள்ளது. இதற்கு அமைவாகப் பாடங்களை ஒருமுகப்படுத்திய புதிய போதனு முறையொன்றும் அமுல் நடத்தப்படுகின்றது. இதனைத் துரிதப்படுத்தும் நோக்கத்தினுல் 1973ஆம் ஆண்டு முதல் ஆறும் வகுப்பிலும் முதலாம் வகுப்பிலும் புதுமுறைப் போதனைகள் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளன. 1975ஆம் ஆண்டு முதல் ஆரம்பமாகவுள்ள தேசியப் பொதுக் கல்வித் தராதரப் பரீட்சைக்கு இத்திட்டங்கள் வழிவகுப்பதோடு மாணவரது ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ப ஏதாவதொரு தொழிற்துறையைப் பெற்றுக்கொள்ளவும் இக்கல்வி முறை பயன்படவுள்ளது. சூழலுக்கு இயைந்த தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்து கல்வி போதிக்கப்படுவதனுல் மாணவர்கள் சுயமாகவே தங்களுக்கேற்ற தொழில்களில் ஈடுபாடு கொள்ளவும்

வாய்ப்பேற்படுகின்றது. அதே நேரத்தில் பிரதேச அடிப்படையிலான கல்வி மாற்றங்களினுல் நகர்ப்புறங்களில் வசதி படைத்த மாணவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்கல்வி வாய்ப்புக்களைக் கிராமப்புறத்து மாணவர்களும் பெற்றுக் கொள்ளக்கூடியதான சமவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன. இதனுல் கல்வி முறையில் இதுவரை காணப்பட்டு வந்த ஊழல்கள் நீக்கப்படுவதோடு, நாட்டின் தேவைக்கேற்பக் கல்வியைப் பயனுள்ளதாகவும் பரவலாகவும் கற்பிக்க வழிபிறக்கின்றது. தூரநோக்குடன் உருவாகியுள்ள ஜனுப் பதியுத்தீனின் புதிய கல்வித் திட்டத்தை உலகநாடுகள் பல பாராட்டியுள்ளன. இந்த நாட்டின் சமுகத்தின் தேவைகளுக்கு ஏற்ப புதியதொரு சமுதாயம் எதிர்காலத்தில் இந்தப் புதிய கல்வித் திட்டத்தால் உருவாகுமென்பதிற் சந்தேகமில்லை.

## பல்கலைக்கழகச் சீர்திருத்தம்

ஆரம்ப உயர்கல்வி முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதுபோல பல்கலைக்கழகக் கல்வி முறைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. புதிய பல்கலைக்கழக சீர்திருத்தச் சட்டத்தின்படி இந்த நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களையும் ஒருமுகப்படுத்தி போதனுபீடங்களும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதனுல் அரசாங்கத்தின் அனுவசியமான செலவினங்கள் குறைக்கப்பட்டிருப்பதோடு உயர்மட்டக் கல்வித்துறையிலும் சிரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கட்டுப்பத்தையில் புதிய வளாகமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் பல பாகங்களிலும், புதிய தொழில் நுட்பக் கல்லூரிகள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் சில பல்கலைக்கழக வளாகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனுல் உயர் கல்வி வாய்ப்புக்களை மேலும் பரவலாக்கினர்.





இலங்கையில் இலவசக் கல்வித் திட்டத்திலிருந்து தேசியக் கல்வித் திட்டம் வரை பதவியிலிருந்த கல்வியமைச்சர்கள் (இடமிருந்து வலம்) கலாநிதி டப்ளியு. தகநாயக்கா, திரு. எம். டி. பண்டா, இலவசக் கல்வியின் தந்தை கலாநிதி சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கரா, தேசியக் கல்வித் திட்டத்தின் தந்தை, கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத், திரு. ரத்னபால (இங்குள்ள அமைச்சர்கள் அனைவருக்கும் உதவிக் காரியதரிசியாகச் சேவை செய்தவர்) மேஜர். ஈ. ஏ. நுகவலே.



இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் முதலாவது ஆண்டுவிழாக் கூட்டத்தில் அதன் தலைவர் கலாநிதி அஸ்ஹார் பதியுத்தீன் மஹ்மூத உரையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

DONATED IN MEMORY OF
Late M/s. V. A. SIVARATNAM,
V. A. SADADCHARAM and
V. A. MANORANJITHAN
24/6/98

# முஸ்லிம் அரசியல் மாநாடு

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் முஸ்லிம்கள் அரசியலில் பின்தள்ளப்பட்டனர். ஆட்சி மன்றத்திலே முஸ்லிம்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. இலங்கையின் பல பாகங்களிலும் சிதறுண்டு வாழ்ந்த முஸ்லிம்களால் தனிப்பட்ட தேர்தற்தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றிபெற முடியவில்லை. இதனை முஸ்லிம்கள் ஆட்சேபித்தனர். ஆனால் பயன் கிட்டவில்லை. அதனைத் தொடர்ந்து உருவானதுதான் அகில இலங்கை முஸ்லிம் அரசியல் மகாநாடாகும். 1939ஆம் ஆண்டு இந்த மகாநாட்டின் செயலாளராக ஜனாப் பதியுத்தீன் பணியாற்றினார். இந்த மகாநாட்டின் மாபெரும் கூட்டமொன்றை ஜனாப் பதியுத்தீன் 1939ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கூட்டினார். ஈழத்து இஸ்லாமியரின் வரலாற்றிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததோர் மகாநாடாகவே அது அமையப்பெற்றது. அகில இலங்கையிலுமிருந்து ஏராளமான முஸ்லிம் பிரதிநிதிகள் அரசாங்கத்துக்குத் தங்களது ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்காக அன்று கூடிவிட்டனர். இந்த மகாநாட்டின் மூலம் இலங்கையின் கவர்னர் முதல் இங்கிலாந்தின் குடியேற்ற நாட்டு மந்திரி, ஏன்! மன்னர் வரையும் முஸ்லிம்களின் உரிமைக் குரலை எத்திவைத்தனர்.

முன்னாள் அமைச்சர் சர். மாக்கான் மாக்கார் தலைமையில் ஜனாப். டி. பி. ஜாயா, டாக்டர் எம். ஸி. எம். கலீல், ஏ. ஆர். ஏ. ராஸீக். ஆகியோரையும் மகாநாட்டில் பங்கு

கொள்ளச் செய்து முஸ்லிம்களின் அரசியல் உரிமைப் பிரச்சனைகளைக் கிளப்பி, பிரேரணைகளைச் சமர்ப்பிக்கவும், அரசியல் உரிமைபற்றிப் பேசவும் வழிசெய்தார் ஜனாப் பதியுத்தீன். அன்றைய தினத்தில் அவர் நிகழ்த்திய உரையானது, இந்த நாட்டு முஸ்லிம்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சிக்கு வித்திடுவதாகவே அமைந்து விட்டது.

1905-ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம்களின் துருக்கித் தொப்பிப் போராட்டத்தை அடுத்து நடந்தேறிய மிகப் பெரிய முஸ்லிம் மகாநாடாகவே இது வர்ணிக்கப்படுகின்றது. இத்தனைக்கும் காலாக இருந்து செயல்வீரம் புரிந்த பெருமை ஜனாப். பதியுத்தீனுக்கே உரியதாகும். இந்த மகாநாட்டைப் பிரதிபலிக்கும் வரலாற்று நூலொன்றையே ஜனாப். பதியுத்தீன் செயலாளர் என்ற முறையில் வெளியிட்டார். மகாநாட்டின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய அதன் பிரதிகளை; இங்கிலாந்தின் மன்னர், குடியேற்ற நாட்டு அமைச்சர், இலங்கையின் கவர்னர் ஆகியோருக்கும் அனுப்பிவைத்தார்.

Proceedings of the all Ceylon Muslim Political Conference, held at the Zahira College on 5th March 1939 on the

Reforms of the constitution compiled and published for and on behalf of the All Ceylon Muslim Political Conference Committee by.

M. N. M. Badiudin B. A. (Hon) M. A. (Aligarh) Hony Secretary, All Ceylon Political Conference Committec 1939 Colombo."

என்ற நூலின் முகவுரையில் ஜனாப். பதியுத்தீன எழுதியுள்ள பின்வரும் உரையையும் நோக்கலாம்.

"இலங்கையில் பிரிட்டிஷாரின் ஆட்சி தோன்றியதிலிருந்து இந்த நாட்டு அரசியல் திட்டத்தில் காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் தோன்றலாயின. 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டம் அமுலாகும் வரையும் இன அடிப்படையிலேதான் அம்மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.



இனவாரியான பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டதனாலும், பெரும் பாலான கல்வியறிவற்ற முஸ்லிம்களின் பிரதிநித்துவம் கேள்விக்குரிய தொன்றாகவும், பரிதாபகரமானதாகவும் மாறிவிட்டது.

இந்த நாட்டிலே தனிப்பட்ட, தனித்துவம் மிக்க ஓர் இனமாகவாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள் 1923 ஆம் ஆண்டின் அரசியல் சட்டப்படி அகில இலங்கைரீதியில் மூன்று முஸ்லிம்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தனர். ஆனால் 1931 ஆம் ஆண்டு அவர்கள் அரசியல் அநாதைகளாகி விட்டார்கள்.

"தொகுதிவாரியாக நடைபெறும் தேர்தல் வெள்ளத்திலே நீந்துங்கள், போட்டியில் வெற்றியீட்டுங்கள். இன்றேல் மூழ்கிமடியுங்கள்" இதுதான் எமக்கு விடப்பட்டுள்ள இன்றையச் சவாலாகும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதியைக் கண்டித்து-அகில இலங்கை ரீதியில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி முஸ்லிம்களது ஆட்சேபனைக் குரலைத் தட்டியெழுப்புவதற்குச் சக்திவாய்ந்த ஒரேயொரு இயக்கமான முஸ்லிம்லீக், அகில இலங்கை அரசியல் மகாநாடு ஒன்றை உருவாக்கியது. இதன் பயனாக 1931-ஆம் ஆண்டு, சக்திவாய்ந்த தூதுக்குழு வொன்றை இங்கிலாந்துக்கு அனுப்பிவைக்க முடிந்தது.

முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அரசியல் அநீதியை இத்தூதுக்குழு இங்கிலாந்தின் உயர் அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறியுள்ளது. அந்தஸ்தும் செல்வாக்கும் படைத்த பத்தாயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் கையெழுத்திட்ட மகஜரொன்றும் குடியேற்ற நாட்டு மந்திரியிடம் கையளிக்கப் பட்டது. இங்கிலாந்தின் உயர் அதிகாரிகளும் நமது சமுகத்துக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளை உணர்ந்து கொண்டதனால் முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உத்தரவாதம் அளித்தனர்.

பின்னர் சர், சாமுவேல் வில்சன் சிங்கப்பூருக்கு முக்கியமான ஓர் அலுவலாகச் செல்லும் வழியில், இலங்கைக்கு

வந்து, டொனமூர் திட்டத்தின் நடைமுறைகளைப் பற்றிய சாட்சியங்களைச் சேகரித்தார். அவ்வாறு நடைபெற்றாலும், முஸ்லிம் சமுகத்தின் இன்றைய நிலையில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. என்றாலும், தாராள மனம்படைத்த சர். எட்வட் இஸ்டப் (Sir Edward Stubbs) முஸ்லிம்களின் மீது கருணை காட்டும் முகமாகத் தற்போதைய அரசாங்க சபைக்கு இரண்டு முஸ்லிம்களை அங்கத்தவர்களாக நியமனஞ் செய்தார்.

சர். அன்றூ கால்டிகட், கவர்னராக வந்ததைத் தொடர்ந்து முஸ்லிம்களிடையே புதியதொரு நம்பிக்கை ஏற்படலாயிற்று. குடியேற்ற நாட்டு மந்திரியும், சர். அன்றுவிடம், அரசியல் திட்டத்தில் செய்யப்பட வேண்டிய புதிய மாற்றங்களை அங்கீகரித்து அனுப்புமாறு வேண்டினார். கவர்னரும், இந்த நாட்டைச் சேர்ந்த எல்லாச் சமுகங்களினதும் அபிப்பிராயத்தைப் பெற்றுக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். ஆனால், அந்த அறிக்கை பிரசுரமான போதுதான், முஸ்லிம்களாகிய நாங்கள் பலத்த ஏமாற்றமடைந்தோம். எதிர்பார்த்த எந்த அம்சமும் அதிற் காணப்படவில்லை. அதனால், முஸ்லிம்களின் அரசியல்வாழ்வே இருள் சூழ்வதாயிற்று. கவர்னரின் அந்தச் செயல்தான் முஸ்லிம்களை மேலும் ஒருபடி செயலில் இறங்கத் தூண்டிவிட்டது. அதனால், பல்வேறுதுறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்த முஸ்லிம் பிரமுகர்கள் ஒருமுகமாக ஒன்று கூடிச் சமுதாயத்தின் நிலையை ஆராயத் தொடங்கினர். அதன் பயனாகவே அகில இலங்கை முஸ்லிம்களின் அரசியல் மகாநாடொன்று, கொழும்பு சாஹிராக் கல்லூரியில் 1939 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5-ஆம் திகதி சர். மாக்கான் மாக்கார் தலைமையில் ஒன்று கூடியது.

1905 ஆம் ஆண்டு நடந்தேறிய துருக்கித் தொப்பிப் பிரச்சனைக்குப் பின்னர், முஸ்லிம்கள் கலந்து கொண்ட இது போன்றதொரு பெருங் கூட்டத்தை எவரும் கண்டிருக்க மாட்டார்கள். பல்வேறு தரப்பட்ட அபிப்பிராயங் கொண்டவர்களும் இந்த மாநாட்டில் காட்டிய உணர்ச்சிமிக்க அரசியல் ஆர்வத்தை மறப்பதற்கில்லை. மக்கள் வெள்ளம் சாஹிராக் கல்லூரியில் நிரம்பி வழிந்தது. கல்லூரி நடைபாதை மூலை முடுக்குகளிலெல்லாம் மக்கள் குழுமி நின்றனர்.



அன்று நடந்தேறிய தலைவர் உரை, பிரேரணைகள், பிரேரணைகளைச் சார்ந்த சொற்பொழிவுகள்; என்பன இந் நூலில் சுருக்கமாக அலசி ஆராயப்பட்டுள்ளன.

இந்த நாட்டு முஸ்லிம்களது அரசியலைப் பற்றி அக்கறையற்று இருக்கின்ற ஆட்சிபீடத்து மேலதிகாரிகளின் பார்வைகளை எங்களது பக்கமாகத்திருப்பச் செய்யும் முயற்சியே இது. எமது இந்த முயற்சியில் தோல்வி காணப்படமாட்டாது.

எம். என். எம். பதியுத்தீன்
செயலாளர்
இலங்கை முஸ்லிம் அரசியல்
மகாநாடு

''ருபானா''
வெள்ளவத்தை.

## மாநாட்டில் ஜனாப். பதியுத்தீன் நிகழ்த்திய உரை

**தலைவர் அவர்களே! பிரதிநிதிகளே! பிரமுகர்களே!**

நிகழ்ச்சி நிரலில் உள்ள நான்காவது பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசுவதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். இதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் எவ்வளவு முக்கியமானவையோ அவற்றைவிட நான் சமர்ப்பிக்கும் பிரேரணையும் மிக முக்கியமானதாகும். அதனால் இந்தப் பிரேரணையும் ஏகமனதாக நிறைவேறுமென நம்புகிறேன். 1905 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முஸ்லிம்கள் ஆயிரக்கணக்காக ஒற்றுமையுடன் ஒன்று கூடியிருப்பது இதுவே முதற்தடவையாகும். அரசாங்கசபையில் முஸ்லிம்களுக்குப் போதியளவு பிரதி நிதித்துவம் பெறுவதை வலியுறுத்து வதற்காகவே இந்த மாநாடு உருவாக்கப் பட்டுள்ளது.

சகோதரப் பிரதிநிதிகளே! நீங்கள் ஈழத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வருகை தந்துள்ளீர்கள். உங்களது மாகாணத்தின் அல்லது பட்டிணத்தின் விஞ்ஞாபனத்துடன் இங்கு அமர்ந்துள்ளீர்கள். நீங்கள் நிச்சயமாகவே சமுதாயத்திற்கு நிறைவேற்றவேண்டிய மிக முக்கியமான கடமையை நிறைவேற்றிவிட்டீர்கள். இந்தப் பலம் வாய்ந்த மகாநாட்டிலே மிகமுக்கியமானதொரு பிரேரணையைச் சமர்ப்பிப்பதில் நானும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப் பிரேரணையைச் சமர்ப்பிக்கும் அதே நேரத்தில் அண்மையில் டைம்ஸ் பத்திரிகையில் வெளியான ஓர் அறிக்கையை ஈண்டுகுறிப்பிட விரும்புகின்றேன். பிரஸ்தாப பத்திரிகை என்னையும், சர். மாக்கான் மாக்காரையும் நாம் எடுத்து வருகின்ற சமூக நடவடிக்கைகளுக்காக "இருவரும் இனத்துவேசத்தைக் கிளப்புபவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளது. அந்தப் பத்திரிகை அதனை ஒரு குற்றச்சாட்டாகக் கூறி விட்டாலும், எனது அரசியற் கருத்துக்களும், நான் கூட்டிய இந்த மகாநாடு பெற்றுவரும் முக்கியத்துவமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே நான் இதனைச் சுருக்கமாக விளக்க முனைந்தேன்.

இரண்டு ஆண்டுகட்கு முன்னர் நான் அலிகாரிலிருந்து திரும்பியபோது, ஒரு பரந்த தேசியவாதி என்பதை வெளிப்படையாகவே காட்டிவந்துள்ளேன். இன்றைய இந்த மகத்தானதும் முக்கிய மானதுமான மகாநாட்டிலும் கூட. நான் ஒரு தெளித்து வடித்த தேசியவாதி யென்பதைத் தான் வலியுறுத்த விரும்புகின்றேன். அலிகார் சர்வகலாசாலையில் நான் பயிலும் போது அங்கு சர்வதேச தேசிய வாதத்தையன்றி வேறு எதனையும் அனுமதிக்கவில்லை. அந்த மனப்பான்மையானது தேசிய வாதத்தைவிடவும் ஒரு படி முன்னேறியதாகும்.

தேசியமென்றால், ஒருநாட்டின் அரசியல் சமுகத்துறைகளில் காணப்படும் குறைபாடுகளைக் கண்மூடித்தனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதல்ல. தேசியமென்றால் ஒரு நாட்டில் வாழும் ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினரது மூலாதாரமான உரிமைகளில் கைவைப்பதற்காக ஊக்கமூட்டுவதுமல்ல. சுயநல ஆதிக்க மனப்பாங்கு கொண்ட ஒருவித மயக்க வெறியினாலே தான் அத்தகையவர்கள் தங்களை நினைத்துக் கொள்ளுகின்றனர். சிறுபான்மையினரின் செலவில் பெரும்பான்மையினர் செய்யும் குறைகளையும், நிறைகளையும் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதும், ஆமாம் போடுவதும் தேசியமல்ல. அவ்வாறு செயற்படுவது தவறான போலித்தனமான தேசப் பற்றாகவே அமையும். ஒருகுறிப்பிட்ட இனத்தாரின் உரிமைகளை மறுப்பதனால் தான் பெரும்பான்மையினர் வாழலாம் என்ற மனப்பான்மையினால் தேசியமென்ற உயரியலட்சியத்தை அடையமுடியாது. அவ்வாறு செய்யும் போது, பின் தங்கியவர்கள் தேசிய சங்கிலியில் பலமற்றவர்களாக இணைவதால்

நமது நாடு அடையவேண்டிய தேசிய இலக்கைச் சென்றடைய முடியாமற் போய்விடும். எனவே இந்த மகாநாட்டின் நோக்கங்களுக்கு அமைவாக நேர்மை, நியாயம், புத்திக் கூர்மை, என்பனவற்றைக் கையாண்டு எனது பூரண ஒத்துழைப்பை நல்குவதற்காக உங்களின் முன்னால் நிற்கின்றேன்.

நான் இந்தியாவில் இருக்கும்போது எல்லாவிதமான வகுப்புவாதச் சக்திகளுக்கும் எதிராகப் போரிட்டேன். ஏற்கனவே அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்த ''அகில இந்திய மாணவசம் மேளனத்திற்கு'' எதிராக ஒரு முஸ்லிம் மாணவ சம்மேளனத்தை ஏற்படுத்தச் சிலர் முயன்றனர், அன்று நான் அதனை எதிர்த்து வெற்றியுடன் நடாத்திய போராட்டத்தைத் திருப்தியுடனும், மகிழ்ச்சியுடனும் இன்றும் நினைவு படுத்த விரும்புகின்றேன்.

ஆகவே முழுமையான சுதந்திரத்திற்காக முயற்சிக்கும் எனது சிங்களக் குடி மக்களுக்கு நானும் அவர்களில் ஒருவன் என்பதை உறுதிப்படுத்தவிரும்புகின்றேன், ஆவலோடு உற்று நோக்குகின்றவர்கள் என்னை ஓர் சட்டபூர்வமான பிரசையாகவும் கலாசார இலட்சியங் கொண்டவனாகவும் ஏற்றுக் கொள்ளலாம். இத்தீவிலுள்ள எமது சமுகத்திலும் என்னிலும் நம்பத்தகுந்த நண்பர்களையும், பண்புமிகு அயலவர்களையும் காணக்கூடியதாக உள்ளது என்பதை இவர்களுக்கு மேலும் தெரிவிக்க விரும்புகின்றேன், இத்தீவின்கண் வாழும் எமது ஆண், பெண் மக்களில் நின்றும் நாட்டுப்பற்றும், அபிமானமும் கோரப்படும் போதும், இத்தீவு ஓர் உன்னதமான சுய கௌரவம் பெற்ற நாடாக உலக சம்மேளனத்தில் திகழவும், என் சமுகத்தவர்களிடமோ, என்னிலோ எந்தவித குறைபாடுகளையும் காணக்கூடியதாக இருக்கமாட்டாதெனவும் உறுதிப் படுத்துகின்றேன். உலகில், இலங்கை ஓர் மகிழ்ச்சியுறும், சந்தோஷமிக்க விருத்திபெற்ற நாடாக அமைவதற்கு எடுக்கப் படும் முயற்சிக்கு ஒரு பகுதியினரால் மாத்திரம் உரிமைகோர முடியாது. சட்டபூர்வமாக ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அதில் இடமுண்டு. ஒளிமயமான எதிர்காலத்தையடைய நான் வேண்டிய தியாகங்களைச் செய்வேன் எனவும், எனது வலிமை



மிக்க சமுகத்தவர்களும் அதற்குப் பின் நிற்கமாட்டார்கள் என்பதையும் உறுதியாகக் கூறவிரும்புகின்றேன். நான் ஒரு தேசியவாதியாகவும், உண்மையான இலங்கைப் பிரஜையாகவும் திகழ்ந்தமையால் அலிகாரிலிருந்து நாடு திரும்பியதும், உதவியற்றுக்கிடக்கும் இந்தநாட்டின் ஒரு பகுதியினருக்கு உதவி நல்கவும், அவர்களை ஒரு சக்திவாய்ந்த அணியாக ஏனைய சமுகங்களுடன் திகழுமாறு அமைக்க வேண்டுமென்ற கடமையுணர்ச்சியுடன் உணர்ந்து பல தடவைகளில், பல மேடைகளில் காலத்திற்குக் காலம் பேச்சுகளை நிகழ்த்தியுள்ளமையை நேர்மையாக ஏற்றுக்கொள்கின்றேன். உதவியற்றுக்கிடக்கும் இப்பகுதியினருக்கு இப்போதே ஒரு தீர்க்கமான முடிவு காணாவிடின் இது இலங்கையின் குறிக்கோள்களை அடைவதற்கு ஒரு தடையாக விளங்கக் கூடும். எனவே இம்மகாநாட்டின் நோக்கத்திற்காகவும் குறிக்கோள்களுக்காகவும், மேலும் இதுவே சிறந்த, கௌரவமான, புத்திசாலித்தனமான முடிவு எனக் கருதி உங்களுக்குப் பூரண ஒத்துழைப்பை நல்குவேனென்று தீர்மானித்துள்ளேன்.

இந்தத்தீவில் முஸ்லிம்கள் மாத்திரமே மற்றெல்லா இனங்களை விடவும் மிகத்தாழ்வான முறையிற் கணிக்கப்பட்டுள்ளனர். கவர்னர்களின் அறிக்கைகளில் முஸ்லிம்களைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஏகாதிபத்தியவாதிகளால் நன்கு கவனிக்கப்பட்டு வரும் ஐரோப்பிய இனத்தவர்கள், தேவைக்கும் அதிகமான அளவு உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கின்றனர். முஸ்லிம்களிலும் பத்திலொரு பங்காக வாழ்கின்ற பறங்கியமக்களுக்கு தேவைக்கும் அதிகமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. அங்குமிங்குமாக வாழுகின்ற இந்தியர்கள் நிரந்தரக் குடிகளான எம்மைவிடவும் சந்தோஷமாக வாழ்கின்றனர். நாங்கள் ஐரோப்பியர்களை விடவோ, பறங்கியர்களை விடவோ எந்தவகையிலும் குறைந்தவர்கள் அல்ல வர்த்தகத்திலும் ஐரோப்பியர்களைவிட நாமே உயர்ந்தவர்கள். இந்த நாட்டு வரலாற்றிலும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள், ஆனால் இன்றைய அரசியலில் நாங்கள் வேடர்களைப் போன்று பின்தள்ளப்பட்டுள்ளோம். ஒரு சமு

கம் நாட்டின் முன்னேற்றத்துக்கு அதன்பங்கை நிறைவேற்ற வேண்டுமானால் அந்தச் சமுகத்துக்குரிய அரசியல் உரிமைகள் வழங்கப்படுவது அவசியமாகும். ஒரு தனிப்பட்டவர் பெருமையுடையவராகவோ, திறமைசாலியாகவோ, தேசாபிமானமுடையவராகவோ இருக்கலாம். ஆனால் அவர் வாழும் சமுகத்துக்குத் தரப்படவேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டால், அந்தச் சமுகத்தில் வாழும் ஒருவர் எத்தகைய திறமைசாலியாக இருந்தபோதிலும் அவர் அதனால் திருப்தி காணமுடியாது. அரசாங்க சபையில் போதிய பிரதிநிதித்துவம் இல்லாத ஒரு சமூகம், ஏனையத் துறைகளில் எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும் நாட்டின் ஏனைய மக்களோடு ஒன்றிணைந்து சமுகமாக வாழ முடியாது. இந்த நாட்டு வருமானத்துக்கு எமது சமுகம் அளித்துள்ள பங்கானது மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் எந்த விதத்திலும் குறைவானதல்ல. எமது முன்னோர் உலகச்சந்தையில் இலங்கையின் பெயரை அறிமுகப்படுத்தியதனால் இந்த நாடு உலக அரங்கில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. மற்றவர்களைப் போலன்றி நாம் இந்த நாட்டிற்கு சமாதானமான முறையில் வர்த்தகர்களாகவே வந்தோம். இந்தநாட்டுக்கு நம்பிக்கையுடையவர்களாகவே வாழ்ந்தோம். ஏனைய சமுகங்களைவிட நாம் இந்த நாட்டுக்கு நட்பும், பணிவும் காட்டி சட்டத்திற்கு மதிப்பளித்து வந்துள்ளோம்.

நபிகள் பெருமானாரின் காலத்துக்கு முன்னர் எமது அராபிய முன்னோடிகள் இலங்கையுடன் வியாபாரத்தொடர்பு கொண்டிருந்தனர். அதனால்- இந்த நாட்டுடனான எமது வரலாற்றுத் தொடர்பு சிங்கள மக்களைப் போன்றே மிகத் தொன்மையானதாகும். ஏனையோரைப் போலன்றி சிங்கள மக்களுடன் நாம் தோளொடு தோள் சேர்ந்து இந்த நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் தேசியப்பற்றுடனும் ஒற்றுமை மனப்பான்மையுடனும் வாழ்ந்து வந்துள்ளோம். நம் முன்னோர் அளித்துள்ள அரும்பெரும் கலாசாரப் பெருமைகளை நாம் எப்பொழுதும் காப்பாற்றியாகவேண்டும். உலக ஜனநாயக வளர்ச்சிக்கு இஸ்லாத்தின் பங்கு மகத்தானதாகும். இஸ்



லாமிய ஜனநாயக அடிப்படையிலேதான், உலக ஜனநாயகமும் சகோதரத்துவமும் உருவாகியுள்ளது. எமது கலாசார மத நம்பிக்கைகளினால் நாம் இந்த நாட்டில் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுள்ளோம். அதனால் நாட்டின் அரசியலிலும் நாம் முக்கியத்துவம் பெறுவது அவசியமாகும். அதற்காக விசேட கவனிப்பும் மேலதிகப் பிரதிநிதித்துவமும் நாட்டின் அரசியல் அமைப்பில் எமக்குக்கிடைத்தேயாக வேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்தில் எமது பங்கை உரியமுறையில் நிறைவேற்றி வைக்கமுடியும், இதுவே நமது நம்பிக்கையும் உணர்வும் ஆகும்.

இஸ்லாத்தின் தோற்றமும், வளர்ச்சியும் இந்தநாட்டின் சமுக அரசியல் பொருளாதார வளர்ச்சியிலும், விஷேடமாக வர்த்தகத் துறையிலும் முக்கிய பங்கைப் பெற்றுள்ளதால்- அப்படியான ஓர் இனத்தின் உரிமையைப் பற்றிப் பேசுவதற்காக அரை டசின் அல்ல, அதற்கும் அதிகமான தொகையினரைத் தூதுக்குழுவாக இங்கிலாந்துக்கு அனுப்பிவைப்பது எமக்குக் கஷ்டமானதொரு காரியமல்ல. எமது அரசியல் உரிமை பறிக்கப்பட்டதன் பின்னர் எமக்குச் செல்வமும், அந்தஸ்தும் இருந்து என்னபயன்?

சகோதரர்களே! இழந்துவரும் உரிமைகளை மீண்டும் பெற வேண்டுமாயின் இங்கிலாந்துக்கு ஒரு தூதுக்குழு அனுப்புவது முக்கியமானதாகும் - அப்பொழுதுதான் இம்மகாநாட்டின் நோக்கமும் பூர்த்தியடையும். இது நடைபெறாவிட்டால் எமது கோரிக்கைகளும் அர்த்த மற்றதாகி விடும். இன்று பதவி வெறியில் இருப்பவர்களும், மேலதிகாரிகளின் உத்தரவின்றேல் - எமது கோரிக்கைகளுக்குச் செவிமடுக்கப் போவதில்லை. நான் கூறுகின்ற அதிகாரிகள் இன்று இங்கிலாந்திலே இருக்கின்றார்கள்; இலங்கையில் அல்ல. எமது சிங்கள நண்பர்கள் எமது குறைகளைப்பற்றி அனுதாபங் காட்டினாலும், இதுவரை எமக்காக எங்கும் பரிந்து பேசியதைக்காணவில்லை. புதிய அரசியல் சட்டவிவாதங்கள் நடக்கின்றன. அதில் உள்ளவாறே யாவும் நடைபெறுகின்றன. ஆனால் முஸ்லிம்களின் போராட்டம் தனிமையாக நடந்து கொண்டிருக்கின்றது.

### ஜனுப் பதியுத்தீனின் பிரேரணை

"முஸ்லிம் அரசியல் மகாநாட்டின் தீர்மானங்களை இலங்கை கவர்னரின் மூலமாக குடியேற்ற நாட்டு மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வரும் அதே நேரத்தில் கவர்னரைச் சந்தித்து எமது குறைகளை விளக்குவதற்காக ஒரு தூதுக்குழுவைத் தெரிவு செய்யவும் இந்தக் கோரிக் கையை மேலும் பலப் படுத்துவதவற்காக குடியேற்ற நாட்டு மந்திரியை நேரிற் கண்டு, இந்த நாட்டு முஸ்லிம்களின் குறை பாடுகளை விளக்கிக் கூற இன்னொரு தூதுக்குழுவையும் தெரிவு செய்வது அவசியம்."

பிரேரணை ஏகமனதாக நிறை வேறியது. காலியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜனுப் ஏ. எம். சஹீத் இந்தப் பிரேரணையை ஆமோதிக்ககக் கண்டியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜனுப். ஏ. எம். எஸ். மரிக்கார் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

ஜனுப் பதியுத்தீன் அவர்களின் பேச்சிலே தென்பட்ட உயர்வான கருத்துக்களிலிருந்தே அவரது அரசியல் உணர்வை அறியலாம். அத்துடன் முஸ்லிம்கள் எந்த அளவுக்கு அரசியலில் மகத்துவம் பெறவேண்டும் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளார்.

### அரசியல் ஆர்வம்

காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைத் தமது இளமைப் பருவத்திலிருந்தே மதித்து நடக்கமுற்பட்டார். 1925 ஆம் ஆண்டில் கொழும்பு ஸாஹிராக்கல்லூரியில் மாணவத் தலைவராக இருந்தபோதே திரு. பண்டாரநாயக்காவை அழைத்துவந்து மாணவர்மன்றத்தில் பிரசங்கஞ் செய்யவைத்தார். அதிலிருந்து மலர்ந்த நட்பு இரு தலைவர்களிடத்திலும் வளர்ந்து வருவதாயிற்று.

1938 ஆம் ஆண்டில் காலியில் வைத்து இலங்கைக்குச் சுயாட்சி கிடைக்கப்போவதாகவும் சிங்களம் இந்த நாட்டின் ஆட்சிமொழியாக மாறிவிடும் என்றும் அதனல் முஸ்லிம்கள் சிங்களம் படிக்க வேண்டும் என்றும் கூறியபோது இலங்கை






1956-ஆம் ஆண்டு ஐ. நா. சபைக்கு இலங்கையின் பிரதிநிதியாக அனுப்பப்பட்ட கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் நியூயோர்க் நகரில் விமானத்தில் இருந்து இறங்கும்போது எடுக்கப்பட்ட படம். ஐ. நா. சபைக்கு இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் பிரதிநிதி.



தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத்.

யர் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. இலங்கைக்கு வந்தபின்னரும் தாம் கலந்து கொண்ட பலகூட்டங்களில் இதனைக் கூறிவந்துள்ளார். எனினும் பலர் அவரது கூற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது முண்டு.

முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பேணிக் காப்பதில் மும்முரமாக உழைத்து வந்த போதிலும், இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்களுடன் சேர்ந்தே தமது உரிமைகளைப் பாதுகாக்க முன் வரவேண்டுமென்பதை இவர் ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளார். இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னரும் இதனையே வலியுறுத்தி வந்தார். ஸர். அன்று கால்டிகற் இலங்கையின் கவர்னராக இருந்தகாலத்தில் அவர் இலங்கை மந்திரி சபையின் வரவு செலவு திட்டமொன்றை ஏற்க மறுத்து விட்டார். அதனைச் சிங்கள மக்கள் எதிர்க்கமுற்பட்டவர். திருவாளர்கள் டி. எஸ். சேனநாயக்கா, C. W. W. கன்னங்கர, D. B. ஜயதிலக்கா. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் உட்பட அமைச்சரவையிலிருந்த அங்கத்தவர்களும் தமது பதவிகளை ராஜினுமாச் செய்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் ஐம்பதுக் கைம்பது கோரிக்கையும் வலுவடைந்து காணப்பட்டது. முஸ்லிம்களின் ஒருபகுதியினர் கவர்னரின் செயலை ஆதரிக்கும் நிலையிலிருந்தனர். திரு. பண்டாரநாயக்கா முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவதற்காக ஜனுப். பதியுத்தீனின் உதவியையும் நாடினுர். பெரும் பான்மையினர் நடத்தும் பொதுக்கூட்டத்தில் பேசும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டார். இதனுல் இரு சமுகங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தும் ஆபத்தானநிலை உருவாகியது. இந்தப் பெரும் பிரச்சினையில் தலையிட்ட ஜனுப். பதியுத்தீன் முஸ்லிம்களின் நடவடிக்கைகளினுல் ஏற்படப் போகின்ற நிலைமையினை விளக்கிச் சமுக ஒற்றுமையை நிலைநாட்டும் பொருட்டு முஸ்லிம்களைக் கட்சிச்சார்பற்ற நிலையில் இருக்கச் செய்தார். ஜனுப். பதியுத்தீனும் எந்தவிதமான பிரசாரக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளப் போவதில்லையெனத் திரு. பண்டாரநாயக்காவிடம் கூறினுர்.



# ஸ்ரீநகரில் உரை

**1940** ஆம் ஆண்டு ஜூலைமாதம் இந்தியாவில் காஷ்மீர்—ஸ்ரீநகரில் நடந்த சுயேற்சைச் சிந்தனையாளர் சங்கத்தின் அழைப்பின்பேரில் ஜனாப். பதியுத்தீன் அங்கு சென்று ''இலங்கைவாழ் இந்தியர்கள்'' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவாற்றினார். அதனால் இலங்கைவாழ் இந்திர்யகளின் உண்மையான பிரச்சனைகளை விளக்கிக்கூறினார். இந்தியர்கள் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ள முன்வராத காரணத்தினாலே தான்; இலங்கையருக்கும் இந்தியர்களுக்கு மிடையே தப்பான அபிப்பிராயங்கள் உருவாகியுள்ளன என்பதை சில ஆதார பூர்வமான உண்மைகளுடன் விளக்கிக் காட்டினார். 'காஷ்மீர் டைம்ஸ்' என்ற பத்திரிகை வெளியிட்ட அவரது பேச்சின் சுருக்கத்தையும் நோக்குவோம்.

''ஒரு மகோன்னதமான கலாசாரத்தின் வாரிசுகளாகவே இந்தியர்கள் இலங்கையில் வாழ்கின்றனர். அந்தச் சிறப்புப் பொருந்திய கலாசாரத்தின் புனிதத்தன்மையைத் தாங்களும் பெற்றுக் கொள்ளவே இலங்கையரும் விரும்புகிறனர்.''

செல்வி மஹ்மூதா அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஸ்ரீநகர் சுயேச்சையாளர் சங்கக் கூட்டத்தில் ஈழத்துத் தலைவர்களுள் ஒருவரான ஜனாப். எம். என் எம். பதியுத்தீன் மேற்கண்டவாறு கூறினார். சுமார் ஒரு மணித்தியாலமாக 'இலங்கைவாழ் இந்தியர்கள்' என்ற தலைப்பில் ஜனாப். பதியுத்தீன் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது— .....



....''இந்த விடயத்தையிட்டுப் பல தவறான கருத்துக்கள் நிலவுகின்றன என்பதை நான் ஆரம்பத்திலேயே கூறிவைக்க விரும்புகின்றேன். சிங்களவர்கள் இந்தியர்களை வெறுக்கின்றார்கள் என்று இங்கு பொதுவாகக் கூறப்படுகின்றது. உண்மை அதற்குமாறானதாகும். இந்தியர்களை நாங்கள் ஒருபோதும் வெறுக்கவில்லை. ஆனால் அவர்களின் சில மனப் போக்குகளைத் தான் வெறுக்கின்றோம். பொருளாதார குறிக்கோளே அதற்கு முக்கியகாரணமாகும். உங்கள் நாட்டின் செல்வங்களை வெளிநாட்டார் கைப்பற்றுவதை நீங்கள் எப்படி விரும்பமாட்டீர்களோ அவ்வாறே இலங்கையரும் தமது செல்வத்தை வெளிநாட்டார் கைப்பற்றிச் செல்வதை விரும்பமாட்டார்கள். இலங்கையின் முழுநிர்வாகமும் இலங்கையரின் கைக்கே மாற வேண்டும் என்று எண்ணுகின்ற இலங்கையர் அந்த நன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ண மிருக்கின்றனர். சிங்களவரின் மூதாதையர் மகத நாட்டிலிருந்து வந்தவர்கள். அவர்களது தாய்மொழி சமஸ்கிருதத்தைத் தழுவியுள்ளது. தமது அரசியல், கலாசார, சித்தனைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் இந்தியர்களைப் போலவே இருக்கின்றனர்.

இந்தியர்களின் சில போக்குகள் இலங்கையரால் வெறுக்கப்படுகின்றன தென்றால் அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தமது சொந்த நாட்டவர்களை அல்லாது வேறு எவரையும் இந்திய வியாபாரிகள் வேலைக்கு அமர்த்த விரும்புவதில்லை. வியாபாரத்துறையில் இலங்கையர் பின்தள்ளப்படுகின்றார்கள். இது ஒருவகையான கழுத்தறுப்பு வேலையைப் போன்றதாகும். விசேட தினங்களில் சிங்கள வியாபாரிகள் தமது கடைகளை மூடும்போது இவர்கள் அவ்வாறு செய்வதில்லை. மாறாக நடு நிசிவரையில் வியாபாரஞ் செய்வார்கள். இந்திய வியாபாரிகள் பெரிய வருமானத்தைப் பெற்றாலும் அந்த நாட்டின் தேசிய நலனுக்கான விடயங்களிற் செலவு செய்ய முன்வருவதில்லை.

ஹரப்பா, மொஹஞ்சதாரோபோன்ற சிறப்புவாய்ந்தகலாசாரப் பாரம்பரியப் பொக்கிஷங்களைக்கொண்ட நாடு இந்தியா. அகில உலகுக்கும் பயனளிக்கக்கூடிய தார்மீகத் தத்துவங்களை

இந்தியர்கள் பெற்றுள்ளார்கள். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் சென்று வாழும் மக்கள் அந்த நாட்டுச் சூழலுக்கு ஏற்ற முறையில் தங்கள் போக்குகள் சிலவற்றையாவது மாற்றிக்கொள்ள வேண்டியேற்படும். இதைச் செய்வதற்கு இலங்கையிலுள்ள இந்தியர்கள் தவறிவிட்டார்கள். தம்மைத் தாமே குறைவாக மதிப்பிட்டுக்கொண்டு அதற்கேற்ப நடக்கின்றனர். 'கால்பேஸ் பெரமவுண்ட்' பூங்காவில் உலவும் இந்தியர்கள் தமது உடைகளைத் தக்கமுறையில் அணிந்து வராத காரணத்தினால், மாலைமயங்கும் வேளையிலே காற்று வாங்க வரும் இலங்கையின் நங்கையர்கள் அந்தப் பூங்காவில் இந்தியர்கள் நுழைவதைத் தடைசெய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளதை நாம் அறிவோம்.

பிரித்தானிய சாம்ராச்சியத்தின் ஏனைய நாடுகளிலும் இந்தியர்கள் சரியானமுறையில் வழிநடத்தப் படவில்லை. மலேயா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலுள்ள இந்தியர்களின் நிலைமை எங்களுக்குத் தெரியும். தாம் சென்றடையும் சூழலுக்கேற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ளாததே அவர்களின் தற்போதைய நிலைக்குக் காரணமாகும்.

## இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளரின் பிரச்சினை

இலங்கைக்குத் தேவையான தொழிலாளர்கள் தென் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படுகின்றனர். இலங்கைத் தொழிலாளரை கூலிக்கு அமர்த்துவதைவிட இந்தியத் தொழிலாளரை வருவித்து வேலைக்கமர்த்துவது இலாபகரமானது என்பதை ஐரோப்பியத் தேயிலைத்தோட்டச் சொந்தக்காரர்கள் நன்கு அறிந்துள்ளனர். குறைந்த சம்பளத்தில் கூடிய அளவு வேலை செய்யக் கூடியதாகவும்—மலிவாகவும் இந்தியர்கள் தருவிக்கப்படும் வரையில், சிங்களவரிடையே வேலையில்லாப் பிரச்சினை இருக்கத்தான் செய்யும். எங்கள் தேயிலை, றப்பர், தோட்டங்களைச் செழுமையாக்க இந்தியத் தொழிலாளர் பாடுபட்டு உழைத்துள்ளனர். எனினும் சிங்களத் தொழிலாளர்கள் தங்களது உரிமைகளை விட்டுக் கொடுப்பார்களென்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்படுவது நிறுத்தப்படவேண்டுமென இலங்கை அரசியல் வாதிகள் விரும்புகின்றனர். அப்பொழுதுதான் இலங்கையரை வேலைக்கமர்த்த ஐரோப்பியத் தோட்டச் சொந்தக்காரர்களும் முன்வருவார்கள்.

"இந்தியர்களுக்கு வாக்குரிமையளித்தால் அவர்களைக் கைப் பொம்மையாக்கிக் கொண்டு—அவர்களது வாக்குப் பலத்தால் ஐரோப்பியத் தோட்டச் சொந்தக்காரர்கள் சட்டசபையில் இடம் பிடித்துக் கொள்வார்கள்" என்ற பயத்தினால்தான் இந்தியர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகின்றது. அப்படியானதொரு நிலமை உருவாகினால் அது இலங்கையின் நலனுக்குப் பாதகமாய் அமையும். எங்கள் சொந்தநாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு எடுத்துள்ள இந்த முடிவுகளைவிட வேறு எந்தப் பிணக்கும் இலங்கை இந்தியர்களுக்கிடையே கிடையாது.

"தங்களது மனப்போக்குகளை மாற்றிக் கொள்ளும்படி இலங்கையிலிருக்கும் இந்தியர்களை நான் வேண்டிக்கொள்ளுகின்றேன். ஏதோ ஒரு நாட்டுக்கு—இலங்கைக்கோ இந்தியாவுக்கோ விசுவாசமுடையவர்களாய் இருக்கவேண்டும். இரண்டு நாட்டிலும் கால்வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. எங்களைச் சகோதரர்களாகப் பாவிக்கவேண்டும். எங்கள் வாழ்க்கையின் சுக துக்கங்களோடு அவர்களும் இணைந்துவிட்டால் அன்பும் பாசமும் நிச்சயமாக அவர்களுக்குக் கிடைக்கும்................"

இவ்வாறாக இந்த நாட்டு அரசியலில் பல துறைகளிலும் ஜனப். பதியுத்தீன் தமது கருத்துக்களை எடுத்துக்காட்டியும், விளக்கியும் வந்துள்ளதைக் காணலாம்.

1951 ஆம் ஆண்டு இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதியதொரு திருப்பம் ஆரம்பமானது. திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிப் புதியதொரு கட்சியை அமைக்க முன்வந்தார். திரு. பண்டாரநாயக்கா, ஜனப். பதியுத்தீன், ஸ்ரீ நிஸ்ஸங்கா, திரு. ஜயசூரியா ஆகியோர் ஒன்று கூடி புதிய கட்சிக்கான

கொள்கைத் திட்டங்களை வகுக்க முற்பட்டனர். நீண்டநாள் நண்பரான திரு. பண்டாரநாயக்கா அரசியலிற் புதியதோர் திருப்புமுனையை உருவாக்குவதற்காக முதன்முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் ஜனுப். பதியுத்தீன் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. நாட்டு மக்களினதும், விசேடமாக முஸ்லிம்களினதும் முக்கியமான பிரச்சனைகளைக் கருத்திற்கொண்டே புதிய அரசியல் உருவாக்கத்துக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க ஜனுப் பதியுத்தீன் முன் வந்தார்.

இந்தச் சூழ்நிலையில் தான் ஐ. தே. கட்சியின் அமைச்சரவையின் ஓர் அங்கத்தவராக இருந்த ஜனுப். டி. பி, ஜாயா பாக்கிஸ்தானுக்கு இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்ருர். ஜனுப். ஜாயா பாக்கிஸ்தானுக்குச் செல்வதற்கு முன்னர்; ஜனுப் பதியுத்தீனைச் சந்தித்து தமது நியமனம் பற்றிக் கூறினர். ஆனல் ஜனுப். பதியுத்தீன், ஜாயா அவர்கள் பாக்கிஸ்தான் செல்வதை விரும்பவில்லை. ''வெளிநாட்டுக்கு உயர் ஸ்தானிகராகச் சென்று அரசாங்க ஊழியம் புரிவதைவிட சொந்த நாட்டு முஸ்லிம்களுக்கே உங்களது சேவை; இன்றையச் சூழ்நிலையில் அவசியமாகத் தேவைப்படுகின்றது.'' என்ருர். அவர் அவ்வாறு கூறியதற்கான காரணத்தையும் பின்வருமாறு விளக்கினர். ''முஸ்லிம்களின் உரிமைகளைப்பற்றிப் பேசுவதற்கு அமைச்சரவையில் இருக்கின்ற ஒரே ஒரு முஸ்லிம் பிரதிநிதியாகிய நீங்கள் வெளிநாடு சென்று விட்டால் இலங்கை முஸ்லிம்கள் அரசியல் அநாதைகள் ஆக்கப்படுவார்கள். அதனல் அரசியற் பலமற்ற ஒரு சமுதாயமாக முஸ்லிம் சமூகம் மாறிவிடும்.'' இவ்வாறு தமது கருத்தைத் தெரிவித்த ஜனுப். பதியுத்தீன் ஜனுப். ஜாயா எடுக்கப்போகும் முடிவையும் எதிர்பார்த்தார். அப்பொழுதான் ஜனுப். ஜாயா அவர்கள் கூறிய பின்வரும் கருத்துக்கள் ஜனுப் பதியுத்தீனுக்கு ஆறுதலை அளித்தது. ''திரு. டி. எஸ். சேனநாயக்கா அவர்கள், நான் பாக்கிஸ்தான் சென்றதும் டாக்டர் எம். ஸி. எம். கலீல் அவர்களை அமைச்சராக்குவதாக எனக்கு வாக்குறுதி தந்துள்ளார்'' அதன் பின்னர்தான் ஜனுப். பதியுத்தீன், ஜனுப். ஜாயா அவர்களின் விருப்பத்துக்கு இணங்கலானர். எனினும் ஜனுப். ஜாயா பாக்கிஸ்தான் சென்றதன் பின்னர் அவரால் காலியான அமைச்சர் பதவிக்கு டாக்டர் கலீல் உடனடியாக நியமிக்கப்படவில்லை. ஜனுப். ஜாயாவினல் காலியான தொழிலமைச்சு திரு. எம். டி. பண்டாவுக்கு வழங்கப்பட்டது. ஆறுமாதங்களின் பின்னர் திரு. சி. சுந்தரலிங்கம் அமைச்சர் பதவிலிருந்து வெளியேறினர். அப்போதாவது டாக்டர் கலீல் அமைச்சராக்கப்படலாமென்று முஸ்லிம்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனல் அந்தப் பதவியும் திரு. எச். டபிள்யூ. அமரசூரியாவுக்கு வழங்கப்பட்டது. இதனல் 1952 ஆம் ஆண்டுவரை அமைச்சரவையில் முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமலிருந்தது. இதற்கிடையில் பொதுத்தேர்தலும் நெருங்கலாயிற்று. ஐக்கிய தேசியக் கட்சி குறைந்த அளவான பெரும்பான்மையுடன் இருந்ததனல்; எப்பொழுதும் முஸ்லிம்களது ஆதரவுடன் கட்சிப் பலத்தை வலுப்படுத்திக் கொள்வது இயல்பு. இதனல் செல்வாக்குப் படைத்த பலர் முஸ்லிம் லீக்கின் ஒத்துழைப்பினல் முஸ்லிம்களைத் தம்பக்கமாக இழுத்துக்கொள்ளவும் அதனல் அன்றைய ஆட்சியாளருக்கு ஒத்துழைப்பை அளிக்கவும் முன்வந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் லீக்கின் கூட்டங்களும் அடிக்கடி இயங்க ஆரம்பித்தன. ஒரு முறை அழைப்பில்லாமலே ஜனுப். பதியுத்தீன் லீக்கின் ஒரு கூட்டத்துக்கு சமுகமளித்தார். தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கம்பளை நகரிலிருந்து அழைப்பின் பேரில் சென்றிருந்த அன்பர்களைக் கண்டபோது அவருக்கு வியப்பாக இருந்தது. தமக்கு அழைப்புக்கிட்டாதபோதும் தமக்குரிய உரிமையைப் பயன் படுத்தி கூட்டத்துக்குச் சமுகமளித்தார். அன்றைய நிகழ்ச்சி நிரலைப் பார்வையிட்டார். முஸ்லிங்களின் முக்கிய பிரச்சனையாகவிருந்த அமைச்சர் நியமனம் பற்றி எதுவுமே காணப்படவில்லை. அதுபற்றி ஆட்சேபனையொன்றை ஜனுப் பதியுத்தீன் கிளப்பினர். டாக்டர் கலீலை அமைச்சராக நியமிக்க வேண்டுமென்ற பிரேரணையொன்றைச் சமர்ப்பித்துப் பேசிய ஜனுப். பதியுத்தீன் ''அரசாங்கம் இந்த இயக்கத்தை ஆதரிக்குமாயின் இந்த நாட்டின் முஸ்லிம்களின் முக்கிய குறைபாடான அமைச்சர் நியமனத்தை உடனடியாக நிறைவேற்றி வைக்கவேண்டும், இன்றேல் இந்த இயக்கம் அரசாங்கத்துக்கு அளிக்கும் ஒத்

துழைப்பை வாபஸ் பெறவேண்டும்'' என்றார்; அவரது கோரிக்கை அங்கீகரிக்கப்படாததால் தாம் புதிதாகச் சேர்ந்துள்ள கட்சியின் கொள்கைகளை விளக்கியவராக — ''நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து உங்களது சொந்த நன்மைக்காக ஒரு பக்கமாகச் சுழற்றிக் கொண்டிருக்கும் அரசியற் சக்கரத்தை நான் மறுபக்கமாகச் சுற்றுத வரையில் மௌனத்தாக மாட்டேன்'' என்று கூறி அவ்விடத்தை விட்டும் வெளியேறினர்.

## அவர் சுற்றிய அரசியற் சக்கரம்

முஸ்லிம் இயக்கங்கள் தம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய கட்சிக்கு ஒத்துழைப்புத்தர முன் வராததையிட்டு ஜனுப். பதியுத்தீன் கவலை கொண்டார். எனினும் தனிமையாகவேனும் அந்தஅரசியல் போராட்டத்தில் ஈடுபாடு கொள்ளத் துணிந்தார். ''எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் போடவேண்டாம். கூடை பலம் வாந்ததாக இருந்தாலும் கீழே விழுந்து விட்டால் முட்டைகள் நொருங்கிவிடும். பல கூடைகளில் போடுவதே பாதுகாப்பாக இருக்கும்''என்று கூறிய வண்ணம் தமது கட்சிக்கான பிரசாரத்தை ஆரம்பித்தார்.

முஸ்லிம்களைப் புதிய கட்சிக்கு இழுப்பதற்கு முன்பே திரு. பண்டாரநாயக்காவுடன் தமது சமுகத்தின் குறைபாடுகளை விளக்கி, அவற்றை நிவர்த்திப்பதற்கான வாக்குறுதிகளையும் பெற்றுக்கொண்டார். அதன்பின்னரே புதிய அரசியற் கட்சியின் கொள்கைத் திட்டத்திற்கு தாமே முதலாவதாகக் கையெழுத்திட்டபோது ''உங்களை விடப் பெரிய சிநேகிதன் எனக்கு வேறு யாருமே இல்லை. எமது வெற்றியின் முதற்படியே உங்கள் கையெழுத்தாகும்.'' என்று கூறிய வண்ணம் திரு. பண்டாரநாயக்கா உள்ளப் புளகாங்கிதமடைந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப மகாநாடு கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் நடந்தேறியபோது, ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி அமைப்புப் பிரேரணையை ஸ்ரீ நிஸ்ஸங்கா முன்மொழிய ஜனுப். பதியுத்தீன் வழிமொழிந்தார். அன்றே பிரஸ்தாப கட்சியின் இணைச்செயலாளர்களில் ஒருவராக ஜனுப். பதியுத்தீன் தெரிவு செய்யப்பட்டார்.



1952 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது ஜனுப். பதியுத்தீன் முஸ்லிம்கள் மத்தியில் தமது பிரசாரத்தை ஆரம்பித்த போதிலும், முஸ்லிம்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில் அவர் பூரண வெற்றிகாணவில்லை. எனினும் சுதந்திரக்கட்சி ஒன்பது ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டதால் பாராளுமன்றத்தின் இரண்டாவது பெரிய கட்சியாக மாறித் திரு. பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித்தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். ஜனுப் பதியுத்தீன் தமது கட்சியின் பிரசார இயக்கத்துக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார். அப்போது கட்சிக்காகத் தனியான வசதிபடைத்த காரியாலயம் எதுவும் இருக்கவில்லை. தமது சொந்த இல்லத்திலிருந்தே சகல திட்டங்களையும் வகுக்கலானார். கட்சிப் பிரமுகர்கள் அடிக்கடி அவரது இல்லத்துக் கோடினர். திட்டங்களையும் வகுத்தனர். இந்த உண்மையை 1972 ஆம் ஆண்டு ஜுலை 8ந் திகதி கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் நடந்தேறிய அகில இலங்கை ஸ்ரீலங்கா சுதந்திரதோட்டத் தொழிலாளர் யூனியனின் 14வது வருடாந்த மகாநாட்டில் உரையாற்றியபோது உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன பின்வருமாறு குறிப்பிட்டார்.

''கம்பளை ஸாஹிராக்கல்லூரி அமைந்துள்ள இந்தப் பூமியை ஒரு புனித பூமியென்றே நான் கூறுவேன். இதே பூமியில்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வித்திடப்பட்டுச் செடியாகி, மரமாகி இன்று பயன்தரு தருவாகக் காட்சிதருகின்றது. சமுதாயத்தை உருவாக்கும் திட்டங்கள் இந்த இடத்திலிருந்து உருவாக்கப்படாமலிருந்தால் சுதந்திரக் கட்சியின் சேவை இந்த நாட்டுக்குக் கிடைத்திருக்க மாட்டாது. நாங்கள் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இங்கு வந்திருக்கமாட்டோம். சோஷலிஸத்தின் புதுமையான முன்னேற்றங்களையும் இந்த நாடு அடைந்திருக்கமாட்டாது. சுதந்திரக் கட்சியின் புதிய அங்கத்தவர்களுக்கு நான் இதனை இன்று ஞாபகமூட்ட விரும்புகின்றேன். இத்தனைக்கும் காலாக விளங்கியவர் நமது மதிப்புக்குரிய கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் என்பதை அவர் இந்தக் கூட்டத்தில் இல்லாமலிருந்தபோதிலும் நான் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.'' பிரதமர் ஸ்ரீமாவோ பண்

டாரநாயக்காவின் தலைமையில் பல அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொழிற்சங்கவாதிகளும் கலந்துகொண்ட அந்த மகாநாட்டில் அமைச்சர் இலங்கரத்தினா அவ்வாறு பேசியபோது பலத்தகரகோஷத்தின் மத்தியிலே அதனை அனைவரும் ஆரவாரத்துடன் ஏற்றுக்கொண்டனர். பிரதமர் தமது அன்றைய பேச்சின்போது இந்த உண்மைகளை வலியுறுத்தி அவற்றை மேலும் விளக்கிக்கூறினார்.

இவ்வாறெல்லாம் கட்சியின் நலனுக்காக உழைத்ததனால்தான் 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவருமே எதிர்பாராத அளவுக்குப் பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றி, இந்த நாட்டின் அரசியல்துறையிலே புதியதொரு சகாப்தத்தை உருவாக்கியது.

1956-ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சி அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக ஜனாப். பதியுத்தீன் நியமன அங்கத்தவராக அழைக்கப்பட்டார். அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்ட அவர் அமைச்சர் தெரிவுக் குழுவில் ஒரு முக்கிய உறுப்பினராகமட்டும் கலந்து கொண்டார். ''எனது சமுகத்தின் நலனை முன்னிட்டே அன்று நான் அமைச்சர் பதவியை குர்பான் கொடுத்தேன்.'' என்று அவர் அடிக்கடி கூறிவந்துள்ளதும் நினைக்கதக்கதே. தாம் போற்றி வளர்த்துவரும் ஸாஹிராக் கல்லூரியை மேலும் ஒருபடி உயர்த்தவும், தமது சமுதாயத்தின் உரிமைகளைக் கௌரவமாக அரசாங்கத்துக்கு வெளியேயிருந்து பெற்றுக்கொள்ள உழைப்பதுமே மேலானதென அவர் எண்ணினார். அதனால் அவரது ஆலோசனையின் பேரில் அப்போதைய பாராளுமன்றத்தின் சபாநாயகராக ஜனாப். எச் எஸ். இஸ்மாயிலும் தபால்வானொலி அமைச்சராக ஜனாப். சீ. ஏ. எஸ். மரிக்காரும் நியமனம் பெற்றனர்.

முஸ்லிம்களின் கல்வித்துறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகக் கல்வியமைச்சர் திரு. டபிள்யூ. தஹநாயக்காவின் மூலமாகத் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள முன்வந்தார். இவரது சுயநலமற்ற பண்பு இங்கு பிரதிபலிப்பதைக் காணலாம்.



முஸ்லிம்களின் கல்வித்துறையில் ஏற்படுத்தவேண்டிய மாற்றம் தொடர்பாக இருபத்தாறு கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றை திரு. டபிள்யூ. தகநாயக்கா கல்வியமைச்சராகப் பதவியேற்ற இரு வாரகாலத்தில் சமர்ப்பித்தார். அந்த மகஜர் சம்பந்தமாக விளக்கம் கூறுவதற்கு ஜனாப்கள். எம். எம். அகமது எஸ். எம். ஏ. ஹஸன், எம். ஸீ. எம். ஸாலிஹ் ஆகியோரையும் தம்முடன் கல்வியமைச்சுக்கு அழைத்துச் சென்றார். மகஜர் சமர்ப்பித்த அன்றே கோரிக்கைகளிற் பெரும்பாலனவற்றை கல்யியமைச்சர் தகநாயக்கா நிறைவேற்றிவைத்தார். அவற்றுள் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

(1) ஐம்பது வீதத்துக்கு அதிகமான முஸ்லிம்கள் கல்வி பயிலும் பாடசாலைகளை 'முஸ்லிம் பாடசாலைகளென அழைக்கப்படல் வேண்டும். (ஸர். ராசிக் பரீத் அவர்களுடைய முயற்சியால் ஒரு காலத்தில் ஐம்பது வீதத்துக்கதிகமான முஸ்லிம்கள் பயின்ற பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாக மாற்றியமைக்கப்பட்டிருந்தன. எனினும், 1956 ஆம் ஆண்டுக்கு முந்திய அரசாங்க காலத்தில் அத்திட்டம் எழுபத்தைந்து வீதமாக உயர்த்தப்பட்டிருந்ததும், அதனை ஸர். ராசிக் பரீத் அவர்களும், ஆசிரிய சங்கங்களும் ஆட்சேபித்துவந்திருந்ததும் ஈண்டுகுறிப்பிடத்தக்கது.)

(2) முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம்களையே தலைமையாசிரியர்களாக நியமித்தல்.

(3) முஸ்லிம் அதிகாரி ஒருவரின் பராமரிப்பில் முஸ்லிம் பாடசாலைக்கான தனிப்பிரிவொன்றை உருவாக்கல்

(4) முஸ்லிம் வித்தியாதரிசிகளின் தொகையை அதிகரித்தல்.

(5) கூடுதலான முஸ்லிம்களை ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்தல்.

(6) முஸ்லிம் பெண் ஆசிரியைகள் நியமனத்தில் விசேட சலுகைகள் வழங்குதல்.

(7) மூன்று மாத சேவையுள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்சியின் போது முழுச்சம்பளம் வழங்குதல்.

(8) முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயங்களுக்கு அதிக அளவிலான மாணவ மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளல்.

(9) பெரிய முஸ்லிம் பாடசாலைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மவுலவிகளை நியமித்தல்.

(10) முஸ்லிம் பாடசாலைகளுக்கான கட்டட வசதிகளை அதிகரித்தல்.

இவைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டதோடு, ஏனைய கோரிக்கைகளையும் படிப்படியாக நிறைவேற்றிவைப்பதாக திரு. தகநாயக்கா ஜனாப் பதியுத்தீனுக்கு அன்றுவாக்குறுதி யளித்தார்.



# வழிகாட்டும் திட்டம்

இலங்கை முஸ்லிம்களின் சமூக சன்மார்க்க கலாசாரப் புனருத்தாரண வளர்ச்சியைக் கருத்திற் கொண்ட ஜனாப். பதியுத்தீன் 22-1-1957ல் பத்தாண்டுத் திட்டமொன்றை வெளியிட்டார். அத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

இலங்கையில் இஸ்லாமிய சமுகம் சிறுபான்மையிலும் சிறுபான்மைச் சமுகமாய் அமைந்துள்ளமையை எவரும் அறிவர். முஸ்லிம்களாகிய நாம் இந்த நாட்டின் பல பாகங்களிலும் சிங்களவர், தமிழர் ஆகியோர் மத்தியிலே சிதறுண்டுகிடக்கின்றோம். எனினும். ஏனைய சமுகங்களோடு சென்ற பலநூற்றாண்டுகளாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளதோடு எங்களது மதக் கட்டுப்பாட்டையும் கலாசாரத்தையும் சீர்குலையாமல் காத்தும் வளர்த்தும் வந்துள்ளோம். ஆனால் இன்று சுதந்திர இலங்கையிலே மற்றும் சமுகத்தார் மின்னல் வேகத்தில் முன்னேறுகையில், நம் சமுகம் ஆதரவற்ற அனாதைபோல் வீழ்ச்சியை எதிர்பார்ப்பதா? நாம் மதச்சட்டதிட்டங்களை மதியாது சமூகக் கட்டுப்பாட்டைப் பேணாது வாழ்க்கை நடத்துவோராக இருப்பதா?

இனியாவது பேச்சளவில் மட்டும் நிற்பதைவிட்டு, நிலையான பயன்தரும் செய்கையளவில் திரும்பி, உண்மையை உணர்ந்து, திட்டம் வகுத்து எமது சமுகம் ஏனைய சமுகங்களைப் போன்று கௌரமாக உயர்நிலையிலிருக்க ஆவனசெய்யவேண்டியது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

## இலங்கை முஸ்லிம்களின் பரிதாப நிலை

அறிவுபடைத்த எந்த முஸ்லிமும், சமூகம் எல்லாத் துறைகளிலும் பிற்போக்கடைந்து போகிறதென்பதை மறுக்க முடியாது. ஏகத்துவத்தின் அடிப்படையில் இயங்கும் இஸ்லாம் ஏனைய மத அறிஞர்களாற் கூடப் பகுத்தறிவுக்கேற்றமார்க்கம், புத்திக்கும் யுக்திக்கும் தகுந்தமார்க்கம், என்றெல்லாம் போற்றப்பட்ட சன்மார்க்கம்—இன்று அறியாமையாலும், அனுச்சாரத்தாலும், மூடநம்பிக்கையாலும் ஆழ்த்தப்பட்டதுபோல் காட்சியளிக்க வில்லையா?

உலகிற்கே ஒரு நாகரிகத்தை, புதுக்கலாசார அடிப்படையில் புகுத்தி ஓர் உன்னதமான வாழ்க்கை முறையையும் வகுத்துக் கொடுத்த எமது சமூகம் இன்று பிற்போக்கான சமூகமென்று ஏனையோர் நகைத்துச் சிரிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. அன்பின் ஆசனமாகவும், அறிவுச்சுடர் பரப்பி மக்களைப் பண்படுத்திய மத்தியஸ்தலமாகவும் இருந்த எமது மஸ்ஜிதுகள், இன்று சண்டை சச்சரவு மலிந்த இடமாகவும், சுயநலம் குடியிருக்கும் சுகஸ்தலங்களாகவும் மாறிக்கொண்டே போகின்றன. இஸ்லாத்தை அமானிதப் பொருளாகக் காப்பாற்றும் அரும் பெரும் பொறுப்புடைய உலமாக்கள்; இன்று சமூகத்தினால் இழிவாகக் கருதப்படும் ஒரு கூட்டமாகவும் வேறுவழியின்றி யாசகம் கேட்கும் நிலையை அடைந்துவிட்ட கும்பலாகவும் மாறிக்கொண்டேபோகின்றனர்.

இஸ்லாத்தின் இளஞ்சிறுர்களோ, வழிகாட்டி வளம்படுத்தவும் உணர்ச்சியூட்டி ஊக்குவிக்கவும் ஆளின்றி மனம்போன போக்கில் சென்று கொண்டிருக்கின்றனர். இவை நம் சமூகத்தினுள் தலைவிரித்தாடும் குறைகளிற் சில. இப்போதாவது நமது குறைகளை நீக்கி முஸ்லிம்களைத் தட்டியெழுப்பித் தீவிரமாக ஆவனசெய்யத் தவறிவிடுவோமாயின் மிகக்குறுகிய காலத்தில் நாம் சமுகக்கட்டுப்பாடற்ற அனுஷ்டானமற்ற அனாதைச் சமுகமாக ஆகிவிடுவோம் என்பதில் சந்தேகமில்லை.





அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத்
1950-ஆம் ஆண்டு புனித மக்காவில் வைத்து



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உருவான இல்லம் இதுதான்.
கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் அவர்களின்
கம்பளை இல்லமிது.

## தலைவர்களும் சமுதாயமும்

எமது சமுகத்தின் இன்றையத் தலைவர்களோ, அரசியற்தலைவர்களாகத் திகழ்கின்றார்களேயன்றி மதத்தலைவர்களாகத் திகழவில்லை. இவர்களும் அரசாங்கத்திடமிருந்து ஏதோ ஒருசில நன்மைகளைப் பெறுவதிலே கவனஞ்செலுத்தி வருகிறார்களே தவிர நமது சமுகத்தின் உரிமைகளுக்காகப் போராடுவதாகவோ, அல்லது சமுக முன்னேற்றத்துக்கான ஒரு திட்டத்தை வகுக்க முற்படுவதாகவோ தெரியவில்லை. இஸ்லாம், சமுக அடிப்படையில் அமைந்த ஒரு சமயம். சமூகம் சீரழியாதவண்ணம் பாதுகாப்பது தலைவர்களின் கடமை. இப்பொழுதுதாவது நமது தலைவர்கள் இஸ்லாமிய சமுக உடம்பினுள் புதைந்துள்ள புற்றுநோயை அறுத்தெறிந்து சமுகத்துக்கு விழிப்புணர்ச்சி ஊட்டி இஸ்லாமிய நெறிமுறைகளை நிலைநாட்ட முன்வருவார்களென சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

## சமுகமும் உலமாக்களின் பங்கும்

சமுகத்தின் முதுகெலும்பு போன்ற உலமாக்களின் நிலையைச் சற்று ஆராய்வோம். ஏழு அல்லது எட்டு வருடங்களுக்கு அல்லும் பகலுமாக மதுரசாக்களிலே குர்ஆன், ஹதீஸ், பிக்ஹூ போன்ற பாடங்களைப் படித்து ''ஆலிம்'' ''மவுலவி'' பட்டங்களுடன் திரும்புகிறார்கள். ஆனால் இவர்களுக்குரிய அந்தஸ்தையும் ஆதரவையும் நம் சமுகம் கொடுக்கிறதா? இல்லை. அதற்குக் காரணம் என்னவென்று நாம் சிந்திக்கவேண்டும்.

இக்காலத்துக்கு ஏற்றவாறு மதத் தத்துவங்களை மக்களுக்கு எடுத்தோதும் தகுதியோ சமுகத்துக்குத்தக்க வழிகாட்டத் தேவையான ஆற்றலோ, உலகியலறிவோ இவர்களுட் பலருக்குப் போதியளவு இல்லாமலிருக்கின்றது. பாடசாலைகளிற் சேவையாற்றிவரும் மவுலவிகளோ மாணவர்கள் கேட்கும் மதசம்பந்தமான கேள்விகளுக்குச் சாஸ்திரரீதியான ஆதாரபூர்வமான பதில்களைக் கொடுத்து அவர்களின் சந்தேகங்[illegible] தீர்க்கவும் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். [illegible]ளிகளிலோ பேஷ்இமாம்களாலும், கதீபுகளாலும் நிகழ்த்தப்படும்

கொத்பாப் பிரசங்கங்கள் காலநிலைக்கேற்பனவாகவோ அல்லது உணர்ச்சியூட்டத்தக்கனவாகவோ அமையவில்லை. இவர்களது பொருளாதரநிலை மிகவும் பரிதாபகரமாக இருப்பதால் வாழ்க்கையை நடாத்துவதற்கு, 'பாத்திஹா' 'கத்தம்' போன்றவைகளை ஓதி இருபத்தைந்து, அல்லது ஐம்பது சதம் சம்பாதிக்கவேண்டியிருக்கின்றது. இந்நிலையில் இவர்கள் சமுகத்தின் கௌரவத்தையும், செல்வாக்கையும் பெறமுடியாதவர்களாய் இருக்கின்றனர். எனவே இந்த நிலைமாறவேண்டும் சமுகத்தின் உயர்ச்சியும், வீழ்ச்சியும், வாழ்வும், தாழ்வும், இவர்களைப் பொறுத்தே நிற்கின்றன. இவர்களுக்குத் தேவையான பயிற்சியை அளிப்பதும் சமுக சேவையைத் திறம்படச் செய்யப் பக்குவப் படுத்துவதும் சமுகத்தின் கடமையல்லவா?

## மாணவர்களும் மதக் கல்வியும்

இக்கால முஸ்லிம் மாணவர்கள் இஸ்லாமிய மதப்பண்பாட்டை விட்டு வெகுதூரம் விரைந்து செல்லக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றனர். முஸ்லிம்களின் வீடுகளிலும், மாணவர்களுக்கு முற்காலத்தைப்போன்று மதக்கல்வியும் இஸ்லாமிய நெறிமுறைகளும் புகட்டப்படுவதும் இல்லை. பாடசாலைகளும், கல்லூரிகளும் இஸ்லாமியக் கொள்கைகளும் கோட்பாடுகளும் கலைகளும், பண்பாடுகளும் பயிலத்தக்க வசதிகள் அளிப்பதும் அருமை. எம்மிடையே தோன்றியுள்ள சிற்சில ஸ்தாபனங்களும், சங்கங்களும் இவ்விளைஞர்களுக்குப் பேருணர்வை ஊட்டி எழுச்சியுறச் செய்யும் அரும்பணியில் தக்க கவனம் செலுத்துவதாகவும் தெரியவில்லை. அறிவு வளர்ச்சியின் காரணமாக இவர்களின் உள்ளங்களிலே புரட்சிகளுடன் எழும் சந்தேகங்களைத் தக்க ஆதாரத்துடன் பகுத்தறிவுக்கு ஏற்றவாறும் தீர்க்க ஆற்றலுடைய உலமாக்களும் நம்மிடையே குறைவாக உள்ளனர். இந் நிலையில் இம்மாணவர்கள், ஒழுக்கமற்ற சந்தேகப்பேர்வழிகளாக, நாஸ்திகப் புயற்காற்றில் சிக்குண்டு நசிந்து மலைக்கின்றனர். இவர்கள் நேர்வழி தவறிப்போகாமல் பாதுகாப்பதும், உண்மை முஸ்லிம்களாக வாழவேண்டியன செய்து உதவுவதும் சமுகத்தின் பொறுப்பன்றோ,



## எமது பெண்மணிகள்

சமீபகாலம்வரை முஸ்லிம் பெண்மணிகள் பிள்ளைபெறும் இயந்திரங்களாகமட்டும் கருதப்பட்டு, வீடுகளிலே அறியாமையின் சின்னங்களாகக் காட்சியளித்து வந்தனர். பெண்கள் கௌரவமாகவும் கண்ணியமாகவும் வாழக் கல்வி அத்தியாவசியம் என்பதை, இன்று உணரத் தொடங்கியதோடு, முஸ்லிம் பெண்களும் ஏனையப் பெண்களோடு கல்வித்துறையிலே போட்டியிட முன்வந்து கொண்டிருக்கின்றனர். இதனைக்கண்டு நான் சந்தோஷப்படுகின்றேன். ஆனால் வருங்கால இஸ்லாமிய சமுகத்தின் வளர்ச்சியும் முன்னேற்றமும் இவர்களில்தான் தங்கியிருக்கின்றன. 'பெண்ணின் மடியிலே இறையன்பு வளர்கின்றது' என்று அறைகூவுகின்றார் கவிஞர் அல்லாமா இக்பால். எதிர்கால முஸ்லிம் இளைஞர்களைப் பண்புபடைத்த மதப் பற்றுள்ள முஸ்லிம்களாக்கும் பொறுப்பு இவர்களுடையதே. ஆதலின் முஸ்லிம் பெண்மணிகளை இஸ்லாமிய புத்துணர்ச்சி ததும்பச்செய்து, பெண்ணின் பெருமையையும், தாய்மையின் உயர்வையும் நன்கு உணர்ந்த விலைமதியா மாணிக்கங்களாய் ஜொளிக்கச் செய்யவேண்டிய வசதியளிப்பதும் சமுகத்தின் கடமையன்றோ?

## முஸ்லிம்களும் அரசாங்க பாஷையும்

இலங்கையில் சிங்களம் அரசாங்க பாஷையாக இடம் பெற்றுவிட்டது. பெரும்பாலான மாணவ மாணவிகள் தங்களது பாடங்களனைத்தையும் சிங்களப் பாஷையில் கற்கவேண்டிய நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. இற்றைவரை பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் மதப் போதனைகள், தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோதான் நிகழ்த்தப்பட்டுவந்தன. ஆனால் வெகுசீக்கிரத்தில் சிங்களப் பாஷையிலும் மதப் பாடங்கள் கற்பிக்கப்பட நேரிடலாம். இதுவரை, இதற்குத்தேவையான புத்தகங்களை நாம் வெளியிடவும் இல்லை. வெளியிட எந்த முயற்சியும் எடுத்ததாகவும் தெரியவில்லை. மேலும் சென்ற ஆயிரம் வருடங்களுக்கு மேல் இலங்கையிலே சிங்களவர் மத்தியிலே

வாழ்ந்து வந்தும், நமது மார்க்கத்தையும் கலாசாரத்தையும் அவர்களுக்கு எடுத்துக்காட்ட ஏதேனும் ஒருசில இஸ்லாமியப் புத்தகங்களையாவது அப்பாஷையில் வெளியிட முன்வராதது மிகமிக விசித்திரமாகவே இருக்கிறது. இந்தப் பிரச்சினையும் நமது சிந்தனையில் இடம் பெறவேண்டும்.

## நாம் செய்ய வேண்டியன :-

இலங்கையில் நாம் சுயமரியாதையுடனும் கண்ணியத்துடனும் வாழவேண்டுமானால், நம் வாழ்க்கையிலே சமயப்பற்றும் ஒழுங்கும் ஏற்படவேண்டும். 'தௌஹீதின்' ஒளிவீசும் உள்ளங்களுடன் நம் சமூகத்தைத் தட்டியெழுப்பிக் கட்டுபாடுள்ள சமூகமாய் அமைக்கப்பேருணர்வுடன் சமூகப்பற்றுள்ள முஸ்லிம்கள் அனைவரும் முன்வரவேண்டும். எங்கள் மத்தியிலே மதவுணர்ச்சியுள்ள இளைஞர் சமூகப் புனருத்தாரணத்திற்காகத் திரள்திரளாக வீறுகொண்டு முன்வந்து பங்கெடுக்க வேண்டும். முஸ்லிம் இல்லங்களிலே அறிவுடனும் மதப்பண்பாட்டுடனும் எமது பெண்மணிகள் திகழவேண்டும். மஸ்ஜிதுகளெல்லாம் எம்பிரான்(ஸல்) காலத்திலும், குலபாயேராஷிதீன்கள் காலத்திலும் அறிவின்பீடமாகவும், கலை, கலாசாரப் பண்புகளின் இருப்பிடமாகவும் இருந்தது போன்று மாற்றியமைக்கப்படல் வேண்டும். நமது கலாசார நோக்கிலும் நம்பிக்கை நடைமுறைகளிலும் உணர்ச்சி ததும்பச்செய்யும் திருத் தொண்டர்களாக எமது உலகமக்கள் எங்கும் மிளிரவேண்டும். சமூக எழுச்சியும் மலர்ச்சியும் தங்களிலும் தங்கியிருக்கின்றன என்ற உண்மையை எங்களது பணக்காரப் பெரியார்கள் உணர்ந்து சமூக முன்னேற்றத்துக்கான சேவைகளைச் செய்யத் தாராளமாகப் பண உதவி செய்ய முன்வரவேண்டும். நமது சமூகம் அன்பும், ஆற்றலும் படைத்த பெருந்தலைவர்களோடு ஏனைய சமூகத்தினருக்கு முன் மாதிரியாகத் திகழவேண்டும்.

## எமது திட்டம்

எங்களது இலட்சியம் நிறைவேற வேண்டுமாயின் இன்றே நாம் ஓர் உருப்படியான, உயரிய திட்டமொன்றை வகுத்துச்



செயலாற்ற வேண்டும். " என் மார்க்கத்தைப் பிரமுகர்களுடையவும், உலமாக்களுடையவும் பொறுப்பில் விட்டுச் செல்கிறேன்" என்பது நபிபெருமானாரின் திருவாக்காகும். சமூக உணர்ச்சியும், தியாக குணமும் உடைய பல பணக்காரர்கள் சமூகச் சீர்திருத்த அமைப்புத் திட்டத்தில் பங்கெடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அந்த மகத்தான திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர நம்மிடையே மத அறிவுடன், உலக அறிவும் கொண்டு திறம்படச் செயலாற்றும் திறமையுடைய உலமாக்கள் தேவை. இப்பணியைத் திறம்படச் செய்து முடிக்க முன்வருவதே சமூகத்தின் முதற்கடமை. முதலில் இதற்காக உலமாக்கள் மத்திய பயிற்சிக் கலாசாலை (Central Training College for Ulama) நாம் ஸ்தாபிக்க வேண்டும். (காலஞ்சென்ற அல்ஹாஜ் என். டீ. எச். அப்துல் கபூர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கபூரிய்யா மதரஸாவின் அருகிலே இந்த ஸ்தாபனத்தையும் அமைக்க,ஒரு நிலத்தை அப்துல்கபூர் அவர்களின் குடும்பத்தார் இடமளித்தால் பேருதவியாக இருக்கும்.) மவுலவிப் பட்டம் பெற்று வருவோருக்கு மத்திய கலாசாலையில் மூன்று வருட காலத்துக்குப் பயிற்சியளிக்க வேண்டும். அங்கு இஸ்லாமிய சரித்திரம், கலாசாரம், உலகியலறிவு, பலமத ஒப்பு நோக்கு, பேச்சுவன்மை, பேச்சுப் போட்டி ஆகியவைகளில் மாணவர்கள் தேர்ச்சி பெறச் செய்தல் வேண்டும். பயிற்சி முடிவில் நடைபெறும் பரீட்சையில் வெற்றி பெறுவோருக்குத் தராதரப் பத்திரம் (Diplomas) வழங்கப்படல் வேண்டும். இக்கலாசாலையில் பட்டம் பெற்றவர்களையே வருங்காலத்தில் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், மத போதகர்களாகவும், பள்ளிகளிலே பேஷ் இமாம்களாகவும், சன்மார்க்கப் பிரசாரர்களாகவும் நியமிக்க வேண்டும்.

பெரிய மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் பேஷ் இமாம்களுக்கும், கதிபுகளுக்கும் ரூபாய் 300க்குக் குறையாத மாதச் சம்பளமும், சிறிய மஸ்ஜிதுகளிலுள்ளோருக்கு ரூபாய் 200க்குக் குறையாத மாதச் சம்பளமும் கொடுத்து, அவர்களுடைய பொருளாதார நிலையை உயரச் செய்தல் வேண்டும். 'பாத்திஹா', 'கத்தம்' ஓதி வாழ்க்கை வருவாயைப் பெற்று வரும்

நிலை மாறினாலொழிய, அவர்களின் அந்தஸ்து மேம்பாடு அடைய வழியில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

நமது பள்ளி 'முஅஸ்ஸின்'கள் கோழியறுத்துப் பிழைக்கும் நிலை மாற வேண்டும். வருங்கால முஅஸ்ஸின்கள் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவும், மேற்சொன்ன கல்லூரியில் இரு வருட கால பயிற்சி பெற்றவர்களாகவுமிருக்க வேண்டும். இவர்களுக்கு ஏனைய பாடங்கள் கற்பிக்கப்படுவதோடு, மஸ்ஜிதுகளைத் திறம்பட பரிபாலனஞ் செய்யப் புதுமுறை நிர்வாகமும் கற்பிக்கப்படல் வேண்டும். இவர்களை ரூபாய் 150க்குக் குறையாத மாதச் சம்பளம் பெறும் நிர்வாகக் குமாஸ்தாக்களாகப் பள்ளிவாசல்களில் நியமித்தல் வேண்டும்.

மேலும் இக்கலாசாலையில் பயிற்சிபெற்ற உலமாக்களைமதப் பிரசாரத்திற்காக இலங்கையின் எல்லாப் பாகங்கட்கும் அனுப்ப ஆவன செய்தல் வேண்டும். இவர்கள் தப்லீக் கோஷ்டியினருடன் ஒத்துழைத்துத் தனி மனித வாழ்விலும், பொது வாழ்விலும் இஸ்லாமிய நெறிமுறைகள் வேரூன்றி நிலைக்கத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். இவை மட்டுமின்றிக் காலஞ்சென்ற 'அட்வகேட்' ஜனாப் எம். எச். ஏ. அப்துல் அஸீஸ் அவர்களால் நிறுவப்பட்ட அஹதிய்யாப் பாடசாலைகளுக்குப் புத்துயிரளித்து, உயர்நிலையடையச் செய்யும் வேலையில் இவர்களிற் சிலரை நியமித்தல் வேண்டும்.

## முஸ்லிம் சமூகப் புனருத்தாரண நிதி

மேற்சொன்ன திட்டத்திற்கான ஒரு நிதியைத் திரட்ட வேண்டும். 'ஸகாத் முதல்' இதற்கு உதவியாய் இருப்பதோடு, தற்போதைய வக்புச் சட்டமும் பக்கபலமாக இருக்கும். மேலும் அரசாங்கத்திடமிருந்து கலாச்சார மந்திரி வாயிலாகவும் உதவிபெற முடியுமென்பது எமது திடமான நம்பிக்கை.

## அகில இலங்கை முஸ்லிம் மகாநாடு

முஸ்லிம் சமூக புனருத்தாரணத்திற்காக முதற் பத்து வருடத் திட்டம் வகுத்து, மேற்சொன்ன உலமாக்கள் பயிற்சிக்



கலாசாலையை நிறுவ, அகில இலங்கையிலுள்ள எல்லா முஸ்லிம் மக்களின் ஆதரவையும் கொண்ட ஒரு மகாநாட்டைக் கொழும்பில் அதிக தாமதமின்றிக் கூட்ட வேண்டும். இம் மகாநாட்டில் எம் சமூகத்தில் எதிர்நோக்கியிருக்கும் எல்லாப் பிரச்சினைகளையும் பரிசீலனை செய்து செயலாற்றும் தீர்மானங்களை நிறைவேற்றி, நடைமுறைக்குக் கொண்டுவர வழியையும் தேட வேண்டும்.

**அல்லாஹ் எங்களது இலட்சியத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற நல்லருள் புரிவானாக! ஆமீன்.**

# குடியரசு ஆதரவு மாநாடு


இலங்கைவாழ் முஸ்லிம் மக்கள், ஸ்ரீலங்கா குடியரசாகப் பிரகடனப்படுத்துவதை முன்னிட்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும்பொருட்டும், ஸ்ரீலங்கா குடியரசின் முதலாவது பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களுக்கு வரவேற்பு நல்குவதற்கும் கூடிய வைபவத்தில் 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மீ 30-ஆம் தேதியன்று கல்வியமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் கொழும்பு மருதானைப் பள்ளிவாசல் மைதானத்தில் நிகழ்ந்த மாபெருங் கூட்டத்தில் ஆற்றிய உரை. இக்கூட்டத்தில் இலங்கையின் நாலா பாகத்திலிருந்தும் அரை லட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் கலந்துகொண்டார்கள்.

### தலைமையுரை

ஸ்ரீலங்கா குடியரசின் முதலாவது பிரதம மந்திரி அவர்களே! கௌரவ அமைச்சர்களே! மாண்புமிக்க வெளிநாட்டுத் தூதுவர்களே! கௌரவ விருந்தினர்களே! முஸ்லிம் சகோதர சகோதரிகளே! பெரியோர்களே!

நமது நாட்டின் சரித்திரத்திலேயே முதற்தடவையாக, நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள், ஸ்ரீலங்கா குடியரசாகப் பிரகடனப்படுத்துவதற்காக தமது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காகவும், ஸ்ரீலங்கா குடியரசின் முதற் பிரதமராகிய திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களுக்கு





கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் சிரேஷ்ட புதல்வர் கமாலுத்தீன் இர்ஷாத் உயர் கல்விக்காக ஜெர்மன் சென்றபோது, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து எடுத்த படத்தில், (இடது பக்கத்திலிருந்து) மனைவி பாத்திமா மஹ்மூத், மகள் செல்வி வசிமா, கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத், மகள் செல்வி நுஸ்ரத், இளைய மகன் ஜமாலுத்தீன் தாரிக், மூத்த மகன் கமாலுத்தீன் இர்ஷாத் ஆகியோர் காணப்படுகின்றனர்.



இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் கட்சிபேதமின்றி அகில இலங்கை ரீதியில் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் தலைமையில் இலங்கைக் குடியரசின் முதலாவது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களைப் பாராட்டுமுகமாகக் கூடிய பிரம்மாண்டமான மாநாட்டில் பிரதமர் பேசிக்கொண்டிருக்கிறார். மேடையில், சர். ராசிக்பரீத், டாக்டர் எம். ஸி. எம். கலீல் ஆகியோரும் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

பாராட்டுக் கூறவும் கூடியுள்ள இத்தருணத்திலே உங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கைவாழ் முஸ்லிம் மக்களின் வரலாற்றிலே இன்று மிக முக்கியமான ஒரு நாள். இன்று இலங்கை முழுவதும் வாழ்கின்ற முஸ்லிம்கள், தங்கள் சமுதாயத்தின் சொந்த நலன் கருதி மட்டும் கூடியிருக்கவில்லை. ஒரு தேசிய வைபவத்திற்காகக் கூடியிருக்கிறார்கள். இன்று நாங்கள் சுதந்திர, தன்னுதிக்கமுள்ள குடியரசு மக்களாக கூடியிருக்கிறோம். எங்கள் விவகாரங்களைச் சுதந்திர குடிமக்களாய், நாமே ஒழுங்கு செய்யக்கூடியவர்களாய் இருக்கின்றோம். அந்நிய ஆட்சியின்கீழ் நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனமாக நாங்கள் இனி ஒருபோதும் இருக்கமாட்டோம். இந்த அடிமைச் சங்கிலிகளை நாம் அறுத்துவிட்டோம். எனது மார்க்கமான இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளும், அமரதத்துவங்களுமே எனது சிந்தனையைத் தூண்டி, வளப்படுத்தி, வளர்த்து வந்திருக்கின்றன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ''ஹுப்புல் வதன் மினல்ஈமான்'' என்றார்கள். தன் நாட்டை நேசிப்பது ஒருவரின் மார்க்கக் கடமைகளில் ஒன்றாகும் என்பது இதன் கருத்து. ஆகவே தேசப்பற்று சமயத்தின் கோட்பாடுகளில் ஒன்றினைப்போல் இஸ்லாத்தில் கருதப்படுகிறது.

## இஸ்லாத்தில் தேசியம்

ஒவ்வொருவரின் தேசியமும், அவர்களின் புவிஇயல், சமூக, வரலாற்றுப் பொருளாதார தனித்துவங்களுக்கு ஏற்பவே அமையும். தேசிய உணர்வின் முதலாவது அடிப்படை அந்நிய ஆட்சியை அகற்றுவதாகும்! இது இஸ்லாத்தின் கோட்பாடுகளுக்கும், பண்பாட்டு சமுதாய உணர்வுகளுக்கும் ஏற்றதாகும். இஸ்லாத்தின் நவீன மறுமலர்ச்சிக்கு ஏற்றதுமாகும். தற்கால உலகிலே, முஸ்லிம்கள் தங்களுடைய தேசிய தனித்துவத்தை நிலைநாட்டியதற்கு உதாரணங்களாக, ஒல்லாந்தரை விரட்ட இந்தோனேஷிய முஸ்லிம்களும், பிரான்ஸியரை விரட்ட சிரியா, மகாரிப் முஸ்லிம்களும், ஆங்கிலேயரை விரட்ட இந்திய முஸ்லிம்களும் பாடுபட்டதைக் கூறலாம். இவைகளைப்போன்றே

கிரேக்கரைப் பின்னடையச் செய்ய துருக்கியர்களின் தாக்குதலும், ஏகாதிபத்திய நட்பு வட்டாரங்களை முறியடிக்க ஈரானிய மக்களின் முயற்சியும், தேசியத்துக்கு புத்துயிரூட்டும் முயற்சிகளாகும். சில தேசிய இயக்கங்களின் ஆரம்பக் கட்டங்களில் மார்க்கத் தலைவர்கள் முக்கியமான வழிகாட்டிகளாய் இருந்திருக்கிறார்கள். ஜமால்உத்தீன் ஆப்கானி ஒவ்வொரு நாட்டினதும் தேசிய உணர்வுகளைத் தூண்டினார். எகிப்தில் ஷேக் முகம்மத் அப்து அவர்களும், இந்தியாவில் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்களும், இந்தோனேஷியாவில் அகமத்தஹ்லான் அவர்களும் தேசிய உணர்வுகளை வளர்த்தார்கள், ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் வாழ்ந்த முஸ்லிம்களின் எழுச்சியும், அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலையடைவதற்காக அவர்கள் புரிந்த மகத்தான முயற்சியும், நம் நாட்டைப் பாதிக்காமல் விடவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம்கள் தமது குடியரசுக்கு விசுவாசமும், கடமை உணர்வும் காட்டுவதில் எவருக்கும் சற்றும் குறைந்தவர்களல்லர். பிறந்த நாட்டின்மீது முஸ்லிம்கள் பற்று வைத்தல் அரசியலில் புதுமையான சம்பவமல்ல. முஸ்லிம்களின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் அது எல்லாக் காலங்களிலும் காணக்கூடியதாய் இருக்கின்றது.

## வரலாறு

ஆதலின் சற்றே வரலாற்று நினைவுகளைத் தூண்டலாமென்று நினைக்கின்றேன். ஸ்ரீலங்காவில் வாழும் முஸ்லிம்களின் வரலாற்றுப் பின்னணியைக் கூறுவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களென நம்புகிறேன். நமது நாட்டை அந்நிய ஆட்சிப்பிடியிலிருந்து விடுவிப்பதற்காக நடத்தப்பட்ட சுதந்திரப் போராட்டத்தில், 16ஆம் நூற்றாண்டு முதலே போர்த்துக்கேயருக்கு எதிராக முன்னின்று போராடியதன்மூலம் முஸ்லிம்கள் பங்குபற்ற ஆரம்பித்தார்கள்; இலங்கை முஸ்லிம்கள் துணிவோடும், வீரத்தோடும், உறுதியோடும், ஒற்றுமையோடும், போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடினார்கள். கோட்டை மன்னனான ஏழாம் புவனேகு பாகு போர்த்துக்கேயரிடம் சுமுகமாக நடந்துகொண்டதினால் முஸ்லிம்கள், மன்னனின் தம்பியும் மாபெரும் போர் வீர



னுமான மாயதுன்னையின் படையில் சேர்ந்து அந்நிய ஆட்சியை ஒழிப்பதற்காகப் போராடினார்கள். யுத்தகளத்திலே உருவான இந்தச் சிங்கள முஸ்லிம் ஒற்றுமை வரலாற்றின் சிறந்ததோர் இடத்தை வகிக்கின்றது. இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி கே. டபிள்யூ. குணவர்தன அவர்கள் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நிலவிவந்த நல்லுறவு போர்த்துக்கேயரின் கொடுமையினால் மேலும் பலப்படுத்தப்பட்டதெனக் கூறுகிறார். சிங்கள மன்னர்கள் பலம்வாய்ந்த அந்நியர்களோடு நட்பாக நடிப்பது நல்லதெனக் கருதியபொழுதும் கூட, நாட்டு மக்கள், முஸ்லிம்கள் உட்பட, அந்நியர்களை எதிர்த்தே நின்றார்கள். தன்னுடைய அதிகாரத்தை ஏற்க மறுத்த போர்த்துக்கேயரோடு போர் தொடுக்க ஏழாம் விஜயபாகு மன்னன் முடிவு செய்தபொழுது முஸ்லிம்களின் உதவியை நாடினான்.

முஸ்லிம்களால் தரப்பெற்ற உதவி போர்த்துக்கேயர்களின் கவனத்தை சிங்களப் படைகளிடமிருந்து திசைதிருப்பியது. முஸ்லிம் துப்பாக்கி வீரர்கள் சிங்களப் படைகளிடம் இல்லாத ஒரு குறையை நிவர்த்தி செய்தார்கள். இலங்கை தேசியப் பொருட்காட்சிசாலைகளின் அரசாங்க இனநூல் ஆய்வாளரான திரு. எம். டி. இராகவன் அவர்களும், இலங்கை முஸ்லிம்கள் போர்த்துக்கேயருக்கு எதிராகக் காட்டிய பகைமையையும், எதிர்ப்பையும்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அக்கால இலங்கை முஸ்லிம்கள் காட்டிய ஒற்றுமை உணர்வும், ஒரே நோக்கும் நாட்டுப் பணியில் ஒரு முக்கிய அம்சமாய் அமைந்துள்ளது. போர்த்துக்கேயர்களை வெளிப்படையாய் எதிர்த்தவர்கள் இலங்கை முஸ்லிம்கள் மட்டுமே. 1636ஆம் ஆண்டு கண்டி இராசசிங்கனின் பலமும், ஒல்லாந்தரின் பலமும் ஒன்றுசேர்ந்து போர்த்துக்கேயரை நாட்டைவிட்டுத் துரத்தியபோது முஸ்லிம்களும் அதில் பெரும் பங்கு கொண்டனர். முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பாராட்டிய இராசசிங்க மன்னன் கண்டியிலே முஸ்லிம்கள் குடியேறுவதற்காக அக்குறணை உடுநுவரைப் பகுதிகளில் நிலங்கள் கொடுத்தான். இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கு வேற்றுநாட்டுப் பற்று கிடையாது. அவர்கள் தங்களது

ஒத்துழைப்பைத் தருவதற்கு வேற்று நாட்டின் அனுமதியைப் பெற வேண்டியதில்லை. நாட்டின்மீது பற்றில்லாததாலோ, அல்லது நாட்டு மக்களோடு ஒன்றிணையாமையாலோ எந்தவொரு இலங்கை முஸ்லிமாவது நாட்டைவிட்டு வெளியேறியதாக எனக்கு நினைவில்லை. போர்த்துக்கேயரைத் திருப்திப்படுத்துவதற்காக ஏழாம் புவனேகுபாகு முஸ்லிம்களைத் துன்புறுத்திய வேளையிலும், அவர்கள் எந்தவொரு அந்நிய நாட்டிலிருந்தாவது உதவி கோரவில்லை.

இது உலக முஸ்லிம்கள் வலிமையற்ற நிலையிலிருந்த காரணத்தினாலல்ல. அதற்கு மாறாக இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி நிலவிய காலத்தில், இந்தியாவில் மொகலாய சக்கரவர்த்தியின் ஆட்சி பலம்பொருந்தியதொன்றாக விளங்கியது. அக்பர், ஜெஹாங்கீர், ஷாஜஹான்போன்ற சக்கரவர்த்திகள் ஆண்டனர். இந்த சக்கரவர்த்திகள் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியைப் பலப்படுத்தி ஏறக்குறைய இந்திய உபகண்டம் முழுவதையும் ஆட்சிபுரிந்தார்கள். இந்தியாவில் மட்டும் முஸ்லிம்கள் பலம்பொருந்தியவர்களாக இருக்கவில்லை. முஸ்லிம்களின் வரலாற்றில் 16ஆம் நூற்றாண்டு மிகப் பெரிய யுகமாகும். முஸ்லிம்களின் அதிகாரம் உச்சநிலை எய்தியிருந்த காலகட்டம் அது. ஓட்டோமன் துருக்கியர்கள், ஐரோப்பிய, ஆபிரிக்க, ஆசிய நாடுகளை உள்ளடக்கியதொரு சாம்ராஜ்யத்தையே ஆண்டு வந்தார்கள். தவிர்க்க முடியாத துருக்கியர்களின் வெற்றிவேகங் கண்டு, ஐரோப்பாவே நடுநடுங்கிக்கொண்டிருந்தது.

முஸ்லிம்கள் தங்கள் தாய்நாட்டின்மீது காட்டும் அன்பையும், விசுவாசத்தைப்பற்றி ஐயமேற்பட இடமேயில்லை. ஆகவே ஸ்ரீலங்கா முஸ்லிம்கள் குடியரசுப் பிரகடனத்தைக் கொண்டாடுவதற்காக இங்கு கூடியிருப்பதில் ஆச்சரியமெதுவுமில்லை.

## நல்லுறவின் வரலாறு

நெடுங்காலமாகத் தொடர்ந்து நமது விசுவாசத்தை நமது நாட்டிற்குக் காட்டி வந்திருக்கிறோம். இக்கூட்டம் நட்பும் தாராள மனப்பான்மையுடையவர்களான சிங்கள மக்களுக்கு முஸ்லிம்



களின் நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. சிங்கள—முஸ்லிம் நல்லுறவு ஏறக்குறைய 1400 ஆண்டுகளாக நிலவி வருகிறது. சிங்கள—இலங்கை சோனகர்களின் நல்லுறவு 2600 ஆண்டுகளாக, கி. மு. ஆறும் நூற்றாண்டில் இலங்கை சோனகர்களின் மூதாதையர்களான சேபிய அராபியர்களும் ஃபினிஷிய அராபியர்களும் வர்த்தகர்களாக வந்த காலந்தொட்டு நீடிக்கிறது. காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் 'சிங்களவர்களாகிய நாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்துள்ளோமோ, அத்தனை ஆண்டுகள் இலங்கைச் சோனகர்களும் இந்த நாட்டில் வாழ்ந்துள்ளார்கள். இந்த இரு சமுகத்தினரிடையே நெருங்கிய நட்பு நீடிக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

1939ஆம் ஆண்டளவிலேயே. அரசாங்க சபையில் உரையாற்றும்பொழுது காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் முஸ்லிம்கள் நிலைபற்றி அக்கறை காட்டியுள்ளார். 'எந்த இரு சமுகங்களுக்காவது உண்மையான குறைபாடு இருக்குமென்றால், அது கண்டிச் சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்குமே' எனக் கூறியுள்ளார். மேலும் இன்று நிலவுகின்ற பிரதிநிதித்துவ முறைப்படி ஐந்தரை இலட்சம் இலங்கைத் தமிழர்களோடு ஒப்பிடும்போது. 4 இலட்சம் இலங்கை முஸ்லிம்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை எனலாம். அரசாங்க சபையிலே இலங்கைத் தமிழர்களுக்கு ஏழு பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஏறக்குறைய தமிழர்களுடைய எண்ணிக்கை அளவுள்ள முஸ்லிம்களால் ஒரு பிரதிநிதியாவது, எந்தத் தொகுதியிலும் தேர்ந்தெடுக்க முடியாது. ஓரிரு பிரதிநிதிகளை நியமனஞ் செய்வதற்காக வேண்டி அவர்கள் தேசாதிபதியின் கருணையை நம்பியிருக்க வேண்டியதாகிறது'' என்று குறிப்பிட்டார்.

## இலங்கை முஸ்லிம்கள்

இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு இனப் பிரிவுகளால் உருவாக்கப்பட்டவர்கள். பெரும்பான்மையானவர்கள் அராபிய வர்த்தகர்களின் சந்ததியினரான இலங்கைச் சோனகர்கள்

ஆவார்கள். இரண்டாவதாக ஒல்லாந்தர் காலத்தில் இலங்கை வந்த மலாயர்கள் ஆவார்கள். அவர்கள் ஒரு வீர சமுதாயத்தினர். போலீஸ், இராணுவம், தீயணைக்கும் படை ஆகிய சேவைகளில், நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் பெரும் பணியாற்றியிருக்கிறார்கள். ஸ்ரீலங்காவில் மிகச் சிறந்த இருவரான நீதியரசர் எம். ரீ. அக்பர் அவர்களும், முஸ்லிம் தலைவர் டீ. பி. ஜாயா அவர்களும் இந்தச் சிறிய ஆனால் சீரான சமுகத்தைச் சார்ந்தவர்களாவர். அடுத்த இனப் பிரிவு பிரித்தானிய காலத்தில் வந்து இப்பொழுது இலங்கைக் குடியுரிமை பெற்றுள்ள இந்திய பாகிஸ்தானிய முஸ்லிம்களாவர்.

இலங்கைச் சோனகர் இந்நாட்டில் பழங்குடி மக்கள். இந்நாட்டின் இயற்கைத் தாவரங்களையும், உயிரினங்களையும் போன்று இந்நாட்டில் ஒரு முக்கிய அங்கமாவார்கள். கலாநிதி போல் ஏ. பீரிஸ் அவர்கள் ஸ்ரீபாதமலையை தரிசிப்பதற்காக நபிகள் நாயகம் உயிரோடிருக்கும் காலத்திலேயே, ஓர் அராபிய சஞ்சாரி வந்ததாக உறுதியான ஓர் பரம்பரைக் கதை இருப்பதாகக் கூறுகிறார். சோனக வைத்தியர்கள்மீது சிங்கள மன்னர்கள் பெரும் நம்பிக்கை வைத்திருந்ததாகவும் அவர் கூறுகிறார். இலங்கைச் சோனகர் இந்த நாட்டு மக்களோடு இரண்டறக் கலந்துவிட்டார்கள். அவர்கள் தமது சுயமார்க்கத்தைத் தழுவியதைத் தவிர மற்றெல்லா வகைகளிலும் இலங்கையர்களாகவே விளங்கினார்கள். சர். எமர்ஸன் டெனன்ட்டின் கோட்பாட்டை ஆதரித்து கலாநிதி பாலேந்திரா அவர்கள் இலங்கைச் சோனகர் இந்நாட்டின் பூர்வீகக் குடிகள் என்று கூறுகிறார். சோனகர் சிங்களவர்களை அல்லது வேடர்களைப்போல இந்நாட்டின் பூரீவீகக் குடிகள் எனலாம். ஏனெனில் அவர்கள் 2000 ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வருகிறார்கள் மத்திய காலத்தில் வாழ்ந்த அராபிய நூலாசிரியர் ஒருவரைப்பற்றித் திரு. டி. டொனல்ட் ஒபயசேகரா குறிப்பிடுகிறார், 1154ஆம் ஆண்டில் எழுதிய இதிரிஸி என்பவராகிய அவர் ஸ்ரீலங்காவின் மன்னனுக்கு ஆலோசனை கூறிய மந்திரி சபையில் 16 மந்திரிகள் இருந்தனரென்றும் அவர்களில் நால்வர் முஸ்லிம்கள் என்றும் குறிப்பிடுகிறார். திரு. எம். டி. இராகவன் அவர்கள் 5 ஆம் விஜயபாகு



வின் மந்திரியாகிய மீரா லெவ்வையைப்பற்றிக் குறிப்பிடுகிறார். 15ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் செங்-ஹோவின் தூதுக்குழு வந்தபோது சீன அரசாங்கம், ஸ்ரீலங்காவில் பௌத்த ஆலயங்களோடு, ஒரு முஸ்லிம் தர்காவுக்கும் வெகுமதிகளை அனுப்பி வைத்தது. மேற்கத்திய சக்திகளில் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைத் தவிர்த்து. கண்டிப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரமும், பொருளாதாரச் சுதந்திரமும் இருந்தது.

ஸ்ரீலங்காவின் முஸ்லிம்கள் சமாதானமுள்ளவர்கள். சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். அவர்கள் வியாபாரிகளாக இந்நாட்டுக்கு வந்தார்கள். வியாபாரிகளாகவே வாழ்ந்தார்கள். துப்பாக்கிகளை ஏந்தி நாட்டை அடக்கியாள எப்பொழுதுமே எண்ணாதவர்கள். அதனால் முஸ்லிம்களுக்கும். சிங்களவர்களுக்குமிடையில் கசப்போ, பகைமையோ இல்லை. வரலாற்றுபூர்வமாக சண்டையோ, விரோதமோ இல்லை. சிங்கள மக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே நிலவிவரும் அமைதியும், இணக்கமும், ஒற்றுமையும் உலகத்தில் வேறெந்த நாட்டிலும், வேறெந்த காலத்திலும் உவமை காண முடியாததொன்றாகும். ஸ்ரீலங்காவின் முஸ்லிம்கள் அவர்களது அரசியல் உரிமைகளை கட்டுப்பாட்டோடும், அடக்கத்தோடும், அமைதியோடும் கோரியுள்ளார்கள். அவர்கள் அளவுக்கு மிஞ்சிய கோரிக்கைகளையோ, கற்பனைக் கோரிக்கைகளையோ முன்வைக்கவில்லை. இந்நாட்டில் பிரிவினையையோ, கற்பனைக் கோரிக்கைகளையோ அன்றி பிரிவினைப் போக்குகளையோ அவர்கள் ஆதரிக்கவுமில்லை. ஊக்கப்படுத்தவுமில்லை,

## முஸ்லிம்களும் நாட்டு விடுதலையும்

அண்மைக்கால அரசியல் சீர்திருத்தங்களில் இந்நாட்டின் விடுதலையை முஸ்லிம்கள் உற்சாகத்தோடு ஆதரித்திருக்கிறார்கள். 1939ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ந் திகதி நடைபெற்ற இலங்கை முஸ்லிம்களின் அரசியல் மகாநாட்டில் ஸர் முகம்மது மாக்கான் மாக்கார் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'பெரும்பான்மை சமுதாயம் சிறுபான்மைச் சமுதாய நிலைக்குத் தாழ்த்தப்பட வேண்டுமென்று நான் அப்பொழுது விரும்பவுமில்லை. இப்பொழுது விரும்பவுமில்லை. அதற்கு மாறுக, என்னுடைய நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டுமுகமாக இந்நாட்டில் சிங்கள ஆட்சி நடைபெறுவதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை என்று குறிப்பிட்டுள்ளேன். இதிலிருந்து என் உள்ளத்தில் வகுப்புவாதத்திற்கு இடமில்லை என்பது நன்கு தெரிகிறது' அதே மகாநாட்டில் அனுபவம் குறைந்திருந்தாலும், மிக இளைஞைகை இருந்தபொழுதிலும் நான் கூறினேன், 'என்னுடைய சிங்களச் சகோதரர்களுக்கு நான் நிச்சயமாகக் கூற விரும்புவதென்னவென்றல், இந்நாட்டிற்கு பூரண விடுதலை கோருவதில் நான் அவர்களோடு ஒருவனுய் இருக்கிறேன். அவர்களுடைய தேசிய கலாசார அபிலாஷைகளை நான் வெகுவாகப் போற்றுபவன் என்று அவர்கள் என்னைக் கணிக்கலாம். அவர்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். நானும், எனது சமுதாயமும் என்றும் இந்நாட்டில் நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பர்களாகவே வாழுவோம். என்னிலோ அல்லது எனது சமுதாயத்திலோ இந்நாட்டிற்கு அதன் குழந்தைகள் காட்ட வேண்டிய பற்றிலோ, அல்லது அசைக்க முடியாத விசுவாசத்தாலோ, சற்றேனும் குறைகாண முடியாது'

1945ஆம் ஆண்டு ஸர் ராஸிக் பரீத் அவர்கள் அரசாங்க சீர்திருத்தங்களைப்பற்றிய அறிக்கையை ஏற்க வேண்டுமென அரசாங்க சபையில் உரையாற்றியபொழுது இவ்வாறு குறிப்பிட்டார். 'எங்களுடைய அரசியல் ஞானமும், நியாயசிந்தையுமே இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து பெறும் போராட்டத்தில் சிங்கள மக்களோடு எங்களைத் தோளோடு தோள் சேர்ந்து போராட வைத்தன' சோல்பரி சீர்திருத்தங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய ஜனுப் டி. பி. ஜாயா அவர்கள் பின்வருமாறு கூறினுர்கள்: ''முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் நாட்டின் பூரண விடுதலையைப் பெறுவதற்கான எந்த இயக்கத்திலும் முதலிடம் வகிப்பது ஒரு வழக்கமாக மட்டுமல்ல ஒரு கடமையாகவும் கருதப்படுகிறது. போராட்டம் பூரண விடுதலைக்கென்றல், எவ்வித பாதுகாப்புகளும் கோராமல் அதற்காக உழைக்க முஸ்லிம்கள் ஆயத்தமாக இருக்கிறுர்கள். ஏனென்றல் சுதந்திரத்தின் சக்தியால் வேறுபாடுகள் அழிக்கப்பட்டுவிடும்.''



## எங்கள் எதிர்காலம்

சிறுபான்மைச் சமுகத்தைச் சார்ந்த ஒருவர், அவரது நாட்டிலே பூரண இயக்கமுடையோராய் இருக்க வேண்டும். அவரது வாழ்க்கையிலே கட்டுப்பாடுகள் இருக்கக்கூடாது. ஒரு சுதந்திர சமுதாயத்தில், பூரண மலர்ச்சியடைய வேண்டிய அவனது ஆற்றல் தடைப்படுத்தப்படக்கூடாது. இன்றைக்கு எதிர்காலத்துக்கேற்றவகையில் முஸ்லிம்களின் சமுதாய, ஆத்மீகப் பெருமை புதிய வேற்றுருவங்கள் பூண வேண்டும். இலங்கைவாழ் முஸ்லிம்களின் எதிர்காலத்தை கடந்த காலத்தை நினைந்து கண்ணீர் வடிப்பவர்களால் உருவாக்க முடியாது. தற்காலத்துக்கேற்ற வகையில் நமது சமயத்தின் உயரிய அமரத்துவமான உண்மைகளை நிலைநாட்டுபவர்களால் மட்டுமே எதிர்காலத்தை உருவாக்க முடியும். மறைந்துவரும் முதலாளித்துவ யுகத்தின் பெருமைகளை எண்ணி வருந்துவதிலில்லை, அதேபோன்று வணிக இளவரசர்கள் வாழ்ந்த காலத்தை எண்ணி ஆசைப் பெருமூச்சு விடுவதும் அர்த்தமற்ற செயலாகும். இஸ்லாம் நம் நாட்டின் தற்கால வாழ்க்கை மாற்றங்களுக்கும், புதிய சூழலுக்கும் ஏற்ப செயற்பட வேண்டும்: என்னுடைய முழுமையான நம்பிக்கை என்னவென்றல், ஸ்ரீலங்காவாழ் முஸ்லிம்களின் நல்வாழ்வுக்காகச் செய்ய வேண்டிய முக்கிய பணி, புதிய குடியரசின் வாழ்க்கையில், சுதந்திரமாகவும், நேர்மையாகவும், ஆக்கபூர்வமாகவும் ஈடுபடுவதாகும். சிறுபான்மை மக்களின் நல்வாழ்வுக்கு பெரும்பான்மை மக்களின் நல்லெண்ணம் மிக முக்கியமானதாகும். நல்லெண்ணம் வருமென்று எதிர்பார்த்துக்கொண்டும், நம்பிக்கை கொண்டும் நாம் சும்மா இருத்தல் கூடாது. நம் நாட்டு பல்வேறு இன மக்களிடையே துவேஷம் பரப்பும் மனிதர்களை அகற்றி. நல்லெண்ணம் உருவாக்கும் நல்ல சக்திகளை பலப்படுத்துவதற்காக நாம் தீவிரமாக பாடுபடல் வேண்டும். முந்திய நூற்றுண்டுகளில் முஸ்லிம்கள் இஜ்—ஹாத்ஜ (கலந்துரையாடலும்,

முடிவு செய்தலும்) கதவடைத்துவிட்டதால், முன்னேற்றமும், வளர்ச்சியும் ஏற்படாமல் போய்விட்டது. புதிதாக உருவாகி வரும் தற்கால உலகிற்கு ஏற்றவாறு நமது மார்க்க ஆசாரங்களை புனரமைப்பு செய்யும் முயற்சிகள் தொடர்பற்றனவாகவும் பயனற்றனவாகவும் அமைந்துவிட்டன.


உலக அரங்கில் முஸ்லிம்கள் கௌரவமான இடம்பெற ஒரே வழிதான் உண்டு. இஸ்லாம் காட்டிய வழியில் நின்று, இன்றைய சமுதாய வாழ்க்கைக்கேற்ற நடைமுறைக் கோட்பாடுகளை வகுத்தலாகும். மனித அறிவு, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றின் எல்லைகள் பரந்து விரிந்துகொண்டிருக்கும் வேளையில், முஸ்லிம்கள் இஸ்லாத்தின் கோட்பாடுகளை இந்த வளர்ச்சிக்கேற்ப விளங்கிக்கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் என்ற அடிப்படையில், நாம் மனிதனின் அடிப்படைச் சுதந்திரத்திலும், அடிப்படைச் சமத்துவத்திலும் அடிப்படைச் சகோதரத்வத்திலும் நம்பிக்கையுடையவர்கள். நமது பரிசுத்த குர்ஆன், நம்முடைய அலுவல்களை நாம் கலந்து பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறுவதால் அது ஜனநாயகத்துக்கு வழிகாட்டுகின்றது. இஸ்லாமிய சோஷலிஸம் என்பது இஸ்லாமிய வரலாற்றில் சீர்திருத்த தேசிய சக்திகளின் மற்றொருபடியான வளர்ச்சியேயாகும்.

## முஸ்லிம்களின் கடமை

நாங்கள் முஸ்லிம்கள், இதில் நாம் பெருமையடைகிறோம். 1400 ஆண்டுகளாக இஸ்லாத்தின் அரவணைப்பில் வளர்ந்த விலை மதிப்பற்ற ஓவியக் கலைக்கும், கட்டிடக் கலைக்கும், கவிதைக்கும் உரிய வாரிசுகள் நாம் என்பதில் பெருமையடைகிறோம். அதேசமயத்தில் நமது தாய்நாடானதும், நம்முடைய மூதாதையர்கள் 2600 ஆண்டுகள் வாழ்ந்ததுமான இலங்கைக் குடியரசில் குடிமக்களாய் இருப்பதிலும் நாம் பெருமையடைகிறோம். ஸ்ரீலங்காவின் தேசிய தனித்துவத்தின் பிரிக்க முடியாத ஒற்றுமையின் ஓர் அங்கம் நாம். ஒவ்வொரு முஸ்லிமின் சீரிய உன்னத





1973-ஆம் ஆண்டு, தேசியக் கல்வித் திட்டத்துக்கு ஜிஹிவிலைமை தந்த வரவேற்பின்போது



ஈழத்துக்குப் பெருமைதந்த உலகப் பிலியட் சாம்பியன்
ஜனுப் எம். ஜே. எம். லாபிர் குடும்பத்துடன்
கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன்

கடமையென்னவென்ருல் ஸ்ரீலங்காக் குடியரசின் ஒற்றுமைக்கும், வலிமைக்கும், இறைமைக்கும், அச்சமின்றி, சுயநலமின்றி நேர்மையாக உழைத்தலாகும்.

கௌரவ பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களே! இலங்கைக் குடியரசின் முதலாவது பிரதம மந்திரியாக நீங்கள் பதவியேற்றதைப் பாராட்டி, எங்கள் அன்பான வாழ்த்துக்களைக் கூறிக்கொள்ளுகிறேம். எங்களின் பூரண விசுவாசம் உங்களுக்கென்று உறுதிகூறி, ஸ்ரீலங்கா குடியரசுக்கு எங்களின் உளமார்ந்த விசுவாசத்தை எனது மக்களின் சார்பில் அர்ப்பணிக்கிறேன். வஸ்ஸலாம்.

DONATED IN MEMORY OF
Late M/s. V. A. SIVAGNANAM,
V. A. SADADCHARAM and
V. A. MANORANJITHAN
On 26..6..93.......

# கவிஞர் கண்ட தலைவர்

மாத்தறை தந்த மணிமுத்து, அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள், இன்று ஈழம் முழுதும் வாழும் முஸ்லிம்களாகிய எங்கள் நன்மைக்கு உழைக்கும் பெருமகனாக இதயங் கவர்ந்து விளங்குகிறார்.

கற்று, கற்றவழி நின்று, கல்வியில்லாதேங்கிய முஸ்லிம் சமுகம், கல்வி கற்றுக் காசினி புகழ வாழ வைக்கத், தம் வாழ்நாளையே தியாகம் செய்து வரும் அவர்தம் பண்பையும், பணியையும், பாட்டிற் தீட்டிப் பரவசம் எய்துகின்றனர், நம் நாட்டின் தலைமைக் கவிஞர் பெருமக்கள்.

'பதியுத்தீன் மஹ்மூத் பஞ்சகம்' பாடிப் புகழும் நமது காத்தான்குடிக் கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பையவர்களின் கவிதைக் கருத்துப் புகழ் மாலையை முதலிற் காண்போம்!

## பதியுத்தீன் மஹ்மூத் பஞ்சகம்

முத்து ரத்தினம் சூழும் இலங்கையில்
முந்தையோர் புகழ் தாங்க ஒருமகன்,
இத்தி னத்தில் நமக்குள் இருப்பவன்,
எங்கள் நன்மைக் குழைக்கும் பெருமகன்,



வித்தை கற்றவன், மூத்த சகோதரர்
விரும்பிடப் பணிசெய்து தம் மக்களைப்
பத்தி யோடுமுன் காத்திட நிற்பவன்,
பதியுத் தீன்மகு மூது தயாளனே!

கல்வியிற் கருத் தின்றி யொதுங்கியும்
காலப் போக்கினைக் கண்டு கலங்கியும்
பல்வகை யிடுக் கண்களின் மத்தியில்
பற்று விட்டொரு மூலையிற் குந்தியும்
தொல்லை வாழ்வென்று சோர்ந்த இம்மக்களிற்
தோன்றி னானொரு காரிய வீரனே
பல்வளம் பெறும் லங்கையின் மாமகன்
பதியுத் தீன் மகுமூது தயாளனே,

துணிவுடன் செயல் ஆற்றுஞ் சிலரிலே
தூக்கிப் பேசத் தகைகொண்ட பண்பினன்
பணிவுடன் சுய நாட்டுக் குழைத்ததால்
பற்பல இடையூறுகள் தாங்கியோன்
அணியெனப் பெரும் பான்மைச் சகோதரர்
அன்பு வைத்திட முன்னின் றுழைத்தவன்
பணிபுரிந்து தம் மக்களை யூக்கியோன்
பதியுத் தீன்மகு மூது தயாளனே,

கல்வி மந்திரி யாக இருந்தொரு
காலப் போக்கினை மாற்றி யமைத்தவன்,
செல்வரும் ஏழை மக்களும் ஒன்றுபோல்
சேர்ந்து கல்வியைப் பெற்றிடச் செய்தவன்,
தொல் பெருங் குடிச் சிங்கள மக்களின்
தோளொடு நின்று நாட்டுக் குழைத்தவன்
பல்வகைப் பகை யாவும் களைந்தவன்,
பதியுத் தீன்மகு மூது தயாளனே.

தேசிய மொழி சிங்கள மாக்கினன்
தேவை யாவையுந் தான்தலை ஏற்றனன்,
ஏச நின்றவர் ஆயிரம் ஆயிரம்
என்று சோர்ந்திலன், தன்கடன் யாவையும்

கூசமின் றித்தன் நாடுமுன் னேறிடக்
கொள்கையில் நின்று சேவை புரிந்தவன்,
பாசமுற்றவன்; எங்கள் சகோதரன்
பதியுத் தின்மகு மூது தூயவனே.

ஆம்! பற்பல இடையூறுகளைத் தாங்கிப் பல்வளம் பெருகும் பார்புகழ் இலங்கை நன்நாட்டின் கல்வியுயரத் துணிவுடன் பணிபுரியும் கல்வியமைச்சர் அவர்கள்.

எல்லா இனத்தையும் தன்னினமாக மதித்துக் கல்விப் பணி புரியும் அவர்களைக் கர்ம வீரராக காணுகிறார் கவிஞர்.

செல்வரும், ஏழையும் சேர்ந்து ஒன்றுபோற் சீர்கல்வி பெற்றோங்கக் கல்வியிற் புதுமுறை கண்ட புரட்சிக் கல்வியமைச்சராகப் புகழ்பெற்றுத் திகழ்கிறார் நமது கல்வியமைச்சர் என்று இறும்பூதெய்துகிறார் அவர்.

தாய்நாட்டுப் பற்றும், தனித்துவம் பேணும் சமூகப் பற்றும் நிரம்பியவராகத் திகழும் தலைமகன் பதியுத்தீன் அவர்கள் என்று பாடும் கவிஞர்; ஏற்றதொரு கொள்கையை இனிது முடிக்கும் ''கொள்கை வீரராகவும்'' அவரைப் போற்றுகிறார்; அந்தப் பெருந்தகை 'எங்கள் சகோதரன்' என்று உரிமையோடு கவிஞர் பாடும்போது எங்கள் இதயத்தில் பாசம் அலையாகப் பொங்கிப் பிரவாகிக்கிறதல்லவா!

அவரைத் தவிர நமது சமூகம் வாழ நல்லெண்ணத்துடன் பணி புரியும் தலைமகன் வேறு யார்? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்கிறோம்!

நமது நம்பிக்கையை நலம் பேற உணர்ந்து கொள்கிறார் நமது தலைவர்! தம்மீது தளராத நம்பிக்கை கொண்ட சமூகச் சகோதரர்களைச் சரியான துறையிற் சிந்திக்க வைத்துச் சரியான பாதையில் நடாத்திச் செல்லவேண்டியது தமது பொறுப்பு என்பதை உணருகிறார் அவர்!



ஏழையும் செல்வரும் இனிய சகோதரராக இணைந்து முன்னேற ஓர் இயக்கம் தேவை என்று உணருகிறார் அவர். அந்த உணர்வு செயல் வடிவம் பெற்றது.

''இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி' உருவாகியது! அந்த முன்னணியின் அருமைத் தலைவராக அவர்கள்—அல்ஹாஜ் பதியுத்தீன் அவர்கள்—அடக்கத்துடன் பொறுப்பேற்றார்கள்!

அவர்கள் தலைமையில் அணி திரளுமாறு கன்னியரையும், காளையரையும் அறைகூவி அழைத்து ஆதரவு நல்கிப் பாடுகிறார். கல்ஹின்னைக் கவிஞர் ''ரோஷன்''

''எங்கள் ''பதி''யின் அணியில் சார்ந்து வாழ்வும் வளமும் காணுவோம்'' என்ற அவருடைய பாடலிலே,

பிறந்த நாட்டுப் பெருமை தன்னைப்
பேணிப் பேதம் நீக்கியே
சிறந்த சேவையாற்றும் தூய
சிந்தையாளர் நாங்களே!

என்று நமது பண்பினை முதற்கண் விளக்குகிறார் அவர். ஏடு புகழ அரசவையில் இருந்து மதி தந்து, நாடு புகழ்பெற நன்றுழைத்தவர் நாம். இந்த நிலையை அன்று நாடுகாத்தவர் அறியாதவர் போல நமக்குக் கேடு விளைக்க எண்ணினர்/

அவர்களைக் கண்டு கவிஞர் உள்ளம் கொதிக்கிறது.

''அறிவுயர்த்தி நெறி வகுத்து
அறம் வளர்த்த எங்களை
உரிமையற்று வலுமையுற்று
உழலச் செய்தல் ஏற்குமோ''

என்று குமுறுகிறது அவருள்ளம்! இந்த நிலையில் நமதுரிமை காத்து, இந்த நாட்டில் நமது நிலையை எடுத்துரைத்து நிலை நாட்ட ஒரு தலைவர் இல்லையா என்று குரல் எழுகிறது! அதே வேளையில், நமது வரலாற்றைத் தெரியாது ''தசுக்கு முனைந்தோரைக் கவியுள்ளம் எச்சரிக்கவும் செய்கிறது.

''உரிமை காக்க உயிரையீதல்
உணர்க! எங்கள் பாடமாம்!
சிறுமை நீக்கத் தியாகம் செய்தல்
தெரிக! எங்கள் சீலமாம்!

என்று வெளிவருகிறது, அந்த எச்சரிக்கை! அப்பொழுது தான், அவல நிலையில் தயங்கிய சமூகத்தைக் காக்க, அர வணைத்து ஆறுதல் தந்து உயர்வழி சேர்க்க, உறுதி பெற்ற உள் ளத்தினராம் உத்தமத் தலைவர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் நெஞ்சுயர்த்தி முன்வந்தார்கள்!

அவர்களைக் கவியுள்ளம் இவ்வாறு காண்கிறது! அவர்கள் அமைத்த இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியில் ஆனந்தமாகச் சேர்ந்து பணிபுரியக், கன்னியரையும்—காளையரையும் கடமை யுணர்வோடு அழைக்கிறது!

தருணம் வந்து பணி புரிந்து
சமூகம் காக்கும் தளபதி
மரணம் வந்த போதும் எங்கள்
மானம் காக்கும் மகிபதி
இஸ்லாமிய சோஷலிஷ
முன்னணியமைத்தனர்
விஸ்வாசமாய்ப் பெருமை காக்கும்
வீரராக நின்றனர்!

அஞ்சியஞ்சி ஆட்சியாளர்க்
கடிமையாவோர் ஆகட்டும்!
வஞ்சம் செய்து நம்மைவிற்போர்
மாய்ந்து மண்ணில் மூழ்கட்டும்!

வருக! எங்கள் 'பதி'யின் அணியில்
வாழ்வு வளம் காணுவோம்!
வருக! ஈழநாட்டிலெங்கள்
பழம் பெருமை நாட்டுவோம்!



சிங்க இளம் காளையர்காள்!
திரள்க, ஒன்றாய் அணியிலே!
பொங்குமெலிற் பூவையர்காள்!
புறப்படுங்கள் பணியிலே!

கவிஞர் பாடுமாப்போல முன்னணியமைத்து, இஸ்லாமிய இளைஞர்களையும், ஏந்திழையர்களையும் இணைந்து பணியாற்ற உணர்வூட்டி வழிநடாத்தினர் நம் தலைவர்!

அவர்கள் தலைமை, அன்று ஆட்சி புரிந்தவர்களையே அகம் கலங்கச் செய்தது!

இன்று இஸ்லாமிய சமூகத்தின் இணையற்ற, இரும்புள்ளத் தலைவராக—உதவுவதில் மட்டுமல்ல, உரிமையைக் காப்பதி லும்—அவர் விளங்குகிறார்! ஈழத்திருநாட்டின் இணையற்ற கல்வியமைச்சராக, எல்லோரும் விரும்பும் நல்ல நடு நிலைப் பணியாளராக அவர்கள் விளங்குகிறார்கள்.

அவர்கள் முஸ்லிம்களும், தமிழ் மக்களும் கலந்து வாழும் பெரும் பகுதியாகிய கிழக்கு மாகாணத்திற்குச் சென்று வந்தார்கள்.

ஈழநாட்டின் எழுச்சிக்கு அத்திவாரமிட்டுப் புதுமைப் பாதையில் அழைத்தேகும் அவர்களை 'எங்கள் தவப் பெரும் பயனாக' இதயம் ததும்பப் பாடி வரவேற்கிறார் ஈழத்தின் முதன்மைக் கவிஞருள் ஒருவராகிய 'புரட்சிக்கமால்'!

ஒன்றுபட உருவடைய ஈழ நாட்டில்
ஒப்பரிய நிலைசமையச் சமுதாயத்தை
நன்றளந்து, நாடிகண்டு கொள்கை சூழ்ந்த
நாயகரே: பதியுத்தீன் மஹ்மூ தென்று
இன்றெழுந்த ஜமாலுத்தீ ஞப்கானி அண்ணல்!
எங்கள் தவப் பெரும்பயனே; வருக! உன்றன்
குன்றளந்த தோள் கண்டு, கொள்கை கண்டு;
கொழுத்திய தீச் சுடரானேம்! வருக, மன்னு!

தாய் நாட்டின் பற்றுக்கும, சமுதாயத்தின்
தணியாத காதலுக்கும்; வைரம் பாய்ந்த
தூய தனிக் கொள்கைக்கும், கொள்கை கொண்ட
துணிவாண்மைப் பண்புக்கும் பதியுத்தீனே
ஆயதனிச் சான் றென்று அறையுமாறு
அரும்புகின்ற புத்துலகின் அணியே! எங்கள்
வாயினிக்க — வாழ்வினிக்க வாழ்த்தி, உன்றன்
வருகையினுல் தருக்குற்ருேம்! தலைவா, இங்கு -
நீயெழுக; நின்பாதம் ஏறாவூரின்
நிலந்தழுவி நலந் திகழ வருக, மன்னு!

நல்லறிஞர் கலா நிதியே! தாது சேனன்
நயந்த கலை வித்தகனும் தர்ம பாலன்
வல்ல கவி முனிதாஸ முதலோர் தம்மை
வழங்கிய தென் னிலங்கை நகர் மாத்தறைக்கு
வெல்லமெனச் சுவையீந்த முகத்தம் வீட்டில்
விளங்கு ஸ்ரீ லங்காவின் வித்தை காக்கும்—
கல்விக்கு அமைச்சரெனப் பிறந்த பேறே!
கண்ணுண அறபியப்பா கனியே; வருக!

அரசியலில் முஸ்லிம்கள் ஆட்டக்காய்கள்!
அவர் தலைவர் மண் குதிரை! கட்சி—கொள்கை
வரிசையென ஒன்றறியார்!'' என்று நாடே
வாய்கிழியப் பழியளந்வேளை; கொள்கை
முரசொலித்து, முகங் கொடுத்து; சமுதாயத்தின்
மூச்சாகிச் சோஷலிஸ அணியில் எம்மைக்
கரஞ் சேர்த்த பெருந் தலைவா, வருக! எங்கள்
காலத்தின் சேர் ஸையித், வருக, மன்னு!

*'சோஷலிஸ அணியில் எம்மைக் கரஞ் சேர்த்த பெருந் தலைவர்; எங்கள் காலத்தின் சேர், செய்யித் அரும்புகின்ற புத்துலகின் அணியாம்' அல்ஹாஜ் பதியுத்தீன் அவர்களை மருதமுனை மக்கள் மனந்திறந்து வரவேற்றனர். 'மருதூர்க்கொத்தன்' யாத்த வரவேற்புக் கவிதையின் ஒரு பகுதியை இங்கு நோக்குவோம்!*



அலிகார் கலைக்கூடம் அன்பளிப்புச் செய்த
எழிலார் அறிஞன்; இலங்கை வாழ் முஸ்லிம்கள்
கீழ் நிலைமை கண்டு, கிளர்ந்தெழுந்து, முஸ்லிம் லீக்
வாலிபக் கழகம் வளர்த்துச் சமுகத்தைத்
தட்டி எழுப்பித் தலை நிமிர்த்தி, கல்வி ஒளி
ஊட்டும் கலைக்கூடம் கம்பளையில் ஆக்கி,
சுதந்திரக் கட்சியை தாபித்த சிற்பி!
அதை வெற்றிப் பாதைக்கு ஆக்கிய மாமேதை
முஸ்லிம் சமுகத்தின் முன்னேற்றம் நோக்கி
இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியைத் தாபித்து
ஆற்றல் மிகுந்த தலைமை அளித்த மகான்;
ஏற்றம் மிகவுடைய கல்வியமைச்சராய்..
ஆகி இலங்கை வாழ் மூஸ்லிம்கள் கண்ணியத்தை
மேக மலை முகட்டின் மேலே உயர்த்தியகோ;
கல்வியில் ஏற்ற இறக்கங்கள் நீக்குதற்கு
பள்ளிகளைத் தேச உடமை செய்த மாவீரர்,
வேலைப் பிரச்சினையை நீக்கி இலங்கையைச்
சால உயர்த்தும் தன்மை மிகவுடைய
தேசியக் கல்வித்திட்டம் வரைந்தளித்த
தேசிய வீரர் 'தீன்' வழியில் வாழ்கின்ற
உண்மைத் தலைவரே! உம்மை மருதமுனை
எண்ணு மிந்த ஏழைக் கிராமத்து முஸ்லிம்கள்
பன்னிப் புகழ்ந்து பரவசத்தில் ஆழ்ந்திதயம்
உன்னி வரவேற் பளிக்கின்ருேம்;......................... .

*'அலிகார் கலைக்கூடம் அன்பளிப்புச் செய்த எழிலார் அறிஞன்; ஆற்றல் மிகுந்த தலைமையளித்த மகான்; தேசியக் கல்வித் திட்டம் வகுத்த தேசிய வீரர்' அவர்களை நிந்தவூர் மக்கள் நெஞ்சங் கனிந்து வரவேற்ற நீர்மையை இனி நோக்குவோம்.*

''பதிபுகழ் அல்ஹாஜ் பதியுதீன் மஃமூத்
பண்புறு அமைச்சரே வருக—வருக, வருக, வருக......

ஸ்ரீலங்கா சுதந்திரம் சிறப்புற உழைத்தே
ஸ்ரீமாவின் வலதுகையமர்ந்தாய்

சிங்கள மக்களின் அன்பினில் இணைந்தே
தேசத்தில் ஐக்கியம் வளர்த்தாய்
கல்வியில் புரட்சி கண்டாயே
கடமையில் நிறைவு கொண்டாயே............
சமதர்மம் தழைத்திடலாமே
ஐயமே, ஐயமே, ஐயமே

சமுதாய வளர்ச்சியில் சமத்துவ உரிமையில்
தாழ்ந்திட்ட எம்முஸ்லிம் சமூகம் ,
தலை நிமிர்ந்தோங்கிட கல்வியில் உயர்ந்திட
சகலதும் தந்தெமைக் காத்தாய்
தயாளனே உமை மறவோமே
சரித்திரம் பொறித்திடுவோமே............
தலைமையில் அணி திரள்வோமே
தலைவா, தலைவா, தலைவா.

ஆம்! சிங்கள மக்கள் அன்பினில் இணைந்து, செந்தமிழ் மக்கள் தம் சிந்தையும் கவர்ந்து, தேசத்தில் ஐக்கியம் வளர்த்த சிலர் கலாநிதி பதியுத்தீன் அவர்கள் 'தாழ்ந்திட்ட முஸ்லிம் சமூகம் தலைநிமிர்ந்தோங்கிடச் சகல வழியிலும் சலியாதுழைக்கும், சான்றோர்! சமுகத்துக்கும் அதன் உரிமையைக் காத்துத் தரும் அதே வேளையில், சகோதரர்களாக வாழும் சிங்களவர், தமிழர், ஆகியோரின் நலவுரிமைகளையும் நயமாகக் காத்தளிக்கும் நல்லமைச்சராக அவர்கள் விளங்குகிறார்கள்—

அம்பாறை மாவட்டம்—காரைதீவிற்கு அவர்கள் வருகை தந்தனர். அப்பொழுது அவ்வூர் மக்களின் அன்புள்ளம் அருந்தமிழ்க் கவிதை பாடி வாழ்த்துப் பாமாலை சூடியது.

"கல்விக் களஞ்சியமே கலையுலகப் பேரமைச்சே
நல்விந்தை தந்தருளும் நாயகமே — பல்லினத்துச்
செந்தாமரைக் கயத்தைச் சேர்ந்திடு வெள்ளோதிமமே
வந்தாய் உவந்தோம் மனம்

ஆம்! கல்விக் களஞ்சியமாய், கலையுலகப் பேரமைச்சாய் நம் தலைவரைக் காணும் அவ்வூர் மக்கள், 'சாதி மதமெனும் பூச



லைப் பகையாகக் கடிந்தோட்டிய பண்பாளராக, நாட்டின் பிளவை வெறுத்த ஒற்றுமையாளராக, சமரசம் கண்ட தத்துவ ஞானியாகக் கண்டு வாழ்த்தும் சீர்மையை நோக்குவோம்.

"..............................................
ஆளுனைக் குடைய அரசவை அமைச்செனெ
எம்மிடைக் கண்டு இறும்பூ தெய்தினேம்
நீதான்,
சாதி மதம் எனும் தனிப்பெரும் பூசலைப்
பகை தடிந் தோட்டிய பண்புள நெறியால்
தரம்பிரித் தாளும் தன்மையை வெறுத்து
இந்து முசல்மான் இதமுடைச் சிங்களர்
சொந்த எம் நாட்டுச் சோதர ரென்னச்
சமரசம் கண்ட தத்துவ ஞானி......................"

இவ்வாறு, இனத்தால் வேறுபட்டாலும், இதயத்தால் ஒன்றுபட்ட ஈழ அன்னையின் புதல்வராக விளங்கும் சிங்கள, தமிழ், இஸ்லாமியர் யாவரும் சிந்தை கனிந்த அன்பிற் பிணைந்த சோதரராக வாருங்கள்! நமக்கு அந்த உணர்வைத் தந்து நல்வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவரைப் பாருங்கள்! என்று அழைக்கின்றனர்.

"தங்கம் எனத்திரை வங்கக் கடலினைச் சார்ந்தொக்கச்
சிங்களஞ் செந்தமிழ் சேருமிஸ்லாமியர் சேர்ந்தொருங்கே
மங்கள மாயொரு மாதாவளர்த்திட்ட மைந்தரெனப்
பங்கமில்லாப் பதியுத்தீன் மஹ்மூது பார்க்குகவே"

இத்தகைய மக்கள் தம் இதயபூர்வமான அன்பில் திளைத்து, அடக்கமாகப் பணியாற்றும் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள், அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க இருபத்தியோராம் ஆண்டு வருடாந்தத கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டனர்; அப்பொழுது அவர்களுக்களிக்கப்பட்ட வரவேற்புப் பாமாலை இங்கு கவனிக்கத் தக்கது.

நல்லவர்கள் உலகத்தில் மிகவுஞ் சொற்பம்
நடிப்பவர்கள் பெருகிவரும் கலிகாலத்தில்
எல்லையின்றி நீ புரிந்த சேவை மாண்பை
இதயமுவந் தெடுத்துரைக்க மனிதருண்டோ?
இல்லையென்று சொல்லாமல் உன்னைப் போலும்
எடுத்துரைக்கும் ஆசிரியர் கூட்டம் ஒன்று
முல்லை மலர் மாலை சூட்டி உண்மை அன்பின்
மோகனமே! வாழ்கவென வாழ்த்துக் கண்டாய்

உண்மையன்புடன் உவகை பொங்க வாழ்த்துகிறது.

அத்துடன் திருப்தியுறவில்லை அது? கலாநிதியவர்களின் உள்ளத்துறுதியையும், செயல் திறமையையும் எடுத்ததை எழில் பெற முடிக்கும் ஏற்றத்தையும். எல்லா ஆற்றலும் அமைந்து எதிரியையும், இனியராக்கும் பண்பாற்றலையும் அழகுறப் பாடுகிறது அச்சங்கம்.

"மாகிஸ்தான் ஜின்னுவாய் கமால்பாஷாவாய்ப்
பாரதத் தாய் பெற்றெடுத்த நேருவாக
ஏகபரம் பொருளீந்த ஈகையாக
டாக்டர் பதியுத்தீன் நீ என்றும் வாழ்க!"

இவ்வாறு இதயம் மகிழ வாழ்த்துகிறது தமிழர் ஆசிரியர் சங்கம். இதன் கவிதையை மிருசுவில் "ஞானம்" இயற்றியுள்ளார்.

இணையற்ற பண்பாலும் ஏற்றமுறும் பணியாலும். ஈழம் வாழ் மக்கள் அனைவரினதும் இதயம் கவர்ந்த கல்வியமைச்சர்; ஈழத்து முஸ்லிம் மக்களின் இதயத்தில் வாழும் இணையற்ற தலைவர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள், கவிஞர் உள்ளங்களைக் கவர்ந்து அவர்தம் கவிதையிலும் வாழுகின்ற மாண்பு வியக்கத்தக்கதே!

அவர்கள்தம் பண்பாலும் பணியாலும் பார் போற்றும் நிலைபெற்று, எல்லோரும் வாழ்த்தோத இறையருளும், சுக நலமும், நிறை வாழ்வும் மிகப் பெற்று, நீடூழி வாழ்ந்திருக்க அருள் புரிய, அல்லாஹ்வை வேண்டுவோம்! அல்ஹம்துலில்லாஹ்.



# குடும்ப வரலாறு

இலங்கைக்கு வந்த ஆரம்பகால அராபிய முஸ்லிம்கள், இந்த நாட்டை 'செய்லான்' 'சரன்தீப்' என்னும் பெயர்களால் அழைத்து வந்துள்ளனர், பண்டைய அராபிய ஏடுகளிலும் இப்பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. "பாவா ஆதம் (அலை) அவர்களின் புனிதப் பாதம் பதிந்துள்ள புண்ணிய பூமி" என்ற நம்பிக்கையினாலும், வர்த்தகத் தொடர்புகளினாலும் அராபிய முஸ்லிம்கள் இந்த நாட்டுடன் எப்பொழுதும் நெருங்கிய தொடர்புகொண்டவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இந்த உண்மையை ஈழத்து வரலாற்று ஏடுகளும், அரபு நாட்டு வரலாறுகளும் நன்கு விளக்கிக்கொண்டிருக்கின்றன. அராபிய இலங்கை உறவு முறைகளை இந்து சமுத்திரத்திலே குழப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட சதி காரணத்தினாலேதான்; கி. பி. 814ஆம் ஆண்டு முஸ்லிம்கள் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்ததாகவும் அதன் காரணமாக சிந்து நதிப் பிரதேசத்திற் புகுந்த முஸ்லிம்கள் படிப்படியாக இந்தியாவின் ஆதிக்கத்தையே கைப்பற்றியதாகவும் சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறாக இலங்கைக்கு வந்துபோய்க்கொண்டிருந்த அராபியர்கள் இந்த நாட்டின் கடற்கரைப் பட்டணங்களிற் குடியேறி தமது செல்வாக்கையும் பரப்பி வந்தனர். இந்த நாட்டு மன்னர்களதும் மக்களதும் மதிப்பிற்குரிய ஒரு சமூகமாக வாழ்ந்து வந்தனர். அதனால் சிங்கள மக்கள் மத்தியிலே சிறந்த வியாபார

சமுகமாகவும் தமது கலாசாரத்தை நன்கு பேணிக் காக்கும் ஓர் இனமாகவும் வாழ்ந்து வந்துள்ளனர்.

தென்னிலங்கையின் சரித்திரப் பெருமைவாய்ந்த தலமாக மாத்தறை நகர் விளங்குகின்றது. 1500 ஆண்டுகளுக்கு முன்னர் தாதுசேனன் அந்த பிரதேசத்தைத் தனது ஆளுகையின்கீழ் வைத்திருந்தான். அவனது மகன் துட்ட கைமுனு அங்கு படையெடுத்து வந்த தமிழர் படையை வெற்றிகொண்டு வீரவாகை சூடினான். அதனைத் தொடர்ந்து எண்ணற்ற தேசியத் தலைவர்கள் அங்கே தோன்றலாயினர். இன்றும் போற்றப்படுகின்ற பௌத்த கலாசார வித்தகரான அநகாரிக தர்மபாலா, கவிஞர் முனிதாச குமாரதுங்க ஆகிய தேசியப் பெருந் தலைவர்களின் பிறப்பிடமாகவும் அந்த நகரம் பெருமை பெற்றுள்ளது. அத்தகைய வீரபுருஷர்களில் ஒருவராகவும், தேசிய முற்போக்குத் திட்டங்களை உருவாக்கும் சிந்தனைச் சிற்பியாகவும் மாமேதை பதியுத்தீன் அவர்களும் மாத்தறை நகரைப் பிறப்பிடமாகக் கொண்டுள்ளதால், அந்த நகர் மேலும் சிறப்புப் பெறுவதாயிற்று.

மாத்தறையிலே பலநூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த முஸ்லிம் பெருங்குடியொன்றில் ஜனாப் பதியுத்தீன் தோன்றினார். முஸ்லிம் மக்களது இன்பதுன்பங்களிலும் பெரும்பான்மைச் சமுகத்தினரின் பொதுப் பணிகளிலும் ஒன்றிணைந்த அந்தக் குடும்பத்தினர் வகித்து வந்துள்ள பல்வேறு வகைப்பட்ட பதவிகளே தக்கசான்றாய் அமைந்துள்ளன. தர்மகர்த்தாக்களாகவும், நொத்தாரிசுகளாகவும், வழக்கறிஞர்களாகவும் அக்குடும்பத்தினர் பதவி வகித்து வந்துள்ளனர். அத்தகைய சிறப்புப் பொருந்திய குடும்பத்தினர் 'முகத்தம் வீட்டார்' என அழைக்கப்படுவதுண்டு. இவரது தந்தை வழிப்பாட்டனார் சுலைமான் லெவ்வை மரைக்கார் என்பவராகும். நிலச்சுவாந்தாராகவும், பள்ளிவாசல் பரிபாலகராகவும் இருந்து வந்துள்ளார். மாத்தறை பிரவுன்ஸ் ஹில் (Browns Hill) எனப்படும் பிரதேசம் இவருக்குச் சொந்தமாக இருந்தது.



இவரது தாய்வழிப் பாட்டனார் வலிகாமத்தைச் சேர்ந்த செய்யது முஸ்தபா நொத்தாரிஸ் ஹாஜியாராகும். இவர் சிங்கள மொழியிலும், அரபு' தமிழ் மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார். கவிஞராகவும் விளங்கினார். இவர் 'நொத்தாரிஸ்' ஆகப் பணிபுரிந்ததனால் இவருக்கு 'வெலிகம கோறல மகா நொத்தாரிஸ் ராலஹாமி' என்ற சிறப்புப் பெயரும் வழங்கி வந்தது. புகழ்வாய்ந்த நொத்தாரிஸாகப் பணிபுரிந்தமையினால் 49 ஆண்டு காலத்தில் ஏறக்குறைய 49 ஆயிரம் உறுதிகளை சிங்களத்திலும், தமிழிலும் எழுதிப் பதிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. 114 ஆண்டுகள் வாழ்ந்த இவர் சிங்களத்திலும் பாடல்கள் பலவற்றைப் பாடி இலக்கியத் துறையிலும் உயரிய பணிபுரிந்துள்ளார். அரபு நாட்டிலிருந்து வருகை தந்த அரபி அப்பாவும் அன்னாரின் புதல்வர் ஹாஜியார் அப்பாவும் மாத்தறை மக்கள் மத்தியிலே பெரும் புகழும் செல்வாக்கும் பெற்றிருந்தனர். அவர்களது இஸ்லாமிய சன்மார்க்க சேவைகளினால் அப்பகுதி மக்கள் பெரும் பயன் பெற்று வந்தனர். அத்தகைய பெரியார்களின் குடும்பத்தார்களுக்கும் முகத்தம் வீட்டாருக்குமிடையே குடும்பத் தொடர்புளும் சம்பந்தங்களும் இருந்து வந்தன. இஸ்லாத்தின் முதலாவது கலீபா ஹசரத் அபூபக்கர் (ரலி) அவர்களது வழிவந்த வாரிசுகளாகவே 'முகத்தம்' குடும்பம் இலங்கையில் வாழ்ந்து வந்தது. அந்தத் தொடர்பு காரணமாகவும் அரபு நாட்டிலிருந்து வந்த பல பெரியார்கள் 'முகத்தம்' வீட்டாரைத் தேடி வரலாயினர். அவ்வாறு வந்த பலர் அக்குடும்பத்தினருடன் விவாகத் தொடர்புகளையும் ஏற்படுத்திக்கொண்டனர். மௌலானாக்கள், சேகுமார்கள் உட்படப் பல பெரியார்கள் அடிக்கடி அக்குடும்பத்தினரின் விருந்தினர்களாகவும் தங்கியிருந்தனர்.

அரபியப்பாவின் பேரனாரே, கலாநிதி பதியுத்தீனின் தந்தையாரான ஜனாப் எஸ். எல். எம். மஹ்மூது நெய்னா மரைக்காராகும். 'மாத்தறை மகத்தயா' என அழைக்கப்பட்ட அன்னார், தமது முன்னோரைப்போன்றே நிலச்சுவாந்தாராக வாழ்ந்து வந்தார். மாத்தறை முஹிய்யத்தீன் பள்ளிவாசலின் தர்மகர்த்தாவாகவும் இருந்து வந்தார். இவரது தந்தை வழியைச் சேர்ந்த

வர்கள் நிலச்சொந்தக்காரர்களாகவும் இரத்தின வியாபாரி களாகவும் ஆலிம்களாகவும் வாழ்ந்து வந்துள்ளனர். தாய்வழி யைச் சேர்ந்தவர்கள் கல்விமான்களாக விளங்கி வந்தனர்.

இத்தகைய புகழ்பூத்த குடும்பத்திலே, தந்தை எஸ். எல். எம். மஹ்மூது நெய்னா மரைக்கார் அவர்களுக்கும் அன்னை பாத் தும்மா நாச்சியார் அவர்களுக்கும் பதியுத்தீன் 1904ம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் நாள், அருந்தவப் புதல்வராய்ப் பிறந்தார். குடும்பத்தின் இளைய மகன், கடைசிக் குழந்தை, அப்படியென் ருல் அதன் வாழ்க்கை குறும்புத்தனமாகத்தானே இருக்கும். செல்லத்திலும் செல்வத்திலும் மிதந்த வண்ணம் வாழ்க்கைப் படகு ஆரம்பமாயிற்று. பயமறியாத பச்சிளங்கன்றானதால் துணி வும் பிடிவாதத்தன்மையும் இளமையிலேயே தொற்றிவிட்டது. குடும்பத்தின் மூத்த சகோதர சகோதரிகளின் அன்பும் பாச மும் கலந்துவிட்டன. பாரம்பரியத்துடன் சுற்றுடல் அநுபவங் களும் தமது பால்யப் பருவத்தினை வளம்பெறச் செய்து விட்டன.

சகோதரர்கள் அறுவர். அவர்களில் இருவர் இளவயதிலே இறையடி சேர்ந்துவிட்டவர். வழக்கறிஞர் சலாஹுத்தீன் இரத்தின வர்த்தகர், சிஹாபுத்தீன், அல்ஆலிம் ஜலாலுத்தீன், அல்ஆலிம் ஷியாவுத்தீன் ஆகிய சகோதரர்கள் பிற்காலத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து, சமூக சன்மார்க்கப் பணி களில் சேவையாற்றியுள்ளனர். அபீரத்தும்மா, பத்திலத் தும்மா, பளீலா உம்மா, கதீஜா உம்மா, ரபீஆ உம்மா, ஆகிய சகோதரிகளின் அணையாத அன்புக்கு இலக்கானவராகவும் பதி யுத்தீன் வளர்ந்து வந்தார். குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டிருந்த ஷெய்குமார்கள், மௌலானாக்களின் அறவுரை களும் இளைஞனின் இதயத்தைத் தொட்டுவிட்டன. அத்துடன், உலக முஸ்லிம் நாடுகளின் முன்னேற்றத்துக்குத் தடையாக ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்டிருந்த அடக்குமுறைகளைப் பற்றிய அறிவுரைகளை அப்பெரியார்கள் கூறிக்கொண்டிருந்த போது, இளைஞன் பதியுத்தீனின் இதயத்திலே தனியாத ஒரு வகை வெறுப்புணர்ச்சி தோன்றலாயிற்று. இந்த உணர்வுதான்





புத்தளத்தைச் சேர்ந்த பிரசித்திவாய்ந்த ஜனாப் ச. எஸ். எ. எம் பஹ்ருதீன் மரிக்கார் அவர்களின் புதல்வி சம்சுன் நஹார் அவர்களை மணமுடித்திருந்தபோது பிறந்த ஒரே செல்வமகள் காமிலா, மருமகன் எ. எ. வத்திப், பேரப்பிள்ளைகள் ஆகியோருடன் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன்



1972-ஆம் ஆண்டு கல்வியமைச்சராக வடபகுதிக்கு கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் விஜயஞ் செய்தபோது, தமிழ் மக்களுக்கு ஆற்றிய அரும்பெரும் கல்விப் பணியைப் பாராட்டி தமிழ் மக்களாலும் யாழ் நகர சபையாலும் பொதுவரவேற்பு (Civil Reception) அளிக்கப்படுகையில் எடுக்கப்பட்ட படம்.

ற்காலத்தில் ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்புக்கும் வழிகோலியது. அதன் பயனை அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளே நிருபித்துவிட்டன.

ஜனாப் பதியுத்தீன் அலிகாரில் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பிய பின்னர், புத்தளத்தைச் சேர்ந்த பிரபல தனவந்தரான ஈ. எஸ். ஏ. எம். பல்லு மரைக்காரின் ஏகபுத்திரியான 'சம்சுன் நிஹார்' என்ற நங்கையை 1937ஆம் ஆண்டு திருமணஞ் செய்துகொண்டார். இவர்களுக்குப் பிறந்த ஒரே புதல்வியான செல்வி காமிலாவை பிற்காலத்தில் ஜனாப் ஏ. ஏ. லத்தீப் (Charted Accountant) திருமணஞ் செய்து கொண்டார்.

டில்லியைச் சேர்ந்த அமீர் முஹல்லாவான ஹபீபுல்லாவின் புதல்வி செல்வி பத்திமாகான் அவர்களை ஜனாப் பதியுத்தீன் 1946ஆம் ஆண்டு இரண்டாந்தாரமாகத் திருமணஞ் செய்து கொண்டார். இந்தியப் பிரிவினையைத் தொடர்ந்து திருமதி பாத்திமா மஹ்மூதின் குடும்பத்தினர் பாகிஸ்தானியர்களாக மாறினர். திருமதி மஹ்மூத் இலங்கைப் பிரஜையாகிவிட்டார். இந்தத் திருமணத்தினாலும் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். மூத்த மகன் ஜலாலுத்தீன் இர்ஷாத், இளைய மகன் ஜமாலுத்தீன் தாரிக், மூத்த மகள் வசிமா மஹ்மூத் இளைய மகள் நுஷ்ரத் மஹ்மூத்.

# என் மதிப்பீடு

கலாநிதி பதியுத்தீன் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சில சம்பவங்களை இதுவரை நோக்கினோம். அச்சம்பவங்களே அன்னாரின் அரியசேவைகளை ஓரளவுக்கு உணர்த்துகின்றன. இந்த நாட்டு முஸ்லிம்களின் வரலாற்றில் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்துமளவுக்கு அன்னாரது வாழ்வு அமைந்துவிட்டதையும் நோக்கலாம். பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வந்துள்ளனர். இந்த நாட்டின் அரசியல், சமூக பொருளாதாரத் துறைகளில் முஸ்லிம்களும் ஏனையச் சமூகத்தினருடன் முன்னின்று உழைத்து வந்துள்ளனர். எனினும் துரதிஷ்டவசமாக முஸ்லிம்களது அத்தகைய சேவைகள் மறைக்கப்பட்டே வந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் மறுமலர்ச்சித் தந்தையாக விளங்கிய அறிஞர் சித்திலெப்பையின் சமுதாய முற்போக்குப் பணிகளைத் தொடர்ந்து விழிப்புணர்ச்சி கொண்ட புதியதொரு சகாப்தத்தை உருவாக்குவதில் கலாநிதி பதியுத்தீனின் வாழ்க்கை விசேடமாக முஸ்லிம் சமுதாயத்துக்குப் பயனுள்ளதாக அமைந்துவிட்டது, நம்முன்னோரது வரலாறுகளை எடுத்துக் காட்டியுள்ளார். இந்த நாட்டில் நமக்குரிய பங்கை ஆணித்தரமாக விளக்கியுள்ளார், முஸ்லிம்களும் இந்த நாட்டின் ஆதிக்குடிமக்களே என்பதையும் நாட்டு வளத்துக்காக உழைத்தவர்கள் என்பதையும் ஆதாரபூர்வமாக விளக்கியுள்ளார். அதனால் மறைந்துபோன முஸ்லிம்களின் வரலாற்றை மீண்டும் எழுதுவதற்குப் பல தகவல்களைத் தந்துள்ளார், அன்னாரின் சொற்பொழிவுகள், எழுத்தோவியங்கள், விடாமுயற்சி, ஆகியன பாரம்பரியத்தையும் புதுமைகளையும் உள்ளடக்கிய - பண்பும் பயனும் மிக்கதோர் புதிய சமுதாயமொன்றை உருவாக்குவதற்கு வழிகாட்டிகளாக அமைந்து விட்டன.

கலாநிதி பதியுத்தீனின் பணிகளை மேலாட்டமாக நோக்குகின்றவர்கள் அன்னாரை ''ஒரு தலைவர்'' என்று குறிப்பிடுகின்றனர். சற்று ஆழ்ந்து-அகழ்ந்து-ஆய்ந்து நோக்குகின்றவர்கள் ''இந்த நூற்றாண்டின் இணையற்ற தலைவர்'' என்றே குறிப்பிடுகின்றனர். ஒருவரது நிறைவான சாதனைகள், குறைகளுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியிலே தான் நிறைவு பெறுகின்றன. அவ்வாறு குறைகாண்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். எதிர்ப்புக்களுக்கு மத்தியிலே எதிர் நீச்சலடித்த இணையற்ற வீரப்பெருமக்களினாற்றான் ஒவ்வொரு சமுதாயமும் காலத்துக்குக்காலம் மறுமலர்ச்சியடைந்து வந்துள்ளது. இந்த உண்மையை வரலாறு மெய்ப்பிக்கின்றது, எனவே கலாநிதி பதியுத்தீனின் சேவையை மக்கள் காலத்தால் உணர்ந்துகொள்ளத் தவறமாட்டார்கள்.

தாம் சென்றடைந்த நாடுகளிலெல்லாம் தம்மாலான பணிகளை அந்த நாடுகளின் முன்னேற்றத்துக்காகச் செய்து வந்துள்ளார். இந்தியாவின் தேச விடுதலைக்காகப் பல பெரியார்களுடன் தொடர்பு கொண்டு தன்னாலான பணிகளைப் புரிந்துள்ளார். சிங்கப்பூர், பர்மா, மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மனப்பான்மையை உருவாக்குவதில் தமது வாழ்வின் சில பகுதிகளை அர்ப்பணித்துள்ளார். மலேசியாவின் உயர்தரக் கல்விக்காக அந்த நாட்டுச் சுதேசிகளைத் தயார் படுத்திய காரணகர்த்தாவாக விளங்கினார். கீழைத்தேய, மத்தியகிழக்கு நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளின் அடக்கு முறைகளைக் கண்டிப்பதில் எப்பொழுதும் பின்னின்றதில்லை, அதே நேரத்தில் எந்த நாட்டில் பணிபுரிந்த பொழுதிலும் சொந்த நாட்டு மக்களை மறந்துவிட வில்லை, இந்த நாட்டிலும் தாம் மேற்கொண்ட தன்னலமற்ற சேவையால் தன்னிகரற்ற தலைவரானார், இவையனைத்தையும் ஊன்றி

ணைத்து நோக்கினால் பல நாடுகளுக்கும் வழிகாட்டியாகவும் மகோன்னத தலைவராகவும் விளங்குகின்றார் என்பதில் ஐயமில்லை.


## ஏகாதிபத்திய எதிர்ப்பு :-

இளமைப் பருவத்திலிருந்தே ஆங்கில ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பு மனப்பான்மை கலாநிதி பதியுத்தீனின் இதயத்தில் உருவெடுக்கலாயிற்று. அன்னாரின் குடும்பத்தினருடன் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்த முஸ்லிம் பெரியார்களினால் அந்த உணர்வு உருவெடுக்கலாயிற்று. ''ஏகாதிபத்திய வாதிகள் முஸ்லிம் நாடுகளைப் பாழாக்குகின்றனர், இஸ்லாமியப் பண்பாட்டை அழிக்கின்றனர், முஸ்லிம் நாடுகளின் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளனர்.'' என்பனபோன்ற உரைகளைக் கலாநிதி பதியுத்தீன் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட உணர்வு, கலாநிதி பதியுத்தீனின் இளநெஞ்சத்தில் ஒரு கரும்புள்ளியாக உருவெடுத்து வளரத் தொடங்கியது. பள்ளிக்கூட வாழ்க்கையிலும் அந்த உணர்வு பிரத்தியட்சமாகத் தோன்றலாயிற்று.

அவர் மாத்தறை செயின்ற் தோமஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வி பயின்று கொண்டிருந்தார். அப்போது வயது பதினொன்று, சாரணியப் பயிற்சிக்காக பதியுத்தீன் தெரிவு செய்யப்பட்டார். அன்றுதான் முதன் முதலாக அவரது ஏகாதிபத்தியவைராக்கிய மனப்பான்மை வெளிக்கிளம்பலாயிற்று. சாரணியக் கொடிக்கு விசுவாசப்பிரமாணஞ் செய்து கொண்ட அவர் அன்றைய ஆட்சியின் சின்னமான பிரிட்டிஷ் கொடிக்கு விசுவாசப்பிரமாணம் செய்து கொள்ள மறுத்து விட்டார். இந்த அடங்காத்தன்மைக்காக அதிபரின் ஆறு பிரம்படிகள் பதியுத்தீனின் உள்ளங்கைகளைப் பதம் பார்த்தன, அந்த இளநெஞ்சமோ அதனைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை தந்தையாருக்கும் விஷயம் எட்டியது, மகனை விசாரிக்கலானார்.

''வெள்ளைக்காரன் முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்வதாக நீங்களும் தானே சொன்னீர்கள், அப்படிப்பட்டவனுடைய கொடியை





அரபு மக்களின் புரட்சித் தலைவரும், எகிப்திய ஜனாதிபதியுமான கமால் அப்துல் நஸார் அவர்களுடன் 1962-ம் ஆண்டு, கைரோ நகரில் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் கலந்துரையாடியதன் பின் எடுக்கப்பட்ட படம்.



**1963**-ஆம் ஆண்டு, அரசாங்க விருந்தினராக இலங்கைக்கு விஜயஞ் செய்த, பாக்கிஸ்தான் ஜனாதிபதி பீல்ட் மார்ஷல் ஐயூப்கான் கல்வியமைச்சர் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் எடுத்துக்கொண்ட படம்.

வணங்கலாமா?'' மகனின் கேள்வி இது. தந்தையின் இதயம் பூரித்தது. மகனின் இந்த வைராக்கியத்தை மெச்சினார். பலரிடத்தும் கூறி தனது மகனின் வீரத்தைப்புகழ்ந்தார். இதிலிருந்து ஆரம்பித்த அந்த உணர்வு படிப்படியாகவே வளரத் தொடங்கிவிட்டது.

**1921** ஆம் ஆண்டு கொழும்பு வெஸ்லி கல்லூரியில் ஆரம்ப உயர்தரக்கல்வி பயின்று கொண்டிருந்தார் பதியுத்தீன். அப்போது வேல்ஸ் குமாரனை ''குலஸ்டர் கோமகன்'' இலங்கைக்கு விஜயஞ் செய்தார். கோமகனின் விஜயத்தையிட்டு அன்று கொழும்பில் பாடசாலைகள் மூடப்பட்டன. கோமகனுக்காக விசேட விதிப்பவனியொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பிரஸ்தாப பவனியின் போது மாணவர்கள் வெண்ணிற உடையில் வீதியின் இருமருங்கிலும் அணிவகுத்து நிற்க வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. கோமகனின் சொந்த வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் அவர்மீது அளவுகடந்த மரியாதை வைத்திருந்தார் பதியுத்தீன். தான் காதலித்த பெண்ணையே மணப்பதற்காக பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தையும் துறக்க முற்பட்ட கோமகனின் மனப்பான்மையை வெகுவாகப் பாராட்டினார். எனினும் பிரித்தானிய ஏகாதிபத்திய வைராக்கியம் பதியுத்தீனின் எண்ணத்திலே புரையோடி இருந்தது. அதனால் கோமகனுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த எந்தவொரு வைபவத்திலும் கலந்து கொள்ள மறுத்துவிட்டார், அவரது பகிஷ்கரிப்பு .மனப்பான்மையைப் பலர்கண்டித்தனர். சட்டவிரோத நடவடிக்கையென்றனர், எனினும் தனது மனோபாவத்தை மாற்றிக்கொள்ளாத பதியுத்தீன் அன்றைய நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ளாமல் வீட்டிலேயே இருந்து விட்டார்.

**1933** ஆம் ஆண்டு பர்மாவுக்குச் சென்றார். அக்காலத்தில் கீழைத்தேய நாடுகள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. பிரிட்டிசாரின் ஏகாதிபத்தியப் போக்கை பர்மாவிலும் கண்டிக்கத் தொடங்கினார். அதனால் அந்த நாட்டின் பிரிட்டிஷ் ஆட்சியாளர், பதியுத்தீனை 24 மணி நேரத்துக்குள்

வெளியேறுமாறு கட்டளை பிறப்பித்தனர், இவ்வாறே மலேசியாவிலும் 1935 ஆம் ஆண்டு 48 மணி நேரத்தில் வெளியேற்றப்பட்ட சம்பவத்தையும் மறப்பதற்கில்லை. மலேசிய மக்களின் சுதந்திர உணர்வைத்தூண்டும் அளவுக்கு பதியுத்தீனின் கல்விப் பிரசாரம் அமைவுற்றதனாலேதான் அவ்வாறு வெளியேற்றப்பட்டார். அன்று அந்த நாட்டிலிருந்த போலீஸ் கமிஷனர் ஓர் ஆங்கிலேயர், பதியுத்தீனின் நடமாட்டத்தை நன்கு கவனித்த கமிஷனர் பதியுத்தீனைத் தமது காரியாலயத்துக்கு அழைத்துப் பின்வருமாறு கூறினார்.

“We have learnt a bitter lesson by teaching Indians. Now they ask for Independence. We would not commit the same blunder in Malasiya”

(நாம் இந்தியர்களுக்குக் கல்வி போதித்ததனால் கசப்பானதொரு பாடத்தைக் கற்றுக் கொண்டோம். இப்பொழுது அவர்கள் சுதந்திரம் கோருகின்றனர். அதே தவறை மலேசியாவிலும் செய்யப் போவதில்லை) கமிஷனரின் இந்தக் கருத்துக்கு மாறாகப் பிரசாரஞ் செய்ய முற்பட்டதனாலே தான் 48 மணித்தியாலத்திற்குள் வெளியேற்றப்பட்டார்.

1936 ஆம் ஆணடு அகில இந்திய மாணவ சம்மேளனத்தை உருவாக்கினார். மாணவர்களைச் சுதந்திர இயக்கத்துக்காகத் தூண்டக் கூடிய நிலை உருவாகுமென பிரிட்டிஷார் கவலை கொண்டனர். இந்தியாவின் அன்றைய வைஸ்ராயாக விருந்த வெலிங்டன் பிரபு, ஆதரவாளர் பலருடன் சேர்ந்து மாணவர் சம்மேளனத்தில் சாதி அடிப்படையிலான பிளவு ஒன்றை ஏற்படுத்த முயற்சித்தார். அதனால் முஸ்லிம் மாணவர் சம்மேளனம் தனியாக - அலிகாரின் தலைமையில் இயங்கவேண்டுமென்ற கருத்தும் பரவலாயிற்று. பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கும் பிரிட்டிஷாரின் இக்கொள்கையை, பதியுத்தீன் வன்மையாகக் கண்டித்தார். இதனால் பல பிரச்சனைகளுக்கு ஆளாக முற்பட்டபோதும் தமது கொள்கையைக் கடைசி வரை விட்டுக் கொடுக்கவில்லை.



பிரிட்டிஷாரின் பாலஸ்தீனக் கொள்கையை ஆரம்பமுதலே கண்டிக்கலானார். இலங்கையரிடத்திலும் எதிர்ப்பு மனப்பான்மையை உருவாக்குவதில் முன்னின்றுழைத்தார். 1938 ஆம் ஆண்டு கொழும்பு கோல்பேஸ் மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்துக்குத் தாமே தலைமை தாங்கினார். பிரிட்டிஷாரின் கொள்கையைக் கண்டிக்கும் பிரேரணையொன்றையும் நிறைவேற்றினார்.

1940ஆம் ஆண்டு பிரிட்டிஷாரின் யுத்த முயற்சிக்கு ஆதரவு அளிக்கும் முகமாக இலங்கைத் தேசிய கௌன்சில் ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் ஒரு அங்கத்தவராக கலாநிதி பதியுத்தீன், காலஞ் சென்ற பண்டாரநாயக்காவினால் நியமிக்கப்பட்டார். பிரித்தானியருக்கு உதவக்கூடிய எந்தத்திட்டத்துக்கும் தாம் பங்குகொள்ள முடியாதென, தமது அங்கத்துவப் பதவியை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

1951 ஆம் ஆண்டு சுதந்திரக்கட்சி அமைக்கப்பட்டது. “இந்த நாடு பூரண சுதந்திர நாடாக விளங்குவற்கு பிரிட்டிஷாரின் சகல தொடர்புகளையும் இந்த நாட்டிலிருந்து பூரணமாக அகற்ற வேண்டும்” என்று கலாநிதி பதியுத்தீன் வலியுறுத்தினார். இதனாலேயே திருக்கோணமலை, கட்டுநாயக்கா ஆகிய இடங்களிலிருந்து பிரிட்டிஷ் படைகள் பிற்காலத்தில் வாபஸ் பெறவேண்டியதாயிற்று

1960ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் கலாநிதி பதியுத்தீன் கல்வியமைச்சராகப் பணியேற்றபோதும் கல்வி முறையில் காணப்பட்ட ஆங்கிலேயச் செல்வாக்கை அடியோடு அகற்றினார், பாடசாலைகளைத் தேசிய மயமாக்கியதோடு இந்த நாட்டுக்கு உகந்த வகையில் கல்வியின் தத்துவங்களையும் கொள்கை முறைகளையும் மாற்றியமைத்தார். இவ்வாறாகப் பலதுறைகளிலும் தமது ஏகாதிபத்திய எதிர்ப்புக்களைப் பலப்படுத்தியுள்ளதை நோக்கலாம்.

### எழுத்துலகிலே :-

கலாநிதி பதியுத்தீன் தன்னை ஓர் எழுத்தாளனாகக் காட்டிக் கொள்ளவில்லை, இலக்கிய விற்பன்னராக விளங்காத

போதும் பல அரிய கட்டுரைகளை ஆங்கிலத்தில் அடிக்கடி எழுதி வந்துள்ளார். ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வரலாற்றுக் கட்டுரைகளையும் எழுதி சமுதாயத்தின் இலக்கியத் தேவைகளை விளக்கியுள்ளார். முஸ்லிம் சமுதாயத்தின் வரலாற்றை நிருபிக்கும் வகையில் பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பனவற்றின் தேவைகளையும் காலத்துக்கேற்ப அமைய வேண்டிய முறைகளையும் விளக்கியுள்ளார். பலவேறு வகைப்பட்ட கடமைகளின் மத்தியிலும் சமூகத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, சஞ்சிகைகள் பலவற்றை வெளியிட்டுள்ளார். அவையனைத்தும் பிற்காலத்தில் நூலுருக் கொள்ளுதல் அவசியமாகும்.

### கல்வியும் கலாசாரமும்:

சிந்திக்கக் கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு கல்வியின் அவசியத்தை உணர்த்தி வைத்தார், ஆண் பெண் இருபாலாரும் கல்வி பயில வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர். தாமே ஒரு கல்வி நிலையத்தை உருவாக்கி மிகக் குறுகிய கால எல்லைக்குள் அதனை அகில இலங்கை ரீதியிலான உயர் நிலைக் கலா நிலையமாக மாற்றியமைத்தார், கலாசாரத் தோடிணைந்த கல்வி முறையையும் அறிமுகஞ் செய்து வைத்தார். முஸ்லிம் மாணவிகளுக்கு இஸ்லாமிய ஒழுக்க (பைஜாமாவும் கமிசும்) உடையை அறிமுகஞ் செய்தார், அதனால் இலங்கை எங்கிலும் உள்ள முஸ்லிம் மாணவிகள் அதனைப் பழக்கத்திற் கொள்ளச் செய்தார், தம்மால் உருவாக்கப்பட்ட கம்பளை சாஹிராக் கல்லூரியோடு இணைத்து இஸ்லாமிய கலாசார நிலையம் ஒன்றையும் உருவாக்கினர். அன்னார் மேற்கொண்ட இத்தகைய பணிகள் தான் அன்னாரை ஒரு கல்வியமைச்சராகுமளவுக்கு உயர்த்திவிட்ட தென்றால் மிகையாகாது, இரண்டு தடவைகள் கல்வியமைச்சராகப் பணியை மேற்கொண்டு இந்த நாட்டுப் பாடசாலைகளைத் தேசிய மயமாக்கியும் நாட்டுக்குகந்த கல்வி முறையை உருவாக்கியும் சமுதாயத்தில் புதியதொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திவைத்தார்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 6 | புதில்வராய் | புதல்வராய் |
| 10 | 1 | செஞ்சம் | நெஞ்சம் |
| 13 | 6 | கூறுவேண்டும் | கூறவேண்டும் |
| 16 | 7 | ஆயிலும் | ஆயுளும் |
| 16 | 8 | பிரார்திக்கின்றேன் | பிரார்த்திக்கின்றேன் |
| 35 | 11 | சத்தேகக் | சந்தேகக் |
| 45 | 8 | தேசியத் | தேசியக் |
| 49 | 19 | ஜவா | ஜாவா |
| 50 | 11 | Standerd | Standard |
| 56 | 15 | ஆலேசனை | ஆலோசனை |
| 56 | 22 | பொழி | மொழி |
| 73 | 4 | Mohamedian Anglo Oriantal | Mohamedan Anglo Oriental |
| 76 | 4 | Working | Woking |
| 78 | 23 | பதிதித்தின் | பதியுத்தின் |
| 87 | 15 | நுனுக்கமாக | நுணுக்கமாக |
| 92 | 26 | காலைகளும் | சாலைகளும் |
| 96 | 23 | தொடர்தும் | தொடர்ந்தும் |
| 98 | 14 | கல்லூயில் | கல்லூரியில் |
| 99 | 19 | உயர்வகும்பினரும் | உயர்வகுப்பினரும் |
| 101 | 20 | பதித்யுதின் | பதியுத்தின் |
| 104 | 28 | எழுப்பட்டிருந்தது | எழுதப்பட்டிருந்தது |
| 104 | 29 | செய்யந் | செய்யத் |
| 104 | 29 | அவமானமாகச் | அவமானமாகக் |
| 112 | 22 | உணரந் | உணர்ந் |
| 113 | 26 | வழாப் | வாழாப் |
| 115 | 21 | இப்பாசாலை | இப்பாடசாலை |
| 116 | 4 | பூர்வயான | பூர்வமான |
| 117 | 20 | ஐயா | ஜாயா |
| 119 | 14 | அட்வணையை | அட்டவணையை |
| 119 | 24 | அடுக்த | அடுத்த |
| 141 | 30 | ஐரோப்பியார்களை | ஐரோப்பியர்களை |
| 144 | 12 | ஆமோதிக்ககக் | ஆமோதிக்கக் |
| 147 | 14 | பார்த்தவன்ண | பார்த்தவண்ண |
| 147 | 17 | சித்தனை | சிந்தனை |
| 152 | 10 | தனிமையாகவேனும் | தனிமையாகவேனும் |
| 152 | 13 | வாந்ததாக | வாய்ந்ததாக |
| 154 | 20 | நினைக்கதக்கதே | நினைக்கத்தக்கதே |
| 155 | 9 | கல்யி | கல்வி |
| 157 | 21 | கௌரமாக | கௌரவமாக |
| 183 | 10 | கமூகத்தின் | சமூகத்தின் |
| 192 | 6 | நாச்சியார் | நாச்சியா |
| 193 | 1 | ற்காலத்தில் | பிற்காலத்தில் |
| 193 | 6 | பல்லு | பளலூன் |
| 193 | 10 | Charted | Chartered |
| 193 | 12 | ஹபீபுல்லா | ஹபீபுர்ரஹ்மான் |
| 193 | 13 | பாத்திமாகான் | பாத்திமாகானம் |
| 199 | 31 | விற்பண்ணராக | விற்பன்னராக |

மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்
161; செட்டியார் தெரு,
கொழும்பு-11.